# காப்புறுதி ஒழுங்குபடுத்தலில்
# ஒரு உலகலாவிய பூரணத்துவத்தினை
# உருவாக்கல்

INSURANCE BOARD OF SRI LANKA

இலங்கை காப்புறுதிச் சபை | வருடாந்த அறிக்கை 2014

# பொருளடக்கம்

ஆண்டின் முக்கிய நிகழ்வுகள் 5 | தலைவியின் செய்தி 7 |
பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு 10 | சபையின் அங்கத்தவர்கள் 14 |
சபை அங்கத்தவர்கள் பற்றிய சுருக்கக் குறிப்பு 15 | சிரேஷ்ட முகாமைத்துவக் குழு 17 |
ஊழியர் குழாம் 18 | பொது மீளாய்வு 22 | புள்ளிவிபர மீளாய்வு 27 |
தொழிற்பாடுகளின் மீளாய்வு 70 | நிதி நிலைமையின் கூற்று 94 |
முழுமையான வருமானக் கூற்று 95 | காசுப்பாச்சல் கூற்று 96 |
காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் காசுப்பாச்சல் கூற்று 97 |
கணக்கீட்டு பூட்கைகள் 98 | நியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 100 |
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 108 |
கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எழுப்பப்பட்ட விடயங்கள் தொடர்பாக
சபையின் விளக்கம் 114 | பின்னிணைப்பு I 123 | பின்னிணைப்பு II 124 |
அருஞ்சொல் விளக்கம் 126

# காப்புறுதி ஒழுங்குபடுத்தலில்

# ஒரு உலகலாவிய பூரணத்துவத்தினை உருவாக்கல்

இந்த வருடம் காப்புறுதி ஒழுங்கமைப்பு வரலாற்றில் மேலுமொரு மைல் கல் பதிவு செய்யப்பட்டது - கலவைக் காப்புறுதிக் கம்பனிகளை காப்புறுதி வியாபாரத்தைக் கொண்டு நடாத்தும் இருவேறு வகையிலான காப்புறுதி நிறுவனங்களாக மாற்றியமைத்து வெற்றிகரமாக சீரான நிலைமாற்றத்தை உருவாக்கியது.

பன்னிரெண்டு கலவைக் கம்பனிகளில், ஏழு கம்பனிகளுக்கு வேறாக்கல் நடைமுறையைக் கொண்டு நடாத்துவதற்கான ஒழுங்குபடுத்தல் காலக்கெடு விதித்தலை சந்திப்பதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது.

கலவை காப்புறுதிக் கம்பனிகளை வேறாக்குவதன் ஊடாக அதில் அதிகூடிய கவனக் குவிப்பு, ஒழிவுமறைவின்மை, பூட்கையாளர் பாதுகாப்பு மற்றும் இலாபதைக் காணக்கூடிய தன்மை என்பவற்றை ஊக்குவிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிதியாண்டு, ஆயுள் மற்றும் ஆயுள் அல்லாத காப்புறுதி வியாபாரங்களைத் தெளிவாக வேறாக்கும் ஒழுங்குபடுத்தல் சீராக்கல் நடைமுறைகளைக் காட்டுகின்றது, அத்துடன் காப்புறுதி ஒழுங்குபடுத்தல் வரைபடத்தில் பூகோள சீர்திருத்தங்களுடன் இணைந்து, நிலையான மூலதன நிர்வாக முறையில் இருந்து இடர் உணர்வுகூர் மூலதன நிர்வாக முறைக்கு நகர்வதற்குரிய மேலுமொரு குறிப்பிடக்கூடிய ஒழுங்குபடுத்தல் புரட்சியையும் சபை மேற்கொண்டுள்ளது.

நாங்கள், இலங்கையின் காப்புறுதி கைத்தொழிற்துறையில் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை எனும் வகையில், காப்புறுதி ஒழுங்குபடுத்தலில் உலகலாவிய பூரணத்துவத்தினை உருவாக்குவதற்கு காப்புறுதி ஒழுங்குபடுத்தல் நடைமுறையில் குறிப்பிடக்கூடிய மைல்கல் போன்ற இந்த மாற்றங்கள் தொடர்பாக பெருமையடைகின்றோம்.



# தொலை நோக்கு

ஆசியாவின் காப்புறுதி ஒழுங்கமைப்பாளர்களின்
அடையாளக் குறியீட்டாளராக இருத்தல்.

# பணி

காப்புறுதித் தொழிலின் அபிவிருத்தியை ஒழுங்கமைப்பு செய்வதிலும், மேற்பார்வை செய்வதிலும், எளிமையாக்குவதிலும் ஈடுபடும் அதே நேரம், காப்புறுதி வைப்பாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்

# ஆண்டின் முக்கிய நிகழ்வுகள்

- 21 காப்புறுதிக் கம்பனிகள்
- 58 காப்புறுதித் தரகர்கள்
- 42,958 காப்புறுதி முகவர்கள்
- காப்புறுதி குறித்த விழிப்புணர்வு 456 கிராம சேவைகள் பிரிவுகளை எட்டியது
- இடர் அடிப்படையிலான மூலதன சமாந்தர ஓட்டம் ஆரம்பிக்கப்பட்டது
- வேறுபடுத்தும் நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டன

## காப்புறுதிக் கைத்தொழிலின் செயலாற்றுகை

| | 2014 | 2013 | மாற்றம் % |
|---|---|---|---|
| மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (ரூ.பில்லியன்) | 99.87 | 94.99 | 5.14 |
| மொத்த சொத்துகள் (ரூ.பில்லியன்) | 406.83 | 357.47 | 13.81 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் % சத வீதத்தில் ஊடுறுவல் | 1.02 | 1.10 | (7.27) |
| காப்புறுதி அடர்த்தி (ரூபா) | 4,830.57 | 4637.34 | 4.17 |

## சபையின் செயலாற்றுகை

| | 2014 | 2013 | மாற்றம் % |
|---|---|---|---|
| காப்புறுதி வைப்பாயர்களின் பாதுகாப்பு நிதியம் (ரூ.பில்லியன்) | 2.18 | 1.78 | 22.47% |
| செஸ் வருமானம் (ரூ.பில்லியன்) | 273.91 | 245.74 | 11.46% |
| வருடாந்தக் கட்டணம் (ரூ.பில்லியன்) | 73.44 | 70.08 | 4.79% |

**ரூபா. 406.83 பில்லியன்**

காப்புறுதித் தொழிலின் மொத்தச் சொத்துகள்

**ரூபா. 99.87 பில்லியன்**

காப்புறுதித் தொழிலின் எழுதப்பட்ட தவணைக் கட்டணம்



“காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் வளர்ச்சியினை ஊக்குவிக்கும் அதே நேரம் சபையின் பயணத்தை சரியான பாதையில் வழிநடத்துவதற்கும், கைத்தொழிற்துறையின் நம்பிக்கையை பலப்படுத்துவதற்கும் பல் வேறுபட்ட நடவடிக்கைகளை நாங்கள் எடுத்துள்ளோம்”

# தலைவியின் மீளாய்வு

நாங்கள் 2014ம் வருடத்திற்கான ஆண்டறிக்கையை சமர்ப்பிக்கின்றோம்: ஒழுங்குப்படுத்தல் தேவைகளை பூர்த்திசெய்யும் வகையில் பேரளவான சவால்களையும் கணிசமான மாற்றங்களையும் காப்புறுதி கைத்தொழிற்துறை இவ்வருடம் சந்தித்தது. இந்த மாற்றங்கள் பங்குதாரர்களுக்கு பெறுமதிகளை வழங்கக்கூடிய வகையில் திடமான, தொடர்ச்சியான காப்புறுதிக் கைத்தொழிற்துறை உருவாக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

இந்த மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், இக்காலப்பகுதியில் கடமைகளை ஏற்றுக்கொண்ட புதிய பணிப்பாளர் நாயகத்தின் தலைமை மாற்ற அனுபவத்தை இலங்கை காப்புறுதிச் சபை பெற்றுக்கொண்டது. இலங்கை காப்புறுதிச் சபையின் உயர்ந்த மிக முக்கியமான பதவியின் திறமைகளைக் காண்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். எங்கள் முறைமைக்கு புதிய இரத்தம் சேர்ந்ததன் மூலம் வெளியக திறமைகளைப் பெற்றுக்கொள்வதற்கான கதவு திறக்கப்பட்டதுடன், நாங்கள் எங்களுடைய திறமைகளை தொடர்வதுடன் வளர்ச்சிக்கும் அவற்றினைப் பயன்படுத்துவோம்.

கைத்தொழிற்துறை வேறுபட்ட இடத்திற்கு மாற்றம் பெற்றபோதிலும், எங்கள் பணியான 'காப்புறுதித் தொழிலின் அபிவிருத்தியை ஒழுங்கமைப்பு செய்வதிலும், மேற்பார்வை செய்வதிலும், எளிமையாக்குவதிலும் ஈடுபடும் அதே நேரம், காப்புறுதி வைப்பாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்' என்பதை பூர்த்திசெய்வற்கு அதை நோக்கி நகர்வதை உறுதிப்படுத்துவதற்காக எங்கள் நீண்ட கால உபாயமார்க்க குறிக்கோள்கள் தொடர்பாக தொடர்ந்தும் சபை கவனத்தைச் செலுத்தும்.

**கைத்தொழிற்துறையின் செயலாற்றுகை**

தேசிய பொருளாதாரத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.2% வீதமாக இருந்தது. 2013ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014ம் ஆண்டு 7.4% வீதம் வளர்ச்சியடைந்துள்ளது. தேறிய நாணயக் கொள்கை காரணமாக வட்டி வீதங்கள் மற்றும் பணவீக்கம் என்பவற்றில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் உள்நாட்டு பேரினப் பொருளாதார நிலமைகளில் ஏற்பட்ட மொத்த மேம்படுத்தல் என்பவற்றின் விளைவாகவே இது ஏற்பட்டுள்ளது.

இச்சூழ்நிலையில், காப்புறுதிக் கைத்தொழிற்துறை ஆயுள் மற்றும் ஆயுள் அல்லாத வியாபாரங்களில் இருந்து மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானமாக ஏறத்தாள ரூபா 99,872 மில்லியனை அடையக்கூடியதாக இருந்ததுடன், உண்மையான நியதிகளில் ரூபா 4,885 மில்லியன் அதிகரிப்போடு 5.14% வீத வளர்ச்சியையும் பதிவுசெய்கின்றது. இது 2013ம் ஆண்டின் 8.97% வீதத்துடன் ஒப்பிடுகையில் மிகக் குறைந்த வளர்ச்சியாகும்.

எனினும், காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த சொத்துக்களை எடுத்துக்கொண்டால் கடந்த ஆண்டு பதிவுசெய்யப்பட்ட 13.19% வீதத்துடன் ஒப்பிடுகையில் 2014ம் ஆண்டு 13.81% வீதத்தைப் பதிவுசெய்துள்ளது.

**சாதனைகள்**

இடர் அடிப்படையிலான மூலதன மாதிரியை தத்தெடுத்துக்கொள்ளும் நடைமுறையில், கடந்த 2 – 3 வருடக் காலப்பகுதியில் பல கட்டங்களை திட்டமிட்டவாறு வெற்றிகரமாகக் கடந்ததற்கு நாங்கள் சான்றாகின்றோம். 2013 ஒக்டோபர் மாதம் பாதை பரிசோதனை விளைவுகள் மற்றும் கைத்தொழில் பின்னூட்டு பகுப்பாய்வின் அடிப்படையில் இடர் அடிப்படையிலான மூலதன இறுதிச் சட்டகம் தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்கு முடிந்தது. சமாந்தர அடிப்படையில் இடர் அடிப்படையிலான மூலதன முறைமை அமுல்படுத்தல் 2014இல் ஆரம்பிக்கப்பட்டதுடன், இது 2015 வரை தொடரப்படும். 2014ம் ஆண்டு ஜூன் மாதம் உலக வங்கியின் இணைவாக்கத்துடன், சமாந்தர ஓட்டத்தின் முதலாம் தவணையின் விளைவுகள் மற்றும் விரிவடைந்து வரும் சவால்கள் தொடர்பாக பகிர்ந்துகொள்வதற்கும் மற்றும் கலந்துரையாடுவதற்கும் கைத்தொழிற்துறை பங்குபற்றுனர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்காக செயலமர்வொன்று ஒழுங்குசெய்யப்பட்டது. இடர் அடிப்படை மூலதன இறுதிச் சட்டகம் 2015இல் இறுதி இடர் அடிப்படையிலான விதியாக மாற்றப்படும்.

அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகளும் இடர் அடிப்படையிலான மூலதன மாற்றத்திற்கு மாறுவதற்கும் மற்றும் ஏற்றுக்கொள்வதற்கும் அவர்கள் தயாரானமை மற்றும் அதற்கு அவர்கள் வழங்கிய ஒத்துழைப்பு குறித்து அவர்களை நாங்கள் பாராட்டுகின்றறோம்.

கலவைக் காப்புறுதிக் கம்பனிகளை இரு வகையான காப்புறுதி வியாபாரங்களாக வேறுடுத்தல் செயற்பாட்டினை சில கம்பனிகள் தம் இலக்கினை முழுமையாக பூர்த்திசெய்யாத போதிலும் அது வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இறுதிக்கட்டத்திற்கு வருவதற்காக நாங்கள் அந்தக் கம்பனிகளுடன் அண்மித்துப் பணியாற்றுகின்றோம்.

காப்புறுதி பூட்கையாளர்களைப் பாதுகாப்பது தொடர்ந்தும் எங்களுடைய பிரதான குறிக்கோளாக இருப்பதனால், இந்த நோக்கத்தைப் பூர்த்திசெய்வதற்காக 2014ம் ஆண்டு பல ஒழுங்குபடுத்தல் சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டது. நிறுவனத்தின் முகவர்களை விதிமுறைப்படுத்தல் மற்றும் காப்புறுதிக் கம்பனிகள் ஏனைய காரணிகளுக்கு மத்தியில் பலமான நிதியியல் நிலை மற்றும் கடன்தீர் நிலை என்பவற்றை பேணுவதை உறுதிப்படுத்தல் என்பவற்றின் ஊடாக காப்புறுதி பூட்கையாளர்களை பாதுகாப்பதற்கு சபை பல நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

சபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காக முறைப்பாடுகளை கையாளும் நடைமுறை அமுல்படுத்தப்பட்டது. சபைக்கு கிடைக்கப்பெற்ற அனைத்து முறைப்பாடுகளையும் தீர்ப்பதற்கு முழு முயற்சி எடுக்கப்பட்டதுடன், சாத்தியமான நிவர்த்திகள் முடிந்தவரை வழங்கப்பட்டது. எங்களுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் அனேகமானவை காப்புறுதி பூட்கையாளர்கள் தங்கள் பூட்கை நிபந்தனைகளை வாசித்து விளங்கிக்கொள்வதில்லை என்பதுடன், முகவர்களின் பொருள்விளக்கத்தில் சார்ந்திருக்கின்றனர் என்பதற்கான சான்றாக அமைகின்றது. அதனால் காப்புறுதிப் பூட்கையாளர்கள் மற்றும் வருங்கால பூட்கையாளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, ஏனைய ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு மேலதிகமாக, பிரதேச செயலாளர் மட்டத்தில் விழிப்புணர்வை உருவாக்கும் சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை சபை தொடர்கின்றது.

# தலைவியின் மீளாய்வு தொடர்ச்சி

**முன்னோக்கிச் செல்லல்**

காப்புறுதிப் பாச்சலை அதிகரித்தல் என்பது எங்கள் முன்னால் உள்ள மிகப்பெரிய சவால் ஆகும். 2014ம் ஆண்டு மொத்த காப்புறுதி ஊடுறுவல் வீதமான 1.02% மிகக் குறைந்த பாச்சல் ஆயுள் மற்றும் ஆயுள் அல்லாத காப்புறுதியில் ஏற்பட்டுள்ளதைக் காட்டுகின்றது. இந்த நாட்டில் இக்குறைந்த காப்புறுதிப் பாச்சலுக்கு, ஏனைய சில ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் எமது நாட்டில் பெறப்படும் மிகக் குறைந்த தலாவருமானம், காப்புறுதிக் கருப்பொருள் மற்றும் அதன் நன்மைகள் தொடர்பான குறைந்த அறிவு, அனேக குடித்தொகை வகுப்புகளில் காணப்படும் குறைந்த மட்ட செலவழிக்கக்கூடிய வருமானம் என்பன பங்களிப்பு வழங்கும் காரணிகளாக அமைந்துள்ளன.

எனினும், அரசாங்கத்தினால் எதிர்பார்க்கப்படும் குறைவடைந்து வரும் வறுமை மட்டம் மற்றும் குடிமக்களின் வருமான மட்டத்தில் ஏற்படும் அதிகரிப்பு என்பன காரணமாக அதிக கொள்வனவு சக்தியை உடையவர்களாக மாறிவரும் பிரமிட்டின் மத்தியில் உள்ளவர்களை காப்புறுதிக் கம்பனிகள் தங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என நான் விரும்புகின்றேன். மத்திய மட்டத்தில் உள்ளவர்கள் வேறுபட்ட வாழ்கை முறையையும் மற்றும் விருப்பத்தின் படி செலவுசெய்யும் முறையையும் கொண்டுள்ளனர்.`காப்புறுதி` என்பது அவர்களின் பட்டியலில் முதல் நிலையில் உள்ளது. இதனையே நாம் குறி வைத்துச் செல்லல் வேண்டும். புத்தாக்க வகையிலான தீர்வுகள் மூலம் பொருளாதார பிரமிட்டின் நடுப் பகுதி மற்றும் மத்திய பகுதிக்கு காப்புறுதியை எடுத்துச் செல்லல் கைத்தொழிற்துறையின் தேவையாகும்.


செயற்திறன் மிக்க ஊடகங்களின் ஊடாக பொருத்தமான மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலான காப்புறுதித் தீர்வுகளை குடிமக்களில் 75% வீதத்தினர் வாழும் கிராமிய மற்றும் பகுதியளவில் நகரமயமாக்கப்பட்ட பகுதிகளுக்கு எடுத்துச் செல்லல் வேண்டும் என்பது முக்கியமானதாகும். மிகப் பெரிய பயன்படுத்தப்படாத சந்தை உள்ளதுடன், நாட்டில் காப்புறுதிப் பாச்சலை அதிகரிப்பதற்கு அதனைக் கைப்பற்றி அபிவிருத்தி செய்தல் வேண்டும். பொது மக்களிடையே காப்புறுதி தொடாபான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக நாடுமுழுவதிலும் தொடர்ச்சியான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழச்சித்திட்டங்களை நாம் தொடர்ச்சியாக அமுல்படுத்துகின்றோம். அத்துடன், பாரம்பரிய வியாபார மாதிரிகளை மீள்பார்வையிடுவதற்கும் மற்றும் இந்த சமுகத்தினர் காப்புறுதிக் கைத்தொழிற்துறையில் பங்கேற்குமாறு மேலே குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு காப்புறுதி சென்றடைவதற்கு அதனை மேம்படுத்தவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. நகரப் பிரதேசங்களில் உள்ள தற்போதைய வாடிக்கையாளர்களை கவனத்தில் கொள்வதுடன், நகரமல்லாப் பிரதேசங்களில் பரந்தளவிலுள்ள நுகர்வோரை கைத்தொழிற்துறை தன்கவனத்தில் கொண்டு அந்த நுகர்வோரை தன் வலையமைப்புக்குள் இணைத்துக்கொள்வதை காண்பதற்கு நாம் விரும்புகின்றோம்.

கணிப்பீட்டு சிறப்புத் தேர்ச்சியாளர்கள் இல்லாமையானது இடர் அடிப்படையிலான மூலதன மாதிரி மற்றும் மேற்பார்வை சட்டகத்தை அமுல்படுத்துவதில் எதிர் நோக்கும் மிகப் பெரிய சவாலாக அமைந்துள்ளது. நாங்கள் உள்நாட்டு தொழில் வல்லுனர்கள் அவசியமான தகைமைகளைப் பெற்றுக்கொண்டு, சிறப்புத் தேர்ச்சியாளர்களாக வந்து பூரணமான கணிப்பீட்டாளர்களாக வருவதற்கு ஊக்குவிப்பதுடன் உதவுகின்றோம்.

எப்பொழுதும் மாற்றமுறும் சமூகப் பொருளாதார வரைபடத்துடனும், எங்கள் நாட்டில் நகரும் குடித்தொகையியலுடனும், இலாப வளர்ச்சியினை உறுதிப்படுத்தக் கூடியதும், உங்கள் வாடிக்கையாளர் செலுத்துவதற்கு விரும்பக் கூடியதுமான புதிய காப்புறுதி வகைகளை உறுதிப்படுத்தும் வகையில் முன்நோக்கிய சிந்தனையுடன் பல்வேறுபட்ட புதிய காப்புறுதி வகைகளை கைத்தொழிற்துறை அறிமுகப்படுத்துவதை நாங்கள் வரவேற்கின்றோம். ஒழுங்கமைப்பாளர் என்ற வகையில், புதிய காப்புறுதி வகைகளை அறிமுகப்படுத்துவதற்கு வடிவமைக்கும் பொழுது கைத்தொழிற்துறையின் முழுமையான இயக்கத்தின் முக்கியமான மதிப்பீட்டினை மீளவும் செய்வோம். இப்பிரிவில் முன்னோடியாக வருவதற்கு, இன்னும் ஊடுறுவலை மேற்கொள்ள வேண்டியிருப்பதுடன், முன்னுதாரணமான பெறுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். நாங்கள் ஓர் கைத்தொழிலாக அதன் மூலவாய்ப்பு வளம் பல்வேறு உபாயமார்க்க முன்னறித்திறத்தை மற்றும் பிராந்தியத்தில் முன்னுதாரணமான கைத்தொழில்துறை நிலையை கொண்டிருத்தல் வேண்டும். நாங்கள் ஒரு ஒழுங்குபடுத்துனராக, கைத்தொழில் வளர்ச்சிக்கான முயற்சிகளுக்கு எங்கள் முழுமையான உதவியை வழங்குவோம் என உறுதிப்படுத்துகின்றோம்.

**பாராட்டு**

எனது சபை அங்கத்தவர்களின் பெறுமதி மிக்க பங்களிப்பு மற்றும் தடங்களற்ற ஆதரவுக்கு எனது பாரட்டினைத் தெரிவித்தக்கொள்ள நான் விரும்புகின்றேன். காப்புறுதி ஒம்புட்ஸ்மன், இலங்கை காப்புறுதி சங்கம் மற்றும் இலங்கை காப்புறுதி தரகர்கள் சங்கம் உட்பட காப்புறுதிக் கைத்தொழிற்துறையில் உள்ள பங்குதாரர்களுக்கு, அவர்களின் மிகச்சிறந்த ஒத்துழைப்பு மற்றும் எங்களுடன் பேணும் மனப்பூர்வமான உறவுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் சபையின் பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர்கள் மற்றும் ஏனைய ஊழியர்களுக்கு அவர்களின் ஈடுபாடு தொடர்பாகவும் இலங்கை காப்புறுதி சபையின் இலக்கினை அடைவதற்கான அர்ப்பணிப்பு தொடாபாகவும் எனது அங்கீகாரத்தையும் பாரட்டையும் தெரிவித்தக்கொள்ள விரும்புகின்றேன். வருங்காலங்கள் இலங்கை காப்புறதி சபையின் தொலைநோக்கு மற்றும் பணியினை பூர்த்திசெய்வதற்கான உபாயமார்க்கங்களை நிறைவேற்றுவதற்கு இந்தக் குழு தன் செயற்பாட்டைத் தொடரும் என்பதில் நான் உறுதியாகவும் நேர்மறையாகவும் இருக்கின்றேன்.



**இந்திராணி சுகததாச**

*தலைவி*

*22 ஜுன் 2015*



**2014ம் ஆண்டு சபையில் பணிகளையாற்றிய அங்கத்தவர்களின் பெயர்கள்**

திருமதி இந்திராணி சுகததாச – தலைவி
திரு எஸ் ஆர் ஆட்டிகல – அங்கத்தவர்
திரு பி டி டபில்யு ஏ சில்வா – அங்கத்தவர்
திரு டி என் ஆர் சிறிவர்தன – அங்கத்தவர்
திரு சமந்த குமாரசிங்க – அங்கத்தவர்
திரு நளின் ஆட்டிகல – அங்கத்தவர்

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

> "இடர் உணர்கூர் மூலதன மாதிரியினை சமாந்தரமாக அமுல்படுத்துவதுடன், கண்காணிப்பு செயற்பாட்டினை அபிவிருத்தி செய்வதில் சபை தன் கவனத்தைக் குவிக்கும். சபையின் மேற்பார்வை செயற்பாட்டினை பலப்படுத்தவதற்கு விதிகள் அடிப்படையிலான மேற்பார்வை சட்டகத்தில் இருந்து இடர் அடிப்படையிலான மேற்பார்வை சட்டகத்திற்கு சபை நகரும்."



ஆசியாவில் காப்புறுதி ஒழுங்குபடுத்தலில் மேன்மையான நிறுவனமாக வருவதற்கான எமது பயணத்தில் திடமான மற்றும் நிலையான செயற்பாடுகளுடன் வெற்றிகரமான வருடத்தின் அறிக்கைகை சமர்ப்பிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

### ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை சீராக்கல்கள்

ஒழுங்குபடுத்தல் பரப்பினுள் மிக முக்கியமான தருணமாக நான் கருதுவது கலவைக் காப்புறுதிக் கம்பனிகளை இரு வேறுபட்ட காப்புறுதிச் செயற்பாடுகளை கொண்டு நடாத்தும் கம்பனிகளாக வேறுபடுத்தும் வெற்றிகரமான மற்றும் சீரான நிலைமாற்றத்தை ஆகும். பன்னிரெண்டு கலவைக் கம்பனிகளினுள், ஏழு கம்பனிகளுக்கு வேறுபடுத்தல் நடவடிக்கைகளை கொண்டு நடாத்துவதற்கு விதிக்கப்பட்ட ஒழுங்குபடுத்தல் இறுதித்திகதியை சந்திப்பதற்கு வெற்றிகரமாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது. ஏனைய ஐந்து கம்பனிகளும், வேறுபடுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய தேவையிருந்த போதிலும், அதற்கு முன்னர் ஒழுங்குபடுத்தல் தேவைகளைப் பூர்த்திசெய்தல் வேண்டும். நான் இந்த சந்தர்ப்பத்தை, இந்த பணியினை ஆற்றும் பொழுது, பல்வேறுபட்ட வரையறைகளையும் சவால்களையும் சந்தித்த போதிலும் களைப்படையாமல் வேலை செய்ததற்காக கைத்தொழிற்துறை சாந்த ஆட்டக்காரர்களுக்கும் மற்றும் சபையின் ஊழியர்களுக்கும் நன்றி தெரிவிப்பதற்கு பயன்படுத்துகின்றேன். இந்த கலவைக் கம்பனிகளை வேறாக்குவதன் மூலம் மிகச்சிறந்த கவனக்குவிப்பை ஊக்குவிப்பதற்கும், வெளிப்படைத்தன்மையை பேணுவதற்கும், காப்புறுதி பூட்கையாளர்களைப் பாதுகாப்பதற்கும் மற்றும் இலாபத்தைக் காண்பதற்கும்

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு தொடர்ச்சி

எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் சபை காப்புறுதியாளர்களுக்கிடையில் சில குறிப்பிட்ட சேவைகளை நிலைமாற்றல் நடைமுறையை இலகுபடுத்துவதற்கும் மற்றும் வேறுபடுத்தல் நடவடிக்கைகளின் போது எழும் குறுகிய கால ஆகுசெலவு அதிகரிப்பு பற்றாக்குறையை குறைப்பதற்காகவும் அனுமதித்துள்ளது. அத்துடன் வேறுபடுத்தல் நடவடிக்கைகள் செயற்படுத்தப்படும் பொழுது தாக்கமுறும் தீர்வைகளுக்கு விலக்களிப்பினை வழங்குவதற்கும் சபை உத்தரவாதத்தை வழங்கியுள்ளதென்பது குறிப்பிட வேண்டிய முக்கியமான விடயமாகும்.

காப்புறுதி ஒழுங்குபடுத்தல் வரைபடத்தில் உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் மீள்கட்டமைப்புகளுடன் தொடர்பை வைத்திருப்பதன் தேவையை அடையாளம் கண்டதனால், மற்றுமொரு ஒழுங்குபடுத்தல் புரட்சியாக நிலையான மூலதன நிர்வாகத்திலிருந்து இடர் அடிப்படையிலான நிர்வாகத்திற்கு சபை நகர்ந்தமையை குறிப்பிட முடியும். இடர் உணர்வுகூர் மூலதன மாதிரியானது கம்பனியின் தேவையான மூலதன மட்டத்தினை தீர்மானிப்பதன் மூலம் இடர் ஆழத்தை கணிப்பிடுகின்றதன் விளைவாக மூலதன செயற்பாட்டை திருத்திக்கொள்ள முடியும். புதிய விதிகள் தற்போதுள்ள கடன்தீர் எல்லை விதிகளை பதிலீடு செய்வதுடன், இது 2016ம் ஆண்டிலிருந்து அமுலுக்கு வரும். இந்த புதிய மூலதன மாதிரி 2009ம் ஆண்டு உலக வங்கியின் ஒத்துழைப்புடன் கருத்திட்டத்தின் ஊடாக அபிவிருத்தி செய்யப்பட்டது. முதலாவது ஆரம்ப, அதன் பின்னராக விரிவாக்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆய்வுகள் இரண்டும், இலங்கையின் காப்புறுதிக் கைத்தொழிற்துறைக்கு தனித்துவமான மூலதன மாதிரியை அறிமுகப்படுத்துதலில் வெற்றியைக் கண்டது. இங்கு முக்கியமாக குறிப்பிட வேண்டிய விடயம் என்னவெனில், இந்த விதிகள் முறைமையாக அபிவிருத்தி செய்யப்பட்டதுடன், சபையின் ஊழியர்களின் அறிவு மற்றும் இயலளவை மேம்படுத்துவதுடன் கைத்தொழில் தொழிற்துறையில் உள்ளோரின் அறிவையும் மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. புதிய விதிகள் தொடர்பாக பல்வேறுபட்ட செயலமர்வுகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை கைத்தொழிற்துறையில் நிகழ்த்தப்பட்டதுடன், ஆரம்பத்தில் பாதைப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன், 2014ம் ஆண்டில் இருந்து சமாந்தர ஓட்டம் மேற்கொள்ளப்பட்டது. சமாந்தர ஓட்டத்தின் போது கைத்தொழிற்துறையின் இணக்கப்பாடு தொடர்பாக கம்பனிகள் மதிப்பிடப்பட்டதுடன், இணக்கப்பாட்டுக்கான உதவிகள் தேவைப்படும் பொழுது அவை சபையினால் வழங்கப்பட்டது.

இடர் உணர்வுகூர் மூலதன மாதிரியின் அமுல்படுத்தலுக்கு சமாந்தரமாக, மேற்பார்வை தொழிற்பாட்டையும் அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும் சபை தன் கவனத்தை செலுத்தியது. சபையின் மேற்பார்வை தொழிற்பாட்டை பலப்படுத்தும் நோக்குடன். சபை விதிகள் அடிப்படையிலான மேற்பார்வை சட்டகத்தில் இருந்து இடர் அடிப்படையிலான சட்டகத்திற்கு நகர்ந்தது. இந்தக் கருத்திட்டத்திற்கான தொழிற்பாட்டு உதவிகள் உலக வங்கியினால் வழங்கப்பட்டதுடன், இடர் அடிப்படையிலான மூலதனக் கருத்திட்டத்தின் IIம் கட்டமாக ஆரம்பிக்கப்பட்டது. இந்த இருவருட கருத்திட்டம் 2013ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், மீளாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில் இக்கருத்திட்டம் தொடர்பான அனேக பணிகள் நிறைவடைந்துள்ளன. இந்த நிர்வாக முறையானது விதிகள் அடிப்படையிலான நிர்வாக முறையினை விட அதிக முன்னேற்றமுடையதாகும். இந்த கருத்திட்டம் மீள்காப்புறுதி, மீள்காப்புறுதியாளர்கள், நட்ட சீராக்குனர்கள், முதலீடுகள் மற்றும் முதலீட்டுக் கருத்திட்டங்கள் தொடர்பாகவும் மேற்பார்வை இயலளவை அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும் தன் கவனத்தைச் செலுத்துகின்றது.

### கைத்தொழிற்துறையின் செயலாற்றுகை

இந்த கைத்தொழிற்துறை இவ்வருடமும் பொதுக் காப்புறுதி வியாபாரம் (ரூபா: 55,262 மில்லியன்) மற்றும் நீண்டகாலக் காப்புறுதி வியாபாரம் (ரூபா: 44,610 மில்லியன்) எனும் இரண்டிலும் முழுமையாக மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் 5.14% வீத வளர்ச்சியைப் பதிவுசெய்து. எனினும் 2013ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், மொத்த வளர்ச்சியானது அண்ணளவாக 43% (2013: 19%) வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. நீண்ட கால காப்புறுதி வியாபாரத்துடன் (7.04%) ஒப்பிடுகையில் பொது காப்புறுதி வியாபாரம் (3.66%) மிகக் குறைந்த வளர்ச்சியை அடைந்துள்ளதைக் காண முடிகின்றது. இந்த மந்தமான வளர்ச்சி 2012ம் ஆண்டிலிருந்து தொடர்கின்றது. இவ்வருடம், கடலபாயம், நானாவிதம் மற்றும் மோட்டார் வாகனக் காப்புறுதிகள் குறைந்தளவு வளர்ச்சியை கொண்டிருந்ததுடன், தீ அபாயக் காப்புறுதி 2013ம் ஆண்டு பதிவுசெய்த 16.25%) வீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 0.97% வீத மறை வளர்ச்சியைப் பதிவுசெய்தது. அத்துடன் பொது காப்புறுதி வியாபரத்தின் கூட்டுச் சேர்த்த வீதமானது, கடந்த ஐந்து வருடங்களாக 100% வீதத்தைக் கடந்துள்ளதுடன், 2014ம் ஆண்டு அதிகூடிய வீதமான 109.66% ஐப் பதிவுசெய்துள்ளது எனும் முக்கியமான விடயத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும். நீண்டகால காப்புறுதி வியாபாரத்திலும் கையளிப்பவர்களின் எண்ணிக்கை வருடங்களாக தொடர்ந்தும் அதிகரித்துவருவதுடன், புதிய பூட்கைகள் வழங்கப்படும் வீதத்துடன் ஒப்பிடுகையில் காலங்கடந்த பூட்கைகள் உயர் வீதத்தில் மாறாது இருந்தது என்பதற்கு கைத்தொழிற்துறை சான்றாக அமைகின்றது.

எனினும், பொருளாதாரத்தில் தேறிய உள்நாட்டு உற்பத்தி நிலையாக அதிகரித்துவருகையில், கைத்தொழிற்துறையின் நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரங்களின் ஊடுறுவல் குறைந்தளவு காணப்படுவதற்கு காப்புறுதிக் கைத்தொழிற்துறை சான்றாக அமைவதனால், மக்களின் நம்பிக்கை, விழிப்புணர்வு மற்றும் கருப்பொருளின் தேவைப்பாடுகள் மற்றும் காப்புறுதியின் நன்மைகள் மற்றும் மக்களின் செலவழிக்க கூடிய மட்டம் என்பவற்றை அதிகரித்தல் தொடர்பாக துறையை முன்னேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

மொத்தத் தவணைக் கட்டணம் / மொத்த தேறிய உற்பத்தி வீதமானது 1.02% இருக்கையில் தொடர்ந்தும் ஊடுறுவல் மட்டம் குறைவடைகின்றது. 2014ம் ஆண்டுக்கான பொது மற்றும் நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் ஊடுறுவல் மட்டமானது 0.56% மற்றும் 0.46% வீதத்தை பதிவுசெய்தது.

அதன் மறுதலையாக, காப்புறுதி கைத்தொழிற்துறையின் அடர்த்தி, அதாவது தனிநபருக்கான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமானது மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணத்தின் அதிகரிப்பு மற்றும் குறிப்பிடக்கூடியளவில்லாத குடித்தொகை வளர்ச்சி காரணமாக 2013ம் ஆண்டு பதிவுசெய்யப்பட்ட ரூபா 4,637 இல் இருந்து ரூபா 4,831ஆக அதிகரித்தது.

காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த சொத்துக்கள் 2010ம் ஆண்டில் இருந்து நிலையாக வளர்ச்சியடைந்துள்ளதுடன், 2013ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 13.81%

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு தொடர்ச்சி

வீத வளர்ச்சியைக் காட்டுகின்றது. மேலும், 2013ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் காப்புறுதிக் கம்பனிகளின் பங்குதாரர்களின் நிதியானது குறிப்பிடக்கூடிய வளர்ச்சியான 17.96% வீதத்தை வெளிப்படுத்துகின்றது.

காப்புறுதிக் கம்பனிகளின் விநியோக ஊடகத்தை எடுத்துக்கொண்டால், நீண்டகால காப்புறுதி வியாபாரத்தில் காப்புறுதி முகவர்கள் விநியோக ஊடகத்தை ஆட்சிசெய்வதையும், பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் காப்புறுதியாளர்களின் நேரடி வியாபார விநியோக ஊடகம் காண முடிகின்றது. அத்துடன் 2014ம் ஆண்டு, வங்கிக்காப்புறுதி ஊடகமானது நீண்டகால காப்புறுதி வியாபாரத்தில் அதிகரித்துள்ளமைக்கு சான்றுள்ளது.

தேசிய உள்நாட்டு உற்பத்திக்கு காப்புறுதி தரகர் கம்பனிகளின் பங்களிப்பானது ரூபா 14,716 மில்லியனாக இருப்பதுடன், இத்தொகை 2013ம் ஆண்டு பங்களிப்பான ரூபா 14,380 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2.34% வீத வளர்ச்சியைப் பதிவுசெய்கின்றது. இந்தப் பங்களிப்பு பொதுக் காப்புறுதி வியாபாரத்தினால் வழங்கப்பட்ட ரூபா 14,558 மில்லியன் (98.93%) மற்றும் நீண்டகால வியாபாரத்தினால் வழங்கப்பட்ட ரூபா 158 மில்லியன் (1.07%) தவணைக் கட்டண வருமானங்களை உள்ளடக்கியுள்ளது.

**மனிதவளங்கள்**

ஊழியர்களின் செயலாற்றுகை மட்டத்தினை தொடர்ச்சியான தொழிற்திறன் அபிவிருத்தி மூலம் மேம்படுத்தலாம் என அடையாளம் காணப்பட்ட கருப்பொருளின் ஊடாக இவ்வருடமும் சபை தனது மனித வள மூலதனத்தில் முதலீடுகளை மேற்கொண்டது. அண்மையில், சபை முதிர்ச்சியான, திறன்சார் தகைமைகளைக் கொண்ட, திறமையான பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்களை சபை உள்ளடக்கிக்கொண்டதுடன், மாறிவரும் காப்புறுதித்துறையுடன் நெருங்கிய தொடர்பை பேணுவதற்காக ஊழியர்களுக்கு அவர்களின் அறிவினை மேம்படுத்தவதற்கான பயிற்சி வழங்கப்பட்டது.

**முன்னோக்கி அவதானித்தல்**

சபை தன்னுடைய ஒழுங்குபடுத்தல் சட்டகத்தினை சர்வதேச நியமங்களுடன் வரிசைப்படுத்துவதற்காக, இலங்கை காப்புறுதிச் சங்கத்தினால் வழங்கப்பட்ட காப்புறுதி உப கோட்பாடுகளுடன் ஒப்பீடுகளை ஆரம்பித்துள்ளது. அத்துடன் சபை பல்வேறுபட்ட பங்குபற்றுனர்களுடன் சந்திப்புகளை மேற்கொண்டதானால், முன்னேற்ற வேண்டிய பரப்புகளை அடையாளம் காண்பதற்கு முடிந்தது. இந்த முன்னேற்றங்கள் சட்ட ரீதியான மீள்திருத்தங்கள் அல்லது உப சட்டவாக்கங்களின் மீள்திருத்தங்களின் ஊடாக மேற்கொள்ளப்பட்டது.

சந்தை நடத்தை மீதான கோட்பாடுகளின் அறிமுகம் தொடர்பான பரப்புகள் குறித்து வரும் வருடங்களின் கவனம் செலுத்தப்படும். இது காப்புறுதி உப கோட்பாடுகளுடன் ஓர் வரிசையில் இணைகின்றது. அனேக மாநாடுகளில் குறைவாகப் பேசப்பட்ட விடயம், வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்ட அதேநேரம் இது கைத்தொழிற்துறையின் நம்பிக்கையை மக்களிடையே அதிகரித்துள்ளதென்பதாகும். கடந்த வருடங்களில் காப்புறுதிப் பூட்கையாளர்களினால் சபைக்கு குறிப்பிடக்கூடியளவு முறைப்பாடுகள் சபைக்கு வழங்கப்பட்டுள்ளமை இதற்கு சான்றாகும். காப்புறுதித்துறையின் வளர்ச்சிக்கு காப்புறுதி மீதான பொது மக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்புவது தொடர்பான பணிகளில் அதிக வேலையுள்ளது. இந்த மீளாய்வுக்குட்பட்ட வருடத்தினுள் சபை காப்புறுதியை வைத்திருப்பதன் முக்கியத்துவம் பற்றிய சந்தை அபிவிருத்தி நடவடிக்கைகள், மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டங்களில் விழிப்புணர்வு பிரச்சாரங்கள், மின்னிலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகத்தினூடான விழிப்புணர்வுகள் மற்றம் கண்காட்சிகளில் பங்குபற்றல் போன்றவற்றை சபை மேற்கொண்டது.


சபை சந்தை அபிவிருத்தி செயற்பாடாக ‘நுண்காப்புறுதி’ துறையினை அபிவிருத்தி செய்வதன் முக்கியத்துவம் அடையாளம் காணப்பட்டதுடன், இந்தத்துறையினை அபிவிருத்தி செய்வதை ஊக்குவிப்பதற்காக பங்குபற்றுனர்களுக்கிடையில் ‘நுண்காப்புறுதி’ தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவற்கு செயலமர்வொன்று ஒழுங்குசெய்யப்பட்டது.

**பாராட்டு**

இந்த முடிவுரையில், வருடம் முழுவதிலும் எனக்கும் சிரேஸ்ட முகாமையாளர்களுக்ககும் வழங்கிய ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டலுக்காக தலைவி மற்றும் சபையின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன். தலைவி அவரின் செல்வம் போன்ற அறிவின் ஊடாக எங்களுக்கு சவாலான நேரங்களில் வழங்கிய வழிகாட்டலுக்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

அத்துடன் என்மேல் நம்பிக்கை வைத்து இலங்கை காப்புறுதி சபையின் பணிப்பாளர் நாயகமாக என்னை நியமித்தது தொடாபாக எனது மனமார்ந்த நன்றியை தலைவிக்கும் அனைத்து சபை அங்கத்தவர்களுக்கும் தெரிவிக்கின்றேன்.

எனது நன்றியை ஐஏஎஸ்எல், எஸ்எல்ஐபிஏ மற்றும் எஸ்எல்ஐஐ அலுவலக ஊழியர்கள் மற்றும் தலைவருக்கும் சபைக்கு வழங்கிய ஒத்துழைப்பிற்கு எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். இறுதியாக எனது குழுவைத் சேர்ந்த பணிப்பாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு இவ்வருடத்திற்கான இலக்கினை அடைவதற்கு அவர்கள் வழங்கிய உயர்ந்த மட்ட அர்ப்பணிப்பிற்கும் கடும் உழைப்பிற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.




**தமயந்தி பிரணாந்து**
*பணிப்பாளர் நாயகம்*
*22 ஜூன் 2015*

# சபையின் அங்கத்தவர்கள்






















# சபையின் அங்கத்தவர்கள்

1. திருமதி இந்திராணி சுகததாச
   *தலைவி*
2. செல்வி புஸ்பா வெல்லப்பிலி
   *அங்கத்தவர்*
3. திரு பி சமரசிறி
   *அங்கத்தவர்*
4. திரு டி என் ஆர் சிறிவர்தன
   *அங்கத்தவர்*
5. திரு ஜெரோமி போலிங்
   *அங்கத்தவர்*
6. டாக்டர் ஏ ஏ ஷபயிர் குலாம்ஹுஸைன்
   *அங்கத்தவர்*
7. திரு அசங்க அபேகுணசேகர
   *அங்கத்தவர்*

# சபை அங்கத்தவர்கள் பற்றிய சுருக்கக்குறிப்பு

### (1) திருமதி இந்திராணி சுகததாச
**தலைவி**

திருமதி இந்திராணி சுகததாச 2010 மே மாதத்தில் இருந்து சபையின் தலைவியாக பதவி வகிக்கின்றார். கொழும்பு மியூசியஸ் கல்லூரியில் கல்வி பயின்ற இவர், கொழும்பு பல்கலைக்கழகத்தில் சமூக விஞ்ஞான பட்டம் பெற்ற பட்டதாரி என்பதுடன், அவுஸ்திரேலியாவின் மொனாச் (Monash) பல்கலைக்கழகத்தில் இருந்து பட்டப் பின்படிப்பு (MBA/MPA) பட்டமும் பெற்றுள்ளார். ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தினால் கௌரவிக்கப்பட்ட எச் ஹம்ப்ரே பெலோசிப் (புல்பிரைட்) விருதும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், பெலோசிப் உறுப்பினர் காலத்தின் போது நியுயோக்கின் சிட்டி பல்கலைக்கழகத்திலும் சேர்ந்திருந்தார்.

திருமதி சுகததாச 1977இல் இலங்கை நிர்வாக சேவையின் அங்கத்தவராக திட்ட அமுலாக்கல் அமைச்சில் தனது பணியை ஆரம்பித்தார். 35 ஆண்டுகளுக்கும் அதிகமாக பொதுத்துறையில் அவராற்றிய கௌரவமிக்க பணிகளில் பணிப்பாளர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், பணிப்பாளர் மகளிர் பணியகம், செயலாளர் இளைஞர் அபிவிருத்தியும் மகளிர் அதிகாரமும் அமைச்சு, செயலாளர், பெருந்தோட்டத்துறை கைத்தொழில் அமைச்சு மற்றும் தலைவர் பிணையங்களும் பரிவர்த்தணையும் ஆணையம் எனும் பதவிகளும் உள்ளடங்கும்.

திருமதி சுகததாச, வெளிநாடுகளுக்கு அனேக தூதுக் குழுக்களின் இலங்கைக்கான பிரதிநிதியாகச் சென்றுள்ளதுடன், சர்வதேச அரங்குகள் பலவற்றில் பங்கேற்பாளராகவும் இருந்துள்ளார்.

தற்போது அவர் தேசிய அபிவிருத்தி வங்கி மற்றும் களுபோவிட்டிய தேயிலைத் தொழிற்சாலை லிமிடட் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களில் ஒருவராகவும் இருக்கின்றார். முதலீட்டுச் சபை, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, இலங்கை தேயிலைச் சபை, மத்திய சுற்றாடல் அதிகார சபை, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், தேசிய இளைஞர் மன்றம், பெருந்தோட்ட முகாமைத்துவத்துக்கான தேசிய கல்வி நிறுவனம் மற்றும் தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை ஆராய்ச்சி நிறுவனங்கள் என்பவற்றின் சபைகளிலும் பணியாற்றியுள்ளார்.

2013 இல் அவுஸ்திரேலியன் அலுமினி எக்ஸலன்ஸ் விருது உள்ளடங்களாக, நாட்டின் பொதுத் துறை சேவை மற்றும் பல்வேறு துறைகளில் தலைமைத்துவம் என்பவற்றிற்கு அவர் ஆற்றிய பங்களிப்பை அவர் பெற்ற அனேக பாராட்டுக்களின் ஊடாக அறியக்கூடியதாக உள்ளது.

### (2) செல்வி புஸ்பா வெல்லப்பிலி

செல்வி புஸ்பா வெல்லப்புலி இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தராவார், இவர் 32 ஆண்டு கால பொதுச் சேவைத் துறையில், ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர், பொதுத் திறைசேரியின் பொது நிதித்துறை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், வீட்டு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர் மற்றும் நன்னடத்தை மற்றும் குழந்தைகள் நல அமைச்சின் உதவி ஆணையாளர் என பல்வேறுபட்ட பதவிகளை வகித்துள்ளார்.

இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டத்தில் முதுமானிப் பட்டத்தைப் பெற்றுள்ளதுடன், கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமானிப் பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கணக்கு மற்றும் புள்ளிவிபரவியல் கல்வியில் கௌரவ விஞ்ஞானமானிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டுள்ளதுடன், ரொட்டர்டாமில் உள்ள வீட்டு மற்றும் நகர அபிவிருத்திக் கற்றைகள் நிறுவனத்தில் நகர அபிவிருத்தி தொடர்பான பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். அவர் இலங்கையின் மீயுயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியும் ஆவார்.

செல்வி வெல்லப்புலி தற்போது திறைசேரியின் பிரதிச் செயலாளர் பதவியை வகிக்கின்றார். அத்துடன், இலங்கை வங்கியின் பணிப்பாளர் சபையில் வெளியில் இருந்து வருகை தரும் பணிப்பாளராகவும் இருக்கின்றார்.

### (3) திரு பி சமரசிறி

திரு பி சமரசிறி தற்போது இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுனராக சேவையாற்றுகின்றார். இப்பதவிக்கு நியமனம் பெறுவதற்கு முன்னர் இலங்கை மத்திய வங்கியில் உதவி ஆளுனர், நாணயச் சபையின் செயலாளர், வங்கி மேற்பார்வை அலகின் இணக்கப்பாட்டு அலுவலராகவும் மற்றும் பணிப்பாளராகவும் பல்வேறுபட்ட சிரேஸ்ட நிலைப் பதவிகளை வகித்துள்ளார். அத்துடன் கடந்த நான்கு வருட காலங்களாக இலங்கை வங்கியாளர் நிறுவனத்தினை உதவித் தலைவராகவும் மற்றும் 2015 பெப்பரவரி வரை கடந்த ஐந்து வருடங்களாக இலங்கை கணக்கு மற்றும் கணக்காய்வு நியமங்கள் நாணயச் சபையின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

திரு சமரசிறி, பொருளாதாரத்தில் கலைமானி (கௌரவம்) பட்டத்தை கொழும்பு பல்கலைக்கழகத்திலும் பொருளாதாரத்தில் முதுமானிப் பட்டத்தை ஐக்கிய அமெரிக்க நாட்டின் கென்சாஸ் பல்கலைக்கழகத்திலும் பெற்றுக் கொண்டுள்ளார்.

திரு சமரசிறி இலங்கை மத்திய வங்கியில் சேவையாற்றிய தனது 33 வருட காலத்தில் புள்ளி விபரவியல், பொருளாதாரக் கொள்கைகள், நிதி மற்றும் நிதி சாரா நிறுவனங்களின் மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தல், நிதி முறைமையின் ஸ்தீரத்தன்மை, கூட்டிணைந்த நல்லாட்சி, நாணய முகாமைத்துவம், வெளிநாட்டு நாணயக் கொள்கைகள், நிதிப் புலனாய்வு மற்றும் பிராந்திய அபிவிருத்தி போன்ற விடயப்பரப்புகளில் அனுபங்களைப் பெற்றுள்ளார்.

திரு சமரசிறியினால் எழுதப்பட்ட "මුදල් ගනුදෙනු, බැංකු සහ ආර්ථිකය", "මූලික ආර්ථික විද්‍යා මූලධර්ම විග්‍රහය" සහ "ආර්ථික විද්‍යා මූලධර්ම සහ ප්‍රතිපත්ති" எனும் மூன்று புத்தகங்கள் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன், பல்வேறுபட்ட வெளியீடுகள் மற்றும் பத்திரிகைகளில் பொருளாதாரம் மற்றும் நிதியில் தலைப்புகளில் பல்வேறுபட்ட கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்.

### (4) (4) திரு டி என் ஆர் சிறிவர்தன

திரு டி என் ஆர் சிறிவர்தன பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புவியில் கலைமானி (கௌரவம்) பட்டம், இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் சட்டத்துறையில் பட்டம் என்பவற்றைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன், கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நாடாத்தப்பட்ட எல்எல்எம் பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட மாணவருமாவார். இவர் தொழிற்துறையில் ஓர்

# சபை அங்கத்தவர்கள் பற்றிய சுருக்கக்குறிப்பு தொடர்ச்சி

சட்டத்தரணியாவார். திரு சிறிவர்தன கம்பனிகள் பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் 1988ம் ஆண்டு கம்பனிகள் அத்தியட்சகராக இணைந்து, 2001ம் கம்பனிகளின் உதவிப் பதிவாளராக பதவி உயர்வு பெற்றார். இவர் கம்பனிகளின் பதிவாளர் நாயகமாக (காபாந்துக் கடமை) நியமனம் பெற்றார். திரு சிறிவர்தன, இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் வெளியில் இருந்து வருகை தரும் அங்கத்தவராகவும், இலங்கை பிணையங்களும் பரிவர்த்தனைகளும் ஆணையத்தின் வெளியில் இருந்து வருகை தரும் அங்கத்தவராகவும் பணியாற்றினார்.

**(5) திரு ஜெரோமி போலிங்**

லண்டன் பட்டய காப்புறுதி நிறுவனத்தின் வியாபார நிர்வாக முதுமானிப் பட்டத்தை சிட்னி பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்டுள்ளார்.

20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவத்தைக் காப்புறுதித்துறையில் பெற்றிருப்பதுடன், இக்காலத்தில் இலங்கை, மாலை தீவு மற்றும் அவுஸ்திரேலியா நாடுகளில் அமைந்துள்ள காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதி/மீள்காப்புறுதி தரகர் எனும் இரு துறைகளிலும் பணியாற்றியுள்ளார்.

தற்போது, என்எச்ஜே இடர் முகாமைத்துவ சேவைகள் தனியார் நிறுவனம், ஒக்டகன் கென்சல்டன்ஸ் தனியார் நிறுவனம் மற்றும் என்ட்லஸ் அவுட்டோர் தனியார் நிறுவனம் என்பவற்றில் பணிப்பாளராக கடமைபுரிகின்றார்.

**(6) கலாநிதி ஏ ஏ ஷபீர் குலாம்ஹுசைன்**

தேசபந்து கலாநிதி அலி அஸ்கர் ஷபீர் குலாம்ஹுசைன் ஆதாம் இன்வெஸ்ட்மன்ட் பிஎல்சி நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் தலைவராக பணியாற்றுகின்றர். இவர் ஜப்பான், டோக்கியோவில் பிஎச்டி ஐக்கிய இராஜ்ஜியத்தின் லண்டன் கிங்ஸ் கல்லூரியில் பட்டத்தைப் பெற்றுள்ளார். கலாநிதி குலாம்ஹுசைன் 'தேசபந்து மானவஹித்தவாதி, லங்காபுத்ர" போன்ற கௌரவத் தலைப்புகளைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன், நீதி அமைச்சு, கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு, உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சு என்பவற்றில் ஆலோசகராக பணியாற்றுவதுடன் சமாதான நீதவான் (நாளாடாவிய) ஆகவும் உள்ளார்.

அத்துடன், கலாநிதி குலாம்ஹுசைன் சிலோன் அன்ட் பொ.ஃரின் ரேடர்ஸ் பிஎல்சி, ஓரியன்ட் காமர்ன்ட் பிஎல்சி, பிசிஎச் ஹோல்டிங்ஸ், ஆதம் எக்ஸ்போ (பிரைவட்) லிமிடட், ஸ்பைஸ் ஒப் லைப் (பிரைவட்) லிமிடட்,, நெட்வேர்க் கொமியூனிகேஸன்ஸ் (பிரைவட்) லிமிடட், ஆதம் அப்பரல்ஸ் (பிரைவட்) லிமிடட், ஆகும் மெட்டல்ஸ் (பிரைவட்) லிமிடட், ஜோர்ஜியோ மொரன்டி (பிரைவட்) லிமிடட், சோனான்ஷி இன்வெஸ்ட்டன்ஸ் (பிரைவட்) லிமிடட், சோனாக்ஷி ஜெம்ஸ் (பிரைவட்) லிமிடட், ஆதம் எயர் கண்டிஸனர்ஸ் (பிரைவட்) லிமிடட், ஆகும் ஒட்டோ மொபைல்ஸ் (பிரைவட்) லிமிடட், கொழும்பு அப்போதிகரிஸ் கம்பனி லிமிடட், பிசினஸ் சேம்பர் ஒப் கொமர்ஸ், ஹமில்டன் ரிசோர்ட்ஸ் (பிரைவட்) லிமிடட், சிலோன் அன்ட் பொரின் ரேட் சர்கி-டெக் (பிரைவட்) லிமிடட், கொழும்பு பிரைட் அனட் ட்ரான்ஸ்போர்ட் லிமிடட், டொட்வெல் அன்ட் கம்பனி லிமிடட் என்பவற்றில் பணிப்பாளராகவும் சேவையாற்றுகின்றார்.

**(7) திரு அசங்க அபயகுணசேகர**

திரு அசங்க அபயகுணசேகர உலக பொருளாதார மன்றத்தின் இளைஞர் உலகத் தலைவராவார் (Young Global Ledger). இவர் உபாயமார்க்க கற்கைகளுக்கான பிராந்திய நிலையத்தின் (RCSS) அங்கத்தவராவார்.

சர்வதேச உறவுகள் மற்றும் உபாயமார்க்க கற்கைகளுக்கான லக்ஷ்மன் கதிர்காமர் கல்வி நிறுவனத்தின் பிரிமிரா நஷனல் திங் டான்க்கின் முன்னால் நிறைவேற்று பணிப்பாளராவதுடன், டிப்ளோமட்டிக் டெயினிங் இன்ஸ்டிடியூட்டின் பணிப்பாளர் நாயகமாகவும் இருந்துள்ளார்.

அசங்க அரசாங்க நிர்வாகத்துறையில் கிட்டத்திட்ட ஒரு தசாப்தகால அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன், இவர் வெளிநாட்டு தொழில்வாய்ப்பு முகவர் நிலையம், சிலோன் பிஷரி ஹாபர்ஸ் கோர்பரேஸன் என்பவற்றின் தலைவராகவும், இலங்கை டெலிகொம் மற்றும் ஹட்சிசன் நிறுவனத்தின் முன்னால் தலைவராக இருந்துள்ளார். இவர் அரசாங்கப் பதவிகள் மூன்றிலும் இருந்த மிகக்குறைந்த வயதுடையவராவார். இவர் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளராவார். தேசிய விஞ்ஞான அமைப்பில் உபகுழுக்களில் அங்கத்தவராகவும், விஞ்ஞான தொழில்நுட்ப புத்தாக்கத்தின் இணைப்புச் செயலாளராகவும் செயற்படுகின்றார்.

இவர் குரேட்டர் ஒப் குளோபல் ஸாப்பர்ஸ் கொழும்பு ஹப் மற்றும் குளோபல் டிக்னிட்டி ஒவ் கன்றி சியார் என்பவற்றை நிறுவியுள்ளார். அத்துடன் இலங்கையில் உள்ள சமூக அரசசார்பற்ற நிறுவனமான 'திரி சவிய' நிலையத்தின் பணிப்பாளர் மற்றும் தலைவராவார். அத்துடன் இலங்கை அத்தியாத்தின் இளைஞர் உலக தொழில்முயற்சியாளர் அமைப்பின் தலைவருமாவர்.

அசங்க கணணி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமானிப் பட்டத்தையும், மேற்கு அவுஸ்திரேலியாவில் வியாபார நிர்வாக கற்கையில் முதுமானிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். அத்துடன், ஹார்வேட் கெனடி பாடசாலை, யேல் பல்கலைக்கழகத்தின் ஜக்சன் இன்ஸ்ரிடியூட் போர் குளோபல் அப்பியார்ஸ், சிங்கப்பூரின் எல்கேவை ஸ்கூல் ஒப் பப்ளிக் பொலிசி நிறுவனங்களில் நிறைவேற்றுக் கல்வயைப் பெற்றுள்ளார். ஆரம்பக் கல்வியை சாந்த தோமர்ஸ் ஆரம்ப பாடசாலையிலும் ஆனந்தக் கல்லூரியிலும் பெற்றுள்ளார்.

ஜெனிவாவின் உலக பொருளாதார பேரவை மற்றும் பிரான்சின் தொழில்முயற்சியாளர் பேரவை என்பவற்றில் பலகத்தில் அங்கத்தவராக அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. இவர் ஐக்கிய அமெரிக்கா, தென் ஆபிரிக்கா, தெற்காசியா, சீனா, ரஷ்யா மற்றும் தாவோஸ் என்பவற்றில் நடைபெற்ற பல்வேறுபட்ட சர்வதேச மாநாடுகளில் குழு அங்கத்தவராக இருந்தார்.

யுஎஸ் ஸ்டேட் டிபார்ட்மென்ட் ஐவிஎல்பி மற்றும் வொஸிங்டன் தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் அலுமினியாக அசங்க இருக்கின்றார். சர்வதேச அரசயல் பொருளாதாரத்தில் வருகை விரிவுரையாளராகவும் அசங்க கடமையாற்றுகின்றார்.














# சிரேஷ்ட முகாமைத்துவக் குழு

1. திருமதி. தமயந்தி பர்ணாந்து
   *(பணிப்பாளர் நாயகம்)*
2. திரு. நிஹால் ராமநாயக்க
   *(பணிப்பாளர் கண்காணிப்பு)*
3. திருமதி. சாயா வித்தானவாசம்
   *(பணிப்பாளர் நிதி மற்றும் நிர்வாகம்)*
4. திரு. சுதீர சேனாரத்ன
   *(பணிப்பாளர் புலனாய்வு)*
5. திருமதி. சமரி ஏக்கநாயக்க
   *(உதவி பணிப்பாளர் கண்காணிப்பு)*
6. திரு. ராஜன் நிருபசிங்கம்
   *(உதவி பணிப்பாளர் சட்டம்)*

# ஊழியர் குழாம்




1. திரு. லக்ஸ்மன் விஜேசிங்க
2. திருமதி. லசந்தி தொட்டஹேவா
3. திரு. பிம்சார விஜேசிங்க
4. திருமதி. சரிகா வத்துஹேவ
5. திருமதி. சத்துரி பண்டார
6. திருமதி. பிரயங்கி டி. சில்வா
7. திருமதி. தனுஜா அன்டனி
8. திருமதி டெசிகா ரத்நாயக்க
9. திரு. எச்.பி. அசங்கா
10. திருமதி. சியாமளி அத்தநாயக்க
11. திருமதி. உபேந்திரா செனவிரத்ன
12. திருமதி. கௌசாலி தயாரத்ன
13. திருமதி. துசாரி விஜேகுணவர்தன
14. திருமதி. கோகிலா சிறிவர்தன
15. திரு. சரித்த விக்ரமசிங்க
16. திரு. லக்மால் களுபோவில
17. திருமதி. பவித்ரா புஞ்சிஹேவா
18. திருமதி. திலினி வாகிஸ்ட

# ஊழியர் குழாம்
































19. செல்வி. உபலக்ஷி ரணசிங்க
20. திருமதி. சுசினி பிரேமலால்
21. திருமதி. ஷனிகா நாணயக்கார
22. திரு ரொஷன் த கொஸ்தா
23. திருமதி சுஜீவா ரணசிங்க
24. திரு. எதிராஜ் சிறீகாந்தன்
25 திருமதி டி.டபில்யூ.எஸ்.எஸ். சுப்பிலி
26. திருமதி மெரினா டயஸ்
27. திருமதி. சந்திமா கம்புறுகமுவ
28. திருமதி. மல்ஹாரி விக்ரமசிங்க
29. திருமதி. ருவினி லியனகே
30. திருமதி. வீணா டினேக்கா
31. திரு. சமன் சேனாதீர
32. திரு. சரத் உதயங்க
33. திரு. சந்திமா லால் குமார
34. திருமதி. லக்மலி அல்கம (சமூகமளிக்கவில்லை)
35. திருமதி. ஹசின் பெரேரா (சமூகமளிக்கவில்லை)



# மீளாய்வுகள்


**பொது மீளாய்வு** **22**

**புள்ளிவிபர மீளாய்வு** **27**

**தொழிற்பாட்டு மீளாய்வு**

- மேற்பார்வை மீளாய்வு 70
- ஒழுங்கமைப்பு மீளாய்வு 74
- புலனாய்வு சார்ந்த மீளாய்வு 81
- சந்தை அபிவிருத்தி மற்றும் வெளியக உறவுகள் பற்றிய மீளாய்வு 85
- நிர்வாக மீளாய்வு 88
- நிதியியல் மீளாய்வு 89

# பொது மீளாய்வு

## சட்ட நிர்வாகம்

### சட்டவாக்கம்

காப்புறுதி வைப்பாளர்கள் மற்றும் உத்தேச காப்புறுதி வைப்பாளர்களின் ஈடுபாடுகளை பாதுகாக்கும் நோக்கத்துடன், இலங்கையில் காப்புறுதி வியாபாரம் நேர்மையுடனும் தொழில் சார்ந்ததாகவும், விவேகமானதாகவும் நிர்வகிக்கப்படுவதை உறுதி செய்வது இலங்கை காப்புறுதிச் சபையின் (இதன் பின்னர் 'சபை' என அழைக்கப்படும்) நோக்கமாகவும் பொறுப்பாகவும் உள்ளது.

2000 ஆண்டின் 43ம் இலக்க காப்புறுதி கைத்தொழிற்துறை ஒழுங்குபடுத்தல் சட்டம் (இதன் பின்னர் 'சட்டம்' என அழைக்கப்படும்), காப்புறுதிக் கம்பனிகள், காப்புறுதி தரகுக் கம்பனிகள், காப்புறுதி முகவர்கள் மற்றும் நட்டங்களை சீராக்குபவர்கள் ஆகியோருக்கு ஒழுங்கமைப்புடனும் மேற்பார்வையுடனும் தொடர்புடைய சட்டபூர்வமான வரம்புகளை வழங்குகின்றது.

இந்தச் சட்டம், 2007ம் ஆண்டு 27ம் இலக்கம் மற்றும் 2011ம் ஆண்டு 03ம் இலக்க காப்புறுதி கைத்தொழிற்துறை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டது.

காப்புறுதி தொழிலை வலுப்படுத்துவதற்கு சட்டத்திற்குள் அனேக திருத்தங்கள் உட்சேர்கப்பட்டது. இந்த அறிக்கையின் ஒழுங்குபடுத்தல் மீளாய்வில் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட சட்ட சீர் திருத்தங்கள் விளக்கப்பட்டுள்ளன.

### சந்தைக் கட்டமைப்பு

### காப்புறுதி வழங்குனர்கள்

சட்டத்தின் 12 ஆம் பிரிவுக்கு அமைவாகவும், சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்பவும், சட்டத்தின் கீழ், அத்தகைய வியாபாரத்தைப் பதிவுசெய்ய வேண்டிய அல்லது பதிவுசெய்யக் கருதும் எந்தவொரு நபரும் அத்தகைய பதிவினை மேற்கொள்ளாதிருப்பாராயின், இலங்கையில் காப்புறுதி வியாபாரத்தைக் கொண்டு நடாத்த முடியாது.

சட்டத்தின் 13 ஆம் பிரிவுக்கு அமைவாக, இலங்கையில் காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு ஆர்வமுடைய ஒருவர், 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பொதுக் கம்பனி ஒன்றுடன் கூட்டிணைந்திருக்க வேண்டும் என்பதுடன், சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியதித் தேவைகள் அனைத்தையும் பூரணப்படுத்தியதன் பின்னர் காப்புறுதி சட்டத்தின் கீழ் காப்புறுதி வழங்குனராக பதிவுசெய்து அனமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

ஆண்டின் இறுதி நாளான்று சட்டத்தின் கீழ் காப்புறுதி வழங்குனர்களாக 21 காப்புறுதிக் கம்பனிகள் தொழிற்படுகின்றதுடன் 2009ம் ஆண்டு செலிங்கோ டக்காபுல் லிமிடட் மீது விதிக்கப்பட்ட பதிவு இடைநிறுத்தம் தொடர்ந்து நீடிக்கின்றது. காப்புறுதி வியாபாரக் கம்பனிகளின் வகைகளை வரைபடம் 01 காட்டுகின்றது. தொழிற்படும் 21 கம்பனிகளில், நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தையும் பொது வியாபாரத்தையும் மேற்கொள்ளும் கலவை காப்புறுதி வழங்குனர்களாக பதிவுசெய்யப்பட்ட 12 கம்பனிகளும், நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தை மேற்கொள்ளும் 03 கம்பனிகளும் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரத்தை மேற்கொள்ளும் 06 கம்பனிகளும் உள்ளடங்கும்.

### வேறாக்கல்


காப்புறுதி வியாபாரத்தில் சீரான மாற்றத்தைக் கொண்டுவருவதற்கு, கைத்தொழிற்துறையின் ஆலோசனையுடன், கலவை காப்புறுதியாளர்களை வேறாக்குவதற்கான வழிகாட்டல்களை சபை வழங்கியது.

2011ம் ஆண்டு 3ஆம் இலக்க காப்புறுதி கைத்தொழிற்துறை ஒழுங்குபடுத்தல் திருத்தச் சட்டத்தின் (இதன் பின்னர் 'திருத்தச் சட்டம்' என அழைக்கப்படும்) 53 ஆம் பிரிவு கலவைக் கம்பனிகளை காப்புறுதி வியாபாரத்தின் இரு வகுப்பின் இருவேறு கம்பனிகளாக (இதன் பின்னர் 'வேறாக்கப்பட்ட காப்புறுதிக் கம்பனிகள் / வேறாக்கப்பட்ட காப்புறுதிக் கம்பனி' என அழைக்கப்படும்) 2015 பெப்பரவரியில் அல்லது அதற்கு முன்னர் வேறாக்குவதற்கு வேண்டுகின்றது.

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், கலவை காப்புறுதி வழங்குனர்கள் திருத்தச் சட்டத்தின் 53 ஆம் பிரிவுக்கு அமைவாக விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளதுடன், இவை மதிப்பீடு செய்யப்பட்ட வருடத்தின் இறுதி நாளான்று வரையில் 08 கம்பனிகளுக்கு பதிவினை வழங்குவதற்கான அனுமதியை சபை வழங்கியுள்ளது. எனினும், எட்டுக் கம்பனிகளில் 07 கம்பனிகளுக்கு 01 ஜனவரி 2015ம் திகதியில் இருந்து பயனுறுதி பெறும் வகையில் சபை அனுமதிப் பத்திரத்தை வழங்கியுள்ளதுடன், அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்கு அவசியமான மூலதனத்துடன் இசையுமாறு ஒரு கம்பனிக்கு சபை பணித்துள்ளது.

**வரைபு 1**

*காப்புறுதி வழங்குனர்களினால் கொண்டு நடாத்தப்படும் காப்புறுதி வியாபாரத்தின் வகைகள்*




### காப்புறுதி தரகர்கள்


காப்புறுதி தரகர் கம்பனி, 2007ம் ஆண்டு 07ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாவதுடன், இது காப்புறுதிச் சட்டத்தின் கீழ் காப்புறுதி தரகு வியாபாரத்தைக் கொண்டு நடாத்துவதற்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது. காப்புறுதி வழங்குனர்கள், காப்புறுதி வைப்பாளர்கள் அல்லது காப்புறுதி பிரேரிப்பாளர்கள் அல்லது மீள் காப்புறுதியாளர்கள் காப்புறுதிக் கம்பனியுடன் அவர்கள் சார்பாக காப்புறுதி கம்பனி அல்லது மீள்காப்புறுதிக் கம்பனியிடமிருந்து தரகுப் பணத்தை அல்லது தரகு எனும் கொடுப்பனவு ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்புடன் காப்புறுதி வியாபாரத்தில் இடையீட்டாளர்களாக காப்புறுதி தரகர்கள் செயற்படுகின்றனர்.

# பொது மீளாய்வு தொடர்ச்சி

ஆண்டின் இறுதி நாளன்று, 58 கம்பனிகள் காப்புறுதி தரகர்களாக பதிவுசெய்யப்பட்டிருந்தன. இந்தக் கம்பனிகளில் 39 கம்பனிகள் நீண்டகால காப்புறுதி வியாபாரம் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் எனும் இரண்டையும் கலவையாக மேற்கொள்ளும் கம்பனியாக பதிவுசெய்யப்பட்டிருந்ததுடன், பொது காப்புறுதி வியாபாரத்தை மட்டும் மேற்கொள்ளும் கம்பனிகளாக 19 கம்பனிகள் பதிவுசெய்யப்பட்டிருந்தன. வரைபு 02, இவ்வருடம் காப்புறுதி தரகர்கள் மேற்காண்ட காப்புறுதி தரகு வியாபாரத்தின் வகைகளைக் காட்டுகின்றது.

**வரைபு 2**

*காப்புறுதித் தரகர்களினால் கொண்டு நடாத்தப்படும் காப்புறுதி வியாபாரத்தின் வகைகள*




**காப்புறுதி முகவர்கள்**

சட்டத்தின் கீழ் காப்புறுதி வழங்குனர்கள் அல்லது காப்புறுதி தரகர் ஒருவருடன் காப்புறுதி முகவராக பதிவுசெய்து கொள்ளும் தனியாட்கள், அத்தகைய காப்புறுதி வழங்குனர்கள் அல்லது காப்புறுதி தரகர்களுடன் தரகை நோக்கமாகக் கொண்டு காப்புறுதி வியாபாரத்தைப் பதிவு செய்வதற்கான தகைமைகள் சபையினால் நிர்ணயிக்கப்படும்.

சட்டத்தின் 34 ஆம் பிரிவிற்கு அமைவாக, காப்புறுதி முகவர்கள் முக்கிய விநியோக ஊடகமாக இருப்பதுடன், இவர்களூடாக காப்புறுதி வழங்குனர்கள் காப்புறுதி வியாபாரத்தை தேடிப் பெற்றுக்கொள்கின்றனர்.


காப்புறுதி வழங்குனர்களினால் வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைவாக, இந்த ஆண்டின் போது காப்புறுதி முகவர்களாக சேர்க்கப்பட்ட தனிநபர்களின் மொத்த எண்ணிக்கை ஏறத்தாழ 17,018 ஆகும். இது கடந்த ஆண்டுடன் (15,606) ஒப்பிடுகையில் 9.05% அதிகரிப்பைக் காட்டுகின்றது.

இந்த ஆண்டின் இறுதியில், காப்புறுதி வழங்குனர்களை பிரதிநிதித்துவப்படுத்திய தனிப்பட்ட காப்புறுதி முகவர்களின் எண்ணிக்கை அண்ணளவாக 42,958 ஆகும். இது கடந்த ஆண்டின் இருந்த 38,635 முகவர்களுடன் ஒப்பிடுகையில் 11.19% அதிகரிப்பாகும்.

வரைபு 03 காப்புறுதி கம்பனிகளுடன் பதிவுசெய்துள்ள காப்புறுதி முகவர்களைக் காட்டுகின்றது.

**வரைபு 3**

*காப்புறுதி வழங்குனர்களுடன் பதிவு செய்துள்ள காப்புறுதி முகவர்கள்*




மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் ஏறத்தாள 385 தனிப்பட்ட காப்புறுதி முகவர்கள் காப்புறுதி தரகுக் கம்பனிகளுடன் பதிவுசெய்து கொண்டுள்ளனர்.

**கம்பனியின் நிலை மற்றும் மூலதன மாற்றங்கள்**

காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடும் காப்புறுதி வழங்குனர்களில் 07 கம்பனிகள் கொழும்பு பங்குப் பரிவர்த்தணையில் பட்டியலிடப்பட்டுள்ளன. அவை சிலிங்கோ இன்சூரன்ஸ் பிஎல்சி, ஏஐஏ இன்சூரன்ஸ் லங்கா பிஎல்சி, யூனியன் அசூரன்ஸ் பிஎல்சி, ஏசியன் ஏலையன்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி, எச்என்பி அசூரன்ஸ் பிஎல்சி, அமானா தக்காபுல் பிஎல்சி மற்றும் ஜனசக்தி இன்சூரன்ஸ் பிஎல்சி என்பனவாகும். வரைபு 4 பட்டியலிடப்படாத காப்புறுதி வழங்குனர்களின் வீதத்தைக் காட்டுகின்றது.

**வரைபு 4**

*'பட்டியலிடப்படாத' காப்புறுதி வழங்குனர்களின் நிலை*



# பொது மீளாய்வு தொடர்ச்சி

2016 பெப்ரவரி அன்று அல்லது அதற்கு முன்னர், 1987ம் ஆண்டு 36ஆம் இலக்க பிணையங்கள் மற்றும் பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் திருத்தச் சட்டத்தின் கீழ், காப்புறுதி வழங்குனர்கள் பங்குப் பரிவர்த்தனை அனுமதிப்பத்திரத்தின் கீழ் பட்டியலிடப்படல் வேண்டும். இப்பட்டியலிடப்படுவதற்கு முன்னர் 2015 பெப்ரவரி அன்று அல்லது அதற்கு முன்னர் கலவைக் காப்புறுதிக் கம்பனிகள் அவர்களின் வியாபாரத்தை இருவேறு கம்பனிகளாக வேறாக்குமாறு கோரப்படுகின்றனர்.

திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்ததன் பின்னர் காப்புறுதி வழங்குனராக பதிவுசெய்யும் புதிய கம்பனி ஒன்று சபையின் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட மூன்று ஆண்டுகளுக்குள், 1987ம் ஆண்டு 36ஆம் இலக்க பிணையங்கள் மற்றும் பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் பங்குப் பரிவர்த்தனை அனுமதிப்பத்திரத்தின் மீது பட்டியலிடப்படல் வேண்டும்.

2011 ஜுன் மாதத்திற்கு முன்னர் பதிவுசெய்யப்பட்ட காப்புறுதி வழங்குனர்களின் பங்கு மூலதனத்தின் பெறுமதியை, 2015 பெப்பரவரியில் அதற்கு முன்னர் ஒவ்வொரு குறிப்பிட்ட வகைக் காப்புறுதி வியாபாரத்திற்கும் குறைந்தபட்சம் ஐந்நூறு மில்லியனால் அதிகரிக்க வேண்டிய தேவை சபைக்கு உள்ளது

2011 ஜுன் மாதத்தைத் தொடர்ந்து பதிவுசெய்து கொண்டுள்ள காப்புறுதிக் கம்பனிகள் ரூபா 500 மில்லியனுக்கு குறையாத பங்கு மூலதனத்தைச் செலுத்தியுள்ளனர்.

அத்துடன், காப்புறுதி வழங்குனர்களுக்கு இடர் அடிப்படையிலான மூலதன விதியையும் அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கையை சபை மேற்கொண்டு வருகின்றது. இந்த விதிகள் தற்போது செயற்படுத்தப்படும் கடன்தீர் எல்லை விதிகளுக்கு மாற்றீடாக வழங்கப்படுவதுடன், 2016ம் அண்டில் செயற்படுத்தப்படல் வேண்டும் எனவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

காப்புறுதித் தரகர்களைப் பொறுத்தவரையில், 2014 டிசம்பர் 31ம் திகதியில் அல்லது அதற்கு முன்னர் ரூபா இரண்டு மில்லியன் ஐநூறாயிரத்திற்கு குறையாத தொகையினை பங்கு மூலதனமாக செலுத்த வேண்டும் என்பது சபையின் தேவைப்பாடாகும்.

### காப்புறுதி வழங்குனர்களிடமிருந்து ஒரு செஸ் தீர்வை

சட்டத்தின் 7ம் பிரிவுக்கு அமைவாக, காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் உருவாக்கத்திற்காக கௌரவ நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரினால் செஸ் தீர்வை அறிமுகப்படுத்துவதற்கான கட்டளை வழங்கப்பட்டது. 2002 ஜுலை 09ம் திகதி வெளியிடப்பட்ட 1244/5ம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில், நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் மொத்த நிகர காப்புறுதிக் கட்டணத்தின் 0.2% மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மொத்த நிகர காப்புறுதிக் கட்டணத்தின் 0.4% காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்திற்கு வரவு வைக்கப்படல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. காப்புறுதி வழங்குனர்களிடமிருந்து செஸ் அறவிடல் 2003ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து அமுலுக்கு வந்ததுடன், 2014ம் ஆண்டு ரூபா 274 மில்லியன் சேகரிக்கப்பட்டது. 1ம் அட்டவணை செஸ் வரி மற்றும் காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியம் என்பவற்றின் அசைவினை வெளிப்படுத்துகின்றது.

### காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியம்

சட்டத்தின் 103ம் பிரிவுக்கு அமைவாக காப்புறுதி வழங்குனர்களிடமிருந்து சேரிக்கப்பட்ட செஸ் தீர்வை காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தில் வைப்பு செய்யப்படுகின்றது. இந்த நிதி காப்புறுதி வைப்பாளர்களுக்கும் உத்தேச காப்புறுதி வைப்பாளர்களுக்கும் நன்மை அளிக்குமாயிருப்பின் பின்வரும் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படலாம்.


(அ) பொதுமக்கள் மத்தியில் காப்புறுதித் தொழில் குறித்த விழிப்புணர்வை உருவாக்குவதில் ஏற்படக்கூடிய செலவினம் மற்றும் காப்புறுதித் தொழிலை அபிவிருத்தி செய்வதில் ஏற்படக்கூடிய ஏனைய செலவினங்களைத் தீர்த்தல்.

(ஆ) சபையின் அதிகாரங்கள், நடவடிக்கைகள் மற்றும் கடமைகள் ஆகியவற்றை பிரயோகிப்பது, கடமையாற்றுவது மற்றும் செயற்படுத்துகை என்பவற்றுக்கு ஏற்படக்கூடிய செலவினத்தைத் தீர்த்தல்.

காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தில் இருக்கும் தொகை அரசாங்க பிணையங்களில் முதலீடு செய்யப்படும். 2014 டிசம்பர் 31ம் திகதியில் உள்ளவாறு நிதியத்தில் உள்ள திரண்ட தொகை ரூபா 2,185 மில்லியன் ஆவதுடன், இது கடந்த ஆண்டை (ரூபா 1,1778 மில்லியன்) விட 22.89% அதிகரிப்பைக் கொண்டுள்ளது.

**1ம் அட்டவணை**

***செஸ் மற்றும் காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியம்***



# பொது மீளாய்வு தொடர்ச்சி

**காப்புறுதித் தீர்வை**

பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் எவ்வகுப்புக்கும் எவ்வித தீர்வையும் தற்போது இல்லை. மோட்டார் காப்புறுதி, தீ அபாயக் காப்புறுதி மற்றும் தொழிலாளர் நட்டஈட்டுக் காப்புறுதி என்பவற்றுக்கு இத் தீர்வைகள் முறையே 1 ஜனவரி 2002, 2005 மற்றும் 2007ம் ஆண்டுகளில் இருந்து அமுலுக்கு வரும் வகையில நீக்கப்பட்டன.

**சட்டத்தின் பிரயோகத்திற்கான விதி விலக்குகள்**

சட்டத்தின் 12(3) ஆம் பிரிவுக்கு அமைவாக, சட்டத்தின் ஏற்பாடுகள், 1999ம் ஆண்டு 20ம் இலக்க விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சபை, 1978ம் ஆண்டு 15ம் இலக்க ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், 1996ம் ஆண்டு 17ம் இலக்க சமூக பாதுகாப்புச் சபை சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட சமூகப் பாதுகாப்பு சபை என்பவற்றுக்கு பிரயோகிக்கப்படமாட்டாது.

**தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம்**

2006ம் ஆண்டு 28ம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்தின் மூலம் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் நிறுவப்பட்டு, திருத்தச் சட்டத்தின் மூலம் சபையின் நோக்கெல்லையின் கீழ் கொண்டுவரப்பட்டது.

தேசிய காப்புறுதி நம்பிக்கைச் சட்டத்திற்கு அமைவாக, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் கீழ் பராமரிக்கப்பட்டு வந்த வேலைநிறுத்தம், கலவரம், சிவில் அமைதியின்மை மற்றும் பயங்கரவாத நிதியம் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் உள்ளீர்ப்பு செய்யப்பட்டது. வேலைநிறுத்தம், கலவரம், சிவில் அமைதியின்மை மற்றும் பயங்கரவாத இடர் என்பவற்றுக்கு காப்புறுதி அணவல்களை வழங்கும் காப்புறுதி வழங்குனர்கள், அவற்றின் மீது சேகரிக்கும் தவணைக் கட்டணங்களை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

2007ம் ஆண்டு 27ம் இலக்க சட்டத்தின் திருத்தச் சட்டத்திற்கு அமைவாக, பதிவுசெய்யப்பட்ட அனைத்து காப்புறுதி வழங்குனர்களும் மீள் காப்புறுதி செய்யப்படுதல் வேண்டும். இதன் போது பொதுக் காப்புறுதி வியாபாரமொன்று அதன் பொறுப்பில் 50% மேற்படாத தொகையொன்றை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்துடன் மீள்காப்புறுதி செய்தல் வேண்டும். மேலே உள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக, கௌரவ நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரினால் பிறப்பிக்கப்பட்ட கட்டளைக்கு ஏற்ப, 2013 ஜனவரி 1ம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வருமாறு அனைத்து காப்புறுதி வழங்குனர்களும் அனைத்து வகையான மீள்காப்புறுதி ஒப்பந்தங்கள் மற்றும் சாதுாரியமான மீள் காப்புறுதி ஒழுங்குகள் என்பவற்றிற்கு 30% தை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு கையளிப்பு செய்யப்படுதல் வேண்டும். முன்னர் இத்தொகை 20% வீதமாகும்.

**ஏனைய தொடர்புடைய விடயங்கள்**

**வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய சபை (NCRS)**

வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய சபை வாகனப் போக்குவரத்து சட்டத்தின் கீழ் போக்குவரத்துச் சபையின் கீழ் நிறுவப்பட்டுள்ளது. ஒவ்வொரு காப்புறுதி வழங்குனரும் மோட்டார் காப்புறுதிக் பூட்கையினை வழங்கும் போது வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய சபையின் கீழ் உள்ள வீதிப் பாதுகாப்பு நிதியத்திற்கு மூன்றாம் தரப்பு காப்புறுதிக் கட்டணங்களின் 1% பங்களிப்பு செய்தல் வேண்டும். காப்புறுதிச் சபை வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய சபையில் பிரதிநிதித்துவம் வகிக்கின்றது.

**ஒழுங்கமைப்பு நிறுவனங்களுக்கிடையிலான சபை**

இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்கமைப்பு நிறுவனங்களுக்கு இடையிலான சபை தாபிக்கப்பட்டது. இலங்கை மத்திய வங்கியின் ஆளுனரினால் தலைமை தாங்கப்படும் இந்த உயர்மட்டக் குழு நிதிச் சந்தைகளின் முறைமையான அபிவிருத்திக்கு பொருத்தமான பூட்கை வழிகாட்டல்கள் அமைக்கப்படுவதை உறுதி செய்வதிலும், நிதியியல் அமைப்புகள் அனைத்தினதும் நலன்களைக் கருத்தில்கொண்டு நிதியில் ஒழுங்கமைப்பு முகவராண்மைகள் யாவும் ஒருங்கிணைந்து, தகவல்களை பரிமாறிக் கொள்வதிலும் ஈடுபடும். காப்புறுதிச் சபை ஒழுங்கமைப்பு நிறுவனங்களுக்கிடையிலான சபையில் அங்கத்தவம் வகிக்கின்றது.

**இலங்கை காப்புறுதிச் சங்கம்**

இலங்கை காப்புறுதிச் சட்டம் 1989ம் ஆண்டு நிறுவப்பட்டதுடன், சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு காப்புறுதி வழங்குனர்களும் அங்கத்துவத்தைப் பெறுவதற்கு தகுதியானவர்கள். தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் அங்கத்தவர்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து காப்புறுதி வழங்குனர்களும் இலங்கை காப்புறுதி சங்கத்தின் அங்கத்தவர்கள் ஆவர்.

இலங்கை காப்புறுதிக் கம்பனிகள் அனைத்தினதும் பிரதம நிறைவேற்று அதிகாரிகளை கொண்டுள்ள இலங்கை காப்புறுதி சங்கத்தின் நிறைவேற்றுக் குழு சங்கத்தின் நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த முகாமைத்துவத்திற்கு பொறுப்பாகவிருக்கும். அத்துடன் பின்வரும் குழுக்கள் அவற்றுடன் தொடர்புடைய விடயங்களில் நிறைவேற்றுக் குழுவிற்கு தமது விதப்புரைகளை செய்வதிலும் உதவும்.

- ஆயுள் காப்புறுதி மன்றம்
- பொது காப்புறுதி மன்றம்
- நிதி தொழில்நுட்ப உப குழு
- சட்ட ஆலோசனை மன்றம்
- மனிதவள உப குழு
- தகவல் தொழில்நுட்பக் குழு
- சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை மன்றம்

# பொது மீளாய்வு தொடர்ச்சி

**இலங்கை காப்புறுதி சங்கத்தின் முக்கிய நோக்கங்கள்:-**

1. காப்புறுதி வழங்குனர்களின் உறுப்பினர்கள் மற்றும் காப்புறுதி செய்யும் பொது மக்களின் பொதுவான ஈடுபாடுகளையும் நலன்களையும் பாதிக்கும் விடயங்கள் குறித்து ஆலோசனைகளையும், ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்வதற்காக காப்புறுதி வழங்குனர்கள் அனைவரையும் ஒன்றாகக் கூட்டிடிணைத்தல்.
2. காப்புறுதி வியாபாரத்தில் சீரான, சிறந்த நடைமுறைகள் மற்றும் உயர் விழுமிய தராதரங்களைப் பேணி ஊக்குவிப்பதன் மூலம் காப்புறுதி செய்யும் மக்கள் மத்தியில் நம்பிக்கையை விருத்தி செய்தல்.
3. பொதுமக்கள் மத்தியில் காப்புறுதியின் தேவை மற்றும் மதிப்பு தொடர்பான விழிப்புணர்வைக் கட்டியெழுப்புதல்.
4. சட்டம்/ ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகள் என்பவற்றை கண்காணிப்பது மற்றும் தொழிலின் ஸ்தீரத்தன்மையையும் வளர்ச்சியையும் உறுதிப்படுத்துவதற்காக தொடர்புடைய அதிகாரசபைகளுடன் சபைக்கான பிரநிதிதித்தை வழங்குதல்.
5. ஏனைய நாடுகளில் காப்புறுதி பிரயோகங்களையும் உத்திகளையம் மீளாய்வு செய்வதும் மற்றும் பரீட்சிப்பதும் அவற்றில் இலங்கை சந்தைக்கு பொருத்தமான சிறந்த பிரயோகங்களை கடைப்பிடிப்பதற்கு தேர்ந்தெடுத்தல்.
6. கல்வி மற்றும் பயிற்சியின் ஊடாக காப்புறுதித் துறையில் தொழிலில் திறமையை ஊக்குவித்து உத்வேகமான முறையில் உதவியளித்து மேம்படுத்துவதும், இந்நோக்கத்திற்காக வகுப்புகள், மாநாடுகள், கருத்தரங்குகள், மன்றங்கள், ஆலோசனைகள், செயலமர்வுகள் மற்றும் கூட்டங்களை ஏற்பாடு செய்தல்.

**இலங்கை காப்புறுதித் தரகர்கள் சங்கம் (SLIBA)**

இலங்கை காப்புறுதி தரகர்கள் சங்கமானது சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு காப்புறுதித் தரகர் சங்கமாகும். சட்டத்தின் 79ம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாக, காப்புறுதி தரகர் பதிவுசெய்தலை நாடும் ஒவ்வொரு விண்ணப்பதாரரும் சபையினால் காப்புறுதித் தரகராக பதிவுசெய்யப்படுவதற்கு முன்னர் இச் சங்கத்தில் அங்கத்துவம் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதன் அங்கத்தவர்கள் இலங்கை காப்புறுதி தரகத்தினால் பின்பற்றப்படுகின்ற நடத்தை விதிகளுக்கு உட்பட்டவர்களாக இருப்பார்கள்.

**இலங்கை காப்புறுதி தரகர் சங்கத்தின் பிரதான நோக்கங்கள்**

பொது மக்கள் மத்தியில் காப்புறுதித் தரகர்களின் வகிபாகம் தொடர்பான விழிப்புணர்வை உருவாக்குதல்.

ஏனைய அங்கத்தவர்களின் தொழில்நுட்ப அறிவை மேம்படத்தி திறமைகளையும், தொழிலாற்றல்களையும் உயர் மட்டத்தில் கட்டியெழுப்புதல்.

அங்கத்தவர்கள் காப்புறுதி கற்கைநெறிகளைப் பின்பற்றவும், தொழில்சார் தகைமைகளைப் பெற்றுக்கொள்ளவும் ஊக்குவிப்பது மற்றும் உதவுதல்.

ஒழுங்கமைப்பாளர்கள், காப்புறுதி வழங்குனர்கள் மற்றும் பொது மக்களுடன் நல்லுறவையும், பரஸ்பர நன்மைபயக்கும் உறவுகளையும் பேணுதல்.

**இலங்கை காப்புறுதி நிறுவனம் (SLII)**

இலங்கை காப்புறுதி நிறுவனம் 1982ம் ஆண்டு, காப்புறுதி வியாபாரத்தில் உள்ள நபர்களின் திறன் மற்றும் அறிவை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தடன் இலாபமீட்டும் நோக்கமல்லா நிறுவனமாக நிறுவப்பட்டது. இலங்கை காப்புறுதி நிறுவனத்திற்கான நிதி காப்புறுதி வழங்குனர்கள் மற்றும் அதன் அங்கத்தவர்களின் வருடாந்த சந்தா போன்றவற்றிலிருந்தான பங்களிப்பு மூலம் பெறப்படுகின்றது.

**இலங்கை காப்புறுதி நிறுவனத்தின் பிரதான நோக்கங்கள்**

காப்புறுதி துறையில் ஈடுபட்டுள்ள அல்லது தொழில்புரிகின்ற நபர்களுக்கிடையே அவர்கள் காப்புறுதி நிறுவனத்தின் உறுப்பினர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர்களின் சொந்த நலனுக்காக மட்டுமன்றி அத்தகைய வியாபாரத்தை மிகுந்த பயனுறுதியுடன் நடத்திச் செல்லவும் தொழில் திறமையை ஏற்படுத்தி அதை பேணும் நோக்கிலும் செயற்திறன் முன்னேற்றம் பொதுவான அபிவிருத்தி என்பவற்றை ஊக்கப்படுத்தவதற்காக மத்திய அமைப்பொன்றை ஏற்படுத்திப் பேணுதல்.

காப்புறுதி பற்றிய அறிவை விருத்தி செய்வதற்காக டிப்ளோமா மற்றும் சான்றிதழ் தகைமைகளுக்கு இட்டுச்செல்கின்ற பாடநெறிகளை நடத்துவது கல்விசார் நிறுவனத்தின் ஊடாக காப்புறுதியின் எந்தவொரு கிளை தொடர்பான எந்தவொரு விடயத்தைப் பற்றிய தொழில்சார் கற்கையை ஊக்குவித்து அதற்கு உதவுவதற்காக பரீட்சைகளை நடத்துதல்.

தொழில்சார் விவகாரங்கள், நலன்கள், கடமைகள், ஆய்வுக் கட்டுரைகள் வாசித்தல் மற்றும் விரிவுரைகள் வழங்குதல் போன்ற கலந்துரையாடலுக்கான மாநாடுகள் மற்றும் கூட்டங்களை நடாத்துதல், அங்கத்தவர்களின் பட்டியல்கள், இடாப்புகள் மற்றும் பதிவுகளைத் தொகுத்தல்.

இலங்கை காப்புறுதி நிறுவனத்தின் உறுப்பினர்கள் தொடர்பான தொழில்சார் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டை பிரயோகிப்பதற்கும் அவர்களது நலன் மற்றும் நலநோம்புகை என்பவற்றைப் பாதுகாப்பதற்கும் அவர்களது மேம்பாட்டை வலுப்படுத்தவும், பொதுவாக காப்புறுதி மற்றும் காப்புறுதி நிறுவனத்தின் அங்கத்தவர்களின் நிலமையை மேம்படுத்தவதற்கு இட்டுச் செல்லக்கூடியதான ஊக்குவிப்புகளை மேற்கொள்ளுதல்.

இலங்கை காப்புறுதி நிறுவனம் இலண்டன் பட்டயக் காப்புறுதி நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் இலண்டனிலுள்ள பட்டய காப்புறுதி நிறுவனம், இந்தியக் காப்புறுதி நிறுவனம், இந்தியாவின் காப்புறுதி கணிப்பீட்டாளர் சங்கம் போன்ற தொழில்சா அமைப்புகளுக்கான பரீட்சைகளையும் நிர்வகித்து வருகின்றது. நிறுவனமானது காப்புறுதி கைத்தொழிலில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள நபர்களுக்காக காப்புறுதியில் குறுங்கால டிப்ளோமா பாடநெறிகளை நடத்தி வருகின்றது.

சபையானது காப்புறுதி முகவர்களாக நியமிக்கப்படவுள்ளவர்களுக்கு ஆட்சேர்ப்பு பரீட்சைகளை நடாத்துவதற்கான பொறுப்பையும் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. நிறுவனமானது காப்புறுதி வியாபாரத்தின் இரு வகைகள் தொடர்பிலும் ஆட்சேர்ப்பு பரீட்சைகளை தொடர்ந்தும் நடாத்தி வருகின்றது.

**காப்புறுதி மேற்பார்வையாளர்களின் சர்வேதேச சங்கம் (IAIS)**

காப்புறுதி மேற்பார்வையாளர்களின் சர்வதேச சங்கத்தின் ஒரு அங்கத்தினர் என்ற வகையில் சபையானது காப்புறுதி மேற்பார்வையாளர்களின் சர்வதேச சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பான பிரதான காப்புறுதி கோட்பாடுகள், தகவல்கள் போன்ற வெளியீடுகளையும், வழிகாட்டிகளையும் கிரமமான முறையில் பெறுகின்றது. காப்புறுதி மேற்பார்வையாளர்களின் சர்வதேச சங்கத்தினால் பரிந்துரை செய்யப்பட்ட சில பிரதான கோட்பாடுகள் இலங்கையில் காப்புறுதி தொழிலின் சிறந்த மேலாண்மை மற்றும் கண்காணிப்பதற்காக சபையினால் பின்பற்றப்படுகின்றது.

# புள்ளிவிபர மீளாய்வு

**காப்புறுதி கைத்தொழில்துறை குறித்த ஒரு கண்ணோட்டம்**

இலங்கையின் காப்புறுதித் கைத்தொழிற்துறை 2014ம் ஆண்டு மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமான ரூபா 99,872 மில்லியனை உருவாக்கி 5.14% வீத வளர்ச்சியனைப் பதிவுசெய்தது. இது 2013ம் ஆண்டு வளர்ச்சியான 8.97% வீதத்துடன் ஒப்பிடும் போது குறைந்தளவு வளச்சியாகும். இந்த குறைந்தளவு வளர்ச்சியானது, இது 2013ம் ஆண்டு 7.28% வீத வளர்ச்சியுடன் ஒப்பிடும் பொழுது 3.66% வீத குறைந்தளவு வளர்ச்சியைக் காட்டும் பொதுக் காப்புறுதித் துறையின் வீழ்ச்சியைக் காட்டுவதற்கான சான்றாக அமைகின்றது. நீண்டகால காப்புறுதிக் கைத்தொழில்துறையின் எழுதப்பட்ட தவணைக் கட்டணங்களை எடுத்துக்கொண்டால், 2013ம் ஆண்டு 11.20% வீத வளர்ச்சியைக் காட்டிய போதிலும் 2014ம் ஆண்டு 7.04% வீத வளர்ச்சியை மட்டுமே காட்டுவதனால், அதுவும் வளர்ச்சியில் பின்னடைவினைப் பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது.

2013ம் ஆண்டு 7.20% வீதமாக இருந்த இலங்கையின் தேசிய உள்நாட்டு உற்பத்தி 2014ம் ஆண்டு 7.40% வீதத்தினால் வளர்ச்சியடைந்தமை பொருளாதாரம் நிலையாக வளர்ச்சியடைந்துள்ளதுடன் கைத்தொழில் மற்றும் சேவைத்துறைகளில் தேசிய உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி அடைந்துள்ளமையைக் காட்டுகின்றது. இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நாணயக் பூட்கைகளின் விளைவாக வட்டி வீதம் மற்றும் பண பணவீக்கம் என்பவற்றில் வீழ்ச்சி மற்றும் பேரினப் பொருளாதார வளர்ச்சி என்பவற்றில் ஏற்பட்ட வளர்ச்சி என்பவற்றின் மத்தியில் அட்டவணை 1இல் காட்டியவாறு, பொருளாதாரத்தில் தேசிய உள்நாட்டு உற்பத்தி 2013ம் ஆண்டு பதிவுசெய்த ரூபா 8,674 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014ம் ரூபா 9,785 மில்லியனைப் பதிவுசெய்து வளர்ச்சியைக் காட்டுகின்றது. அத்துடன், 2008-2012ம் ஆண்டு வரை தொடாந்த நிதிப் பிரச்சனைகளைத் தொடர்ந்து உலகப் பொருளாதாரம் படிப்படியாக வளர்ச்சியடைந்து வருவதுடன், 2014ம் ஆண்டின் பிற்பகுதியில் எண்ணெய் விலைகளின் வீழ்ச்சியும் இலங்கைப் பொருளாதாரத்திற்கு சார்பான விளைவை ஏற்படுத்தியுள்ளது.

2014ம் ஆண்டு நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதி கைத்தொழிற்துறை மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானமாக ரூபா 99,872 மில்லியனை (2013: ரூபா 94,987மில்லியன்) அட்டவைண 1இல் காட்டியவாறு உழைத்துக்கொண்டதுடன், நீண்டகால காப்புறுதிக் கைத்தொழிற்துறை வியாபாரத்தில் இருந்து ரூபா 44,610 மில்லியன் (2013: ரூபா 41,676) 2014ம் ஆண்டு வருமானமாக உழைக்கப்பட்ட போது பொது காப்புறுதி வியாபாரத்தில் ரூபா 55,262 (2013: ரூபா 53,311 மில்லியன்) உழைக்கப்பட்டது. இது இரு காப்புறுதித்துறைகளும் கடந்த காலத்துடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியை எதிர்கொண்டுள்ளதைக் காட்டுகின்றது. வேலை நிறுத்தம், கலவரம், சமூகக் கிளச்சிகள் மற்றும் பயங்கரவாதம் என்பவற்றுக்கான தவணைக்கட்டணமான ரூபா 3,491 மில்லியன் (2013: ரூபா 2,957) பொதுக் காப்புறுதி தவணைக்கட்டண வருமானத்தில் உள்ளடங்கியுள்ளது. அதனால் பொதுக் காப்புறுதி வியாபாரமானது வேலை நிறுத்தம், கலவரம், சமூகக் கிளச்சிகள் மற்றும் பயங்கரவாதம் என்பவற்றுக்கான தவணைக்கட்டண வருமானத்தையும் உள்ளடக்கி 2014ம் ஆண்டு ரூபா 58,753 (2013: ரூபா 56,268) மில்லியனை மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாக வெளிப்படுத்துகின்றது.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மொத்த காப்புறுதி தவணைக் கட்டணத்தை பிரதிபலிக்கும் காப்புறுதி ஊடுறுவல் 2014ம் ஆண்டு 1.02% வீத வளர்ச்சியைப் பதிவு செய்ததுடன், இது 2013ம் ஆண்டு பதிவுசெய்த 1.10% வீதத்துடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியைக் காட்டுகின்றது. 2014ம் ஆண்டு பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் ஊடுறுவல் மட்டம் 0.56% (2013: 0.61%) ஆக இருக்கையில் நீண்டகால காப்புறுதி வியாபாரம் 0.46 %வீத (2013: 0.48%) ஊடுறுவல் மட்டத்தை கொண்டுள்ளது. இவை இரண்டுமே 2014ம் ஆண்டு ஊடுறுவல் மட்டத்தில் வீழ்ச்சியைக் காட்டுகின்றது. நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியபாரம் இரண்டும் குறைந்த வளர்ச்சி வீதம் மற்றும் குறைந்த ஊடுறுவல் மட்டம் என்பனவற்றைக் காட்டுவதால், சமூகத்தின் அனைத்துப் பிரிவிகளிலும் காப்புறுதியின் நன்மைகளை ஊக்குவித்தல் மற்றும் வாடிக்கையாளரின் வேறுபட்ட தேவைகளுக்கு அமைவாக காப்புறுதி வகைகளை வழங்குதல் என்பவற்றை அபிவிருத்தி செய்தலுக்கான உயர் தேவையை இது பிரதிபலிக்கின்றது.

மொத்த சனத்தொகையில் தனி நபர் தவணைக் கட்டண வருமானத்தை பிரதிபலிக்கும் காப்புறுதி அடர்த்தி 2013ம் ஆண்டில் ரூபா 4,637 இல் இருந்து 2014ம் ஆண்டு ரூபா 4,831 ஆக அதிகரித்துள்ளதுடன், இது 4.18 வீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. இதற்கு பிரதான காரணம் சனத்தொகையில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு எதிராக மொத்த கட்டண வருமானமும் அதிகரித்துள்ளமையாகும்.

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**அட்டவணை 1**

*தவணைக் கட்டண வருமானமும் ஊடுருவலும்*

| | 2010 | 2011 | 2012 | 2013 (அ) | 2014 (ஆ) |
|---|---|---|---|---|---|
| நீண்டகால காப்புறுதி (ரூ. மில்) | 31,152 | 35,162 | 37,477 | 41,676 | 44,610 |
| பொது காப்புறுதி (ரூ. மில்) | 35,101 | 43,329 | 49,694 | 53,311 | 55,262 |
| மொத்த தவணைக் கட்டண வருமானம் (ரூ. மில்) | 66,253 | 78,491 | 87,171 | 94,987 | 99,872 |
| மொத்த தவணைக் கட்டணத்தில் வளர்ச்சி வீதம் (%) | 15.12 | 18.47 | 11.06 | 8.97 | 5.14 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி (ரூ. பில்லியன்)* | 5,604 | 6,544 | 7,579 | 8,674 | 9,785 |
| மொ.உள்நாட்டு .உற்பத்தி. வளர்ச்சி வீதம் % * | 8.0 | 8.2 | 6.3 | 7.2 | 7.4 |
| ஊடுருவல் (மொ.உ.உ. இன் % இல் மொத்த தொழில் தவணைக் கட்டணம்) | 1.18 | 1.20 | 1.15 | 1.10 | 1.02 |
| ஊடுருவல் % (மொ.உ.உ. இன் % இல் நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் தவணைக் கட்டணம்) | 0.56 | 0.54 | 0.49 | 0.48 | 0.46 |
| ஊடுருவல் % (மொ.உ.உ. இன் % இல் பொது காப்புறுதி வியாபாரத்தின் தவணைக் கட்டணம் | 0.63 | 0.66 | 0.66 | 0.61 | 0.56 |
| காப்புறுதி செறிவு (மொத்த் தவணைக் கட்டண வருமானம் / சனத்தொகை) (ரூ.) | 3,208 | 3,761 | 4,288 | 4,637 | 4,831 |
| சனத்தொகை (ஆண்டின் மத்தியில்) * | 20,653 | 20,869 | 20,328 | 20,483 | 20,675 |

**மூலம்: இலங்கை மத்திய வங்கி மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம்*

*(அ) மீள்தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

*குறிப்பு:*

1. *2010ம் ஆண்டில் இருந்து தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் வேலை நிறுத்தம், கலவரம், சமூகக் கிளச்சிகள் மற்றும் பயங்கரவாதம் என்பவற்றுக்கான தவணைக்கட்டண வருமானம் காப்புறுதிக் கம்பனிகளின் பொது காப்புறுதி மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானத்தில் கருத்திற்கொள்ளப்படவில்லை.*
2. *அவசியமான தகவல்கள் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் சபைக்கு சமர்ப்பிக்கப்படாமையினால், மேற்குறித்த பகுப்பாய்வில் அவை உள்ளடக்கப்படவில்லை.*

## புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த சொத்துக்கள்**

அட்டவணை 2இல் காட்டப்பட்டவாறு, உள்ளக பகுதி கொடுக்கல்வாங்கல்களை நீக்கியதன் பின்னர் 31 டிசம்பர் 2014ம் திகதியில் காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த சொத்து ரூபா 406,827 மில்லியன் (2013: ரூபா 357,465) ஆவதுடன் 2013ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 13.81% வீத வளர்ச்சியையும் காட்டுகின்றது. 2010 இருந்து 2014ம் ஆண்டு வரை காப்புறுதிக் கம்பனிகளின் சொத்துக்கள் நிலையாக வளர்ச்சியடைவதை அட்டவணை 2 பிரதிபலிக்கின்றது.

நீண்டகால காப்புறுதி வியாபாரத்துறையின் சொத்துக்கள் 31 டிசம்பர் 2014ம் திகதியில் ரூபா 249,850 (2013: ரூபா 216,275 மில்லியன்) ஆக இருப்பதுடன், 2013ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014ம் ஆண்டு 15.52% வீதத்தினால் வளர்ச்சி அடைந்துள்ளது. பொதுக் காப்புறுதி வியபாபாரத்தின் சொத்துக்கள் மற்றும் பங்குதாரர் பெறுமதியைக் கருத்தில் கொண்டால் 31 டிசம்பர் 2014ம் திகதியில் ரூபா 163,834 மில்லியனை கொண்டிருப்பதுடன் இது 2013ம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 148,410 மில்லியன் சொத்துப் பெறுமதியோடு ஒப்பிடுகையில் 10.39% வீத வளர்ச்சியைக் காட்டுகின்றது.

2010 இருந்து 2014ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த சொத்துக்கள் மற்றும் சொத்துகளின் வளர்ச்சி மற்றும் உள்ளகப்பிரிவு சொத்துக்களின் பெறுமதி என்பவற்றை வரைபு 1 காட்டுகின்றது.

**அட்டவணை 2**

**காப்புறுதிக் கம்பனிகளின் சொத்துக்கள**

| | 2010 | 2011 | 2012 | 2013 (அ) | 2014 (ஆ) |
|---|---|---|---|---|---|
| நீண்டகால காப்புறுதி (ரூ. மில்) | 139,647 | 165,519 | 190,642 | 216,275 | 249,850 |
| பொது காப்புறுதியும் பங்குரிமையாளர்களும் (ரூ. மில்) | 82,450 | 100,192 | 131,202 | 148,410 | 163,834 |
| **மொத்தம்** | ***219,102** | ***261,412** | ***315,817** | ***357,465** | ***406,827** |

**அட்டவணை 3 இற்கு அமைவாக, கலவைக் கம்பனிகளின் கொடுக்கல் வாங்கல்களின் உள்வகைப்படுத்தல்கள் (நீண்ட கால மற்றும் பொது) நீக்கப்பட்டுள்ளன.*


*(அ) மீள்தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*

*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

*குறிப்பு:*
*அவசியமான தகவல்கள் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் இதுவரை சபைக்கு சமர்ப்பிக்கப்படாமையினால், மேற்குறித்த பகுப்பாய்வில் அவை உள்ளடக்கப்படவில்லை.*

**வரைபு 1**

**காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் மொத்த சொத்துகளும் மற்றும் சொத்துகளின் வளர்ச்சி வீதமும்**




*(அ) மீள்தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**காப்புறுதிக் கம்பனிகளின் சொத்துக்களின் விநியோகம்**

அட்டவணை 3 நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி / பங்குதாரர்கள் வகைகளின் கீழ் 31 டிசம்பர் 2014 மற்றும் 31 டிசம்பர் 2013ம் திகதிகளில் கம்பனிவாரியாக சொத்துக்களின் விநியோகத்தைக் காட்டுகின்றது. உள்வகைப்படுத்தல் கொடுக்கல் வாங்கல்களின் மீதியான ரூபா 6,857 மில்லியன் (2013: ரூபா 7,221 மில்லியன்) நீங்கலாக 31 டிசம்பர் 2014ம் திகதியில் காப்புறுதிக் கம்பனிகளின் மொத்தச் சொத்து ரூபா 406,827 மில்லியன் (2013: ரூபா 357,465 மில்லியன்) ஆகும்.

கடந்த வருடத்தைப் போல் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் காப்புறுதிக் கைத்தொழிற்துறையில் மிகப்பெரிய பங்கை தன்னகத்தே வைத்துக்கொண்டுள்ளதுடன், இது 2014ம் ஆண்டு காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த சொத்தில் 39.81% வீதமாவதுடன் (2013: 40.20%) இச்சொத்துக்களின் பெறுமதி ரூபா 161,967 மில்லியன் (2013: ரூபா 143,693 மில்லியன்) ஆகும். 2014ம் ஆண்டு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் கீழ் ரூபா 90,804 மில்லியன் (2013: ரூபா 79,519 மில்லியன்) சொத்துக்களை வைத்திருந்ததுடன், அதேவேளை பொதுக் காப்புறுதி வியாபாரம் மற்றும் பங்குடமையாளர்கள் ஆகியவற்றின் கீழ் ரூபா 71,162 மில்லியன் (2013: ரூபா 64,174 மில்லியன்) சொத்துகளையும் வைத்திருந்தது. இதில் இரு வகையான காப்புறுதி வியாபாரத்திலும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் 2014ம் ஆண்டு இரட்டை இலக்கத்தை பதிவுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சிலிங்கோ நிறுவனமானது காப்புறுதிக் கைத்தொழிற்துறையில் 31 டிசம்பர் 2014 இல் காப்புறுதிக் கம்பனிகளின் சொத்தில் 22.63% வீதத்தை (2013: 22.82%) வைத்திருப்பதன் மூலம் இரண்டாவது இடத்தைத் தனதாக்கியுள்ளதுடன், ஏஐஏ நிறுவனம் 11.72% வீதத்தை (2013: 12.35%) தன்னகத்தே வைத்திருப்பதன் மூலம் அதற்கடுத்த இடத்தை தனதாக்கியுள்ளது. சிலிங்கோ நிறுவனத்தின் சொத்துக்கள் 31 டிசம்பர் 2014ம் திகதியில் ரூபா 92,078 மில்லியனாக (2013: 81,574 மில்லியன்) இருக்கையில், ஏஐஏ நிறுவனத்தின் சொத்துக்கள் ரூபா 47,666 மில்லியன் (2013: 44,158 மில்லியன்) ஆகும். யூனியன் அசூரன்ஸ் நிறுவனம் மற்றும் ஜனசக்தி நிறுவனங்கள் முறையே 8.71% மற்றும் 4.95% வீதத்தை காப்புறுதி கம்பனிகளின் மொத்தச் சொத்தில் கொண்டுள்ளதுடன். இவை 31 டிசம்பர் 2014ம் திகதியில் காப்புறுதிக் கம்பனிகளின் சொத்துப் பட்டியலில் நான்காம் மற்றும் ஐந்தாம் இடங்களைப் பெற்றுக்கொண்டுள்ளன. இதில் முக்கியமான விடயம் என்னவெனில், 31 டிசம்பர் 2014ம் திகதியில் காப்புறுதிக் கம்பனிகளின் மொத்தச் சொத்தில் 87.82% வீதத்தை இந்த ஐந்து நிறுவனங்களும் வைத்திருப்பதுடன், மிகுதி சொத்தில் 12.18% வீதத்தை ஏனைய பதினைந்து நிறுவனங்களும் தங்களிடம் வைத்துக்கொண்டுள்ளன என்பதாகும்.

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**அட்டவணை 3**

***கம்பனி ரீதியான மொத்தச் சொத்துக்களின் பகுப்பாய்வு***

| காப்புறுதி வழங்குனர் | 2013 (அ) | | | | | 2014 (ஆ) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நீண்டகால காப்புறுதி (ரூ.'000) | பொது காப்புறுதி மற்றும் பங்குரிமையாளர் (ரூ.'000) | கொடுக்கல் வாங்கல்களின உள்வகைப் படுத்தல்களின் நீக்கம் (ரூ.'000) | மொத்தம் (ரூ.'000) | % | நீண்டகால காப்புறுதி (ரூ.'000) | பொது காப்புறுதி மற்றும் பங்குரிமையாளர் (ரூ.'000) | கொடுக்கல் வாங்கல்களின உள்வகைப் படுத்தல்களின் நீக்கம் (ரூ.'000) | மொத்தம் (ரூ.'000)) | % |
| ஏஐஏ | 35,442,431 | 8,742,090 | 26,385 | 44,158,136 | 12.35 | 38,436,443 | 9,229,720 | - | 47,666,163 | 11.72 |
| ஏஐஜி | - | 1,226,001 | - | 1,226,001 | 0.34 | - | 459,716 | - | 459,716 | 0.11 |
| அலையன்ஸ் பொது | - | 2,727,215 | - | 2,727,215 | 0.76 | - | 3,131,772 | - | 3,131,772 | 0.77 |
| அலையன்ஸ் ஆயுள் | 1,077,009 | - | - | 1,077,009 | 0.30 | 1,459,083 | - | - | 1,459,083 | 0.36 |
| அமானா டக்காபுல் | 1,006,855 | 1,686,462 | 44,253 | 2,649,064 | 0.74 | 1,399,828 | 1,693,869 | 105,638 | 2,988,059 | 0.73 |
| ஆர்ப்பிக்கோ | 723,566 | - | - | 723,566 | 0.20 | 962,865 | - | - | 962,865 | 0.24 |
| ஏசியன் அலையன்ஸ் | 4,418,928 | 2,921,100 | - | 7,340,028 | 2.05 | 6,735,510 | 3,476,151 | - | 10,211,661 | 2.51 |
| சிலிங்கோ | 57,204,038 | 30,853,084 | 6,483,228 | 81,573,894 | 22.82 | 65,374,901 | 32,689,041 | 5,986,239 | 92,077,703 | 22.63 |
| கொண்டினன்டல் | - | 1,415,146 | - | 1,415,146 | 0.40 | - | 2,028,177 | - | 2,028,177 | 0.50 |
| கோபரேடிங் | 838,598 | 2,165,406 | 10,720 | 2,993,284 | 0.84 | 976,777 | 2,720,604 | 10,869 | 3,686,512 | 0.91 |
| எச்என்பிஏ | 4,598,540 | 3,436,137 | - | 8,034,677 | 2.25 | 5,930,808 | 3,977,661 | - | 9,908,469 | 2.44 |
| ஜனசக்தி | 7,553,509 | 10,692,654 | - | 18,246,163 | 5.10 | 8,159,309 | 11,995,381 | - | 20,154,690 | 4.95 |
| எல்ஜசி | 1,668,517 | - | - | 1,668,517 | 0.47 | 1,903,185 | - | - | 1,903,185 | 0.47 |
| எல்ஓஎல்சி | 291,199 | 2,044,502 | 6,398 | 2,329,304 | 0.65 | 1,042,182 | 2,671,810 | 20,755 | 3,693,237 | 0.91 |
| எம்பிஎஸ்எல் | 257,450 | 1,322,384 | - | 1,579,834 | 0.44 | 395,336 | 1,355,127 | - | 1,750,463 | 0.43 |
| ஓரியன்ட் | - | 925,027 | - | 925,027 | 0.26 | - | 1,019,481 | - | 1,019,481 | 0.25 |
| பீபள்ஸ் | - | 3,853,669 | - | 3,853,669 | 1.08 | - | 4,598,563 | - | 4,598,563 | 1.13 |
| சனச | 572,540 | 617,857 | - | 1,190,397 | 0.33 | 738,763 | 986,026 | - | 1,724,789 | 0.42 |
| எஸ்எல்ஜசி | 79,518,628 | 64,174,216 | - | 143,692,844 | 40.20 | 90,804,450 | 71,162,367 | - | 161,966,817 | 39.81 |
| யுஏஎல் | 21,103,511 | 9,607,354 | 649,778 | 30,061,087 | 8.41 | 25,530,258 | 10,638,421 | 733,048 | 35,435,631 | 8.71 |
| **மொத்தம்** | **216,275,318** | **148,410,305** | **7,220,762** | **357,464,861** | **100** | **249,849,697** | **163,833,886** | **6,856,549** | **406,827,033** | **100** |

*(அ) மீள்தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*


*குறிப்பு:*

1. *அவசியமான தகவல்கள் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் இதுவரை சபைக்கு சமர்ப்பிக்கப்படாமையினால், மேற்குறித்த பகுப்பாய்வில் அவை உள்ளடக்கப்படவில்லை.*
2. *ஒவ்வொரு வகைப்படுத்தலிலிருந்தும் கிடைக்க வேண்டியவற்றின் தொகைகள் உள்வகைப்படுத்தலின் மீதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதாவது, கலவை காப்புறுதி வகைப்படுத்தலின் நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி கம்பனி வகைப்படுத்தல்.*
3. *அலையன்ஸ் லைப், ஆர்ப்பிகோ மற்றும் எல்ஜசி நிறுவனங்களின் பங்குதாரர்களுக்கு சொந்தமான சொத்துக்கள் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் கீழ் அறிக்கையிடப்பட்டுள்ளது.*

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**வரைபு 2**

***31 டிசம்பர் 2014ம் திகதியில் கம்பனி ரீதியாக சொத்துக்களின் செறிவின் பகுப்பாய்வு***




**காப்புறுதிக் கம்பனிகளின் பங்குதாரர்களின் நிதிகள்**

காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த பங்குதாரர்களின் நிதிகள் 31 டிசம்பர் 2013 இல் பதிவுசெய்த ரூபா 94,950 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 31 டிசம்பர் 2014 இல் பதிவுசெய்த ரூபா 112,000 மில்லியனானது அதிகரிப்பை வெளிப்படுத்துகின்றது. இது 2013ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 17.96% வீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும்.

அட்டவணை 4இல் காட்டப்பட்டவாறு, காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த பங்குதாரர்களின் நிதிகள் 31 டிசம்பர் 2014 இல் ரூபா 22,547 மில்லியன் குறிப்பிட்ட மூலதனத்தையும் ரூபா 89,453 மில்லியன் ஒதுக்கையும் உள்ளடக்கியுள்ளது. 2013ம் ஆண்டைப் போல் இவ்வருடமும், 31 டிசம்பர் 2014இல் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 56% வீத பங்கினை கொண்டிருப்பதால் முழு பங்குதாரர்களின் நிதியில் அரைவாசிக்கு மேற்பட்ட நிதியை தன்வசம் வைத்துள்ளது. சிலிங்கோ மற்றும் யூனியன் அசூரன்ஸ் நிறுவனம் என்பன முறையே 15.83% மற்றும் 5.54% வீதத்தை பதிவுசெய்துள்ளதனால் காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த பங்குதாரர்களின் நிதியில் முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களுக்கு உரிமை கோருகிறன. நான்காம் மற்றும் ஐந்தாம் இடங்களை 2014ம் ஆண்டு மொத்த பங்குதாரர்களின் நிதியில் முறையே 4.65% மற்றும் 4.32% வீதங்களைக் கொண்டிருக்கும் ஜனசக்தி மற்றும் ஏஜஏ நிறுவனங்கள் பெற்றுக்கொள்கின்றன. 2014ம் ஆண்டு காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த பங்குதாரர்களின் நிதியில் 86.53% வீதமான பங்குதாரர்களின் நிதியை முதல் ஐந்து இடங்களைப் பெற்றுக்கொண்டுள்ள நிறுவனங்கள் தம்வசம் வைத்திருக்கின்றன. (2013: 87.18%)

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**அட்டவணை 4**

***காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த பங்குதாரர்களின் நிதிகள்***

| காப்புறுதி வழங்குனர்கள் | 2013 (அ) | | 2014 (ஆ) | | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்த பங்குரிமையாளர்களின் நிதிகள் (ரூ. '000) | % | பங்கு மூலதனம் (ரூ. '000) | மொத்த ஒதுக்கங்கள் (ரூ. '000) | மொத்த பங்குரிமையாளர்களின் நிதிகள் (ரூ. '000) | % |
| ஏஐஏ | 4,538,450 | 4.78 | 300,000 | 4,535,259 | 4,835,259 | 4.32 |
| ஏஐஜி | 277,458 | 0.29 | 659,265 | (410,086) | 249,179 | 0.22 |
| அலையன்ஸ் பொது | 875,510 | 0.92 | 500,000 | 402,085 | 902,085 | 0.81 |
| அலையன்ஸ் ஆயுள் | 261,958 | 0.27 | 592,624 | (365,889) | 226,734 | 0.20 |
| அமானா டக்காபுல் | 983,286 | 1.03 | 1,250,001 | (250,064) | 999,937 | 0.89 |
| ஆர்பிக்கோ | 496,908 | 0.52 | 675,565 | (63,389) | 612,176 | 0.55 |
| ஏசியன் அலையன்ஸ் | 1,831,693 | 1.93 | 1,062,500 | 1,495,992 | 2,558,492 | 2.28 |
| சிலிங்கோ | 15,922,159 | 16.77 | 1,324,822 | 16,408,998 | 17,733,820 | 15.83 |
| கொண்டினன்டல் | 567,276 | 0.60 | 750,000 | 132,713 | 882,713 | 0.79 |
| கோபரேட்டிவ் | 899,249 | 0.95 | 1,003,066 | 364,018 | 1,367,084 | 1.22 |
| எச்என்பிஏ | 2,113,612 | 2.23 | 1,171,875 | 1,234,482 | 2,406,356 | 2.15 |
| ஜனசக்தி | 4,028,491 | 4.24 | 1,496,000 | 3,710,641 | 5,206,641 | 4.65 |
| எல்ஜசி | 632,071 | 0.67 | 500,000 | 214,417 | 714,417 | 0.64 |
| எல்ஓஎல்சி | 708,452 | 0.75 | 1,100,000 | (85,706) | 1,014,294 | 0.91 |
| எம்பிஎஸ்எல் | 339,399 | 0.36 | 1,080,022 | (617,244) | 462,778 | 0.41 |
| ஓரியன்ட் | 680,330 | 0.72 | 750,000 | (122,051) | 627,949 | 0.56 |
| பீபள்ஸ் | 1,084,881 | 1.14 | 600,000 | 809,322 | 1,409,322 | 1.26 |
| சனச | 416,711 | 0.44 | 592,635 | 54,357 | 646,992 | 0.58 |
| எஸ்எல்ஐசி | 53,175,185 | 56.00 | 6,000,000 | 56,933,533 | 62,933,533 | 56.19 |
| யுஏஎல் | 5,117,292 | 5.39 | 1,138,432 | 5,071,785 | 6,210,217 | 5.54 |
| **மொத்தம்** | **94,950,371** | **100** | **22,546,806** | **89,453,172** | **111,999,978** | **100** |

*(அ) மீள்தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*

*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

*குறிப்பு:*

*அவசியமான தகவல்கள் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் இதுவரை சபைக்கு சமர்ப்பிக்கப்படாமையினால், மேற்குறித்த பகுப்பாய்வில் அவை உள்ளடக்கப்படவில்லை.*

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**பாரிய நிதித்துறைகளின் மொத்த சொத்துக்களின் விநியோகம்**

பொருளாதாரத்தில் பிரதான நிதியியல் துறைகளின் மொத்த சொத்துகள் 31 டிசம்பர் 2013 இல் பதிவுசெய்த ரூபா 10,320.2 பில்லியனோடு ஒப்பிடுகையில் 31 டிசம்பர் 2014ம் ஆண்டு ரூபா 12,041.2 பில்லியனைப் பதிவுசெய்து 16.68% வீத அதிகரிப்பினைக் காட்டுகின்றது. அட்டவணை 05 இல் காட்டப்பட்டுள்ளவாறு, 31 டிசம்பர் 2014இல் நிதியியல் துறையில் வங்கித்துறை மொத்த சொத்துக்களாக ரூபா 8,436.4 பில்லியனை கொண்டிருப்பதுடன், இது மொத்த சொத்தில் 70% வீதமாகும். ஒப்பந்த சேமிப்பு நிறுனங்கள் ருபா 1,866.1 (2013: ரூபா 1,640.8 பில்லியன்) பில்லியன் பெறுமதியை கணக்கீட்டில் வெளிப்படுத்தியது. ஏனைய வைப்புகளை ஏற்கும் நிதியியல் நிறுவனங்கள் மற்றும் விசேட நிதியியல் நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்கள் 31 டிசம்பர் 2014இல் முறையே ரூபா 892 பில்லியன் மற்றும் ரூபா 439.9 பில்லயன் ஆவதுடன் இது நிதியியல் துறையின் மொத்த சொத்துக்களில் 7.4% மற்றும் 3.7% வீதங்களைக் கொண்டுள்ளது. காப்புறுதிக் கம்பனிகள் 31 டிசம்பர் 2014இல் ரூபா 406.8 பில்லியன் சொத்துக்களைக் கொண்டிருந்ததுடன், இது நிதியியல் துறையின் மொத்த சொத்துக்களில் 3.4% வீதமாகும்.

**அட்டவணை 5**

***பாரிய நிதியியல் துறைகளின் மொத்த சொத்துகளின் பங்கீடு***

| நிதியியல் துறைகள் | சொத்துகளின் பங்கீடு | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2010 | | 2011 | | 2012 | | 2013 | | 2014 | |
| | ரூ. பில்லியன் | % | ரூ. பில்லியன் | % | ரூ. பில்லியன் | % | ரூ. பில்லியன் | % | ரூ. பில்லியன் | % |
| வங்கித்துறை | 4,527.3 | 68.9 | 5,375.6 | 69.7 | 6,377.0 | 70.3 | 7,187.5 | 69.6 | 8,436.4 | 70.0 |
| ஏனைய வைப்புகளை ஏற்கும் நிதி நிறுவனங்கள் | 295.0 | 4.5 | 427.1 | 5.5 | 621.2 | 6.9 | 756.4 | 7.3 | 892 | 7.4 |
| விசேட நிதி நிறுவனங்கள் | 354.3 | 5.4 | 338.8 | 4.4 | 310.4 | 3.4 | 378 | 3.7 | 439.9 | 3.7 |
| ஒப்பந்தம் செய்த சேமிப்பு நிறுவனங்கள் | 1,178.7 | 17.9 | 1,305.4 | 16.9 | 1,445.6 | 15.9 | 1,640.8 | 15.9 | 1,866.1 | 15.5 |
| காப்புறுதி கம்பனிகள் | 219.10 | 3.3 | 261.4 | 3.4 | 315.8 | 3.5 | 357.5(a) | 3.5 | 406.8 (b) | 3.4 |
| **மொத்தம்** | **6,574.4** | **100** | **7,708.3** | **100** | **9,070.0** | **100** | **10,320.2** | **100** | **12,041.2** | **100.0** |


*மூலம்: இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2014 (காப்புறுதி கம்பனிகளிடம் இருந்து சபைக்கு கிடைத்த மீள்தரப்பட்ட தரவுகளின் அடிப்படையில் காப்புறுதி கம்பனிகளின் சொத்துகள்)*
*கம்பனிகள் மற்றும் ஒப்பந்தம் செய்த சேமிப்பு நிறுவனங்களின் சொத்துகள் மீள் குறிப்பிடப்பட்டுள்ளன.*

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**வரைபு 3**

***31 டிசம்பர் 2014ம் திகதியில் பாரிய நிதியியல் துறைகளின் சொத்துகளின் பங்கீடு***




**காப்புறுதி கம்பனிகளின் கிளைகள், ஊழியர்கள் மற்றும் முகவர்கள் தொடர்பான பகுப்பாய்வு**

நாடுமுழுவதிலுமுள்ள வாடிக்கையாளர்களை பல்வகையான காப்புறுதித் தேவைகளுடன் அணுகுவதற்கு பல்வேறுபட்ட விநியோக ஊடகங்களை காப்புறுதி வழங்குனர்கள் பயன்படுத்துகின்றனர். தொடறரா சந்தைப்படுத்தல் சேவை மற்றும் தொலைதொடர்பாடல் முறையின் ஊடாக வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகள் விரிவடைந்து வரும் அவர்களின் வியாபாரத்தில் முக்கிய பங்கினை ஆற்றய போதிலும், நேரடி சந்தைப்படுத்தல், கிளை வலையமைப்பு, தரகர் கம்பனிகள் மற்றும் முகவர் விநியோகம் என்பன காப்புறுதி வழங்குனர்களின் பாரம்பரியமான சந்ததைப்படுத்தல் கட்டமைப்பில் பிரதான வகிபாகத்தை வகிக்கின்றன.

அட்டவணை 6இல் காட்டப்பட்டுள்ளவாறு 31 டிசம்பர் 2014இல் நாடுமுழுவதிலும் 1,462 கிளைகளை காப்புறுதிக் கம்பனிகள் தொழிற்படுத்தியதுடன், இது 31 டிசம்பர் 2013இல் தொழிற்படுத்தப்பட்ட கிளைகளின் எண்ணிக்கையான 1,379 உடன் ஒப்பிடுகையில் 6.02% வீத வளர்ச்சியினைக் காட்டுகின்றது. மேல் மாகாணத்தில் அமைந்துள்ள கிளைகளின் எண்ணிக்கையானது 31 டிசம்பர் 2013இல் 487ஆக இருந்ததுடன், இது 31 டிசம்பர் 2014ம் ஆண்டு 489 கிளைகளாக உயர்வடைந்துள்ளது. அனேகமாக நாட்டில் உள்ள மொத்த காப்புறுதிக் கம்பனிகளின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு கிளைகள் மேல் மாகாணத்தில் அமைந்துள்ளதுடன், இது காப்புறுதி வியாபாரம் தொடர்பான உயர் செறிவு மேல் மாகாணத்தில் காணப்படுவதை பிரதிபலிக்கின்றது. தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் முறையே 191 மற்றும் 159 கிளைகள் உள்ளதுடன், இவை கிளை வலையமைப்பில் பாரிய கிளைகளைக் கொண்ட மாகாணங்களில் இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைக் கொண்டுள்ளதுடன், ஊவா மாகாணம் மிகக் குறைந்த எண்ணிக்கையான 76 கிளைகளைக் கொண்டுள்ளது.

காப்புறுதிக் கம்பனிகளில் 31 டிசம்பர் 2014இல் மொத்தம் 16,134 (2013: 13,764) ஊழியர்கள் பணியாற்றியதுடன், இதில் காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த ஊழியர்களில் 66.82% (2013: 62.58%)வீதமான ஊழியர்கள் மேல் மாகணத்தினை பிரதிபலிக்கின்றனர். தென் மற்றும் மத்திய மாகாணங்கள் முறையே 1,137 மற்றும் 941 ஊழியர்களைக் கொண்டு உயர் எண்ணிக்கையான ஊழியர்களைக் கொண்ட இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களை தன்வசம் வைத்துக்கொண்டுள்ளன. வடக்கு மாகாணம் மிகக் குறைந்த எண்ணிக்கையான 400 ஊழியர்களைக் கொண்டுள்ளதுடன், இது காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த ஊழியர் எண்ணிக்கையிவ் 2.48% வீதமாகும்.

அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகளிலும் இணைக்கப்பட்டுள்ள மொத்த முகவர்களின் எண்ணிக்கை 31 டிசம்பர் 2014இல் 42,958 ஆவதுடன், இது 31 டிசம்பர் 2013இல் காப்புறுதி முகவர்களாக தொழில்புரிந்தவர்களின் எண்ணிக்கையான 38,635 உடன் ஒப்பிடுகையில் 11.19% வீத வளர்ச்சியினைக் காட்டுகின்றது. அதிக எண்ணிக்கையான முகவர்கள் மேல் மாகாணத்திலேயே உள்ளதுடன், 31 டிசம்பர் 2014இல் முகவர்களின் எண்ணிக்கை 16,578 (2013: 14,618) ஆவதுடன், இத்தொகை மொத்த காப்புறுதி கம்பனிகளில் உள்ள முகவர்களில் 38.59% வீதமாகும். 31 டிசம்பர் 2014இல் ஊவா மாகாணத்திலேயே மிகக் குறைந்த எண்ணிக்கையான 2,197 முகவர்கள் இருப்பதுடன், இது 31 டிசம்பர் 2013இல் இருந்த 2,294 முகவர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில் 4.23% வீதத்தினால் குறைந்துள்ளது. அட்டவணையில் நோக்கத்தக்க குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில் கிளைகள், ஊழியர்கள் மற்றும் முகவர்களின் செறிவு ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் மேல் மாகாணத்தில் உயர்வாக உள்ளதென்பதாகும்.

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

நாட்டின் ஒன்பது மாகாணங்களிலும் 31 டிசம்பர் 2014 இல் உள்ள கிளைகள், ஊழியர்கள் மற்றும் முகவர்களின் பரவலை வரைபு 4 காட்டுகின்றது.

**அட்டவணை 6**


***2013 மற்றும் 2014 டிசம்பர் 31 ம் திகதியில் செயற்பட்ட கிளைகள், ஊழியர்கள் மற்றும் முகவர்களின் எண்ணிக்கை***

| மாகாணம் | கிளைகளின் எண்ணிக்கை | | ஊழியர்களின் எண்ணிக்கை | | முகவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|
| | 2013 | 2014 | 2013 | 2014 | 2013 | 2014 |
| மத்திய மாகாணம் | 126 | 159 | 1,031 | 941 | 3,820 | 4,370 |
| கிழக்கு மாகாணம் | 86 | 104 | 404 | 506 | 1,773 | 2,310 |
| வட மத்திய மாகாணம் | 97 | 109 | 603 | 679 | 2,324 | 2,752 |
| வட மேற்கு மாகாணம் | 126 | 133 | 749 | 725 | 3,613 | 3,898 |
| வடக்கு மாகாணம் | 108 | 111 | 421 | 400 | 2,945 | 3,369 |
| சம்பரகமுவ மாகாணம் | 104 | 92 | 535 | 561 | 2,611 | 2,209 |
| தென் மாகாணம் | 176 | 191 | 1,046 | 1,137 | 4,637 | 5,275 |
| ஊவா மாகாணம் | 67 | 76 | 362 | 405 | 2,294 | 2,197 |
| மேல் மாகாணம் | 489 | 487 | 8,613 | 10,780 | 14,618 | 16,578 |
| **மொத்தம்** | **1,379** | **1,462** | **13,764** | **16,134** | **38,635** | **42,958** |

*குறிப்புகள்:*
*சபைக்கு தேவைப்படும் அவசியமான தகவல்கள் அளிக்கப்படாமையினால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்கள் மேலேயுள்ள பகுப்பாய்வில் உள்ளாக்கப்படவில்லை*

**வரைபு 4**

***31 டிசம்பர் 2014ம் திகதியில் இருந்த கிளைகள், ஊழியர்கள் மற்றும் முகவர்களின் எண்ணிக்கை***



# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி


**காப்புறுதிக் கம்பனிகளின் விநியோக ஊடகங்கள்**

கடந்த வருடங்களைப் போலவே இவ்வருடமும், நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் வாடிக்கையாளர்களை அடைவதற்கு பிரதான விநியோக ஊடகமாக முகவர்கள் தங்கள் பணியைத் தொடர்ந்தனர். 2014ம் ஆண்டில் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தில் மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணங்களில் 91.80% வீதம் முகவர்களினால் பதிவுசெய்யப்பட்டதுடன், 2013ம் ஆண்டில் இதையொத்த தொகையாக 91.12% வீதத்தை பதிவுசெய்திருந்தனர். வரைபு 5இல் காட்டப்பட்டவாறு, வங்கியுடனிணைந்த காப்புறுதி, நேரடி சந்தைப்படுத்தல், ஏனைய ஊடகங்கள் மற்றும் தரகர்கள் குறிப்பிடத்தக்க தொகையை மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணங்களில் முறையே 3.03%, 2.99%, 1.71% மற்றும் 0.47% வீத பங்களிப்பினை மட்டுமே வழங்கின.

நீண்டகால காப்புறுதி வியாபாரத்தில் இல்லாவிடிலும் பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் வாடிக்கையாளர்களை அடைவதற்கு நேரடிச் சந்தைப்படுத்தல், முகவர்கள், தரகர்கள் மற்றும் ஏனைய விநியோக ஊடகங்கள் என்பன விநியோக ஊடகத்தில் முக்கிய வகிபாகத்தைக் கொண்டுள்ளன. வரைபடம் 5இல் காட்டியவாறு, பொது காப்புறுதி வியாபாரத்தில் நேரடி சந்தைப்படுத்தல் 34.70% வீதத்தையும், ஏனைய முகவர்கள், தரகர்கள், ஏனைய விநியோக ஊடகங்கள் மற்றும் வங்கியோடினைணந்த காப்புறுதி என்பன முறையே 27.82%, 19.51%, 15.15% மற்றும் 2.82% வீத பங்களிப்பையும் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்திற்கு வழங்கியுள்ளன. இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில், 2013ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014ம் ஆண்டு நேரடிச் சந்தைப்படுத்தல், முகவர்கள் மற்றும் ஏனைய ஊடகங்களின் பங்களிப்பு மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் அதிகரித்த போதிலும், தரகர்கள் மற்றும் வங்கியோடிணைந்த காப்புறுதி என்பவற்றின் பங்களிப்புகள் குறைவடைந்துள்ளது.

**வரைபு 5**

*காப்புறுதிக் கம்பனிகளின் விநியோக ஊடகங்கள்*




| | 2013 நீண்டகாலம் | 2013 பொது | 2014 நீண்டகாலம் | 2014 பொது |
|---|---|---|---|---|
| முகவர்கள் | 91.12 | 25.40 | 91.80 | 27.82 |
| தரகர்கள் | 0.46 | 21.68 | 0.47 | 19.51 |
| நேரடி | 3.33 | 33.90 | 2.99 | 34.70 |
| வங்கியோடிணைந்த காப்புறுதி | 2.34 | 4.21 | 3.03 | 2.82 |
| ஏனையவை | 2.75 | 14.81 | 1.71 | 15.15 |

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

## நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

### மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்

நீண்ட கால காப்புறுதி வியாபாரம் 2014ம் ஆண்டு ரூபா 44,610 மில்லியன் (2013: ரூபா 41,676 மில்லியன்) மொத்த எழுதப்பட்ட காப்புறுதித் தவணைக் கட்டணங்களை உருவாக்கியதுடன், இது அட்டவணை 7இல் பிரதிபலிக்கப்படுகின்றது. இது 2013ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014ம் ஆண்டு நீண்ட கால காப்புறுதிச் சந்தை 7.04% வீத மிகமந்தமான வளர்ச்சியினைப் பதிவுசெய்தது.

சிலிங்கோ நிறுவனம் 2014ம் ஆண்டு ரூபா 12,003 மில்லியன் (2013: ரூபா 11,123 மில்லியன்) எழுதப்பட்ட காப்புறுதித் தவணைக் கட்டணங்களை பிறப்பித்து நிறுவனம் நீண்டகால காப்புறுதி சந்தையில் தொடர்ந்தும் தன் மேலாண்மையினை உறுதிசெய்ததுடன், மொத்த எழுதப்பட்ட காப்புறுதித் தவணைக் கட்டணங்களில் 26.91% வீத பங்களிப்பினையும் வழங்கியது. கடந்த வருடத்தைப் போல் இவ்வருடமும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏஐஏ நிறுவனங்கள் முறையே ரூபா 8,121 மில்லியன் (2013: ரூபா 8,398 மில்லியன்) மற்றும் ரூபா 7,267 மில்லியன் (2013: ரூபா 6,863 மில்லியன்) எழுதப்பட்ட காப்புறுதித் தவணைக் கட்டணங்களை பிறப்பித்து முறையே 18.20% மற்றும் 16.29 வீதங்களைக் கைப்பற்றி இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களை முறையே சந்தையில் தன்வசம் பெற்றுக்கொண்டன. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப் பங்குகள் 2013ம் ஆண்டு 20.15% வீதமாக இருந்ததுடன் இது 2014ம் ஆண்டு 1.95% வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. யூனியன் அசூரன்ஸ் லிமிடட் மற்றும் ஏசியன் அலையன்ஸ் நிறுவனங்கள் கடந்த வருடத்தை போல் நீண்ட கால காப்புறுதித் துறையில் ரூபா 5,945 மில்லியன் (2013: ரூபா 5,515 மில்லியன்) மற்றும் ரூபா 3,048 மில்லியனை (ரூபா: 2,520 மில்லியன்) மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணங்களாகப் பெற்றுக்கொண்டு, சந்தைப் பங்கில் 13.33% மற்றும் 6.83% வீதத்தை பதிவுசெய்து இவை முறையே நான்காம் மற்றும் ஐந்தாம் இடங்களைக் கைப்பற்றியுள்ளன. 2014ம் ஆண்டில் மொத்த நீண்ட கால காப்புறுதி மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானமாக முதல் ஐந்து கம்பனிகளும் 2013: 81.59% வீதத்தை ஒன்று சேர்த்து பதிவுசெய்தன. இதில் 2013ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014ம் ஆண்டு புதிய ஆட்டக்காரரான எல்ஓஎல்சி நிறுவனம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானத்தில் கொண்டிருந்தது. அட்டவணை 6 நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தில் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண ஊடுறுவலின் கம்பனி ரீதியான பகுப்பாய்வினைக் காட்டுகின்றது.

**அட்டவணை 7**

*நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தில் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண ஊடுறுவலின் கம்பனி ரீதியான பகுப்பாய்வு*


| காப்புறுதியாளர் | 2010 | | 2011 | | 2012 | | 2013(அ) | | 2014(ஆ) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தவணைக் கட்டணம் (ரூ.'000) | சந்தைப் பங்கு (%) | தவணைக் கட்டணம் (ரூ.'000) | சந்தைப் பங்கு (%) | தவணைக் கட்டணம் (ரூ.'000) | சந்தைப் பங்கு (%) | தவணைக் கட்டணம் (ரூ.'000) | சந்தைப் பங்கு (%) | தவணைக் கட்டணம் (ரூ.'000) | சந்தைப் பங்கு (%) |
| ஏஐஏ | 7,783,925 | 24.99 | 7,846,447 | 22.32 | 6,495,863 | 17.33 | 6,863,047 | 16.47 | 7,266,574 | 16.29 |
| அலையன்ஸ் ஆயுள் | 204,814 | 0.66 | 351,299 | 1.00 | 532,142 | 1.42 | 828,790 | 1.99 | 838,326 | 1.88 |
| அமானா டக்காபுல் | 240,156 | 0.77 | 303,786 | 0.86 | 364,759 | 0.97 | 542,986 | 1.30 | 679,029 | 1.52 |
| ஆர்ப்பிக்கோ | - | - | - | - | 101,900 | 0.27 | 206,494 | 0.50 | 299,040 | 0.67 |
| ஏசியன் அலையன்ஸ் | 1,242,608 | 3.99 | 1,579,191 | 4.49 | 2,034,084 | 5.43 | 2,520,283 | 6.05 | 3,048,148 | 6.83 |
| சிலிங்கோ | 8,786,120 | 28.21 | 9,815,943 | 27.91 | 10,829,470 | 28.91 | 11,122,906 | 26.69 | 12,002,524 | 26.91 |
| கோப்பரடிவ் | 233,540 | 0.75 | 269,579 | 0.77 | 312,056 | 0.83 | 337,623 | 0.81 | 402,046 | 0.90 |
| எச்என்பிஏ | 1,084,480 | 3.48 | 1,290,367 | 3.67 | 1,500,028 | 4.00 | 2,014,547 | 4.83 | 2,342,867 | 5.25 |
| ஜனசக்தி | 1,685,409 | 5.42 | 1,871,986 | 5.32 | 2,025,075 | 5.40 | 2,193,662 | 5.26 | 2,170,419 | 4.87 |
| எல்ஐசி | 252,656 | 0.81 | 295,859 | 0.84 | 303,344 | 0.81 | 322,268 | 0.77 | 349,311 | 0.78 |
| எல்ஓஎல்சி | - | - | 51,427 | 0.15 | 106,238 | 0.28 | 274,798 | 0.67 | 592,422 | 1.33 |
| எம்பிஎஸ்எல | 89,984 | 0.28 | 143,156 | 0.41 | 192,780 | 0.51 | 251,720 | 0.60 | 294,299 | 0.66 |
| சனச | 73,030 | 0.23 | 128,113 | 0.36 | 203,616 | 0.54 | 283,975 | 0.68 | 258,771 | 0.58 |
| எஸ்எல்ஐசி | 6,009,859 | 19.29 | 6,743,073 | 19.18 | 7,369,031 | 19.67 | 8,397,718 | 20.15 | 8,121,140 | 18.20 |
| யுஏஎல் | 3,465,505 | 11.12 | 4,471,627 | 12.72 | 5,106,323 | 13.63 | 5,515,063 | 13.23 | 5,945,499 | 13.33 |
| **மொத்தம்** | **31,152,086** | **100** | **35,161,853** | **100** | **37,476,709** | **100** | **41,675,880** | **100** | **44,610,416** | **100** |
| **வளர்ச்சி வீதம் (%)** | **29.77** | | **12.87** | | **6.58** | | **11.20** | | **7.04** | |

*(அ) மீளதரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**வரைபு 6**

***2014 டிசம்பர் 31ம் திகதியன்று முடிவடைந்த ஆண்டில் கம்பனி ரீதியாக நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தில் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் சந்தை பங்கு***





**நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தில் முதல் ஐந்து பங்காளர்கள் மற்றும் ஏனைய காப்புறுதி வழங்குனர்களின் சந்தைப் பங்கு**

அட்டவணை 7இல் காட்டப்பட்டவாறு, சிலிங்கோ, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், ஏஐஏ, யுஏஎல் மற்றும் ஏசியன் அலையின்ஸ் நிறுவனங்கள் சந்தையில் முதல் ஐந்து இடங்களைப் பெற்றுள்ளன. எனினும், முதல் பதினைந்து ஆட்டக்காரர்களுக்கான போட்டி 2013ம் ஆண்டு 82.59% வீதமாக இருந்த முதல் ஐந்து இடங்களைப் பெற்றுக்கொண்டவர்களின் வீதம் 2014ம் ஆண்டு 81.56% வீதமாகக் குறைந்துள்ளது. இந்த முதல் ஐந்து இடங்களைப் பெற்றுக்கொண்ட கம்பனிகள் மற்றும் ஏனையவற்றின் சந்தைப் பங்குகளின் பகுப்பாய்வு வரைபு 7இல் காட்டப்பட்டுள்ளது.

**வரைபு 7**

***2010 - 2014 வரை முதல் ஐந்து இடங்களைப் பெற்றுக்கொண்ட கம்பனிகள் மற்றும் ஏனையவற்றின் சந்தைப் பங்குகள் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்***




| | சிலிங்கோ | இ.கா.கூ | ஏஐஏ | யுஏஎல் | ஏசியன் அலையின்ஸ் | Other Insurers |
|---|---|---|---|---|---|---|
| 2010 | 28.21 | 19.29 | 24.99 | 11.12 | 3.99 | 12.39 |
| 2011 | 27.91 | 19.18 | 22.32 | 12.72 | 4.49 | 13.39 |
| 2012 | 28.90 | 19.66 | 17.33 | 13.63 | 5.43 | 15.05 |
| 2013(அ) | 26.69 | 20.15 | 16.47 | 13.23 | 6.05 | 17.41 |
| 2014(ஆ) | 26.91 | 18.20 | 16.29 | 13.33 | 6.83 | 18.44 |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி


**காப்புறுதிக் கம்பனிகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோரிக்கைகள் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

கடந்த ஐந்து ஆண்டுகளில் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள காப்புறுதி வழங்குனர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோரிக்கைகளின் விபரங்கள் வரைபு 8இல் காட்டப்பட்டுள்ளது. 2014ம் ஆண்டு நீண்டகால காப்புறுதி கம்பனிகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்தக் கோரிக்கைகளின் பெறுமதி ரூபா 20,685 மில்லியன் (2013: 18,310 மில்லியன்) ஆவதுடன், 2013ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இத்தொகை 12.97% வீதத்தினால் அதிகரித்துள்ளது. மொத்த கோரிக்கைத் தொகையில் ரூபா 9,879 மில்லியன் (2013: ரூபா 9,840 மில்லியன்) முதிர்ச்சி நன்மையாக வழங்கப்பட்டுள்ளதுடன், இது 47.76% வீதமாகும்.

2013ம் ஆண்டு ரூபா 5,678 மில்லியனாக இருந்த தொகை 2014ம் ஆண்டு ரூபா 7,138 மில்லியனாக அதிகரித்ததன் விளைவாக, அலகுடன் தொடர்புபட்ட உற்பத்திகளுடன் உட்பட ஒப்படைப்பு கோரிக்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படுகின்றது. இது 2014ம் ஆண்டு வழங்கப்பட்ட மொத்தக் கோரிக்கைகளில் 34.51% வீதமாகும். மரணக் கோரிக்கைகளாக ரூபா 1,522 மில்லியன் (2013: ரூபா 1,358 மில்லியன்) வழங்கப்பட்ட போது முற்பணக் கொடுப்பனவு, காசு மிகைக்கொடுப்பனவு மற்றும் முன்முதிர்ச்சி கொடுப்பனவு உட்பட ஏனைய கோரிக்கைகள் ரூபத 2,219 மில்லியன் (2013: ரூபா 1,389 மில்லியன்) வழங்கப்பட்டது,

**வரைபு 8**

***காப்புறுதிக் கம்பனிகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோரிக்கைகள் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்***




| | 2010 | 2011 | 2012 | 2013(அ) | 2014 (ஆ) |
|---|---|---|---|---|---|
| ஊனமுற்றவர்களுக்கான நன்மைகள் | 63,296 | 31,183 | 77,717 | 45,457 | 17,097 |
| மரணம் | 1,073,808 | 681,111 | 789,166 | 1,358,337 | 1,521,547 |
| ஒப்படைத்தல்கள் | 2,243,555 | 2,225,506 | 2,823,924 | 5,677,638 | 7,138,254 |
| முதிர்வு நன்மைகள் | 6,441,973 | 6,242,096 | 7,860,715 | 9,839,833 | 9,879,297 |
| ஏனையவை | 1,792,890 | 1,367,512 | 1,920,859 | 1,388,698 | 2,129,140 |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*

*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**காப்புறுதிக் கோரிக்கைகளின் எண்ணிக்கை - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

நீண்ட கால காப்புறுதி கம்பனிகளினால் 2014ம் ஆண்டு 252,065 கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது மொத்தக் கோரிக்கைகளில் முதிர்ச்சிக் கோரிக்கைகள் 42.59% வீதமாகும். அத்துடன், ஏனைய கோரிக்கைகள் மற்றும் ஒப்படைப்புக் கோரிக்கைகள் மொத்த நீண்ட கால காப்புறுதி கோரிக்கைகளில் முறையே 33.66% மற்றும் 18.23% வீதத்தைப் பிரதிபலித்தது. 2010 இருந்து 2014ம் ஆண்டுவரை நீண்ட கால காப்புறுதி கோரிக்கைகளின் எண்ணிக்கையை தொடர்பான வகைப்படுத்தலில் சுருக்கம் அட்டவணை 8 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 8**

*காப்புறுதிக் கோரிக்கைகளின் எண்ணிக்கை - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்*

| | 2010 | 2011 | 2012 | 2013(அ) | 2014(ஆ) |
|---|---|---|---|---|---|
| முதிர்வு நன்மைகள் | 87,742 | 98,363 | 102,465 | 102,050 | 107,353 |
| மரணம் | 5,063 | 4,328 | 4,358 | 5,284 | 5,795 |
| ஊனமுற்றவர்களுக்கான நன்மைகள் | 628 | 569 | 578 | 6,980 | 8,120 |
| ஒப்படைத்தல்கள் | 25,771 | 25,661 | 24,631 | 41,964 | 45,962 |
| ஏனையவை | 42,939 | 45,885 | 51,773 | 99,257 | 84,835 |
| **மொத்தம்** | **162,143** | **174,806** | **183,805** | **255,535** | **252,065** |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள*

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் சொத்துக்கள்**

நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் சொத்துக்களின் செறிவு பல்வேறுபட்ட சொத்து வகைகளில் பங்கிடப்பட்ட விதம் 31 டிசம்பர் 2014இல் உள்ளவாறு அட்டவணை 9 மற்றும் வரைபு 9 இல் காட்டப்பட்டுள்ளது.

ரூபா 249,850 மில்லியன் (2013: ரூபா 216,275 மில்லியன்) பெறுமதியான மொத்த சொத்துக்களில் ரூபா 111,600 மில்லியன் (2013: ரூபா 93,539 மில்லியன்) பெறுமதியான சொத்துக்கள் அரச பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இது நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் மொத்த சொத்துக்களில் 44.67% வீதமாகும். சட்டத்தில் கோரப்பட்டவாறு, வருடம் முழுவதிலும் நீண்ட கால காப்புறுதி வியாபார நிதியத்தின் குறைந்த பட்ச நியம முதலீட்டின் 30% வீதம் அரச பிணைய நிதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என சபை உறுதிப்படுத்துகின்றது. அத்துடன், சபையினால் வழங்கப்பட்ட 2011ம் ஆண்டு 1ம் இலக்க தீர்மானத்திற்கு அமைவாக நீண்ட கால காப்புறுதி வியாபார நிதியத்தின் மிகுதிச் சொத்துக்களை காப்புறுதி நிறுவனங்கள் முதலீடு செய்திருக்கும் என சபை உறுதிப்படுத்துகின்றது.

2014ம் ஆண்டு, கூட்டிணைந்த தனிசுப் பிணையங்களில் முதலீடு செய்யும் நடைமுறை தொடர்ந்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014ம் ஆண்டு கூட்டிணைந்த தனிசுப் பிணையங்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 40,478 மில்லியன் (2013: ரூபா 32,944 மில்லியன்) அதிகரிப்பை காட்டுகின்றது. இது மொத்த சொத்துகளில் 16.20% (2013: 15.23%) வீதமாகும். அத்துடன், இது இரண்டாம் இடத்தில் இருந்த வைப்புகளை மூன்றாம் இடத்துக்கு தள்ளி நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் இரண்டாவது மிகப்பெரிய முதலீட்டுக் கருவியாக மாறியுள்ளது.

வைப்புகளின் மீதான முதலீடு ரூபா 38,038 மில்லியன் (2013: ரூபா 40,806 மில்லியன்) ஆவதுடன், இது மொத்த சொத்துகளில் 15.22% (2013: 18.87%) வீதமாகும். உரிமைப் பங்குகளின் மீதான முதலீடு ரூபா 31,729 மில்லியன் (2013 ரூபா 24,696 மில்லியன்) ஆவதுடன், இது மொத்த சொத்துகளில் 12.70% (2013: 11.38%) வீதமாகும்.

பிரதான முதலீடுகளின் வகைப்படுத்தல் அரசாங்க பிணையங்கள், கூட்டிணைந்த தனிசுப் பிணையங்கள் மற்றும் வைப்புகள் என்பன திரட்டிய மொத்தமாக நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் மொத்த சொத்துக்களில் 76.09% (2013: 77.35%) வீதத்தை பதிவுசெய்ததுடன் மிகுதி சொத்துக்கள் உரிமைப் பங்குகள், காணிகள் மற்றும் கட்டடங்கள், கூறு நம்பிக்கைப் பொறுப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

**அட்டவணை 9**

***31 டிசம்பர் 2013 மற்றும் 2014ம் திகதிகளில் சொத்துக்களின் செறிவு - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்***


| | 2013(அ) | | 2014(ஆ) | |
|---|---|---|---|---|
| சொத்துகளின் வகை | ரூ.'000 | % | ரூ.'000 | % |
| அரசாங்க கடன் பிணையங்கள் | 93,539,259 | 43.25 | 111,600,355 | 44.66 |
| உரிமைப் பங்குகள் | 24,606,466 | 11.38 | 31,729,171 | 12.70 |
| கூட்டிணைந்த தரிசுப் பிணையங்கள் | 32,943,830 | 15.23 | 40,478,128 | 16.20 |
| காணியும் கட்டிடமும் | 6,130,156 | 2.83 | 6,638,896 | 2.66 |
| வைப்புகள் | 40,806,373 | 18.87 | 38,032,430 | 15.22 |
| பொறுப்பு நம்பிக்கை கூறு | 2,302,039 | 1.06 | 2,220,486 | 0.89 |
| தங்கத்தில் முதலீடுகள் | 29,295 | 0.01 | - | - |
| காப்புறுதி கடன்கள் | 5,235,167 | 2.42 | 5,711,407 | 2.29 |
| ஏனைய சொத்துகள் | 9,202,854 | 4.26 | 11,288,496 | 4.52 |
| காசும் காசுக்கு நிகரானவையும் | 1,479,876 | 0.68 | 2,150,326 | 0.86 |
| **மொத்தம்** | **216,275,317** | **100** | **249,849,697** | **100** |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*

*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

**வரைபு 9**

***31 டிசம்பர் 2013 மற்றும் 2014ம் திகதிகளில் சொத்துக்களின் செறிவு - நீண்ட கால காப்புறுதி வியாபாரம***



# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் முதலீட்டு வருமானம்**

அட்டவணை 10இல் காட்டப்பட்டவாறு, 2014இல் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் மூலம் பிறப்பிக்கப்பட்ட முதலீட்டு வருமானம் ரூபா 26,081 மில்லியன் (2013: ரூபா 21,492 மில்லியன்) ஆகும். நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் முதலீடு சராசரியாக ரூபா 221,918 மில்லியன் (2013: ரூபா 194,653 மில்லியன்) ஆகும்.

2014இல், அரசாங்க கடன் பிணையங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் சராசரி முதலீடான ரூபா 102,570 மில்லியன் (2013: ரூபா 95,843 மில்லியன்) அதியுயர் தொகையைப் பிரதிநிதித்துவம் செய்ததுடன், இது 11.17% (2013: 12.47%) வீதமான வருமானத்தையும் பிறப்பித்ததுடன், இது 2013ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் முதலீட்டு வருமானத்தில் வீழ்ச்சியையும் வெளிப்படுத்தியது. 2014இல் உரிமைப் பங்குகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் ரூபா 3,970 மில்லியன் (2013: ரூபா 888 மில்லியன்) ஆக இருந்ததுடன், இது 14.10% (2013: 3.48%) வீத முதலீட்டு வருமானத்தைப் பெற்றுக்கொடுத்தது. இது மூலதன வருமானமான ரூபா 3,041 மில்லியனையும் (2013: முதலீட்டு நட்டங்கள் ரூபா 129 மில்லியன்) பங்குலாப வருமானமான ரூபா 930 மில்லியனையும் (2013: ரூபா 1,017 மில்லியன்) உள்ளடக்கியிருந்தது. 2014இல் கூட்டிணைந்த தரிசுப் பிணையங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடான ரூபா 4,601 மில்லியனில் (2013: ரூபா 2,544 மில்லியன்) இருந்து 12.53% வீத முதலீட்டு வருமானம் கிடைக்கப்பெற்றதுடன், இது 2013ம் ஆண்டு ஈட்டப்பட்ட வருமானமான 11.01% உடன் ஒப்பிடுகையில் வளர்ச்சியைக் காட்டுகின்றது.

வைப்புகள் மீதான முதலீடுகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டி வருமானமான ரூபா 4,673 மில்லியனில் (2013: ரூபா 5,826 மில்லியன்) வங்கி வைப்புகளில் இருந்தான வருமானம் ரூபா 4,448 மில்லியன் (2013: ரூபா 5,666 மில்லியன்) மற்றும் நிதிக் கம்பனிகளில் இருந்து பெற்றுக்கொண்ட வருமானமான ரூபா 224 மில்லியன் (2013: ரூபா 160 மில்லியன்) எனபவற்றை உள்ளடக்கியுள்ளது. 2013ம் ஆண்டு பெறப்பட்ட 16.05% வீதத்துடன் ஒப்பிடுகையில் 2014ம் ஆண்டு வைப்புகளில் மேற்கொள்ளப்பட்ட சராசரி முதலீடுகளில் இருந்து 11.85% வீதத்தை முதலீட்டு வருமானமாக காப்புறுதிக் கம்பனிகள் பெற்றுக்கொண்டுள்ளதுடன், இது 2014ம் ஆண்டில் வட்டிவீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியையும் காட்டுகின்றது. கூறு நம்பிக்கை பொறுப்புகள் மற்றும் பூட்கைக் கடன்கள் உயர் மற்றும் நியாயமான முதலீட்டு வருமானங்களை 2014ம் ஆண்டு பிறப்பித்ததுடன், இந்த முதலீட்டு வருமானங்கள் முறையே 23.74% (2013: 5.29%) மற்றும் 8.14% (2013: 2.20%) வீதங்கள் ஆகும்.

**அட்டவணை 10**

*முதலீட்டு வருமானம் மற்றும் சராசரி முதலீடு என்பவற்றின் சுருக்கம் - நீண்டகால காப்புறுதி வியாபாரம்*

| வகைப்படுத்தல் | 2013(அ) | | | 2014(ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | முதலீட்டு வருமானம் (ரூ. '000) | சராசரி முதலீடு (ரூ. '000) | முதலீட்டு பெறுகை விகிதம் (%) | முதலீட்டு வருமானம் (ரூ. '000) | சராசரி முதலீடு (ரூ. '000) | முதலீட்டு பெறுகை விகிதம் (%) |
| **அரசாங்க கடன் பிணையங்கள்** | 11,950,852 | 95,843,035 | 12.47 | 11,453,476 | 102,569,807 | 11.17 |
| - திறைசேரி முறிகள் | 9,606,186 | | | 10,256,814 | | |
| - திறைசேரி உண்டியல்கள் | 299,139 | | | 491,187 | | |
| - ஏனையவை (ரெப்போ) | 2,045,527 | | | 705,475 | | |
| **பங்குரிமை** | 888,200 | 25,505,675 | 3.48 | 3,970,443 | 28,167,819 | 14.10 |
| - மூலதன இலாபம்/நட்டம் | (128,524) | | | 3,040,570 | | |
| - பங்கிலாபம் | 1,016,724 | | | 929,873 | | |
| **கூட்டிணைந்த தரிசுப் பிணையம்** | 2,544,302 | 23,114,748 | 11.01 | 4,601,233 | 36,710,979 | 12.53 |
| - தொகுதி கடன்கள் | 2,490,639 | | | 4,587,022 | | |
| - வர்த்தக பத்திரங்கள் | 66,801 | | | 20,783 | | |
| - சொத்துகளை ஈடாக கொண்ட பிணையங்கள் | 11,324 | | | 6,206 | | |
| - அவ்வாறான ஏனைய நிதியில் பத்திரங்கள் | (24,462) | | | (12,779) | | |
| **காணிகளும் கட்டிடங்களும்** | 65,636 | 6,040,803 | 1.09 | 78,067 | 6,384,526 | 1.22 |
| **வைப்புகள்** | 5,825,710 | 36,298,242 | 16.05 | 4,672,766 | 39,419,402 | 11.85 |
| - வங்கி | 5,666,128 | | | 4,448,475 | | |
| - நிதி கம்பனிகள் | 159,581 | | | 224,292 | | |
| **பொறுப்பு கூறு நம்பிக்கை** | 103,025 | 1,945,956 | 5.29 | 536,872 | 2,261,263 | 23.74 |
| **தங்கம்** | (10,968) | 30,564 | (35.89) | (56) | 14,648 | (0.38) |
| **காப்புறுதி கடன்கள்** | 108,932 | 4,957,036 | 2.20 | 445,761 | 5,473,287 | 8.14 |
| **ஏனையவை** | 16,632 | 917,152 | 1.81 | 322,865 | 916,111 | 35.24 |
| **மொத்தம்** | **21,492,321** | **194,653,211** | **11.04** | **26,081,427** | **221,917,841** | **11.75** |

(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்

(ஆ) ஏற்பாடுகளில் இலக்கங்கள்

*குறிப்புகள்: அலையன்ஸ் ஆயுள், ஆர்ப்பிகோ, எல்ஜசி என்பனவற்றின் பங்குரிமையாளர்களுக்கு சொந்தமான முதலீட்டு வருமானமும், சராசரி முதலீடுகளும், நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் கீழ் அறிக்கையிடப்பட்டுள்ள.*


# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**விநியோகிக்கப்பட்ட காப்புறுதி பூட்கைகள் மற்றும் அமுலில் உள்ள பூட்கைகளின் எண்ணிக்கை - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

2014ம் ஆண்டின் இறுதியில் பயனுறுதிமிக்க நீண்ட கால காப்புறுதிக் பூட்கைகளின் மொத்த எண்ணிக்கை 2,612,497 ஆகும். அமுலில் உள்ள நீண்டகால காப்புறுதிக் பூட்கைகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 2,477,695 உடன் ஒப்பிடுகையில் 5.44% வீத வளர்ச்சியைப் பதிவுசெய்கின்றது. வரைபு 10இல் காட்டப்பட்டவாறு, 2014ம் ஆண்டு காப்புறுதிக் கம்பனிகள் 545,721 புதிய நீண்டகால காப்புறுதிப் பூட்கைகளை விநியோகித்துள்ளது. கடந்த ஆண்டினைப் போன்றும் இவ்வருடமும் அமுலில் உள்ள பயனுறுதி மிக்க பூட்கைகளின் எண்ணிக்கை மொத்த சனத்தொகையில் 12.6% வீதமாகும். அத்துடன், அமுலில் உள்ள நீண்டகால காப்புறுதிக் பூட்கைகளின் தொழில் வலு வீதமானது 2013ம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 28.1% வீதத்துடன் ஒப்பிடுகையில் சிறிய அளவில் 1.5% வீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது

**வரைபு 10**

***விநியோகிக்கப்பட்ட காப்புறுதி பூட்கைகள் மற்றும் அமுலில் உள்ள பூட்கைகளின் எண்ணிக்கை - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்***




| | | 2010 | 2011 | 2012 | 2013 (அ) | 2014 (ஆ) |
|---|---|---|---|---|---|---|
| ■ | வழங்கப்பட்டுள்ள புதிய ஆயுட் பூட்கைகளின் எண்ணிக்கை | 516,139 | 526,023 | 514,516 | 546,292 | 545,721 |
| □ | நடைமுறையிலுள்ள ஆயுட் பூட்கைகளின் எண்ணிக்கை | 2,214,976 | 2,355,449 | 2,438,340 | 2,477,695 | 2,612,497 |
| -■- | மொத்த சனத் தொகையின் % வீதத்தில் நடைமுறையில் உள்ள ஆயுட் பூட்கைகளின் எண்ணிக்கை* | 10.7 | 11.3 | 12.0 | 12.1 | 12.6 |
| -□- | தொழிலாளர்களின் % வீதத்தில் நடைமுறையில் உள்ள ஆயுட் பூட்கைகளின் எண்ணிக்கை * | 27.3 | 27.5 | 28.8 | 28.1 | 29.6 |

** மூலம்: ஆண்டின் மத்தியில் தொழிற்படையினரும் மற்றும் சனத்தொகையும் - குடிமதிப்பீட்டு மற்றும் புள்ளிவிபர திணைக்களம்*

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*

*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி


**காலங்கடந்த காப்புறுதிக் பூட்கை - நீண்டகால காப்புறுதி வியாபாரம்**

வரைபு 11இல் காட்டப்பட்டவாறு, 2013ம் ஆண்டு பதிவுசெய்யப்பட்ட காலங்கடந்த காப்புறுதிப் பூட்கைகளின் எண்ணிக்கை 366,506 ஆக இருந்தபோதிலும், 2014ம் ஆண்டு மொத்த காலங்கடந்த காப்புறுதிப் பூட்கைகளின் எண்ணிக்கை 362,664 ஆக குறைவடைந்தள்ளதுடன், இது 1.05% வீத எல்லை வீழ்ச்சியைக் காட்டுகின்றது. அதனால், மொத்தக் காலங்கடந்த காப்புறுதிப் பூட்கைகளின் வீதம் மொத்த அமுலில் உள்ள காப்புறுதிப் பூட்கைகளின் வீதமானது 2013ம் ஆண்டிருந்த 14.79% வீதத்துடன் ஒப்பிடுகையில் 2014ம் ஆண்டு 13.88% வீதமாக குறைவடைந்தள்ளது.

2014ம் ஆண்டினுள் காலங்கடந்த நீண்ட கால காப்புறுதிப் பூட்கைகளின் எண்ணிக்கையானது 103,500 ஆக இருப்பதுடன், இது 2013ம் ஆண்டு காலங்கடந்த காப்புறுதிப் பூட்கைகளின் எண்ணிக்கையான 107,906 உடன் ஒப்பிடுகையில் குறைவடைந்துள்ளமையைக் காட்டுகின்றது. அதனால், புதிதாக விநியோக்கிகப்பட்ட காப்புறுதிப் பூட்கைகளுக்கு எதிராக புதிய காலங்கடந்த காப்புறுதிப் பூட்கைகளின் வீதமானது 2013ம் ஆண்டில் இருந்த 19.75% வீதத்தில் இருந்து 2014ம் ஆண்டு 18.97% வீதமாக குறைவடைந்துள்ளது.

**வரைபு 11**

***2010 இருந்து 2014ம் வரை காலங்கடந்த காப்புறுதிக் பூட்கைகளின் எண்ணிக்கை மற்றும் காலங்கடந்த விகிதம் - நீண்டகால காப்புறுதி வியாபாரம்***




| | | 2010 | 2011 | 2012 | 2013 (அ) | 2014 (ஆ) |
|---|---|---|---|---|---|---|
| ■ | காலங்கடந்த புதிய காப்புறுதி பூட்கைகள் | 84,413 | 82,080 | 94,936 | 107,906 | 103,500 |
| □ | காலங்கடந்த மொத்த காப்புறுதி பூட்கைகள் | 432,707 | 371,196 | 332,707 | 366,506 | 362,664 |
| -■- | வழங்கப்பட்ட புதிய காப்புறுதி பூட்கைகளின் கீழ் காலங்கடந்த புதிய பூட்கைகளின் சதவீதம் | 16.35 | 15.60 | 18.45 | 19.75 | 18.97 |
| -□- | அமுலாக்கப்பட்ட மொத்த காப்புறுதி பூட்கைகளின் கீழ் மொத்த காலங்கடந்த புதிய பூட்கைகளின் சதவீதம் | 19.54 | 15.76 | 13.64 | 14.79 | 13.88 |

*(அ) சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு கணிப்பீட்டு வருவாய்களில் அறிவிக்கப்பட்டுள்ளவாறு*

*(ஆ) ஏற்பாட்டு இலக்கங்கள்*

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**காப்புறுதி கம்பனிகளின் கடன்தீர் நிலைமை - நீண்டகால காப்புறுதி வியாபாரம்**

சபையினால் வழங்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைவாக, கணிப்பீடு செய்யப்பட வேண்டிய தேவையுள்ள கடன்தீர் எல்லை தேவைப்பாட்டுடன் இணங்கி செயற்பட வேண்டும் என காப்புறுதிக் கம்பனிகள் கோரப்படுகின்றன. 2012 டிசம்பர் 31 மற்றும் 2014ம் திகதியில் உள்ளவாறு நீண்டகால காப்புறுதி கம்பனிகளின் கடன்தீர் விகிதம் மற்றும் காப்பீட்டு பொறுப்புகள் என்பவற்றை அட்டவணை 11 காண்பிக்கின்றது. 2014 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு, ஒரு காப்புறுதி கம்பனி "01" எனும் தேவைப்பாடுள்ள கடன்தீர் விகிதத்தை அடைய முடியவில்லை. ஆகவே இலங்கை காப்புறுதி சபை இது தொடர்பாக அவசியமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 2014ம் ஆண்ட மொத்த பூட்கை பொறுப்புகள் ருபா 147,938ஐ பதிவுசெய்ததுடன், அதற்கு முன்னைய ஆண்டு இத்தொகை ரூபா 132,493 ஆக இருந்தது.

**அட்டவணை 11**

***2014 டிசம்பர் 31 மற்றும் 2013 அன்றுள்ளவாறு, கம்பனி ரீதியாக கடன் தீர் நிலைபாடும் மற்றும் காப்பீட்டு பொறுப்புகள் என்பவற்றின் பகுப்பாய்வு – நீண்ட கால காப்புறுதி வியாபாரம்***

| காப்புறுதி வழங்குனர் | 2013 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு (அ) | | 2014 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு (ஆ) | | | |
|---|---|---|---|---|---|---|
| | கடன் தீர் விகிதம் | காப்புறுதி பொறுப்புகளின் பெறுமதி (அ) (ரூ '000) | கிடைக்கக்கூடிய கடன்தீர் எல்லை (ரூ '000) | தேவைப்படும் கடன் தீர் எல்லை (காப்புறுதி பொறுப்பு *0.05) (ரூ '000) | கடன் தீர் விகிதம | காப்புறுதி பொறுப்புகளின் பெறுமதி (ரூ '000) |
| ஏஐஏ | 2.89 | 23,644,788 | 5,426,460 | 1,256,003 | 4.32 | 25,120,062 |
| அலையன்ஸ் ஆயுள் | 5.40 | 663,689 | 112,640 | 49,037 | 2.30 | 980,741 |
| அமானா டக்காபுல் | 2.02 | 538,568 | 30,463 | 27,781 | 1.10 | 555,610 |
| ஆர்ப்பிகோ | 10.62 | 149,313 | 485,842 | 14,177 | 34.27 | 283,540 |
| ஏசியன் அலையன்ஸ் | 2.48 | 3,697,969 | 771,570 | 245,669 | 3.14 | 4,913,375 |
| சிலிங்கோ | 12.85 | 32,593,476 | 26,234,688 | 1,836,480 | 14.29 | 36,729,597 |
| கோர்பரேடிவ் | 3.23 | 676,575 | 41,913 | 39,912 | 1.05 | 798,243 |
| எச்என்பிஏ | 2.04 | 4,033,316 | 576,093 | 252,009 | 2.29 | 5,040,184 |
| ஜனசக்தி | 6.77 | 5,285,357 | 865,829 | 341,124 | 2.54 | 6,822,472 |
| எல்ஐசி | 10.62 | 919,426 | 708,104 | 56,556 | 12.52 | 1,131,121 |
| எல்ஓஎல்சி | (11.18) | 251,522 | 196,151 | 34,147 | 5.74 | 682,942 |
| எம்பிஎஸ்எல் | (0.40) | 218,559 | (36,451) | 18,381 | (1.98) | 367,615 |
| சனச | 1.03 | 537,990 | 220,261 | 34,138 | 6.45 | 682,753 |
| எஸ்எல்ஐசி | 11.48 | 43,227,530 | 31,529,776 | 2,268,016 | 13.90 | 45,360,319 |
| யுஎஎல் | 3.99 | 16,054,685 | 4,375,064 | 923,478 | 4.74 | 18,469,562 |
| மொத்தம் | **8.43** | **132,492,764** | **71,538,404** | **7,396,907** | **9.67** | **147,938,137** |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*

*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

## பொது காப்புறுதி வியாபாரம்

### மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்

பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் உள்ள காப்புறுதி நிறுவனங்கள் மொத்தமாக ரூபா 55,262 மில்லியனை 2014ம் ஆண்டு மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாக பதிவுசெய்துள்ளதுடன், இது 2013ம் ஆண்டு பதிவுசெய்யப்பட்ட ரூபா 53,311 மில்லியனோடு ஒப்பிடுகையில் 3.66% வீத வளர்ச்சியை அடைந்துள்ளதை அட்டவணை 12 காட்டுகின்றது. இந்த குறைந்த வளர்ச்சிக்கு காரணம், கடல் அபாய, நானாவித மற்றும் மோட்டார் வாகனக் காப்புறுதி வியாபாரத்தின் மிக மந்தமான வளர்ச்சியும் மற்றும் தீ அபாயக் காப்புறுதி வியாபாரத்தில் காணப்பட்ட மறை வளர்ச்சிப் பதிவும் ஆகும். அனேக வகையான பொதுக் காப்புறுதி வியாபாரங்கள் தொடர்ந்தும் விலைப் போட்டியுடன் இருப்பதுடன், காப்புறுதிக் கம்பனிகள் சந்தைப் பங்கிற்கு போட்டியிடுகின்றன.

காப்புறுதிக் கம்பனிகள் 2014ம் ஆண்டு பொதுக் காப்புறுதிகள் தொடாபான வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாத தவணைக் கொடுப்பனவுகள் மீதான வருமானம் ரூபா 3,491 மில்லியன் (2013: ரூபா 2,957 மில்லியன்) என உறுதிசெய்திருப்பதுடன், அதனால் 2014இல் வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதம் என்பவற்றின் தவணைக் கட்டணங்கள் உட்பட பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் ரூபா 58,753 மில்லியன் (2013: ரூபா 53,267 மில்லியன்) ஆகும்.

கடந்த ஆண்டினைப் போல் இவ்வருடமும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அதிகூடிய சந்தைப் பெறுமதியை பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் கொண்டிருந்துதுடன், இத்தொகையான ரூபா 12,114 மில்லியன் (2013: ரூபா 12,550 மில்லியன்) மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் 21.92% வீதமாகும். எனினும் 2013ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014ம் ஆண்டு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் சந்தைப் பங்கில் 1.62% வீத எல்லை வீழ்ச்சியினை அடைந்துள்ளது.

சிலிங்கோ நிறுவனம் பொது காப்புறுதிச் சந்தையில் இரண்டாவது இடத்தை 2014ம் ஆண்டும் தொடர்ந்தும் வைத்துக்கொண்டதுடன், இதன் சந்தை பங்கு 19.49% (2013: 19.34%) ஆவதுடன், இது ரூபா 10,773 மில்லியனை (2013: ரூபா 10,311 மில்லியன்) மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாக உழைத்திருந்து. இது 2013ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் எல்லை அதிகரிப்பை பிரதிபலித்தது.

ஜனசக்தி ரூபா 6,492 மில்லியனை (2013: ரூபா 6,319 மில்லியன்) மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாக உழைத்ததுடன், 11.75% (2013: 11.85%) சந்தை பங்கினைப் பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

யூனியன் அசூரன்ஸ் லிமிடட் மற்றும் பீப்பல்ஸ் நிறுவனங்கள் பொதுக் காப்புறுதித் துறையில் ரூபா 4,951 மில்லியன் (2013: ரூபா 5,117 மில்லியன்) மற்றும் ரூபா 3,286 மில்லியனை (ரூபா: 3,085 மில்லியன்) மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணங்களாகப் பெற்றுக்கொண்டு, சந்தைப் பங்கில் 8.96% (2013: 9.60%) மற்றும் 5.95% (2013: 5.79%) வீதத்தை பதிவுசெய்தன் மூலம் இவை முறையே நான்காம் மற்றும் ஐந்தாம் இடங்களைக் கைப்பற்றியுள்ளன. 2014ம் ஆண்டில் மொத்த நீண்டகால காப்புறுதி மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானமாக முதல் ஐந்து கம்பனிகளும் 81.56% வீதத்தை ஒன்று சேர்த்து பதிவுசெய்தன. இதில் 2013ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் யூனியன் அசூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானம் வீழ்ச்சியடைந்திருப்பதுடன், பீப்பல்ஸ் நிறுவனத்தின் எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானம் வளர்ச்சியை அடைந்திருந்தது.

2014ம் ஆண்டில் மொத்த பொதுக் காப்புறுதி மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானமாக முதல் ஐந்து கம்பனிகளும் 68.07% (2013: 70.12%) வீதத்தை ஒன்று சேர்த்து பதிவுசெய்ததுடன், இது மேற்குறித்த கம்பனிகளின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானமானது எல்லை வீழ்ச்சியை அடைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. அதன் மறுதலையாக மத்திய மற்றும் சிறிய காப்புறுதிக் கம்பனிகள் 2013ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014ம் ஆண்டு சந்தைப பங்கில் வளர்ச்சி அடைந்திருப்பதை காண முடியும்.

வரைபு 12 காப்புறுதிக் கம்பனிகள் பொது காப்புறுதி வியாபாரத்தில் கம்பனி ரீதியாக பெற்றுக்கொண்ட மொத்த எழுதப்பட்ட காப்புறுதிக் கட்டணம் மற்றும் சந்தைப் பங்கு பற்றி விளக்குகின்றது.

**அட்டவணை 12**

*கம்பனி ரீதியாக பெற்றுக்கொண்ட மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டணம் மற்றும் சந்தைப் பங்கு - பொது காப்புறுதி வியாபாரம்*

| காப்புறுதி வழங்குனர் | 2010 | | 2011 | | 2012 | | 2013 (அ) | | 2014 (ஆ) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தவணைக் கட்டணம் (ரூ. '000) | சந்தைப் பங்கு (%) | தவணைக் கட்டணம் (ரூ. '000) | சந்தைப் பங்கு (%) | தவணைக் கட்டணம் (ரூ. '000) | சந்தைப் பங்கு (%) | தவணைக் கட்டணம் (ரூ. '000) | சந்தைப் பங்கு (%) | தவணைக் கட்டணம் (ரூ. '000) | சந்தைப் பங்கு (%) |
| ஏஐஏ | 2,490,843 | 7.10 | 2,456,347 | 5.67 | 2,143,252 | 4.31 | 2,428,675 | 4.55 | 2,655,577 | 4.81 |
| ஏஐஜி | 890,387 | 2.54 | 942,901 | 2.18 | 819,448 | 1.65 | 880,060 | 1.65 | 523,857 | 0.95 |
| அலையன்ஸ்-பொது | 1,356,660 | 3.86 | 1,379,406 | 3.18 | 1,397,127 | 2.81 | 1,964,907 | 3.68 | 2,563,968 | 4.64 |
| அமானா டக்காபுல் | 908,756 | 2.59 | 916,754 | 2.12 | 1,125,838 | 2.27 | 1,432,135 | 2.69 | 1,297,651 | 2.35 |
| ஏசியன் அலையன்ஸ் | 397,789 | 1.13 | 582,257 | 1.34 | 1,133,240 | 2.28 | 1,556,386 | 2.92 | 1,651,827 | 2.99 |
| சிலிங்கோ | 8,724,292 | 24.85 | 9,558,942 | 22.06 | 10,434,917 | 21.00 | 10,311,479 | 19.34 | 10,772,849 | 19.49 |
| கொண்டினெ்டல் | 359,105 | 1.02 | 1,149,121 | 2.65 | 1,545,225 | 3.11 | 1,330,515 | 2.50 | 1,765,202 | 3.19 |
| கோர்பரடிவ் | 644,814 | 1.84 | 922,859 | 2.13 | 1,135,011 | 2.28 | 1,272,941 | 2.39 | 1,346,018 | 2.43 |
| எச்என்பிஏ | 1,255,190 | 3.58 | 1,623,830 | 3.75 | 1,635,306 | 3.29 | 1,767,361 | 3.32 | 2,213,061 | 4.00 |
| ஜனசக்தி | 4,324,170 | 12.32 | 5,086,207 | 11.74 | 5,773,429 | 11.62 | 6,318,626 | 11.85 | 6,491,556 | 11.75 |
| எல்ஓஎல்சி | - | - | 364,735 | 0.84 | 1,295,133 | 2.61 | 1,485,521 | 2.79 | 1,843,393 | 3.34 |
| எம்பிஎஸ்எல் | 467,606 | 1.33 | 636,738 | 1.47 | 1,049,147 | 2.11 | 1,132,789 | 2.12 | 913,125 | 1.65 |
| ஒரியன்ட் | - | - | 1,749 | - | 308,547 | 0.62 | 355,001 | 0.66 | 491,127 | 0.89 |
| பீபல்ஸ் | 847,064 | 2.42 | 2,284,578 | 5.27 | 2,795,448 | 5.63 | 3,085,041 | 5.79 | 3,286,063 | 5.95 |
| சன்ச | 234,914 | 0.67 | 232,374 | 0.54 | 308,142 | 0.62 | 322,592 | 0.61 | 382,057 | 0.69 |
| எஸ்எல்ஐசி | 8,766,027 | 24.97 | 11,134,583 | 25.70 | 12,359,188 | 24.87 | 12,549,763 | 23.54 | 12,113,568 | 21.92 |
| **யுஏஎல்** | 3,433,830 | 9.78 | 4,055,443 | 9.36 | 4,436,052 | 8.93 | 5,116,966 | 9.60 | 4,950,741 | 8.96 |
| **மொத்தம்** | **35,101,447** | **100** | **43,328,824** | **100** | **49,694,450** | **100** | **53,310,758** | **100** | **55,261,639** | **100** |
| **வளர்ச்சி வீதம் (%)** | **4.63** | | **23.44** | | **14.69** | | **7.28** | | **3.66** | |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

*குறிப்புகள்:*


1) *2010 இலிருந்து 2014 வரையான ஆண்டுகளில் காப்புறுதிக் கம்பனிகளின் பொது காப்புறுதியின் மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டணங்களில் வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதம் என்பவற்றிற்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தவணைக் கட்டண வருமானம் கருத்திற் கொள்ளப்படவில்லை*

2) *சபைக்கு தேவைப்படும் தகவல்கள் பூரணமாக அளிக்கப்படாமையினால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்கள் மேலேயுள்ள பகுப்பாய்வில் உள்ளாக்கப்பட வில்லை.*

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**வரைபு 12**

***2014 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனி ரீதியாக மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் சந்தைப் பங்கு - பொது காப்புறுதி வியாபாரம்***




# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் எழுதப்பட்ட தவணைக் கட்டன வருமானத்தில் முதல் ஐந்து பங்காளர்களின் சந்தைப் பங்கு மற்றும் ஏனைய காப்புறுதி வழங்குனர்கள்**

2010 இருந்து 2014 வரை பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானத்தில் ஆதிக்கம் செலுத்தும் முதல் ஐந்து பங்காளர்கள் மற்றும் ஏனைய காப்புறுதிக் கம்பனிகளின் பதிவுசெய்யப்பட்ட சந்தைப் பங்குகள் தொடர்பான விபரங்கள் வரைபு 13இல் காட்டப்பட்டுள்ளது. கடந்த வருடத்தைப் போல் இவ்வருடமும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் முதலாம் இடத்தை தன்வசம் வைத்துக்கொண்டது. எனினும் வரைபு 13இல் காட்டியவாறு, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப் பங்குகள் 2013ம் ஆண்டு பதிவு செய்த 23.54% வீதத்தில் இருந்து 2014ம் ஆண்டு பதிவு செய்த 21.92% வீதமாக சந்தைப் பங்கு வீழ்ச்சியடைந்துள்ளதுடன், 2011ம் ஆண்டிலிருந்து இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப் பங்குகள் அதிகரித்திருப்பதை வரைபு 13 காட்டுகின்றது. 2014ம் ஆண்டு சிலிங்கோ நிறுவனம் 19.49% வீத சந்தைப் பங்குகளுடன் தனது இரண்டாம் இடத்தைப் பாதுகாத்துக்கொண்டது. ஜனசக்தி நிறுவனம் 11.75% வீத சந்தைப் பங்குகளுடன் தனது மூன்றாம் இடத்தைப் பாதுகாத்துக்கொண்டது. எனினும் 2013ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014ம் ஆண்டு ஜனசக்தியின் சந்தைப் பங்கு எல்லை வீழ்ச்சியை அடைந்துள்ளது. 2010ம் ஆண்டிலிருந்து யூனியன் அசூரன்ஸ் நிறுவனம் பொது காப்புறுதிச் சந்தைப் பங்கில் நான்காம் இடத்தை தொடர்ந்தும் பேணுவதுடன், இவ்வருடம் அவர்களின் சந்தைப் பங்கு 8.96% வீதமாகும். பீபள்ஸ் நிறுவனம் சந்தைப் பங்கில் 5.95% வீதத்தைப் பெற்றுக்கொண்டு ஐந்தாம் இடத்தை தன்வசம் வைத்துக்கொண்டுள்ளது. அத்துடன் கடந்த ஐந்து வருடங்களின் பீபல்ஸ் நிறுவனத்தின் சந்தைப் பங்குகள் படிப்படியாக வளர்ச்சியடைந்துள்ளது. அத்துடன் ஏனைய காப்புறுதிக் கம்பனிகளின் சந்தைப் பங்குகள் கடந்த ஐந்து வருடங்களில் அதிகரித்துள்ளது என்பது முதல் ஐந்து இடங்களைப் பெற்றுக்கொண்ட கம்பனிகளை விடவும் ஏனைய கம்பனிகள் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானத்தைப் பெற்றுக்கொண்டுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**வரைபு 13**

***மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் உச்ச பங்களிப்பாளர்கள் ஐவரினதும் சந்தைப் பங்கு மற்றும் ஏனைய காப்புறுதியாளர்களினதும் பங்களிப்பு - பொது காப்புறுதி வியாபாரம்***




| | எஸ்எல்ஐசி | சிலிங்கோ | ஜனசக்தி | யுஏஎல் | பீபல்ஸ் | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|
| 2010 | 24.97 | 24.85 | 12.32 | 9.78 | 2.42 | 25.65 |
| 2011 | 25.70 | 22.06 | 11.74 | 9.36 | 5.27 | 25.87 |
| 2012 | 24.87 | 21.00 | 11.62 | 8.93 | 5.63 | 27.96 |
| 2013(அ) | 23.54 | 19.34 | 11.85 | 9.60 | 5.79 | 29.88 |
| 2014(ஆ) | 21.92 | 19.49 | 11.75 | 8.96 | 5.95 | 31.93 |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*

*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வகுப்பு ரீதியான பகுப்பாய்வு - பொது காப்புறுதி வியாபாரம்**

2010 இருந்து 2014 வரை பொது காப்புறுதி வியாபாரத்தின் உப வகைகளில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் மற்றும் அதன வளர்ச்சி வீதத்தை அட்டவணை 13 மற்றும் வரைபு 14 என்பவை காண்பிக்கின்றன. தீ அபாயம், கப்பற்துறை, மோட்டார் வாகனம் மற்றும் நானாவித வகுப்புகள் என்பன பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் உப வகைகள் ஆகும்.

அட்டவணை 13ற்கு அமைவாக, 2014ம் ஆண்டு பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் வாகனக் காப்புறுதி வியாபாரம் ரூபா 34,945 மில்லியன் (2013: ரூபா 33,157 மில்லியன்) அதிகூடிய மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தைப் பெற்றுக்கொண்டு, மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் 63.24% வீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தி சந்தையில் பிரதான இடத்தைப் பெற்றுக்கொண்டது. 2013ம் ஆண்டைவிட 2014ம் ஆண்டு 5.39% வீத வளர்ச்சியை மோட்டார் காப்புறுதித்துறை பெற்றுள்ளது.

2014ம் ஆண்டில், நானாவித காப்புறுதி வியாபாரம், ரூபா 12,262 மில்லியன் (2013: ரூபா 12,054 மில்லியன்) மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை பதிவுசெய்ததன் மூலம் பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் 22.19% (2013: 22.61%) வீதத்தை மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் பெற்றுக்கொண்டுள்ளதுடன், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 1.73% வீத எல்லை வளர்ச்சியைக் காட்டுகின்றது. கடந்த வருடத்தைப் போல் இவ்வருடமும் நானாவித காப்புறுதி வியாபாரம் பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் உப வகையில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது.

2014 ஆம் ஆண்டில் ரூபா 6,242 மில்லியனாக (2013: ரூபா 6,304 மில்லியன்) 11.29 % (2013: 11.82%) வீதத்தை தீ அபாய காப்புறுதி வியாபாரத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் பதிவுசெய்தது. தீ அபாய காப்புறுதி வியாபாரத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் 2013ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014ம் ஆண்டு 0.97% விதத்தினால் மறை வளர்ச்சியைக் காட்டுகின்றது. கடல் அபாயக் காப்புறுதி மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாக ரூபா 1,812 மில்லியனை (2013: ரூபா 1,796 மில்லியன்) பிறப்பித்ததுடன், இது 2013ம் ஆண்டில் பதிவுசெய்த 0.87% வீதத்துடன் 2014ம் ஆண்டு பதிவுசெய்த 3.28% வீதத்தை ஒப்பிடுகையில் வளர்ச்சியைக் காண முடிகின்றது.

**அட்டவணை 13**

***மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வகுப்பு ரீதியான பகுப்பாய்வு - பொது காப்புறுதி வியாபாரம்***

| வகுப்பு | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (ரூ.'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2010 | 2011 | 2012 | 2013 (அ) | 2014(ஆ) |
| தீ அபாயம் | 5,012,443 | 5,376,094 | 5,422,346 | 6,303,579 | 6,242,137 |
| கடல் சார்ந்தவை | 1,498,832 | 1,678,027 | 1,917,570 | 1,796,374 | 1,811,989 |
| வாகனம் | 20,948,782 | 27,141,119 | 31,637,508 | 33,157,131 | 34,945,370 |
| நானாவிதம் | 7,641,390 | 9,133,584 | 10,717,026 | 12,053,673 | 12,262,143 |
| **மொத்தம்** | **35,101,447** | **43,328,824** | **49,694,450** | **53,310,758** | **55,261,639** |

| வகுப்பு | **வளர்ச்சி** (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2010 | 2011 | 2012 | 2013 (அ) | 2014(ஆ) |
| தீ அபாயம் | (28.90) | 7.25 | 0.86 | 16.25 | (0.97) |
| கடல் சார்ந்தவை | 3.89 | 11.96 | 14.28 | (6.32) | 0.87 |
| வாகனம் | 17.05 | 29.56 | 16.57 | 4.80 | 5.39 |
| நானாவிதம் | 6.75 | 19.53 | 17.34 | 12.47 | 1.73 |
| **மொத்தம்** | **4.63** | **23.44** | **14.69** | **7.28** | **3.66** |

| வகுப்பு | **சதவீதம்** (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2010 | 2011 | 2012 | 2013 (அ) | 2014(ஆ) |
| தீ அபாயம் | 14.28 | 12.41 | 10.91 | 11.82 | 11.29 |
| கடல் சார்ந்தவை | 4.27 | 3.87 | 3.86 | 3.37 | 3.28 |
| வாகனம் | 59.68 | 62.64 | 63.66 | 62.20 | 63.24 |
| நானாவிதம் | 21.77 | 21.08 | 21.57 | 22.61 | 22.19 |
| **மொத்தம்** | **100** | **100** | **100** | **100** | **100** |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்* *(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

*குறிப்புகள்:*


*1) 2010 இலிருந்து 2014 வரையான ஆண்டுகளில் காப்புறுதிக் கம்பனிகளின் பொது காப்புறுதியின் மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டணங்களில் வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதம் என்பவற்றிற்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தவணைக் கட்டண வருமானம் கருத்திற் கொள்ளப்படவில்லை*

*2) சபைக்கு தேவைப்படும் தகவல்கள் பூரணமாக அளிக்கப்படாமையினால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்கள் மேலேயுள்ள பகுப்பாய்வில் உள்ளாக்கப்படவில்லை.*

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**வரைபு 14**

***வகுப்பு ரீதியாக 2010 இல் இருந்து 2014 வரை மொத்த எழுதப்பட்ட காப்புறுதி தவணை கட்டணத்தின் பகுப்பாய்வு - பொது காப்புறுதி வியாபாரம்***




| | 2010 | 2011 | 2012 | 2013 (அ) | 2014 (ஆ) |
|---|---|---|---|---|---|
| தீ அபாயம் சார்ந்தவை | 14.28 | 12.41 | 10.91 | 11.82 | 11.29 |
| கடல் சார்ந்தவை | 4.27 | 3.87 | 3.86 | 3.37 | 3.28 |
| வாகனம் | 59.68 | 62.64 | 63.66 | 62.20 | 63.24 |
| நானாவிதம் | 21.77 | 21.08 | 21.57 | 22.61 | 22.19 |
| தொழில் வளர்ச்சி (பொது காப்புறுதி) | 4.63 | 23.44 | 14.69 | 7.28 | 3.66 |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*

*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

*குறிப்புகள்:*

*1) 2010 இலிருந்து 2014 வரையான ஆண்டுகளில் காப்புறுதிக் கம்பனிகளின் பொது காப்புறுதியின் மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டணங்களில் வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதம் என்பவற்றிற்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தவணைக் கட்டண வருமானம் கருத்திற் கொள்ளப்படவில்லை*

*2) சபைக்கு தேவைப்படும் தகவல்கள் பூரணமாக அளிக்கப்படாமையினால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்கள் மேலேயுள்ள பகுப்பாய்வில் உள்ளாக்கப்படவில்லை.*

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**நானாவித காப்புறுதி வியாபாரத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வகைப்படுத்தல் ரீதியான பகுப்பாய்வு**

அட்டவணை 14ஆனது 2013 மற்றும் 2014ம் ஆண்டுகளில் நானாவித காப்புறுதி வியாபாரத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் பல்வேறுபட்ட காப்புறுதி பிரிவுகளில் இருந்து கிடைக்கப்பெற்ற மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணங்களை வெளிப்படுத்துகின்றது. 2014ம் ஆண்டு வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதக் காப்புறுதி மற்றும் துணைக்காப்புறுதி கட்டணங்களை உட்படுத்தாமல், ரூபா 12,262 மில்லியனை நானாவித காப்புறுதி வியாபாரம் தவணைக் கட்டணமாகப் பெற்றுக்கொண்டுள்ளது. நானாவித காப்புறுதி வியாபாரத்தின் கீழ் சுகாதாரமும், அறுவை சிகிச்சையும், தனிப்பட்டவர்களின் விபத்துகள், விமானத்தின் பிரதான பாகங்கள், தலைப்புகள், காசுப் போக்குவரத்து என்பன சில பிரதான காப்புறுதிப் பிரிவுகளாகும்.

நானாவித காப்புறுதி வியாபாரத்தின் கீழ் சுகாதாரமும், அறுவை சிகிச்சையும் பிரிவு உயர் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணங்களை பெற்றுக்கொண்டது. 2014ம் ஆண்டு, இத்தொகை வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதக் காப்புறுதி தவணைக் கட்டணம் உட்பட ரூபா 6,397 மில்லியனாக இருந்ததுடன், முழு மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் 50.26% வீதத்தைப் பதிவுசெய்தது. 2013ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014ம் ஆண்டு சுகாதாரம் மற்றும் அறுவைச் சிகிச்சைப் பொருட்களுக்கு ஏற்பட்ட கேள்வி காரணமாக 8.89% வீத வளர்ச்சியை இது பிரதிபலித்தது. நானாவித காப்புறுதி வியாபாரத்தின் ஏனைய காப்புறுதிப் பிரிவுகள் 2013ம் ஆண்டு பதிவுசெய்த ரூபா 1,732 மில்லியனுடன் 2014ம் ஆண்டு பதிவுசெய்த ரூபா 2,072 மில்லியனை ஒப்பிடுகையில் 19.63% வீத வளர்ச்சி ஏற்பட்டள்ளது.

**அட்டவணை 14**

***நானாவித காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வகைப்படுத்தல் ரீதியான பகுப்பாய்வு 2013 - 2014***

| | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் ரூ. '000 | |
|---|---|---|
| வகைப்படுத்தல | 2013 (அ) | 2014 (ஆ) |
| சுகாதாரமும் அறுவை சிகிச்சையும் | 5,875,382 | 6,397,496 |
| தலைப்பு | 293,292 | 390,491 |
| தனிப்பட்ட விபத்துகள் | 1,578,256 | 1,129,894 |
| ஒப்பந்தகாரர்களின் இடர் | 48,356 | 31,845 |
| தொழில்சார் நட்டோத்தரவாதம் | 265,077 | 238,610 |
| பயண காப்புறுதி | 232,543 | 343,227 |
| நேர்மைக்கான உத்தரவாதம் | 58,558 | 73,704 |
| களவு | 320,750 | 260,629 |
| பாதுகாப்பில் உள்ள காசு உள்ளடங்களாக இடையில் உள்ள காசு | 377,805 | 384,720 |
| இடையில் உள்ள பொருட்கள் | 49,181 | 52,534 |
| உற்பத்தி பொறுப்புகள் | 39,089 | 34,846 |
| பொது மக்களுக்கான பொறுப்புகள் | 118,694 | 118,578 |
| வங்கியாளர்களின் நட்டோத்தரவாதம் | 329,112 | 276,473 |
| விமானத்தின் பகுதி | 632,891 | 558,862 |
| டபிளியு.சி.ஐ | 374,455 | 365,790 |
| ஏனையவைகள் | 1,732,291 | 2,072,314 |
| **மொத்த நானாவித காப்புறுதி - மொத்த எழுதப்பட்ட காப்புறுதி தவணைக் கட்டணம்** | **12,325,736** | **12,730,014** |
| தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு, வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சியார்கள், மற்றும் பயங்கரவாதம் ஆகியவற்றின் மொத்த தவணைக் கட்டணம் | (252,055) | (298,984) |
| கூட்டு காப்புறுதியாளர்களின் தவணைக் கட்டணம் | (20,008) | (168,887) |
| **காப்புறுதி தொழிலின் (கம்பனிகள்) தேறிய தவணைக் கட்டண வருமானம்** | **12,053,673** | **12,262,143** |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்* *(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

*குறிப்புகள்:*

1) *2010 இலிருந்து 2014 வரையான ஆண்டுகளில் காப்புறுதிக் கம்பனிகளின் பொது காப்புறுதியின் மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டணங்களில் வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதம் என்பவற்றிற்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தவணைக் கட்டண வருமானம் கருத்திற் கொள்ளப்படவில்லை*
2) *சபைக்கு தேவைப்படும் தகவல்கள் பூரணமாக அளிக்கப்படாமையினால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்கள் மேலேயுள்ள பகுப்பாய்வில் உள்ளாக்கப்படவில்லை.*

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம், மீள் காப்புறுதி தவணைக் கட்டணம் மற்றும் காப்புறுதியாளர்களினால் பிடித்து வைத்துக் கொள்ளப்பட்டவை - பொது காப்புறுதி வியாபாரம்**

அட்டவணை 15 மற்றும் வரைபு 15 இல் 2010 இருந்து 2014 வரை காப்புறுதிக் கம்பனிகளினால் உருவாக்கப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம், மீள்காப்புறுதியாளர்களினால் உழைக்கப்பட்ட மீள்காப்புறுதித் தவணைக் கட்டணம், பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் பிரதான வகை பிடித்துவைக்கும் மட்டம் காட்டப்பட்டுள்ளது. 2014ம் ஆண்டு, பொதுக் காப்புறுதி வழங்குனர்களினால் உழைக்கப்பட்ட ரூபா 55,262 மில்லியன் (2013: ரூபா 53,311 மில்லியன்) தொகையில் மீள்காப்புறுதியளாளர்களினால் ரூபா 9,259 மில்லியன் (2013: ரூபா 9,387 மில்லியன்) உழைக்கப்பட்டது.

கடந்த வருடத்தைப் போல் இவ்வருடமும், மோட்டார் வாகனக் காப்புறுதித்துறையில் அதிகூடிய பிடித்து வைத்தல் வீதம் பதிவுசெய்யப்பட்டதுடன், இது காப்புறுதி கம்பனிகளினால் இடர் ஏற்றுக்கொள்ளப்பட்ட உயர் மட்டத்தைப் பிரதிபலிப்பதுடன், இது 98.28% (2013: 97.39%) வீதமாகும். 2014ம் ஆண்டு மீள்காப்புறுதி செய்யப்பட்ட மோட்டார் காப்புறுதியின் பெறுமதியான ரூபா 601 மில்லியன் 2013ம் ஆண்டு பெறுமதியான ரூபா 864 மில்லியனுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவில், அதாவது 30.44% வீதத்தினால் குறைவடைந்துள்ளது.

நானாவித காப்புறுதி பிடித்துவைத்தல் விகிதம் 79.36% வீதமாக இருந்ததுடன், இரண்டாம் இடத்தைப் பதிவுசெய்ததுடன், இது 1.76% வீத வளர்ச்சியை பதிவுசெய்தது. பிடித்துவைத்தலில் அதிகரிப்பை பங்களிப்பு செய்தபோதிலும், நானாவித காப்புறுதிக்காக மீள்காப்புறுதி செய்த தொகை 2013ம் ஆண்டு ரூபா 2,700 மில்லியனாக இருந்ததுடன், இது 2014ம் ஆண்டு 6.28% வீதத்தினால் குறைவடைந்து 2,531 மில்லியனைப் பதிவுசெய்தது.

கடல் சார் காப்புறுதியின் பிடித்து வைத்தல் விகிதம் 2013 இல் 44.39% ஆக பதிவுசெய்யப்பட்டதுடன், இது 2014ம் ஆண்டு குறைவடைந்து 40.64% வீதத்தைப் பதிவுசெய்தது. பிடித்து வைத்துக்கொள்ளலில் வீழ்ச்சியைப் பதிவுசெய்தபோதும் கடல்சார் காப்புறுதித்துறை மீள்காப்புறுதி செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளும் தொகை கடல்சார் காப்புறுதியில் 2013ம் ஆண்டு ரூபா 999 மில்லியன் பதிவுசெய்ததுடன், இது 7.67% வீதத்தினால் அதிகரித்து 2014ம் ஆண்டு ரூபா 1,076 மில்லியனைப் பதிவுசெய்தது.

கடந்த வருடத்தைப் போல் இவ்வருடமும் தீ அபாய காப்புறுதி 2013ம் பதிவுசெய்த பிடித்துவைத்த விகிதமான 23.48% வீதத்தில் இருந்து 2014ம் ஆண்டு 19.08% வீதத்தினால் குறைவடைந்துளது. 2014இல் தீ அபாயக் காப்புறுதியில் பிடித்துவைத்தலில் விகிதத்தில் வெளிப்படுத்தும் வீழ்ச்சியானது, மீள்காப்புறுதியில் உயர் மட்ட நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றது.

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**அட்டவணை 15**

*மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம், மீள் காப்புறுதி தவணைக் கட்டணம் மற்றும் காப்புறுதியாளர்களினால் பிடித்து வைத்துக் கொள்ளப்பட்டவை - பொது காப்புறுதி வியாபாரம்*

| வகுப்பு | மொத்த எழுதப்பட்ட காப்புறுதி தவணைக் கட்டணம் (ரூ.'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2010 | 2011 | 2012 | 2013 (அ) | 2014 (ஆ) |
| தீ அபாயம் | 5,012,443 | 5,376,094 | 5,422,347 | 6,303,579 | 6,242,137 |
| கடல் சார்ந்தவை | 1,498,832 | 1,678,027 | 1,917,570 | 1,796,374 | 1,811,989 |
| வாகனம் | 20,948,782 | 27,141,119 | 31,637,508 | 33,157,131 | 34,945,370 |
| நானாவிதம் | 7,641,390 | 9,133,584 | 10,717,025 | 12,053,673 | 12,262,143 |
| **மொத்த எழுதப்பட்ட காப்புறுதி தவணைக் கட்டணத்தின் மொத்தம்** | **35,101,447** | **43,328,824** | **49,694,450** | **53,310,758** | **55,261,639** |

| வகுப்பு | மீள் காப்புறுதி தவணைக் கட்டணம் (ரூ.'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2010 | 2011 | 2012 | 2013 (அ) | 2014 (ஆ) |
| தீ அபாயம் | 4,233,236 | 4,090,136 | 4,140,877 | 4,823,731 | 5,051,044 |
| கடல் சார்ந்தவை | 813,665 | 847,392 | 1,326,369 | 998,976 | 1,075,640 |
| வாகனம் | 316,594 | 387,211 | 478,478 | 864,394 | 601,306 |
| நானாவிதம் | 2,020,031 | 2,302,942 | 2,752,627 | 2,700,309 | 2,530,557 |
| **மொத்த எழுதப்பட்ட காப்புறுதி தவணைக் கட்டணத்தின் மொத்தம்** | **7,383,526** | **7,627,681** | **8,698,351** | **9,387,410** | **9,258,546** |

| வகுப்பு | பிடித்து வைத்தல் (ரூ.'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
| தீ அபாயம் | 779,208 | 1,285,958 | 1,281,469 | 1,479,848 | 1,191,094 |
| கடல் சார்ந்தவை | 685,167 | 830,635 | 591,202 | 797,399 | 736,349 |
| வாகனம் | 20,632,188 | 26,753,908 | 31,159,029 | 32,292,737 | 34,344,064 |
| நானாவிதம் | 5,621,359 | 6,830,643 | 7,964,399 | 9,353,364 | 9,731,586 |
| **மொத்த எழுதப்பட்ட காப்புறுதி தவணைக் கட்டணத்தின் மொத்தம்** | **27,717,922** | **35,701,143** | **40,996,099** | **43,923,348** | **46,003,093** |

| வகுப்பு | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் சதவீதத்தில் பிடித்துவைத்தல் (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
| தீ அபாயம் | 15.55 | 23.92 | 23.63 | 23.48 | 19.08 |
| கடல் சார்ந்தவை | 45.71 | 49.50 | 30.83 | 44.39 | 40.64 |
| வாகனம் | 98.49 | 98.57 | 98.49 | 97.39 | 98.28 |
| நானாவிதம் | 73.56 | 74.79 | 74.32 | 77.60 | 79.36 |
| **மொத்தம்** | **78.97** | **82.40** | **82.50** | **82.39** | **83.25** |
| **ஒட்டு மொத்த தக்க வைத்துக் கொண்ட விகிதம்** | | | | | |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்* *(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

*குறிப்புகள்:*


1) *2010 இலிருந்து 2012 வரையான ஆண்டுகளில் காப்புறுதிக் கம்பனிகளின் பொது காப்புறுதியின் மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டணங்களில் வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதம் என்பவற்றிற்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தவணைக் கட்டண வருமானம் கருத்திற் கொள்ளப்படவில்லை.*

2) *சபைக்கு தேவைப்படும் தகவல்கள் பூரணமாக அளிக்கப்படாமையினால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்கள் மேலேயுள்ள பகுப்பாய்வில் உள்ளாக்கப்படவில்லை.*

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**வரைபு - 15**

*மீள் காப்புறுதி தவணைக் கட்டணமும் காப்புறுதி வழங்குனர்களினால் பிடித்து வைத்துக்கொண்டவை - பொது காப்புறுதி வியாபாரம்*




*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*

*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

## புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**தேறிய தவணைக் கட்டண பெறுகைகள், உள்ளடக்கப்பட்ட தேறிய கோரிக்கை, தேறிய கோரிக்கைகளின் விகிதம், தேறிய செலவுகளின் விகிதம் மற்றும் தேறிய ஒன்றிணைக்கப்பட்ட விகிதம் - பொது காப்புறுதி வியாபாரம்**

அட்டவணை 16 இல் காண்பிக்கப்பட்டுள்ளவாறு பொது காப்புறுதி வர்த்தகத்தின் அனைத்து வகுப்புகளினதும் மொத்த தேறிய தவணைக் கட்டண பெறுகைகளாக 2013 இல் இருந்த ரூபா 42.036 மில்லியனுடன் ஒப்பிடும்போது 2013 இல் ரூபா 44,233 மில்லியனாக இருந்ததுடன், இது 5.23% வீத அதிகரிப்பை இவ்வாண்டில் வெளிப்படுத்தியது. மோட்டார் வாகனக் காப்புறுதி வியாபாரம் ரூபா 33,031 மில்லியனைப் பதிவுசெய்து, மொத்த தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணத்தில் 74.68% வீதத்தைப் பிரதிபலித்து உயர் தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணத்தைப் பதிவுசெய்தது.

2013 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூபா 25,570 மில்லியன் உடன் 2014 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 28,935 மில்லியனை ஒப்பிடுகையில் 13.16% வீதத்தினால் தேறிய கோரிக்கை அதிகரித்துள்ளது. மோட்டார் வாகனக் காப்புறுதி வியாபாரம் ரூபா 21,363 மில்லியனைப் (2013: ரூபா 19,398 மில்லியன்) பதிவுசெய்து மொத்த தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணத்தில் 73.83% வீதத்தைப் பிரதிபலித்து உயர் தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணத்தைப் பதிவுசெய்தது.

தேறிய உழைக்கப்பட்ட தவணைக்கட்டணத்தின் வீதமாக தேறிய கோரிக்கையை பிரதிபலிக்கும் தேறிய கோரிக்கை விகிதத்தை தீ அபாயக் காப்புறுதி வியாபாரம் 2014இல் பெற்றுக்கொண்டது. தேறிய கோரிக்கை விகிதம் 2013ம் ஆண்டு 57.64% வீதமாக இருந்ததுடன், இது 2014ம் ஆண்டு 69.72% வீதமாக அதிகரித்துள்ளது. தீ அபாயக் காப்புறுதி வியாபாரத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேறிய கோரிக்கைகள் 2013ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014ம் ஆண்டு குறைவடைந்த போதிலும், தீ அபாயக் காப்புறுதி வியாபாரத்தின் தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணம் உயர் வீதத்தில் குறைந்ததனால் அதன் விளைவாக உயர் கோரிக்கை வீதம் பதிவுசெய்யப்பட்டது.

நானாவித காப்புறுதி வியாபாரமும் தேறிய கோரிக்கைகள் விகித்தில் 2013ம் ஆண்டு பதிவுசெய்த 57.37% வீதத்துடன் ஒப்பிடுகையில் 2014ம் ஆண்டு 69.40% வீதத்தைப் பிரதிபலித்து அதிகரிப்பைக் காட்டியது. நானாவிதக் காப்புறுதி வியாபாரத்தின் தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணம் 2013ம் ஆண்டு பதிவுசெய்த ரூபா 8,592 மில்லியனை விட அதிகமாக 10.22% வீத அதிகரிப்புடன் 2014ம் ஆண்டு ரூபா 9,470 மில்லியனைப் பதிவுசெய்ததுடன், நானாவிதக் காப்புறுதி வியாபாரத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேறிய கோரிக்கைகள் குறிப்பிடத்தக்க வகையில் 33.33% வீதத்தினால் 2014ம் அதிகரித்துள்ளதுள்ளதனால் உயர் தேறிய கோரிக்கை விகிதத்தைப் பதிவுசெய்தது.

மோட்டார் வாகனக் காப்புறுதி வியாபாரம் தேறிய கோரிக்கைகள் விகித்தில் 2013ம் ஆண்டு பதிவுசெய்த 62.11% வீதத்துடன் ஒப்பிடுகையில் 2014ம் ஆண்டு 64.68% வீதத்தைப் பிரதிபலித்து அதிகரிப்பைக் காட்டியது. மோட்டார் வாகனக் காப்புறுதி வியாபாரத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேறிய கோரிக்கைகள் 2014ம் ஆண்டு 10.13% வீதத்தினால் அதிகரித்ததுடன், அதன் தேறிய உழைக்கப்பட்ட தவணைக்கட்டணம் 5.76% வீதத்தினால் மட்டும் அதிகரித்ததுடன், இதன் விளைவாக மோட்டார் வாகனக் காப்புறுதி வியாபாரதின் தேறிய கோரிக்கை விகிதம் அதிகரித்தது.

கடற் காப்புறுதி வியாபாரத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேறிய கோரிக்கைகள் 34.70% வீதத்தினால் வீழ்ச்சி அடைந்ததனால், தேறிய கோரிக்கைகள் விகித்தில் 2013ம் ஆண்டு பதிவுசெய்த 53.71% வீதத்துடன் ஒப்பிடுகையில் 2014ம் ஆண்டு 40.22% வீதத்தைப் பிரதிபலித்து வீழ்ச்சியைக் காட்டியது.

அட்டவணை 16 மற்றும் வரைபு 16இல் பிரதிபலித்தவாறு, 2014இல் பொதுக் காப்புறுதித்துறையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேறிய செலவுகளான ரூபா 19,569 மில்லியன் (2013: ரூபா 17,360 மில்லியன்) 2013ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 12.72% வீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. அத்துடன் பொதுக் காப்புறுதித்துறையின் தேறிய செலவு விகிதமும் 2013ம் ஆண்டு பதிவுசெய்த 41.30% வீதத்துடன் ஒப்பிடுகையில் 44.24% வீதமாக அதிகரித்துள்ளது. தேறிய கோரிக்கைகள் விகிதம் மற்றும் தேறிய செலவுகள் விகிதம் என்பவற்றின் கூட்டு மொத்தமான தேறிய கூட்டுமொத்த விகிதம் 2013ம் ஆண்டு பதிவுசெய்த 102.13% வீதத்துடன் ஒப்பிடுகையில் 2014ம் ஆண்டு 109.66% வீதமாக அதிகரித்துள்ளது. தேறிய கூட்டுமொத்த விகிதம் 100% வீதத்திற்கு மேல் அதிகரித்துள்ளதென்பது, அது உழைத்துக் கொண்ட தவணைக் கட்டணத்தை விடவும் செலவுகள் பொதுக் காப்புறுதித்துறையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதாகும்.

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**அட்டவணை 16**

**தேறிய தவணைக் கட்டண பெறுகைகள், உள்ளாக்கப்பட்ட தேறிய கோரல்கள், உள்ளாக்கப்பட்ட தேறிய கோரல் விகிதம் மற்றும் தேறிய ஒன்றிணைக்கப்பட்ட விகிதம் - பொது காப்புறுதி வியாபாரம்**

| வகுப்பு | தேறிய தவணைக்கட்டண பெறுகைகள் (ரூ.'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2010 | 2011 | 2012 | 2013(அ) | 2014(ஆ) |
| தீ அபாயம் | 1,098,186 | 1,141,591 | 1,400,808 | 1,405,741 | 1,029,013 |
| கடல் சார்ந்தவை | 674,476 | 802,677 | 537,073 | 805,682 | 702,595 |
| வாகனம் | 18,356,887 | 23,575,071 | 29,293,110 | 31,232,673 | 33,030,719 |
| நானாவிதம் | 5,282,148 | 6,298,058 | 7,222,611 | 8,591,530 | 9,470,186 |
| **மொத்தம்** | **25,411,697** | **31,817,397** | **38,453,602** | **42,035,626** | **44,232,513** |

| வகுப்பு | ஏற்றுக்கொள்ளப்பட்ட தேறிய கோரல்கள் (ரூ.'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2010 | 2011 | 2012 | 2013(அ) | 2014(ஆ) |
| தீ அபாயம் | 529,448 | 482,646 | 505,101 | 810,281 | 717,400 |
| கடல் சார்ந்தவை | 216,143 | 232,189 | 321,077 | 432,748 | 282,585 |
| வாகனம் | 11,733,879 | 15,416,753 | 18,235,622 | 19,397,683 | 21,363,322 |
| நானாவிதம் | 3,091,110 | 4,160,145 | 4,705,619 | 4,929,225 | 6,572,105 |
| **மொத்தம்** | **15,570,580** | **20,291,734** | **23,767,419** | **25,569,936** | **28,935,411** |

| வகுப்பு | தேறிய கோரல் விகிதம் (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2010 | 2011 | 2012 | 2013(அ) | 2014(ஆ) |
| தீ அபாயம் | 48.21 | 42.28 | 36.06 | 57.64 | 69.72 |
| கடல் சார்ந்தவை | 32.05 | 28.93 | 59.78 | 53.71 | 40.22 |
| வாகனம் | 63.92 | 65.39 | 62.25 | 62.11 | 64.68 |
| நானாவிதம் | 58.52 | 66.05 | 65.15 | 57.37 | 69.40 |
| **மொத்தம்** | **61.27** | **63.78** | **61.81** | **60.83** | **65.42** |

| வகுப்பு | 2010 | 2011 | 2012 | 2013(அ) | 2014(ஆ) |
|---|---|---|---|---|---|
| **தேறிய செலவுகள் (ரூ.'000)** | 10,058,322 | 12,105,102 | 14,807,142 | 17,359,623 | 19,569,487 |
| **தேறிய செலவுகள் விகிதம் (%)** | **39.58** | **38.04** | **38.51** | **41.30** | **44.24** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **தேறிய ஒன்றிணைந்த விகிதம் (%)** | **100.85** | **101.82** | **100.32** | **102.13** | **109.66** |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

*குறிப்புகள்:*


*11) 2010 இலிருந்து 2013 வரையான ஆண்டுகளில் காப்புறுதிக் கம்பனிகளின் பொது காப்புறுதியின் மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டணங்களில் வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதம் என்பவற்றிற்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தவணைக் கட்டண வருமானம் கருத்திற் கொள்ளப்படவில்லை*

*2) சபைக்கு தேவைப்படும் தகவல்கள் பூரணமாக அளிக்கப்படாமையினால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்கள் மேலேயுள்ள பகுப்பாய்வில் உள்ளாக்கப்படவில்லை.*

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**வரைபு 16**

***தேறிய பெறப்பட்ட தவணைக் கட்டணம், உள்ளாக்கப்பட்ட தேறிய கோரல்கள், தேறிய செலவுகள், தேறிய கோரல் விகிதம் மற்றும் தேறிய ஒன்றிணைக்கப்பட்ட விகிதம் - பொது காப்புறுதி வியாபாரம்***




*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*

*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தைப் பிரதிபலிக்கும் பூட்கைகளின் எண்ணிக்கை - பொதுக் காப்புறுதி வியாபாரம்.**

அட்டவணை 17, 2010 இருந்து 2014 வரை பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் எழுதப்பட்ட தவணைக் கட்டணங்களை உருவாக்குவதில் பங்களிப்பு வகித்த வேறுபட்ட உபதுறைகளின் காப்புறுதி பூட்கைகளின் எண்ணிக்கையைக் காட்டுகின்றது. பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் உப வகைகளைச் சேர்ந்த பொதுக் காப்புறுதி வியாபார பூட்கைகளின் மொத்த எண்ணிக்கையானது 2013ம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 4,327,860 இருந்து 2014ம் ஆண்டு 4,589,139 வரை அதிகரித்துள்ளது. மொத்தக் காப்புறுதி பூட்கைகளில், 87.31% வீதத்தை பிரதிபலிக்கும் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் ஒரு தனி உப வகையாக மோட்டார் வாகனக் காப்புறுதியானது அதிகளவான பூட்கைகளைக் கொண்டிருக்கும் வகையாக இருப்பதோடு, பொதுக் காப்புறுதி வியாபார பூட்கைகளின் மொத்த எண்ணிக்கையானது கடந்த ஐந்து வருடங்களில் படிப்படியாக அதிகரித்துள்ளதை அட்டவணை 17 காட்டுகின்றது. மோட்டார் வாகனக் காப்புறுதியானது 2,229,170 மூன்றாம் தரப்பு காப்புறுதிப் பூட்கைகள் மற்றும் 1,777,570 விரிவான பூட்கைகளையும் உள்ளடக்கி மொத்தமாக 4,006,740 பூட்கைகளை 2014ம் ஆண்டு கொண்டிருந்தது.

2013ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014இல் தீ அபாயம், கடல் அபாயம் மற்றும் நானாவித காப்புறுதி வியாபாரப் பூட்கைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. எனினும், பணியாளருக்கான நட்டவீட்டுக் காப்புறுதிப் பூட்கை 2013 உடன் ஒப்பிடுகையில் குறைவடைந்துள்ளது.

**அட்டவணை 17**

***மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தைப் பிரதிபலிக்கும் பூட்கைகளின் எண்ணிக்கை – பொதுக் காப்புறுதி வியாபாரம்***

| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| தீ அபாயம் | 154,474 | 205,622 | 186,462 | 177,723 | 190,725 |
| கடல் அபாயம் | 138,201 | 169,610 | 154,411 | 158,836 | 179,173 |
| மோட்டார் வாகனம் | | | | | |
| மூன்றாம் தரப்பு | 1,929,875 | 2,074,303 | 1,997,502 | 2,126,037 | 2,229,170 |
| விரிவான | 952,113 | 1,223,534 | 1,474,742 | 1,667,752 | 1,777,570 |
| பணியாளர் நட்டவீடு | 14,606 | 17,172 | 17,415 | 18,717 | 16,252 |
| நானாவிதம் | | | | | |
| சுகாதாரம் | 7,277 | 7,872 | 10,294 | 11,384 | 13,876 |
| சுகாதாரம் அல்லாதது | 163,374 | 204,646 | 198,197 | 167,411 | 182,373 |
| **மொத்தம்** | **3,359,920** | **3,902,759** | **4,039,023** | **4,327,860** | **4,589,139** |

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**பொது காப்புறுதி வியாபாரம் மற்றும் பங்குதாரர்களின் சொத்துகள்**

2014 டிசம்பர் 31 அன்றுள்ளவாறான பங்குடமையாளர்களின் சொத்துக்களையும் உள்ளடக்கிய பொது காப்புறுதி வியாபாரத்தின் சொத்துகளின் திரட்டல் தொகையான ரூபா 163,834 மில்லியனானது 2013 டிசம்பர் 31 இல் பதிவுசெய்த ரூபா 148,410 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 10.39% வீத வளர்ச்சியைக் காட்டுகின்றது.

அட்டவணை 18 மற்றும் வரைபு 17 இல் உள்ளவாறு, 31 டிசம்பர் 2014இல் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மொத்த சொத்துக்களின் சுருக்கம் 28.81% வீதமாவதுடன், இதன் பெறுமதி ரூபா 47,194 மில்லியன் ஆகும். கடந்த வருடம் உரிமைப் பங்குகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளுடன் ஒப்பிடுகையில் 34.94% வீத வளர்ச்சி காணப்படுவதுடன், இந்த ரூபா 34,974 மில்லியன் காப்புறுதி 2014இல் வழங்குனர்களின் பங்குச் சந்தை முதலீட்டில் காணப்படும் விருப்பத்தைப் பிரதிபலிக்கின்றது.

பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் இரண்டாவது பெரிய சொத்தாக அரசாங்கப் பிணையங்கள் காணப்படுவதுடன், இது 31 டிசம்பர் 2014 இல் காணப்பட்ட மொத்த சொத்துக்களில் 15.56% வீதமாகும். அரசாங்கப் பிணையங்களில் 31 டிசம்பர் 2014ம் திகதியில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் பெறுமதி ரூபா 25,496 மில்லியன் ஆவதுடன், இது 31 டிசம்பர் 2013 திகதியில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 28,163 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 9.47% வீத குறிப்பிடத்தக்க வீழ்ச்சியை அடைந்துள்ளது. இதற்கு காரணம் வட்டி வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியாகும். சட்டத்தில் குறிப்பிட்டவாறும் மற்றும் தீர்மானம் 1ற்கு அமைவாகவும், வருடம் முழுவதிலும் காப்புறுதிக் கம்பனிகள் குறைந்தபட்சம் தொழில்நுட்ப முதலீட்டில் 20% வீதத்தை அரச பிணையங்களில் முதலீடு செய்திருப்பதை சபை உறுதிப்படுத்துகின்றது.

பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மூன்றாவது பெரிய சொத்தான ஏனைய சொத்துக்கள், 31 டிசம்பர் 2014இல் உள்ள மொத்த சொத்தில் 13.44% வீதத்தைப் பிரதிபலிக்கின்றதுடன், இது 31 டிசம்பர் 2014இல் பதிவுசெய்யப்பட்ட 21,110 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 31 டிசம்பர் 2014ல் காணப்படும் ரூபா 22,018 மில்லியன் தொகையானது அதிகரிப்பைக் காட்டுகின்றது.

வங்கி மற்றும் நிதி நிறுவனங்களில் உள்ள வைப்புகள் 31 டிசம்பர் 2014இல் உள்ள மொத்தச் சொத்தில் 12.33% வீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. 2014 இல் பதிவுசெய்யப்பட்ட ரூபா 20,200 மில்லியன் (2013: ரூபா 18,956 மில்லியன்) கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 6.56% வீத வளாச்சியைக் காட்டுகின்றது.

பொதுக் காப்புறுதி வியாபாரம் மற்றும் பங்குதாரர்களின் ஏனைய பிரதான சொத்துக்களாக தவணைக் கொடுப்பனவுப் பெறுகைகள், காணி மற்றும் கட்டடம் மற்றும் கூட்டிணைந்த தரிசுப் பிணையங்கள் காணப்படுகின்றன. இவை 31 டிசம்பர் 2014இல் மொத்த சொத்துக்களில் 8.32%, 6.81% மற்றும் 4.62% வீதத்தை பதிவு செய்தன.

**அட்டவணை 18**

***2013 டிசம்பர் 31 மற்றும் 2014 அன்றுள்ளவாறு, பொது காப்புறுதி வியாபாரம் மற்றும் பங்குதாரர்களின் சொத்துகள்***

| | 2013(அ) | | 2014(ஆ) | |
|---|---|---|---|---|
| சொத்துகளின் வகை | ரூபா '000 | % | ரூபா '000 | % |
| அரசாங்க கடன் பிணையங்கள் | 28,162,948 | 18.98 | 25,495,519 | 15.56 |
| உரிமைப் பங்குகள் | 34,974,481 | 23.57 | 47,193,839 | 28.81 |
| கூட்டிணைந்த தரிசுப் பிணையங்கள் | 5,973,048 | 4.02 | 7,575,359 | 4.62 |
| காணிகளும் கட்டிடங்களும் | 11,078,105 | 7.46 | 11,151,304 | 6.81 |
| வைப்புகள் | 18,955,900 | 12.77 | 20,200,288 | 12.33 |
| கூறு நம்பிக்கைப் பொறுப்பு | 2,042,822 | 1.38 | 2,362,436 | 1.44 |
| தங்கத்தில் முதலீடுகள் | 32,219 | 0.02 | 2,491 | 0.00 |
| கிடைக்க வேண்டிய மீள் காப்புறுதிகள் | 6,734,352 | 4.54 | 6,651,289 | 4.06 |
| காப்புறுதி வைப்பாளர்கள் மற்றும் இடையீட்டாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய தவணைக் கட்டணங்கள், | 12,824,613 | 8.64 | 13,625,956 | 8.32 |
| ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் | 5,069,556 | 3.42 | 5,158,889 | 3.15 |
| ஏனைய சொத்துக்கள் | 21,110,092 | 14.22 | 22,018,427 | 13.44 |
| காசும் காசுக்கு நிகரானவைகளும் | 1,452,169 | 0.98 | 2,398,089 | 1.46 |
| **மொத்தம்** | **148,410,304** | **100** | **163,833,886** | **100** |

(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள் (ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்

*குறிப்புகள்:*


*1) சபைக்கு தேவைப்படும் தகவல்கள் பூரணமாக அளிக்கப்படாமையினால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்கள் மேலேயுள்ள பகுப்பாய்வில் உள்ளாக்கப்படவில்லை.*

*2) அலையன்ஸ் லைப், ஆர்பிகோ மற்றும் எல்ஜசி ஆகியவறறின் பங்குடமையாளர்களுக்கு சொந்தமான சொத்துகள், நீண்டகால காபபுறுதி வியாபாரததின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன*

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**வரைபு 17**

***பொது காப்புறுதி வியாபாரத்தின் மற்றும் பங்குரிமையாளர்களின் சொத்துகளின் செறிவு - 31 டிசம்பர் 2014***



# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**பொதுக் காப்புறுதி வியாபாரம் மற்றும் பங்குதாரர்களின் முதலீட்டு வருமானம்**

அட்டவணை 19 ஆனது, 2013 மற்றும் 2014ம் ஆண்டுகளில் பொது காப்புறுதி வியாபாரம் மற்றும் பங்குதாரர்களின் வேறுபட்ட சொத்து வகைகளின் முதலீட்டு வருமானம், சராசரி முதலீடுகள் மற்றும் முதலீட்டு வருமான வீகிதம் என்பனவற்றைக் காட்டுகின்றது.

பொது காப்புறுதி வியாபாரம் மற்றும் பங்குதாரர்களின் சராசரி முதலீட்டுகள் 2014ம் ஆண்டு ரூபா 108,981 மில்லியனாக பதிவுசெய்யப்பட்டதுடன், 2013ம் ஆண்டு பதிவுசெய்யப்பட்ட ரூபா 98,554 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 10.58% வீதம் அதிகரித்துள்ளது. மேற்குறிப்பிட்ட முதலீடுகளில் இருந்து மொத்த முதலீட்டு வருமானமாக ரூபா 8,211 மில்லியன் (2013: ரூபா 7,502 மில்லியன்) 2014ம் ஆண்டு பெறப்பட்டதுடன், மொத்த முதலீட்டு வருமானமாக 2013ம் ஆண்டுடன் பதிவுசெய்த 7.61% வீதத்துடன் ஒப்பிடுகையில் 2014ம் ஆண்டு அதைவிட சற்றுக்குறைந்த 7.53% வீதத்தை பதிவுசெய்துள்ளது.

உரிமைப்பங்குகளில் சராசரி முதலீடு 2014ம் ஆண்டு ரூபா 41,084 மில்லியனாக (ரூபா 7,502 மில்லியன்) இருந்ததுடன், இது பொது காப்புறுதி வியாபாரம் மற்றும் பங்குதாரர்களின் பெரிய முதலீட்டு வகையாக தொடர்ந்தும் இருந்தது. உரிமைப் பங்குகளில் இருந்து பிறப்பிக்கப்பட்ட முதலீட்டு வருமானம் 2014இல் ரூபா 2,044 மில்லியனாக (2013: ரூபா 1,217 மில்லியன்) இருந்ததுடன், இது மூலதன வருமானமான ரூபா 984 மில்லியனையும் மற்றும் பங்குலாப வருமானமான ரூபா 1,060 மில்லியனையும் உள்ளடக்கியிருந்துது. உரிமைப்பங்குகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் 2013ம் ஆண்டு முதலீட்டு வருமான வீதமான 3.54% ஐ விடவும் 2014ம் ஆண்டு அதிகரித்து 4.98% வீதமாக பதிவுசெய்யப்பட்டது. இதற்கு காரணம் 2014ம் ஆண்டு பங்குச் சந்தையில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக காப்புறுதியாளர்கள் அவர்களின் முதலீட்டை உரிமைப் பங்குகளில் முதலிட்டனர்.

2014இல் அரச பிணையங்களில் மேற்கொள்ளப்பட்ட சராசரி முதலீடு ரூபா 26,829 மில்லியனாவதுடன், இது 2013ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ரூபா 28,883 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 7.11% வீதத்தினால் குறைவடைந்துள்ளது. அரசாங்க பிணையங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளில் இருந்து பெற்றுக்கொண்ட வருமானம் ரூபா 2,520 ஆவதுடன், இது 2013ம் ஆண்டு பெறப்பட்ட ரூபா 2,942 மில்லியனுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியைப் பதிவுசெய்கின்றது. 2014இல் அரசாங்க பிணையங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வீதம் 9.39% ஆவதுடன், இது 2013ம் ஆண்டு பதிவுசெய்த 10.91% வீதத்தை விடக் குறைவாகும். இதற்கு காரணம் வட்டி வீதத்தில் 2014ம் ஆண்டு ஏற்பட்ட வீழ்ச்சியாகும்.

வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் என்பனவற்றில் மேற்கொள்ளப்பட்ட சராசரி முதலீட்டு வைப்புப் பெறுமதியானது 2014ம் ஆண்டு ரூபா 19,578 மில்லியன் ஆவதுடன், 2013ம் ஆண்டு பதிவுசெய்யப்பட்ட ரூபா 15,844 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 23.57% வீத குறிப்பிடக்கூடிய வளர்ச்சியைக் காட்டுகின்றது. 2014இல் வைப்புகளில் இருந்து பெறப்பட்ட முதலீட்டு வருமானம் ரூபா 1,632 மில்லியனாவதுடன், இது 2013ம் ஆண்டு பெறப்பட்ட ரூபா 2,005 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 18.60% வீத வீழ்சிசயைப் பதிவுசெய்கின்றது. இந்த 2014ம் ஆண்டு வைப்புகளில் இருந்து பெறப்பட்ட முதலீட்டு வருமானமானம் ரூபா 1,387 மில்லியன் (2013: ரூபா 1,845 மில்லியன்) வட்டி வருமானத்தை வங்கி வைப்புகளில் இருந்தும் ரூபா 245 மில்லியன் (2013: ரூபா 160 மில்லியன்) வட்டி வருமானத்தை நிதிக் கம்பனிகளில் இருந்தும் பெறப்பட்ட வருமானங்களை உள்ளடக்கியிருந்தது. 2014ம் ஆண்டு ஈட்டப்பட்ட முதலீட்டு வருமானம் 12.65 வீதமாக இருந்ததுடன், இது 2013ம் ஆண்டு ஈட்டப்பட்ட முதலீட்டு வருமானமான 12.65% வீதத்துடன் ஒப்பிடுகையில் பாரிய வீழ்ச்சி காணப்படுகின்றதுடன், இதற்கு காரணம் வட்டி வீதத்தில் காணப்படும் வீழ்ச்சியாகும்.

அத்துடன், 2014ம் ஆண்டு கூட்டுப் பிணையங்கள், காணி மற்றும் கட்டங்கள், கூறு நம்பிக்கைப் பொறுப்புகள் மற்றும் ஏனைய முதலீடுகளில் இருந்து கிடைக்கப்பெற்ற வருமானங்களின் வீதம் முறையே 13.37%, 0.07%, 14.39% மற்றும் 56.78% ஆகும். எனினும் 2014 இல் தங்கத்தின் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக தங்க முதலீடுகள் மறைப்பெறுமதியான 3.49% வீதத்தைக் காட்டியது.

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**அட்டவணை 19**

*முதலீட்டு வருமானம் மற்றும் சராசரி முதலீடுகள் - பொது காப்புறுதி வியாபாரம்*

| வகைப்படுத்தல | 2013(அ) | | | 2014(ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | முதலீட்டு வருமானம் (ரூ. '000) | சராசரி முதலீடு (ரூ. '000) | முதலீட்டு பெறுகை விகிதம் (%) | முதலீட்டு வருமானம் (ரூ. '000) | சராசரி முதலீடு (ரூ. '000) | முதலீட்டு பெறுகை விகிதம் (%) |
| **அரசாங்க கடன் பிணையங்கள்** | 2,941,718 | 28,882,731 | 10.19 | 2,520,496 | 26,829,233 | 9.39 |
| - திறைசேரி முறிகள் | 1,366,144 | | | 1,376,014 | | |
| - திறைசேரி உண்டியல்கள் | 594,456 | | | 411,388 | | |
| - ஏனையவை (ரெப்போ) | 981,118 | | | 733,094 | | |
| **பங்குரிமை** | 1,217,438 | 34,385,010 | 3.54 | 2,044,132 | 41,084,160 | 4.98 |
| - மூலதன இலாபம்/நட்டம் | 212,760 | | | 984,076 | | |
| - பங்கிலாபம் | 1,004,678 | | | 1,060,056 | | |
| **கூட்டிணைந்த தரிசுப் பிணையம்** | 782,655 | 4,907,639 | 15.95 | 906,022 | 6,774,203 | 13.37 |
| - தொகுதி கடன்கள் | 625,407 | | | 881,250 | | |
| - வர்த்தக பத்திரங்கள் | 134,743 | | | 8,635 | | |
| - சொத்துகளை ஈடாக கொண்ட பிணையங்கள் | 13,947 | | | 10,037 | | |
| - அவ்வாறான ஏனைய நிதியில் பத்திரங்கள் | 8,558 | | | 6,100 | | |
| **காணிகளும் கட்டிடங்களும்** | (27,858) | 11,489,134 | (0.24) | 8,234 | 11,114,705 | 0.07 |
| **வைப்புகள்** | 2,004,679 | 15,844,275 | 12.65 | 1,631,835 | 19,578,094 | 8.34 |
| - வங்கி | 1,844,706 | | | 1,386,536 | | |
| - நிதி கம்பனிகள | 159,973 | | | 245,299 | | |
| **பொறுப்பு கூறு நம்பிக்கை** | 146,843 | 1,631,623 | 9.00 | 317,022 | 2,202,629 | 14.39 |
| **தங்கம்** | (27,777) | 19,674 | (141.19) | (606) | 17,355 | (3.49) |
| **ஏனையவை** | 464,084 | 1,393,775 | 33.30 | 783,824 | 1,380,517 | 56.78 |
| **மொத்தம்** | **7,501,782** | **98,553,861** | **7.61** | **8,210,959** | **108,980,896** | **7.53** |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

*குறிப்புகள்:*
*1) சபைக்கு தேவைப்படும் தகவல்கள் பூரணமாக அளிக்கப்படாமையினால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்கள் மேலேயுள்ள பகுப்பாய்வில் உள்ளாக்கப்படவில்லை.*

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**காப்புறுதிக் கம்பனிகளின் கடன்தீர் நிலை - பொது காப்புறுதி வியாபாரம்**

அட்டவணை 20, 2013 மற்றும் 31 டிசம்பர் 2014இல் தனிப்பட்ட பொதுக் காப்புறுதிக் கம்பனிகளின் கடன்தீர் விகிதம் மற்றும் தொழில்நுட்ப ஒதுக்ககளின் விபரங்களை பதிவுசெய்கின்றது. 2013இல் 2.75 விகிதமாக இருந்த பொதுக் காப்புறுதிக் கம்பனிகளின் சராசரி கடன்தீர் விகிதம் 31 டிசம்பர் 2014இல் 2.39% விகிதமாக குறைவடைந்துள்ளது. அனைத்து பொது காப்புறுதியாளர்களின் ஒன்றுசேர்த்த தொழில்நுட்ப ஒதுக்குத் தொகையான ரூபா 38,569 மில்லியன் 31 டிசம்பர் 2014இல் பதிவுசெய்யப்பட்டதுடன், 2013இல் பதிவுசெய்யப்பட்ட தொழில்நுட்ப ஒதுக்கான ரூபா 35,724 மில்லியனை விட 7.96% வீதத்தினால் அதிகரிப்பை பதிவுசெய்துள்ளது. அனைத்து பொதுக் காப்புறுதியாளர்களும் இழிவுக் கடன்தீர் விகிதமான 1ஐ 31 டிசம்பர் 2014இல் பூர்த்திசெய்தல் வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளதுடன், சபை வருடம் முழுவதிலும் காப்புறுதிக் கம்பனிகளின் கடன்தீர் நிலையை பரிசீலனை செய்தது.

**அட்டவணை 20**

***2014 டிசம்பர் 31 மற்றும் 2013 அன்றுள்ளவாறு கடன் தீர் நிலைபாடு மற்றும் தொழில்நுட்ப ஒதுக்குகளின் கம்பனி ரீதியான பகுப்பாய்வு - பொது காப்புறுதி வியாபாரம்***

| காப்புறுதியாளர் | 2013 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு (அ) | | 2014 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு (ஆ) | | | |
|---|---|---|---|---|---|---|
| | கடன்தீர் விகிதம் (ஏஎஸ்எம்/ ஆர்எஸ்எம்) | தொழில்நுட்ப ஒதுக்குகள் (ரூ'000) | கிடைக்கக் கூடிய கடன் தீர் எல்லை (ஏஎஸ்எம்) (ரூ'000) | தேவைப்படும் கடன் தீர் எல்லை (ரூ'000) | கடன்தீர் விகிதம் (ஏஎஸ்எம்/ ஆர்எஸ்எம்) | தொழில்நுட்ப ஒதுக்குகள் (ரூ'000) |
| ஏஐஏ | 4.01 | 1,702,296 | 1,371,314 | 437,609 | 3.13 | 1,833,987 |
| ஏஐஜி | 2.04 | 403,207 | 180,118 | 50,000 | 3.60 | 61,982 |
| அலையன்ஸ்-பொது | 2.25 | 1,010,087 | 455,046 | 305,505 | 1.49 | 1,280,203 |
| அமானா டக்காபுல் | 1.85 | 511,409 | 229,795 | 227,696 | 1.01 | 493,240 |
| ஏசியன் அலையன்ஸ் | 2.21 | 781,103 | 481,199 | 280,828 | 1.71 | 999,641 |
| சிலிங்கோ | 1.33 | 5,686,878 | 2,869,781 | 1,957,655 | 1.47 | 6,110,117 |
| கொண்டின்டல் | 1.75 | 611,398 | 610,977 | 246,789 | 2.48 | 767,911 |
| கோர்பரடிவ் | 1.72 | 845,156 | 455,138 | 263,748 | 1.73 | 1,014,064 |
| எச்என்பிஏ | 3.89 | 924,712 | 1,136,355 | 369,839 | 3.07 | 1,150,323 |
| ஜனசக்தி | 1.67 | 4,103,078 | 1,940,852 | 1,135,015 | 1.71 | 4,327,793 |
| ஏல்ஓஎல்சி | 1.05 | 1,074,318 | 423,993 | 317,274 | 1.34 | 1,326,137 |
| எம்பிஎஸ்எல் | (0.39) | 627,183 | 177,596 | 160,016 | 1.11 | 546,459 |
| ஓரியன்ட் | 8.04 | 150,739 | 320,935 | 79,209 | 4.05 | 259,891 |
| பீபல்ஸ் | 1.51 | 2,238,159 | 1,008,830 | 629,334 | 1.60 | 2,581,583 |
| சனச | 1.28 | 131,248 | 78,556 | 50,000 | 1.57 | 181,426 |
| எஸ்எல்ஐசி | 4.93 | 11,881,612 | 9,881,897 | 2,806,388 | 3.52 | 12,481,712 |
| யுஏஎல் | 2.07 | 3,040,948 | 2,630,193 | 830,493 | 3.17 | 3,152,537 |
| **மொத்தம்** | **2.75** | **35,723,531** | **24,252,575** | **10,147,398** | **2.39** | **38,569,006** |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

*குறிப்புகள்:*
*1) சபைக்கு தேவைப்படும் தகவல்கள் பூரணமாக அளிக்கப்படாமையினால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்கள் மேலேயுள்ள பகுப்பாய்வில் உள்ளாக்கப்படவில்லை.*

## புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**புதியதும், மீள் புதுப்பிக்கப்பட்டதும் மற்றும் நடைமுறையில் உள்ள பூட்கைகளும் பற்றிய விபரம் - பொது காப்புறுதி வியாபாரம்**

2013 மற்றும் 2014இல் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் வேறுபட்ட உப வகைகளைச் சேர்ந்த புதிய காப்புறுதி பூட்கைகள், புதுப்பிக்கப்பட்ட பூட்கைகள் மற்றும் அமுலில் உள்ள பூட்கைகளை அட்டவணை 21 வெளிப்படுத்துகின்றது. 2013 ஆம் ஆண்டில் பொது காப்புறுதி வியாபாரத்தின் நடைமுறையில் இருந்த பூட்கைகளின் மொத்த எண்ணிக்கையான 4,311,694 உடன் ஒப்பிடும் போது, 2014 ஆம் ஆண்டின் இறுதியில் பொது காப்புறுதி வியாபாரத்தின் நடைமுறையில் இருந்த காப்பீடுகளின் மொத்த எண்ணிக்கை 4,445,458ஆக இருந்ததுடன் 3.10% வீதத்தினால் அதிகரிப்பையும் வெளிப்படுத்தியது. 2014இல் 2,610,640 பூட்கைகள் (2013: 2,435,007) புதுப்பிக்கப்பட்டதுடன், 1,966,945 பூட்கைகள் (1,844,386) புதிதாக வழங்கப்பட்டது.

2014ம் ஆண்டு அதிக காப்புறுதி பூட்கைகளைக் கொண்டதாக மோட்டார் காப்புறுதி பூட்கைகள் அமைவதுடன், இது 3,870,083 பூட்கைகளைப் (2013: 3,774,571) பதிவுசெய்ததுடன், இது 2,225,766 (2013: 2,273,047) மூன்றாம் தரப்பு பூட்கைகளையும் 1,644,317 (2013: 1,501,524) விரிவான பூட்கைகளையும் உள்ளடக்கியுள்ளது. 2013ம் ஆண்டை விட 2014ம் ஆண்டு மொத்த காப்புறுதி பூட்கைகளின் எண்ணிக்கையானது 2.53% வீதத்தினால் அதிகரித்துள்ளது.

2013ம் ஆண்டு 196,386ஆக இருந்த தீ அபாயக் காப்புறுதியானது 2014ம் ஆண்டு 181,907 ஆக 7.37% வீதத்தினால் குறைவடைந்துள்ளது. 2013ம் ஆண்டு 131,201ஆக இருந்த கடல் அபாயக் காப்புறுதியானது 2014ம் ஆண்டு 157,371ஆக 19.95% வீதத்தினால் அதிகரித்துள்ளது. தொழில்புரிவோருக்கான நட்டவீடு உட்பட அமுலில் உள்ள நானாவித காப்புறுதி பூட்கைகளின் எண்ணிக்கை 2013இல் பதிவுசெய்யப்பட்ட 209,536 பூட்டைகளோடு ஒப்பிடுகையில் 12.68% வீதத்தினால் அதிகரித்து 2014ம் ஆண்டு 236,097 பூட்கைகளாக பதிவுசெய்யப்பட்டிருந்தது.

**அட்டவணை 21**

***புதிய காப்பீடுகளின் எண்ணிக்கையும் மீள்புதுப்பிக்கப்பட்டதும் மற்றும் நடைமுறையில் உள்ளதுமான பூட்கைகள் - பொது காப்புறுதி வியாபாரம்***

| | 2013 | | | 2014 | | |
|---|---|---|---|---|---|---|
| வகுப்பு | புதிய பூட்கைகள் | புதுப்பிக்கப்பட்ட பூட்கைகள் | ஆண்டின் இறுதியில் நடைமுறையில் உள்ளவை | புதிய பூட்கைகள் | புதுப்பிக்கப்பட்ட பூட்கைகள் | ஆண்டின் இறுதியில் நடைமுறையில் உள்ளவை |
| தீ அபாயம் | 64,841 | 128,805 | 196,386 | 69,219 | 120,431 | 181,907 |
| கடல் சார்ந்தவை | 150,959 | 3,075 | 131,201 | 182,926 | 2,267 | 157,371 |
| வாகனம் | | | | | | |
| மூன்றாம் தரப்பு | 952,618 | 1,274,643 | 2,273,047 | 893,843 | 1,328,329 | 2,225,766 |
| விரிவானவை | 543,594 | 952,399 | 1,501,524 | 684,961 | 1,072,141 | 1,644,317 |
| WCI உள்ளடங்களாக நானாவிதம் | 132,374 | 76,085 | 209,536 | 135,996 | 78,472 | 236,097 |
| **மொத்தம்** | **1,844,386** | **2,435,007** | **4,311,694** | **1,966,945** | **2,601,640** | **4,445,458** |

*குறிப்புகள்:*

*சபைக்கு தேவைப்படும் தகவல்கள் பூரணமாக அளிக்கப்படாமையினால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்கள் மேலேயுள்ள பகுப்பாய்வில் உள்ளாக்கப்படவில்லை.*

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

## காப்புறுதி தரகுக் கம்பனிகள்

### காப்புறுதி தரகுக் கம்பனிகளின் செயலாற்றுகை

2014ம் ஆண்டு, சந்தையில் ஐம்பத்தியொன்பது காப்புறுதி தரகர் கம்பனிகள் தொழிற்பட்டதுடன், இவை ரூபா 14,716 மில்லியன் பெறுமதியான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை உழைத்துக்கொண்டன. இது 2013ம் ஆண்டு காப்புறுதி தரகர் கம்பனிகளினால் பிறப்பிக்கப்பட்ட ரூபா 14,380 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014ம் ஆண்டு 2.34% வீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது. இந்த முழுமையான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமானது நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரங்களில் இருந்து பெறப்பட்ட முறையே ரூபா 158 மில்லியன் மற்றும் ரூபா 14,559 மில்லியன் தொகைகளை உள்ளடக்கியிருந்தது. இந்த முழுமையான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணங்களில் 98.93% வீதத்தை பொதுக் காப்புறுதி வியாபாரம் பெற்றிருந்ததுடன், 1.07% வீதத்தை மட்டுமே நீண்டகால காப்புறுதி வியாபாரம் பெற்றிருந்தது.

கடந்த வருடத்தைப் போல் இவ்வருடமும், காப்புறுதி தரகர் கம்பனிகளின் பங்களிப்பை எடுத்துக்கொண்டால், 2014இல் நீண்டகால காப்புறுதி வியாபாரத்தில் (ரூபா 44,610 மில்லியன்) இதன் பங்களிப்பு குறிப்பிடக்கூடியளவில் அல்லாது 0.35% வீத வளர்ச்சியை மட்டுமே மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாகப் பெற்றிருந்தது. பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் (SRCC&T தவணைக் கட்டணம் உட்பட) மொத்தத் தவணைக் கட்டணமாக ரூபா 58,753 மில்லியன் பெறப்பட்டபோது, காப்புறுதித் தரகர் கம்பனிகள் இதில் 24.78% வீதத்தை மட்டுமே பெற்றுக்கொண்டன.

2014இல், இருபத்தி மூன்று காப்புறுதி தரகர் கம்பனிகள் ரூபா 100 மில்லியனை விட அதிகமான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணங்களை உழைத்திருந்ததுடன், இவை ஒன்று சேர்த்து ரூபத 13,691 மில்லியனை பெற்றிருந்தன. மிகுதி முப்பத்தியாறு காப்புறுதி தரகர் கம்பனிகளும் அட்டவணை 22இல் வெளிப்படுத்தியவாறு ரூபா 1,025 மில்லியனைப் பெற்றுள்ளன.

வரைபு 18, 2005 இலிருந்து 2014 வரை நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரத்திற்கு காப்புறுதி தரகர் கம்பனிகளின் ஊடாக பிறப்பிக்கப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணங்களின் பங்களிப்பினை வெளிப்படுத்துகின்றது.

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**அட்டவணை 22**


***காப்புறுதி தரகு கம்பனியின் ஊடாக உற்பத்தி செய்யப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் - 2014***
***மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்***

| | | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நீண்ட கால காப்புறுதி வியாபாரம் | | பொதுக் காப்புறுதி வியாபாரம் | | மொத்தம் | |
| | தரகுக் கம்பனியின் பெயர் | (ரூபா'000) | சந்தைப் பங்கு (%) | (ரூபா'000) | சந்தைப் பங்கு (%) | (ரூபா'000) | சந்தைப் பங்கு (%) |
| 1 | ஏடிஇசட் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 5,478 | 3.48 | 391,752 | 2.69 | 397,230 | 2.70 |
| 2 | எடிகன் ஸ்பென்ஸ் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 790 | 0.50 | 435,621 | 2.99 | 436,411 | 2.97 |
| 3 | அல்பின்கோ இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | - | 0.00 | 714,829 | 4.91 | 714,829 | 4.86 |
| 4 | எசட்லைன் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் லிமிடட் | - | 0.00 | 1,151,824 | 7.91 | 1,151,824 | 7.83 |
| 5 | சி.எப் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 31 | 0.02 | 2,059,092 | 14.14 | 2,059,123 | 13.99 |
| 6 | கொலம்பூர் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட | - | 0.00 | 111,613 | 0.77 | 111,613 | 0.76 |
| 7 | கமர்சியல் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 50,346 | 31.96 | 1,740,656 | 11.96 | 1,791,002 | 12.17 |
| 8 | டெல்மேஜ் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 13,266 | 8.42 | 705,923 | 4.85 | 719,189 | 4.89 |
| 9 | ஈகுவிடி இன்ஸ்யூரன்ஸ் புரோகர்ஸ் (பிரை) லிமிடட் | - | 0.00 | 148,660 | 1.02 | 148,660 | 1.01 |
| 10 | ஈசாஜி கரம்ஜி ரூ கம்பனி (பிரை) லிமிடட் | 15,020 | 9.54 | 341,773 | 2.35 | 356,793 | 2.42 |
| 11 | பின்லே இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 19,857 | 12.61 | 1,357,651 | 9.33 | 1,377,508 | 9.36 |
| 12 | க்ளோபல் இன்ஸ்யூரன்ஸ் சேர்விஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 266 | 0.17 | 400,957 | 2.75 | 401,223 | 2.73 |
| 13 | இன்டஸ்ட்ரி அன்ட் கமர்சியல் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 1,915 | 1.22 | 271,704 | 1.87 | 273,619 | 1.86 |
| 14 | லைப் அன்ட் ஜெனரல் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 672 | 0.43 | 150,080 | 1.03 | 150,752 | 1.02 |
| 15 | நேசன்ஸ் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் லிமிடட் | 7,440 | 4.72 | 1,234,267 | 8.48 | 1,241,707 | 8.44 |
| 16 | பிடயசிட் இன்ஸ்யூரன்ஸ் புரோகர்ஸ் (பிரை) லிமிடட | 85 | 0.05 | 106,923 | 0.73 | 107,008 | 0.73 |
| 17 | புரொகெயர் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 1,173 | 0.74 | 193,315 | 1.33 | 194,487 | 1.32 |
| 18 | புரடெக்சன்ஸ் அன்ட் எஸ்யூரன்ஸ் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 15 | 0.01 | 601,153 | 4.13 | 601,168 | 4.09 |
| 19 | ரிலையன்ஸ் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 5,839 | 3.71 | 315,175 | 2.16 | 321,014 | 2.18 |
| 20 | சேனரட்ன இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 4,262 | 2.71 | 243,646 | 1.67 | 247,907 | 1.68 |
| 21 | செங்கடகல இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | - | 0.00 | 616,294 | 4.23 | 616,294 | 4.19 |
| 22 | ஸ்ரட்டஜிக் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 173 | 0.11 | 116,318 | 0.80 | 116,491 | 0.79 |
| 23 | ஸெனித் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட | 1,142 | 0.72 | 153,930 | 1.06 | 155,071 | 1.05 |
| | **உப மொத்தம்** | **127,770** | **81.11** | **13,563,155** | **93.16** | **13,690,923** | **93.03** |
| | **ஏனைய காப்புறுதி தரகு கம்பனிகள் (36)** | **29,750** | **18.89** | **995,541** | **6.84** | **1,025,291** | **6.97** |
| | **கூட்டு மொத்தம்** | **157,520** | **100** | **14,558,696** | **100** | **14,716,215** | **100** |

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**வரைபு 18**

***2005 இருந்து 2014 வரை காப்புறுதி தரகர் கம்பனிகளினால் பிறப்பிக்கப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்***




| | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் மொ.எ.த.க (ரூ.மில்லியன்) | 103 | 144 | 158 | 195 | 188 | 243 | 296 | 195 | 191 | 158 |
| பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மொ.எ.த.க (ரூ.மில்லியன்) | 5,208 | 6,028 | 7,393 | 8,781 | 8,698 | 9,317 | 10,193 | 12,532 | 14,189 | 14,559 |
| மொ.எ.த.கட்டணத்திற்கு தரகர் கம்பனிகளின் பங்களிப்பு வீதம் (%) | 14.27 | 14.34 | 14.55 | 15.43 | 15.44 | 14.43 | 13.36 | 14.60 | 15.14 | 14.74 |

**காப்புறுதி கம்பனிகளின் முதலெழுத்துப் பெயர்கள்**

| | | |
|---|---|---|
| ஏஜஏ | : | இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சி (முன்னர் அவீவா என்டிபி இன்யூரன்ஸ் பிஎல்சி) |
| ஏஜஜி | : | ஏஜஜி இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் (முன்னர் சாட்டிஸ் இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சி) |
| அலையன்ஸ் பொது | : | அலையன்ஸ் இன்ஸ்யூரன்ஸ் லங்கா லிமிடட் |
| அலையன்ஸ் ஆயுள் | : | அலையன்ஸ் லைப் இன்ஸ்யூரன்ஸ் லங்கா லிமிடட் |
| அமானா டக்காபுல் | : | அமானா டக்காபுல் பிஎல்சி |
| ஆர்பிக்கோ | : | ஆர்பிகோ இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் |
| ஏசியன் அலையன்ஸ் | : | ஏசியன் அலையன்ஸ் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் |
| சிலிங்கோ டக்காபுல் | : | சிலிங்கோ டக்காபுல் லிமிடட் |
| சிலிங்கோ | : | சிலிங்கோ இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சி |
| கொண்டினன்டல் | : | கொண்டிநென்டல் இன்ஸ்யூரன்ஸ் லங்கா பிஎல்சி |
| கோர்பரேடிவ | : | கோர்பரேடிவ் இன்ஸ்யூரன்ஸ் கம்பனி லிமிடட் |
| எச்என்பிஏ | : | எச்என்பி அஸ்யூரன்ஸ் பிஎல்சி |
| ஜனசக்தி | : | ஜனசக்தி இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சி |
| எல்ஐசி | : | லைப் இன்ஸ்யூரன்ஸ் கோர்பரேசன் (லங்கா) |
| எல்ஒஎல்சி | : | எல்ஒஎல்சி இன்ஸ்யூரன்ஸ் கம்பனி லிமிடட் |
| எம்பிஎஸ்எல் | : | எம்பிஎஸ்எல் இன்ஸ்யூரன்ஸ் கம்பனி லிமிடட் |
| என்ஐசிஎல் | : | நஷனல் இன்ஸ்யூரன்ஸ் கோர்பரேசன் லிமிடட் |
| என்ஐடிஎப் | : | நெஷனல் இன்ஸ்யூரன்ஸ் டிரஸ்ட் பன்ட் |
| ஒரியன்ட் | : | ஒரியன்ட் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட |
| பீபல்ஸ் | : | பீபல்ஸ் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் |
| சனச | : | சீமாசகித்த சனச ரக்ஷன சமாகம |
| எஸ்எல்ஐசி | : | ஸ்ரீ லங்கா இன்ஸ்யூரன்ஸ் கோர்பரேசன் லிமிடட் |
| யுஏஎல் | : | யூனியன் எஸ்யூரன்ஸ் பிஎல்சி |

# தொழிற்பாடுகளின் மீளாய்வு

## மேற்பார்வை மீளாய்வு

## காப்புறுதிக் கம்பனிகள்

### 1. விபரத்திரட்டுகளின் மீளாய்வு

#### அ) வருடாந்த நியதிச் சட்ட விபரத்திரட்டுகள், கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் மற்றும் கணிப்பீட்டு அறிக்கைகள்

சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக சகல காப்புறுதி வழங்குனர்களும் தமது வருடாந்த நியதிச் சட்ட விபரத்திரட்டு மற்றும் நிதிசார் கணக்காய்வுக் கூற்றுக்கள் ஆகியவற்றை குறிப்பிட்ட நிதி ஆண்டு நிறைவடைந்து அடுத்து வருகின்ற ஆறு மாதங்களினுள் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும் என வேண்டப்படுகின்றனர். மேலும், நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுகின்ற காப்புறுதி வழங்குனர்கள் காப்புறுதிக் கணக்கீட்டு அறிக்கை ஒன்றையும் மற்றும் வருடாந்த நியதிச் சட்ட விபரத்திரட்டுடன் தொடர்புடைய சாராம்சம் ஒன்றையும் சட்டத்திற்கு அமைவாக சமர்ப்பிக்க வேண்டும்.

விபரத்திரட்டுகள் உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதைக் கண்காணிப்பதுடன், அவற்றின் செம்மை மற்றும் சபைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகளுடன் இணங்குவதையும் உறுதிப்படுத்தவதற்கு அவற்றை சபை பரீட்சிக்கின்றது. அத்துடன், கணிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் சாராம்சங்களையும் மீளாய்வு செய்வதற்கு கணிப்பீட்டு நிபுணத்துவம் ஒன்றின் உதவியையும் சபை பெற்றுக்கொண்டுள்ளது. மீளாய்வின் போது அவதானிக்கப்படும் நியதிச் சட்ட தேவைகளில் இருந்தான விலகல்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் நிவர்த்தி செய்யுமாறு கோரப்படுகின்றது. காப்புறுதி வழங்குனர்கள் சட்டத்தின் ஏற்பாடுகள், சபையின் ஒழுங்குவிதிகள் என்பவற்றுடன் இணங்குகின்றமையை உறுதிப்படுத்தவதற்கு பின்னூட்டு நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், விபரத்திரட்டுகளின் மீளாய்வின் போது அவதானிக்கப்படும் பிரச்சனைகளை சபை கூட்டங்களின் போதும், அமைவிடத்திலான பரீட்சித்தல்களின் போதும் உரிய கம்பனிகளுக்கு அறிவித்தது.

#### ஆ) காலாண்டு விபரத்திரட்டுகள

சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒவ்வொரு காலாண்டு முடிவடைந்து நாற்பத்து ஐந்து தினங்களுக்குள் காலண்டு விபரத்திரட்டினை சபைக்கு சமர்ப்பிக்குமாறு காப்புறுதிக் கம்பனிகள் வேண்டப்படுகின்றன. 2014ம் ஆண்டுக்கு சமர்ப்பிக்கப்பட்ட நான்கு காலாண்டு விபரத்திரட்டுகளும், மதிப்பீட்டை மேற்கொள்வதற்காக சபையினால் மீளாய்வு செய்யப்பட்டு சட்டத்தின் ஒழுங்குவிதிகளுடன் அதன் காலாண்டு செயற்பாடுகள் மற்றும் இணக்கப்பாடுகள் உறுதிப்படுத்தப்பட்டது.

ஒவ்வொரு காப்புறுதி வழங்குனரினதும் காலாண்டு செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்காக சபை நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் இரண்டினதும் விபரத்திரட்டு அடிப்படையிலான தவணைக் கட்டண வருமானம், உத்தரவாதமளிக்கப்பட்ட இலாபம் மற்றும் தேறிய இலாபம் என்பனவற்றை பகுப்பாய்வு செய்தது. மேலும், முழுமையான பகுப்பாய்வு விகிதங்கள் பயன்படுத்தப்பட்டு இலாபத்தன்மை, செலவினங்கள் மற்றும் கோரிக்கைகள் போன்றன குறித்த காப்புறுதி வழங்குனர்களின் காலாண்டு செயற்பாட்டின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டதுடன், முன்னைய காலாண்டு வீகிதங்களுடன் ஒப்பீடும் செய்யப்பட்டது.

அத்துடன், கடன்தீர் நிலமை, திரவத்தன்மை மற்றும் மூலதனப் போதுமை வீதங்கள் பயன்படுத்தப்பட்டு, அவர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் நிலை பரீட்சிக்கப்படுவதன் மூலம் ஒவ்வொரு காலாண்டிலும் ஒவ்வொரு காப்புறுதி வழங்குனரின் நிதி நிலமை பகுப்பாய்வுசெய்யப்பட்டது. காலாண்டு விபரத்திரட்டுகளை மீளாய்வு செய்யும் பொழுது சட்டம், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றுடன் காணப்படும் யாதேனும் இணக்காப்பாடற்றதன்மை மற்றும் விலகல்கள் அவதானிக்கப்படின், குறித்த காலவரையறைக்குள் அவற்றினை நிவர்த்தி செய்வதற்கும் இணக்கப்பாட்டினை பெற்றுக்கொள்வதற்கும் அவர்கள் அறிவுறுத்தப்பட்டார்கள்.

2006ம் ஆண்டு 6ம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும், சபையின் சட்டத்தின ஏற்பாடுகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் அவர்கள் இணங்குகின்றார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்காக காப்புறுதி வழங்குனர்கள் காலாண்டு விபரத்திரட்டுகளுடன் இரண்டு இணக்கப்பாட்டு சான்றிதழினை வழங்குமாறு கோரப்படுகின்றர். மேலும், காப்புறுதி வழங்குனர்கள் காலாண்டு விபரத்திரட்டுகளுடன் நான்கு காலாண்டுகளுக்கும் மேற்கொண்ட திறமைமிக்க மீள்காப்புறுதி ஒழுங்குகள் தொடர்பான விபரங்களையம் சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றர்.

#### இ) மாதாந்த விபரத்திரட்டுகள்

சபையின் வழங்கப்பட்ட பணிப்புரைக்கு அமைவாக ஆறு காப்புறுதிக் கம்பனிகள் ஒவ்வொரு மாதமும் முடிவடைந்ததுடன் அதிலிருந்து பதினைந்து தினங்களுக்குள் மாதாந்த விபரத்திரட்டைச் சமர்ப்பிக்குமாறு

கோரப்படுகின்றனர். கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்படும் மாதாந்த விபரத்திரட்டுகளை, அவற்றின் நிதி நிலையை உறுதிப்படுத்துவதற்கு அவை சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்குகின்றனவா என சபை மீளாய்வை மேற்கொள்ளுகின்றது. விபரத்திரட்டுகளில் அவதானிக்கப்படும் இணக்கப்பாடின்மை மற்றும் வேறுபாடுகள் தொடர்பாக உரிய கம்பனிகளுக்கு அறிவிக்கப்பட்டு குறித்த கால வரையறைக்கும் உரிய நடவடிக்கை எடுக்கும்படி அறிவுறுத்தப்பட்டார்கள்.

#### ஈ) இடர் மதிப்பீட்டு சாராம்சம்

காப்புறுதி வழங்குனர்கள் ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 31ம் திகதியில் அல்லது அதற்கு முன்னர் இடர் மதிப்பீட்டு சாராம்சத்தை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றர். இடர் மதிப்பீட்டு சாரம்சத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தகவல்களில் இருந்து நிறுவனத்தின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு மற்றும் உரிமையாண்மை, வியாபாரச் சுருக்கக் குறிப்பு, சிரேஸ்ட முகாமைத்துவம், சந்தைப்படுத்தல்கள் மற்றும் விநியோகித்தல் போன்ற தொழிற்பாடுகள், கோரிக்கை நிர்வாகம், இடர் முகாமைத்துவம் போன்றவற்றை உய்த்தறிவதன் மூலம் காப்புறுதி வழங்குனரின் தொழிற்பாட்டு பொது நோக்கத்தை சபை பெற்றுக்கொள்ளுகின்றது.

### 2. கடன்தீர் எல்லை விதிகளுடன் இணக்கப்பாட்டினைக் கண்காணித்தல்

கடன்தீர் எல்லை (பொது மற்றும் நீண்ட கால காப்புறுதி வியாபாரங்கள்) விதிகளுக்கு அமைவாக, பொது மற்றும் நீண்ட கால காப்புறுதி வியாபாரங்கள் இரண்டும் கடன்தீர் எல்லையை பேணுதல் வேண்டும் என காப்புறுதி வழங்குனர்கள் கோரப்படுகின்றர். காப்புறுதி வழங்குனர்கள் அவர்களின் கடன்தீர் எல்லை கணிப்பீட்டினை மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த விபரத்திரட்டுகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும். கடன்தீர் எல்லை விதிகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கு சபை இவ்வாறான கணிப்பீட்டினை பகுப்பாய்வு மற்றும் மீளாய்வு செய்கின்றது. காப்புறுதி வழங்குனர்கள் அவசியமான கடன்தீர் எல்லையை பூர்த்திசெய்வதற்கு தவறும் பொழுதில் அல்லது கணிப்பீடானது தவறாக இருக்கும் சந்தர்ப்பத்தில், குறிப்பிட்ட காலவரையறைக்குள் அதனை சீர்செய்வதற்கும் மற்றும் கடன்தீர் எல்லையுடன் இணங்குவதற்குமான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு சபை அவர்களுக்கு அறிவுறுத்தும்.

### 3. முதலீட்டு குறிப்பீடுகளுடன் இணக்கப்பாட்டினைக் கண்காணித்தல

#### அ) அரச பிணையங்களில் முதலீடு

சட்டத்தின் பிரிவுக்கு அமைவாக, அரச பிணையங்களில் தொழில்நுட்ப ஒதுக்குகளின் சொத்துக்களில் 20% வீதத்திற்கு குறையாத தொகையையும் நீண்ட கால காப்புறுதி நிதியத்தின் சொத்துக்களில் 30% வீதத்திற்கு குறையாத தொகையையும் முதலீடு செய்யுமாறு கோரப்படுகின்றர். சட்டத்தின் 25ம் பிரிவுடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்காக மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் அரச பிணையங்களில் முதலீடுகளை சபை மிகவும் உண்ணிப்பாக கண்காணிக்கின்றது. இதற்காக, அரசாங்க பிணைய முதலீடுகளில் அறிவிக்கப்பட்டுள்ள தொகைகளின் சரித்தன்மையை உறுதிப்படுத்தவதற்காக இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படும் வைப்புக் கூற்றுகளின் அறிக்கைகளை சபை மீளாய்வு செய்கின்றதுடன், அரசாங்க பிணையங்களில் முதலீட்டு உரித்துடமையையும் நிட்சயப்படுத்திக் கொள்கின்றது. மீளாய்வின் போது யாதேனும் இணக்கப்பாடின்மை அல்லது வேறுபாடுகள் அவதானிக்கப்படின், குறிப்பிட்ட கால வரையறைக்குள் உரிய திருத்தத்திற்கான நடவடிக்கையை எடுக்குமாறு உரிய காப்புறுதி வழங்குனர்கள் சபையினால் அறிவுறுத்தப்படுவர்

#### ஆ) தீர்மானங்களுக்கு அமைவான ஏனைய முதலீடுகள்

பொதுக் காப்புறுதி வியாபாரம் அல்லது நீண்ட கால வியாபாரம் என்பவற்றைக் கொண்டு நடாத்தும் ஒவ்வொரு காப்புறுதி வழங்குனர்களும் அவர்களின் தொழில்நுட்ப ஒதுக்குகளின் சொத்துக்கள் மற்றும் நீண்ட கால காப்புறுதி நிதியத்தின் மீதிகளை 2011 மார்ச் 01ம் திகதி தீர்மானத்திற்கும் மற்றும் அதன் திருத்தங்களுக்கு அமைவாகவும் முதலீடுகளை மேற்கொள்ளுமாறு கோரப்படுகின்றனர். தீர்மானத்திற்கு அமைவாக காப்புறுதி வழங்குனர்களினால் முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக சபையினால் மீளாய்வு மேற்கொள்ளப்படுவதுடன், யாதேனும் இணக்கப்பாடின்மை அவதானிக்கப்படின் குறிப்பிட்ட கால வரையறைக்குள் அவசியமான திருத்தங்களை மேற்கொள்ளுமாறு உரிய காப்புறுதி வழங்குனர்களுக்கு அறிவிக்கும்.

### 4. ஏனைய நிதியியல் பகுப்பாய்வுகள்

சபையினால் கையாளப்பட்ட விசாரணைகள் / முறைப்பாடுகள் என்பவற்றின் ஒரு பகுதியாக பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மேலும் நிதியில் மதிப்பீடுகளை சபை மேற்கொண்டது. பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளில் இருந்து சேகரிக்கப்பட்ட மேலதிக நிதித் தகவல்களின் பகுப்பாய்வானது சபை தீர்மானங்களுக்கு வருவதற்கு வசதியளித்தது.

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி

### 5. மீள்காப்புறுதி ஒழுங்குகள் தொடர்பான மீளாய்வு

சட்டத்தின் பிரிவு 31(1) மற்றும் 50(1) என்பவற்றுக்கு அமைவாக, சபைக்கு வருடாந்தம் மீள்காப்புறுதி உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல்கள் என்பவற்றின் சான்றுபடுத்த பிரதிகளை பூரணப்படுத்துமாறு காப்புறுதி வழங்குனர்கள் கோரப்படுகின்றர். சபையினால் குறித்துரைக்கப்பட்ட தரப்படுத்தல் தேவையை திருப்பதிப்படுத்தும் வகையில் மீள்காப்புறுதியாளரிடமிருந்து மீள்காப்புறுதி அணவலைப் பூர்த்தி செய்கின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு சபை இக்குறித்த ஆணவணங்களை மீளாய்வு செய்கின்றது. யாதேனும் இணக்கப்பாடின்மை மற்றும் விலகல்கள் அவதானிக்கப்படின், அதனை திருத்துவதற்கான நடவடிக்கைகளை குறித்த கால வரையறைக்குள் மேற்கொள்ளுமாறு உரிய கம்பனிகளுக்கு சபையினால் அறிவித்தல் வழங்கப்படும்.

### 6. காப்புறுதி கைத்தொழில் மேற்பார்வைக்கு இடர் அடிப்படையிலான மூலதன மாதிரி

நடைமுறையிலுள்ள விதிமுறைகள் அடிப்படையிலான் நிர்வாகத்திற்குப் பதிலாக, இலங்கை காப்புறுதித்துறையை மேற்பார்வை செய்வதற்கு இடர்கூர் உணர்வு மிகக்குறைவான மூலதன நிர்வாகத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் உலக வங்கியின் உதவியுடன் 2009ம் ஆண்டு சபையினால் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த இடர் அடிப்படையிலான மூலதனக் கருத்திட்டம் பல்வேறுபட்ட கட்டங்களை உள்ளடக்கியுள்ளது. திட்டமிட்டபடி உரிய திகதியில் பல மைல் கற்களை கடக்க வேண்டியேற்பட்டது. 2014ம் ஆண்டிலிருந்து இடர் அடிப்படையிலான மூலதனக் கருத்திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டது. 2014ம் ஆண்டு இடர் அடிப்படையிலான மூலதனக் கருத்திட்ட அமுலாக்கம் கட்டாயமான சமாந்தர ஓட்டமானது ஆரம்பிக்கப்பட்டது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் தவிர்ந்த ஏனைய அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகளும் ஆயுள் மற்றும் பொது காப்புறுதி வியாபாரங்களுக்கு 2014ம் ஆண்டின் நான்கு காலாண்டுக்கும் வினாக்களுடன் பொது படிம அச்சினை சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன், 2014 ஜுன் மாதம் சமாந்தர ஓட்டத்தின முதலாம் காலாண்டு பெறுபேறுகள் மற்றும் விரிந்து வரும் சவால்கள் தொடர்பாக காப்புறுதி கைத்தொழிற்துறையினருக்கு அறிவூட்டுவதற்கு உலக வங்கியுடன் இணைந்து பயிற்சிப் பட்டறையொன்றை சபை ஒழுங்குசெய்தது. 2015ம் ஆண்டு இறுதி வரை சமாந்தர ஓட்டம் தொடரப்படுவதுடன், 2016ம் ஆண்டில் இருந்து அனைத்து காப்புறுதி வழங்குனர்களும் இடர் அடிப்படையிலான மூலதன தேவையுடன் இசைவடைய வேண்டும்.

### 7. அமைவிட கண்காணிப்பு

2014ம் ஆண்டு ஏழு காப்புறுதிக் கம்பனிகளில் அமைவிட கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது. இந்த அமைவிட கண்காணிப்புகளின் ஊடாக சட்டங்களின் ஏற்பாடுகள், சபையினால் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள் என்பவற்றுடன் காப்புறுதி வழங்குனரின் தொழிற்பாடுகள், முறைமைகள், பூட்கைகள் மற்றும் நடைமுறைகள் இணங்குகின்றதா என சபையினால் மீளாய்வு செய்யப்படுகின்றது. மேலும், காப்புறுதி வழங்குனர்களின் தொழிற்பாடுகள், நடைமுறைகள் மற்றும் முறைமைகள் தொடர்பான மேலதிக தகவல்களைச் சேகரிப்பதற்காக காப்புறுதிக் கம்பனிகளின் சிரேஸ்ட உத்தியோகத்தர்கள், உள்ளக மற்றும் வெளியக கணக்காய்வாளர்கள் மற்றும் கணிப்பீட்டாளர்களுடன் சந்திப்புகள் மேற்கொள்ளப்பட்டது. அமைவிட கண்காணிப்பில் இருந்து பெற்றுக்கொண்ட அவதானிப்புகள் தொடர்பாக, அமைவிட கண்காணிப்பு அறிக்கையின் ஊடாக காப்புறுதி வழங்குனர்கள் மேம்படுத்த வேண்டிய பரப்புகள் தொடர்பான சபையின் விதப்புரைகளை உரிய நிறுவனத்திற்கு வழங்கும்.

### 8. இலங்கை மத்திய வங்கிக்கு தகவல்களை வழங்குதல்

சபை காலாண்டு விபரத்திரட்டுகளில் இருந்து பெற்றுக்கொண்ட தகவல்களின் அடிப்படையில் பெற்றுக்கொண்ட, காலாண்டு அடிப்படையிலான காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் செயற்பாடுகள் தொடர்பான நிதியியல் தகவல்களை இலங்கை மத்திய வங்கியின் நிதி முறைமை நிலைப்படுத்தல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கும். 2014ம் ஆண்டுக்கான காப்புறுதி கைத்தொழிற்துறையின் செயற்பாடுகளை தீர்மானிப்பதற்கு சபை தவணைக் கட்டண வருமானம், இலாபத்தன்மை, திரவத்தன்மை போனறவற்றை சபை பகுப்பாய்வு செய்தது.

### 9. கலவையான காப்புறுதிகளை வேறுபடுத்தல்

திருத்தச்சட்டத்தின் 53ம் பிரிவுக்கு அமைவாக, 2015 பெப்பரவரி மாதத்தில் இருந்து கலவைக் காப்புறுதிக் கம்பனிகளில் இரு வகையான காப்புறுதி வியாபாரங்களை இரு வேறு கம்பனிகளாக வேறுபடுத்துவதற்கு வேண்டப்படுகின்றது. நடைமுறையாண்டான 2014 இல் பன்னிரெண்டு கம்பனிகளினால் அவர்களின் கலவை காப்புறுதி வியாபாரத்தை வேறாக்குவதற்கு வழங்கப்பட்ட முன்மொழிவுகளையும் விண்ணப்பங்களையும் சபை மீளாய்வு செய்தது. மேலும், காப்புறுதி வியாபாரத்தை இடமாற்றம் செய்வதற்கு மாவட்ட நீதிமன்றத்தின் அனுமதி வேண்டும் எனும் அவதானிப்புகள் உரிய காப்புறுதி வழங்குனர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி

### 10. இடர் அடிப்படையிலான மேற்பார்வைக் கருத்திட்டம்

உலக வங்கியின் ஒத்துழைப்புடன், சபையின் மேற்பார்வை தொழிற்பாட்டை பலப்படுத்துவதற்காக 2013ம் ஆண்டு முதன் முதலாக இடர் அடிப்படையிலான மேற்பார்வை கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கருத்திட்டத்தை 2015ம் ஆண்டில் பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. சபையின் இடர் அடிப்படையிலான மேற்பார்வை பரப்புகள், மீள்காப்புறுதி, மீள்காப்புறுதியாளர்கள், இழப்பு சீர்திருத்தலாளர்கள், முதலீடுகள் மற்றும் முதலீட்டுடன் தொடர்புபடுத்தப்பட்ட உற்பத்திகள் என்பவற்றின் மீதான மேற்பார்வை இயலளவை மேம்படுத்துவதற்கு இடர் அடிப்படையிலான மேற்பார்வை கருத்திட்டம் திட்டமிட்டுள்ளது.

இடர் அடிப்படையிலான மேற்பார்வையின் கீழான விநியோகித்தல்கள் உலக வங்கியின் ஆலோசனையுடன் உடன்பாட்டுக்கு வரப்பட்டு கருத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

## காப்புறுதித் தரகர் கம்பனிகள்

### 1. காலாண்டு விபரத்திரட்டுகள், மாதாந்த விபரத்திரட்டுகள், இடைக்கால நிதியியல் கூற்றுகள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள்

2010 பெப்பரவரி 25ம் திகதி வெளியிடப்பட்ட 1642/16 (முதலாம் அட்டவணை) வாத்தமானி அறிவித்தலின் நியதிகளுக்கு அமைவாக, ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்து நாற்பத்து ஐந்து நாட்களினுள் காப்புறுதித் தரகர் கம்பனிகள் அவர்களின் காலாண்டு விபரத்திரட்டுகளையும் இடைக்கால நிதியியல் கூற்றுக்களையும் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனக் கோரப்படுகின்றனர்.

அனேகமான காப்புறுதி தரகர் கம்பனிகள் தங்கள் காலாண்டு விபரத்திரட்டுகள் மற்றும் இடைக்கால நிதியியல் கூற்றுகளை சபைக்கு இறுதி நாளுக்கு முன்னராக சமர்ப்பித்தன. அவர்களின் நிதியியல் நிலைமையை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் அவை சட்டம், ஏனைய ஒழுங்குவிதிகளுடன் இணங்குகின்றமையை கண்காணிப்பதற்கும் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட காலாண்டு விபரத்திரட்டுகளை சபை மீளாய்வு செய்தது. யாதேனும் இணக்கப்பாடின்மை அல்லது விலகல்கள் சபையினால் அவதானிக்கப்பட்டதாயின், குறிப்பிட்ட காலவரையறைக்குள் அவற்றினை திருத்துமாறு உரிய காப்புறுதி தரகர் கம்பனிக்கு அறிவிக்கப்பட்டது.

சபையினால் வழங்கப்பட்ட பணிப்புரைக்கு அமைவாக இரு காப்புறுதித் தரகர் கம்பனிகள் ஒவ்வொரு மாதம் முடிவடைந்து பதினைந்து நாட்களின் உள்ளாக மாதாந்த விபரத்திரட்டினை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றனர். நிதியாண்டு முடிவடைந்ததும் அதிலிருந்து ஆறு மாதங்களுக்குள் காப்புறுதி தரகர் கம்பனிகளின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுகளை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றனர். சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுகள் சபையினால் மீளாய்வு செய்யப்பட்டது. யாதேனும் இணக்கப்பாடின்மை அல்லது விலகல்கள் சபையினால் அவதானிக்கப்பட்டதாயின் அவற்றினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய காப்புறுதித் தரகர் கம்பனிக்கு அறிவிக்கப்பட்டது.

### 2. தவணைக் கட்டணங்களின் சேகரிப்பினைக் கண்காணித்தல்

சட்டத்தின் 89ம் பிரிவுக்கு அமைவாக, காப்புறுதி வழங்குனர்களுக்காக காப்புறுதி தவணைக் கட்டணங்களை காப்புறுதி தரகர் கம்பனிகள் சேகரித்து உரிய காப்புறுதி வழங்குனர்களுக்கு சேகரித்து இரு வாரங்களினுள் வரவு வைத்தல் வேண்டும். இந்த காலாண்டு விபரத்திரட்டுகள் மற்றும் அமைவிட கண்காணிப்புகள் மூலம் சட்டத்தின் 89ம் பிரிவுக்கு அமைவாக காப்புறுதித் தரகர் கம்பனிகள் இணங்குகின்றனவா என சபை உண்ணிப்பாக கண்காணிக்கின்றது. இந்த பிரிவுக்கு அமைவாக இணங்காத காப்புறுதி தரகர் கம்பனிகளுக்கு எதிராக அவசியமான நடவடிக்கைகளை சபை எடுக்கும்.

### 3. அமைவிட கண்காணிப்புகள்

சபையின் ஒழுங்குவிதிகள் இணங்கப்படுகின்றதா என மதிப்பிடுவதற்காக 2014ம் ஆண்டினுள் சபை எட்டு அமைவிட கண்காணிப்புகள் காப்புறுதி தரகர் கம்பனிகளில் மேற்கொள்ளப்பட்டது. அமைவிட கண்காணிப்புகளின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள், உரிய காப்புறுதி தரகர் கம்பனிகளின் திருத்தச் செயற்பாடுகளுக்காக சபையின் விதப்புரைகள் கம்பனிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. மேலும் பொருத்தமான ஒழுங்காற்றல் நடவடிக்கைகள் சபையினால் மீறல்களுக்காக மேற்கொள்ளப்பட்டது.

### 4. பதிவினை புதுப்பித்தல்

2015ம் ஆண்டு அவற்றின் தொழிற்பாடுகளை தொடர்ந்து மேற்கொள்வதற்காக அவர்களின் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கான விண்ணப்பங்கள் காப்புறுதி தரகர் கம்பனிகளிடமிருந்து கிடைக்கப் பெற்றது. புதுப்பிப்பதற்கு முன்னர் அவற்றின் நிதியியல் நிலமையை தீர்மானிப்பதற்காக, கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகள் மற்றும் காலாண்டு விபரத்திரட்டுகள் என்பனவற்றை சபை பகுப்பாய்வு செய்தது.

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி

## ஒழுங்கமைப்பு மீளாய்வு

### காப்புறுதிக் கம்பனிகளை பதிவுசெய்தல்

திருத்தச் சட்டத்தின் 53ம் பிரிவுக்கு அமைவாக, காப்புறுதி வழங்குனராக அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக 12 விண்ணப்பங்கள் பதிவு செய்வதற்கு சபைக்கு கிடைக்கப்பெற்றதுடன், அவ்வருடத்தில் காப்புறுதி வழங்குனர்களாக 8 கம்பனிகளுக்கு பதிவு வழங்கப்பட்டது.

எனினும், பதிவுசெய்யப்பட்ட 08 புதிய கம்பனிகளில் 01 ஜனவரி 2015இல் இருந்து அமுலுக்குவரும் வகையில் 07 கம்பனிகளுக்கு பதிவை சபை வழங்கியதுடன், ஒரு கம்பனிக்கு அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு அது மூலதன தேவையுடன் இணங்குதல் வேண்டும்.

இணைப்பு I: சபையினால் 31 டிசம்பர் 2014ம் திகதி வரையில் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகளின் பெயர்கள் மற்றும் அவை காப்புறுதி வியாபாரத்தை கொண்டு நடாத்துவதற்கான அதிகாரமளிக்கப்பட்ட வகை/வகைகள் வழங்கப்பட்டுள்ளது.

### புதிய காப்புறுதித் தரகர் கம்பனிகளை பதிவுசெய்தல் மற்றும் காப்புறுதி தரகர் கம்பனிகளின் பதிவினைப் புதுப்பதித்தல்

சபை 27 ஏப்ரல் 2012ம் திகதியில் இருந்து நபர்களை காப்புறுதி முகவர்களாக பதிவுசெய்வதற்கான புதிய விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதை தற்காலிகமாக நிறுத்தியுள்ளது. அதனால் இவ்வருடத்தினுள் காப்புறுதி தரகர்களாக நபர்கள் தொழிற்படுவதற்கான புதிய பதிவுகள் வழங்கப்படவில்லை.

இவ்வருடத்தினுள் 2015ம் ஆண்டுக்காக பதிவுகளை புதுப்பிப்பதற்கு 58 காப்புறுதித் தரகர் கம்பனிகளின் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அனைத்துக் கம்பனிகளுக்கும் 2015ம் ஆண்டுக்கான பதிவு புதுப்பிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளதுடன், அவை சட்டத்தின் கீழ் அவசியமான தேவைகளை பூர்த்திசெய்துள்ளதா என நோக்கப்பட்டது.

இணைப்பு II: சபையில் பதிவுசெய்யப்பட்ட அனைத்துக் காப்புறுதி தரகர் கம்பனிகளின் பெயர்கள் மற்றும் அவை காப்புறுதி வியாபாரத்தை கொண்டு நடாத்துவதற்கான அதிகாரமளிக்கப்பட்ட வகை/ வகைகள் வழங்கப்பட்டுள்ளது.

### வலியுறுத்தல் நடவடிக்கைகள்

#### காப்புறுதிக் கம்பனிகள்

#### இடைநிறுத்தல்கள்

இந்த ஆண்டின் போது சபையினால் இடை நிறுத்தங்கள் எவையும் விதிக்கப்படவில்லை. எவ்வாறாயினும், 2009 ஆம் ஆண்டில் சிலிங்கோ டக்காபுல் லிமிடட் மீது விதிக்கப்பட்ட இடைநிறுத்தல் தொடர்ந்தும் அமுலில் உள்ளது.

சிலிங்கோ டக்காபுல் லிமிடட் உடன் சபையினால் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைவாக, கம்பனியின் உண்மையான கோரிக்கைகளை கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்துடன், சிலிங்கோ டக்காபுல் லிமிடட் நிறுவனத்திற்கு சொந்தமான சொத்துகளை விற்பனை செய்வதற்கான நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், அதற்கு அமைவாக சிலிங்கோ டக்காபுல் லிமிடட் இன் கோரிக்கையாளர்கள் அவர்களின் கோரிக்கைகளை எழுத்து மூலமாக சபைக்கு அறிவிக்குமாறு பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டது. இவ்வருடத்தினுள் கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளின் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. சிலிங்கோ டக்காபுல் லிமிடட் நிறுவனத்திற்கு எதிராக வழக்குகள் தொடர்வதானால், உடனடியாக கோரிக்கைகளைத் தீர்பதற்கான தீர்மானங்களுக்கு இதுவரை வரமுடியாதுள்ளது. அத்துடன், சிலிங்கோ டக்காபுல் லிமிடட் நிறுவனத்தில் ஒரேயொரு செயற்பாட்டு பணிப்பாளர் மட்டும் எஞ்சியுள்ளதனால், கௌரவ சட்டத்துறை தலைமை நாயகத்திடம் ஆலோசனையைப் பெறுவதற்கு சபை எதிர்பார்த்துள்ளது.

#### பணிப்புரைகள்

காப்புறுதி சட்டத்தின் 57 ஆம் பிரிவிற்கு அமைவாக, காப்புறுதி கம்பனிகள் இரண்டிற்கு சபையினால் பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளது. இக்கம்பனிகள் கடன்தீர் எல்லை விதிகளை மீறியுள்ளதனால், காலாண்டு விபரத்திரட்டுகளுக்கு மேலதிகமாக மாதாந்த விபரத்திரட்டுகளை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

பொது மக்கள் அல்லது தேசிய நலங்கள் அல்லது காப்புறுதி வைப்பாளர்களின் நலன்கள் அல்லது காப்புறுதி வழங்குனரின் நலனுக்கு தீங்கு இழைப்பது போன்ற நட்டத்தை ஏற்படுத்த கூடிய முறைகளில் எந்தவொரு காப்புறுதி வழங்குனர்களும் நடப்பார்களாயின் அக் காப்புறுதி வழங்குனர்களுக்கு சபை பணிப்புரைகளை வழங்குவதற்கான அதிகாரத்தை சட்டத்தின் 57 வது பிரிவு வழங்குகின்றது.

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி

சம்பந்தப்பட்ட காப்புறுதி வழங்குனர்கள் வழங்கப்பட்ட பணிப்புரைகளை பின்பற்றுகின்றனரா என்பதை கண்காணிப்பதற்காக, காப்புறுதி கம்பனிகளுக்கு முன்னர் வழங்கப்பட்ட பணிப்புரைகள் தொடர்பாக, உன்னிப்பானதும் மற்றும் தொடர்ச்சியானதுமான கண்காணிப்பு ஒன்று சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது.

**எச்சரிக்கைகள்**

சபையின் எழுத்து மூல அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் துணைக் கம்பனியை கூட்டிணைத்தமை தொடர்பாக சபையினால் வழங்கப்பட்ட பணிப்புரையை மீறியமைக்காக சபையினால் காப்புறுதிக் கம்பனி ஒன்று எச்சரிக்கை செய்யப்பட்டது.

சபை மீண்டுமொருமுறை அதே காப்புறுதிக் கம்பனியை முன்னர் வழங்கப்பட்ட இரு பணிப்புரைகளை மீறியமைக்காக எச்சரிக்கை செய்தது. சபையின் எழுத்து மூல அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் துணைக் கம்பனியை கூட்டிணைத்தமை தொடர்பாக ஒரு பணிப்புரையும், பூட்கை ஆரம்பிக்கும் திகதிக்கு பூரணமான தவணைக் கட்டணங்களைப் பெற்றுக்கொள்ளாமல் காப்புறுதி வழங்குனரின் குழுமக் கம்பனிகளில் உள்ள நபர்களுக்கு காப்புறுதிப் பூட்கைகளை வழங்கியமைக்காக இரண்டாவது பணிப்புரையும் வழங்கப்பட்டது.

**காப்புறுதி தரகு கம்பனிகள்**

**இடைநிறுத்தல்கள்**

ஒரு காப்புறுதி தரகர் கம்பனியானது, சட்டத்தின் 86(1) பிரிவுடன் இணைத்து வாசிக்கப்படும் இலக்கம் 1642/16 மற்றும் 15 பெப்பரவாரி 2010ம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் உள்ள 7ம் விதியை மீறியமைக்காக மற்றும் முறையே 12 செப்டெம்பர் 2014 தொடக்கம் 19 செப்டெம்பர் 2014 வரை மற்றும் 20 ஒக்டோபர் 2014 தொடக்கம் 24 நவம்பர் 2014 வரையான காலப்பகுதிக்குள் இடைநிறுத்தப்பட்டது.

சட்டத்தின் 86(1) பிரிவுடன் இணைத்து வாசிக்கப்படும் இலக்கம் 1642/16 மற்றும் 15 பெப்பரவாரி 2010ம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் உள்ள 7ம் விதி ஒவ்வொரு காப்புறுதி தரகரும் தரகர் கம்பனியின் பிரதான அலுவலர் மற்றும் பணிப்பாளரினால் சான்றுபடுத்தப்பட்ட காலாண்டு விபரத்திரட்டுகளை, காலாண்டு முடிவடைந்து நாற்பத்து ஐந்து நாட்களுக்குள் சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும் என வேண்டுகின்றது.

பிரிவு 86(1) க்கு அமைவாக ஒவ்வொரு காப்புறுதி தரகரும் தகைமை பெற்ற கணக்காய்வாளரினால் சான்றுபடுத்தப்பட்ட சுருக்கமான ஐந்தொகை, இலாப நட்டக் கணக்கு மற்றம் சுருக்கக் குறிப்பை உள்ளடக்கிய கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றை கணக்கீட்டுக் காலம் முடிவடைவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

**எச்சரிக்கைகள்**

காப்புறுதிச் சட்டத்தின் 86 (1) ஆம் பிரிவுடன் இணங்கி செயற்பட தவறியமைக்காக 03 தரகுக் கம்பனிகளுக்கு சபையினால் எச்சரிக்கை கடிதங்கள் வழங்கப்பட்டன.

அத்துடன், காப்புறுதிச் சட்டத்தின் 86 (2) ஆம் பிரிவுடன் இணங்கி செயற்பட தவறியமைக்காக 08 தரகுக் கம்பனிகளுக்கு சபையினால் எச்சரிக்கை கடிதங்கள் வழங்கப்பட்டன.

அத்துடன், இலங்கை வெளநாட்டு தொழில் முகவர் உடன் மேற்கொள்ளப்படும் இடம்பெயரும் தொழிலாளர்களுக்கான காப்புறுதித் திட்டம் தொடர்பாக சட்டத்தின் ஏற்பாடுகளை மீறியமைக்காக மற்றுமோர் காப்புறுதி தரகர் கம்பனி எச்சரிக்கை செய்யப்பட்டது.

சட்டத்தின் பிரிவு 80(2)(ஆ)(ii) விற்கு அமைவாக, ஒரு கம்பனி யாதேனும் துணை அல்லது உப அல்லது குழுமக் கம்பனியின் பணிப்பாளர் அல்லது நிறைவேற்று அதிகாரி அல்லது பங்குரிமையாளர் அல்லது காப்புறுதிக் வழங்குனரின் ஊழியர் ஒருவரை காப்புறுதி தரகராக பதிவுசெய்யவதற்கு கம்பனிக்கு உரிமை இல்லை. எனினும், ஒரு காப்புறுதிக் கம்பனியின் குழுமக் கம்பனியின் பணிப்பாளர் மற்றும் 2013ம் ஆண்டு புதுப்பித்தல் விண்ணப்பத்தின் படி காப்புறுதி வழங்குனரின் பணிப்பாளர் தரகராக இருந்தமையினால், அக் காப்புறுதிக் கம்பனி அந்த பிரிவின் நியதிகளை பூர்த்திசெய்ய தவறியது.

அதனால், 2013ம் ஆண்டுக்கான புதுப்பித்தல் விண்ணப்பபடிவத்தில் தவறான, பிழையாக வழிநடத்தும் தகவல்களை பூர்த்தி செய்தமை அல்லது சரியான தகவல்களைக் கொண்டிராததும், தகவல்களை மறைத்தல் அல்லது தகவல்களை வழங்கத்தவறியமை என்பதற்காக அந்த காப்புறுதிக் கம்பனி எச்சரிக்கை செய்யப்பட்டது.

**பணிப்புரைகள்**

இவ்வருடம் எந்தவொரு காப்புறுதித் தரகர் கம்பனிகளுக்கும் பணிப்புரைகள் வழங்கப்படவில்லை.

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி

**ஒழுங்குபடுத்தல் / ஆலோசனை அளவீடுகள்**

1. வெளிநாட்டு மீள் காப்புறுதிக் கம்பனியொன்று இலங்கையில் அதன் உப காரியாலயம் ஒன்றை நிறுவுவதற்கு சபையிடம் அனுமதி கோரியுள்ளது. சபை இலங்கையில் உள்ள மீள்காப்புறுதியாளர்களை பதிவுசெய்வதற்கான ஒழுங்குபடுத்தல் சட்டகமொன்றை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதனால், ஒழுங்குபடுத்தல் சட்டகத்தை பூர்த்திசெய்யும் வரையில் குறிப்பிட்ட அனுமதியை வழங்குவதை சபை தள்ளிப்போட்டுள்ளது.

2. இலங்கையில் அபிவிருத்திக் கருத்திட்டமொன்றுக்காக வெளிநாட்டுக் கம்பனியிடமிருந்து காப்புறுதியில் உள்ள அனைத்து இடர்களை நீக்குதல் மற்றும் மூன்றாம் தரப்பு பொறுப்பு காப்புறுதி பூட்கைகளை கொள்வனவு செய்வதற்கு வெளிநாட்டுக் கம்பனியினால் அனுமதி கோரப்பட்டுள்ளது. இக்குறிப்பிட்ட கருத்திட்டம் வெளிநாட்டு அதிகாரசபையினால் நிதியிடப்பட்டுள்ளதுடன், அவர்கள் இலங்கை அரசாங்கத்துடன் ஒப்பந்தத்திற்கு வந்துள்ளதுடன், குறிப்பிட்ட கம்பனி ஒப்பந்ததாரர் ஆவதனால் மேற்குறிப்பிட்ட பூட்கையை வெளிநாட்டுக் கம்பனியிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு கோருகின்றார். அத்துடன், இந்த கம்பனியின் கருத்திட்டக் காரியாலயம் இலங்கையில் நிறுவப்பட்டுள்ளது. தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் பிரிவு 101 (1)ற்கு அமைவாக சபையினால் மேற்குறிப்பிட்ட வேண்டுகோளுக்கான அனுமதி வழங்கப்பட்டது.

   சட்டத்தின பிரிவு 101ற்கு அமைவாக, இலங்கையில் எந்தவொரு நபரும், சபையின் எழுத்து மூல முன்னனுமதியைப் பெற்றுக்கொள்ளாது, நேரடியாக அல்லது மறைமுகமாக காப்புறுதி வியாபாரத்தை சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்படாத காப்புறுதியாளருடன் மேற்கொள்ள முடியாது. அத்துடன், சபை இலங்கை அரசாங்கத்தின் காப்புறுதி கைத்தொழிற்துறை மற்றும் தேசத்தின் தேவைக்கான பூட்கையை கவனத்தில் கொண்டே சபை எழுத்து மூல அனுமதியினை வழங்கும்.

3. ஒரு கம்பனி பிரதான அலுவலரை சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாது நியமித்ததுடன், அந்நபர் அத்தொழிற்பாட்டுக்கு பொருத்தமில்லை என கருதப்பட்டதால், சட்டத்தின் பிரிவு 94ற்கு அமைவாக பொருத்தமான நபரை நியமிக்கம் படி சபை கேட்டுக்கொண்டது. சட்டத்தின் 94ம் பிரிவுக்கு அமைவாக, ஒவ்வொரு காப்புறுதி நிறுவனமும் ஒரு பிரதான அலுவலரை பேணுவதற்கு கோரப்படுவதுடன், சபையினால் அது சார்பாக தீர்மானிக்கப்பட்ட தகைமைகளை அந்நபர் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும். அந்த நபரினால் சபைக்கு, அந்தக் கம்பனியில் அவரது பிரதான அலுவலர் நியமனத்தை மீளப் பரிசோதிக்குமாறு விடுக்கப்படும் வேண்டுகோள் சபையினால் முன்போல் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

4. இலங்கையின் வெளிநாட்டுக்கு இடம்பெயர்ந்த தொழிலாளருக்கான காப்புறுதி பூட்கை தொடர்பான சட்டத்தின் ஏற்பாடுகளை மீறியமை தரகருக்கான 2014ம் ஆண்டுக்கான புதுப்பித்தலின் போது கண்டறியப்பட்டமையினால் சபை அறிவித்தலை வழங்கியது. அத்துடன், கம்பனியின் பதிவுக்காலம் காலாவதியாவதனால், 01 ஜனவரி 2014ம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் அதன் தரகர் நடவடிக்கைகளை நிறுத்துமாறு கம்பனிக்கு அறிவித்தது. சபை எடுத்த தீர்மானத்திற்கு சவால் விடுத்து கம்பனி பணிப்பாளர் நாயகத்திற்கு எதிராக சட்ட ஆணையை 09 ஜனவரி 2014 இல் வழங்கியது. தரகர் காரணத்தைக் காட்டும் அறிவித்தல் மற்றும் சபையினால் விநியோகிக்கப்பட்ட பதிவு காலாவதியானதை அறிவிக்கும் கடிதம் மற்றும் அறிவித்தலை நீக்குவதற்கு உறுதி கேள் பேரணையையும் மற்றும் அவர்களின் 2014ம் ஆண்டுக்கான பதிவினை புதுப்பிற்பதற்குமான ஆணையைக் கோரினார். எனினும், சபை மற்றும் பணிப்பாளர் நாயகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆட்சேபணை நிராகரிக்கப்பட்டதன் பின்னர் தரகர் தனது விண்ணப்பத்தினை 15 ஒக்டோபர் 2014ம் திகதி மீளப்பெற்றுக் கொண்டார்.

5. இலங்கை பிணையங்கள் மற்றும் பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழு ஒரு காப்புறுதிக் கம்பனி பட்டியலிட்ட அதன் துணைக் கம்பனியானது, காப்புறுதிக் கம்பனியின் இன்னும் இரு துணைக் கம்பனிகளாக நிறுவப்பட்டுள்ளது தொடாபான சபையின் விளக்கம் குறித்து விசாரணையை மேற்கொண்டது. இலங்கை பிணையங்கள் மற்றும் பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட அதே விசாரணை தொடர்பாக, சபை அக்குறித்த காப்புறுதி வழங்குனருக்கு, சபையின் அனுமதியின்றி யாதேனும் துணைக் கம்பனிகளை அல்லது யாதேனும் ஏனைய வகை கம்பனிகளை அல்லது கிளைகளை நிறுவுவதை தவிர்க்குமாறு பணிப்புரை விதித்துள்ளது. இந்த விடயம் தொடர்பாக விசாரணையை மேற்கொண்டதன் பின்னர், குறிப்பிட்ட பணிப்புரையை கம்பனி இது வரை மீறாததனால் ஆட்சேபனையில்லை எனும் கடிதத்தை இலங்கை பிணையங்கள் மற்றும் பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழுவிற்கு சபை விநியோகித்தது.

6. ஒரு காப்புறுதிக் கம்பனி இலங்கையில் அதன் உற்பத்திகளை மேம்படுத்தவதற்கு அந்தக் கம்பனிக்கு பெறுமதி சேர் சேவைகளை வழங்கும் காப்புறுதி தரகருடன் இணைவதற்கான வேண்டுகோளை விடுதிருந்தது. வழங்கப்பட்ட மாதிரி ஒப்பந்தத்திற்கு அமைவாக, இந்த ஒப்பந்தத்தின் பிரதான நோக்கம் வாடிக்கையாளர்களுக்கு அந்தக் குறிப்பிட்ட காப்புறுதிக் கம்பனியின் காப்புறுதிச் சேவை வகைகளை ஊக்குவிப்பதற்கு உரிய சேவைகளைப் பெற்றுக்கொள்வதாகும். இந்த வேண்டுகோள் சட்டத்துடன் இணங்காமையினால், சபை அனுமதி வழங்குவதை நிராகரித்தது.

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி

7. ஒரு கம்பனி அதனை காப்புறுதிக் கம்பனியாக பதிவு செய்வதற்கு விரும்புகின்றது எனவும், அதனை சட்டத்தின் 96ம் பிரிவுக்கு அமைவாக 'அசூரன்ஸ்' எனும் சொல்லை இணைத்து கூட்டிணைப்பதற்கு அனுமதிக்குமாறு சபையிடம் அனுமதியைக் கோரியிருந்தது. சட்டத்தின் பிரிவு 96ற்கு அமைவாக, காப்புறுதியாளர், தரகர் அல்லது ஒரு காப்புறுதி முகவர் தவிர்ந்த ஒரு நபர், சபையின் எழுத்து மூல அனமதியின்றி, அதன் பெயரில், தலைப்பில் அல்லது விபரிப்பின் ஒரு பகுதியை பயன்படுத்த முடியாது, 'இன்சூரன்ஸ்' எனும் சொல் அல்லது அதன் வேறு விளைவுகள் அல்லது எந்தவொரு மொழியிலும் யாதேனும் அதனை ஒத்த சொல் இது அந்நபர் இலங்கையில் காப்புறுதி வியாபாரத்தை கொண்டு நடத்துகின்றார் எனும் பொருள் தரும். சபை அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களைக் கருத்தில்கொண்டு உரிய விடயம் தொடர்பாக, அவர்களினால் வழங்கப்பட்ட பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிட்டதன் படி ஆறு மாதங்களினுள் காப்புறுதியாளராக செயற்படுவதற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்கியதாயினும் பெயரை மாற்றுவதற்கான அனுமதியை வழங்கவில்லை.

8. சபை ஒரு காப்புறுதிக் கம்பனிக்கு, துணைக் கம்பனிகள், கிளைகள் என்பவற்றை நிறுவுவதற்கு முன்னர் சபையிடம் எழுத்து மூல அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு 2009ம் ஆண்டு பணிப்புரையினை வழங்கியிருந்தது. இக்குறிப்பிட்ட காப்புறுதிக் கம்பனி மேற்குறிப்பிட்ட தேவைகளை எதிர்காலத்தில் கிளைகளை நிறுவும் போது விட்டுவிடுவதற்கு அனுமதியைக் கோரியிருந்தது. சபை இந்த வேண்டுகோளை மீளாய்வு செய்தது, குறிப்பிட்ட கம்பனி புதிய கிளைகளை உருவாக்குவதற்கு ஏற்றவகையில் குறிப்பிட்ட பணிப்புரையினை திருத்தியது. சட்டத்தின் 57(2)ம் பிரிவுக்கு அமைவாக, வழங்கப்பட்ட யாதேனும் பணிப்புரையினை மாற்றுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

9. தர்ம தாபனம் உட்பட வெளியில் உள்ள நபர்களுக்கு யாதேனும் நன்கொடைகள், கடன்கள், முற்பணங்கள் வழங்குவதை தவிர்க்குமாறு அவர்களைக் கோரி, 2012ம் ஆண்டு சபை ஒரு காப்புறுதி கம்பனிக்கு பணிப்புரையினை வழங்கியிருந்தது. இக்குறிப்பிட்ட கம்பனி, கம்பனியின் தேறிய இலாபத்தில் 5% வீதம் வரை தர்மதாபனங்களுக்கு நன்கொடைகளையும் கொடுப்பனவுகளையும் வழங்குவதற்கு அனுமதிக்குமாறு கோரியிருந்தது. இக்குறித்த கம்பனியின் வருமான ஒதுக்குகள் 31 டிசம்பர் 2014இல் மறைப் பெறுமதியைக் காட்டியதாலும் அக்கம்பனி அவசியமான மிகக் குறைந்த மூலதன தேவையை பூர்த்தி செய்யாததனாலும் கோரிக்கை சபையினால் நிராகரிக்கப்பட்டது.

10. இரு கம்பனிகளின் கடன்தீர் நிலை குறைவடைந்து வந்ததனால், 2014 மார்ச் மாதத்தில் இருந்து சபைக்கு மாதாந்த விபரத்திரட்டுகளை சமர்ப்பிக்குமாறு, அக்கம்பனிகளுக்கு சபையினால் பணிப்புரை வழங்கப்பட்டிருந்தது. அந்தக் கம்பனிகள் ஆறு மாதங்களுக்கு மாதாந்த விபரத் திரட்டுகளை சமர்ப்பித்ததன் பின்னர் மேற்குறித்த பணிப்புரையை நீக்குமாறு சபையிடம் கோரியிருந்தது. இந்த இரு கம்பனிகளும் பொது மற்றும் நீண்ட கால காப்புறுதி வியாபாரங்களில் இழிவு கடன்தீர் வீதத்துடன் இணங்கியதுடன், இரு கம்பனிகளும் ஏனைய நியதித் தேவைகளுடனும் இணங்கியமையினால் சபை வேண்டுகோளை ஏற்றுக்கொண்டது.

11. ஒரு காப்புறுதிக் கம்பனிக்கு, அதன் நிதித் தலைமையாளர் இலங்கை வெளிநாட்டு தொழில் முகவரகத்துடன் காப்புறுதித் திட்டத்தை தவறாகப் பயன்படுத்தியமை காரணமாக அவரை நீக்குவதற்கான பணிப்புரையை வழங்கியிருந்தது. இக்குறிப்பிட்ட நபர் இந்தக் கம்பனியில் இருந்து விலக்குவது தொடர்பாக மீள் கவனம் கொள்ளுமாறு சபையைக் கோரியிருந்தார். எனினும் தரகு நடவடிக்கைகளுக்கான தரகுக்கான சட்டரீதியற்ற கொடுப்பனவுகள், இக்குறிப்பிட்ட காப்புறுதித் திட்டத்திற்கான மூன்றாம் தரப்பு நிர்வாகக் கொடுப்பனவுகள் மற்றும் இக்கம்பனியினால் வழங்கப்பட்ட விபரத்திரட்டுகளில் வழங்கப்பட்ட பிழையான தகவல்கள் என்பவற்றில் இவரின் பங்களிப்பு கருத்தில் கொள்ளப்பட்டு இவருடைய வேண்டுகோளை சபை கருத்தில்கொள்ளவில்லை.

12. சட்டத்தின் 25(3)ம் பிரிவுடன் இணைத்து வாசிக்க வேண்டிய இலக்கம் 1414/19 உடைய 2005 ஒக்டோபர் மாத அதிவிசேட வர்த்தமானிக்கு அமைவாக, மாலைதீவில் உள்ள அதன் துணைக் கம்பனியில் அதன் இருப்பினை அதிகரித்துக்கொள்ள ரூபா 15,684,000 வை முதலீடு செய்தது.

    இலக்கம் 1414/19 உடைய 2005 ஒக்டோபர் மாத அதிவிசேட வர்த்தமானியின் 4(ii) விதிக்கு அமைவாக, யாதேனும் குறிப்பிட்ட காலத்தினுள் மொத்த சொத்துக்களின் பெறுமதியில் ஐந்து வீதத்திற்கு மேற்படாத தொகையை இலங்கைக்கு வெளியில், யாதேனும் தனிநபர் அல்லது யாரேனும் நபருடன் மற்றும் அதன் தொடர்புடைய பங்காளர்களுடன் வைத்திருப்பதற்கு அனுமதியை வழங்குகின்றது. மேற்குறித்த செயற்திறன் தனிநபர் வெளிப்படுத்தல் பெறுமதியானது மொத்த சொத்தில் 1% வீதமாகும்.

    குறிப்பிட்ட காப்புறுதியாளரின் முதலீடானது அக்கம்பனியின் மொத்த சொத்தில் 1% வீதத்தை விடக் குறைவாகும். அதனால், சபை சில நிபந்தனைகளின் கீழ் மேற்குறிப்பிட்ட விடயத்திற்கு அனுமதியினை வழங்கியது.

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி

13. தாய் கம்பனியின் பொருளாதார தீர்மானத்திற்கு அமைவாக அவர்களின் காப்புறுதி வியாபார நடவடிக்கைகளை இலங்கையில் முடிவுறுத்திக் கொள்வதற்கு காப்புறுதிக் கம்பனி தீர்மானித்துள்ளதாக சபைக்கு அறிவிக்கப்பட்டது. சபை அமைவிட கண்காணிப்பை மேற்கொண்டதுடன், அதேவேளை மேலதிக தகவல்களைத் தருமாறு கோரியுள்ளது.

14. சட்டத்தின் திருத்தத்திற்கு அமைவாக சபை காப்புறுதிக் கம்பனிகளை பதிவுசெய்யும் விண்ணப்பப்படிவத்தை பயன்படுத்துனர் விரும்பும் வகையில் மீள்திருத்தியுள்ளது. அத்துடன், பதிவுக்கான அனுமதியை வழங்குவதற்கு முன்னர் விண்ணப்பம் மீளப்பெறப்பட்டால், பதிவுசெய்தல் கட்டணத்தில் 50% வீதம் மட்டுமே மீளளிக்கப்படும் என விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

15. சபையின் அவதானிப்பின் பின்னர் ஒன்பது கலவை காப்புறுதிக் கம்பனிகளுக்கு சட்டத்தின் 102ம் பிரிவின் கீழ் கோரப்படும் காப்புறுதி வியாபாரமாக மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. சட்டத்தின் 102ம் பிரிவுக்கு அமைவாக காப்புறுதி வியாபாரத்தின் யாதேனும் மாற்றல்கள் மற்றும் ஒன்றுசேர்த்தல் அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் மாவட்ட நீதிமன்றத்தினால் அனுமதியளிக்கப்படல் வேண்டும். அத்துடன், மேற்குறித்த அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படும் போது, மேற்குறித்த மாற்றல் மற்றும் ஒன்றுசேர்த்தல் தொடர்பான சபையின் அவதானிப்பின் பிரதி அதன் மீள்நோக்கு நடவடிக்கைகளுக்காக நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

16. திருத்தச் சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய ஏற்பாடுகளுக்கு அமைவாக, அதில் உள்ள நியமங்களின் படி பணிப்பாளர்களை நியமிப்பதற்காக காப்புறுதிக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு சபையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

17. சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக, அதில் உள்ள நியமங்களின் படி பிரதான அலுவலரை நியமிப்பதற்காக காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதித் தரகர் கம்பனிகளினால் வழங்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு சபையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

18. கடன்தீர் எல்லை விதிகளின் கீழ் பெறுமதியாளர்களை நியமிப்பதற்கு இரு காப்புறுதிக் கம்பனிகளுக்கு சபை அனுமதியினை வழங்கியுள்ளது.

**ஒழுங்கமைப்பு சீர்திருத்தங்கள்**

**விதிகள்**

**2014ம் ஆண்டின் 01ம் விதி காப்புறுதி முகவரகங்களின் தகைமைகளை குறித்துரைப்பதற்காக விநியோகிக்கப்பட்டது.**

சபையினால், இலக்கம் 1861/45 மற்றும் 10 மே 2014ம் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக காப்புறுதி முகவரகங்களின் (தனிப்பட்டவர்கள் தவிர்ந்த ஏனையவை) தகைமை விதிகள் விநியோகிக்கப்பட்டது. இவ்விதிகள் சட்டத்தின் கீழ் காப்புறுதி முகவர்களாக தொழிற்படுவதற்கு யாரேனும் நபருக்கு அவசியமான தகைமைகளை அறிமுகப்படுத்தியது.

இவ்விதியின் படி, அந்நபர் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு கம்பனியாகவும், ரூபா பத்து மில்லியனுக்கு குறைவடையாத தெகையை குறிப்பிட்ட மூலதனமாக கொண்டிருப்பதுடன் எவ்வேளையிலும் ரூபா இரண்டாயிரத்து ஐநூறாயிரத்திற்கு குறைவடையாத தொகையை தேறிய மூலதனமாக பேணுதல் வேண்டும் அல்லது நிதி வியாபாரச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட நிதிக் கம்பனி அல்லது நிதிக் குத்தகை சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட நிதிக் குத்தகை நிறுவனம் அல்லது கூட்டுறவு சங்கச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம் அல்லது காப்புறுதி முகவராக தொழிற்படுவதற்கு சட்டத்தில் குறிப்பிட்ட குறிப்பின் ஊடாக மாகாண சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட மற்றும் குறிப்பிட்ட மாகாண சபையின் அல்லது கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட உரிய நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

இவ்விதி காப்புறுதிக் கைத்தொழிற்துறையில் காணப்படும் மாறுபட்ட தேவைகளை பூர்த்திசெய்வதற்கும் மற்றும் சட்டத்தின் 78ம் பிரிவின் தேவையை பூர்த்திசெய்வதற்காகவும் அறிமுகப்படுத்தப்பட்டது.

**காப்புறுதி கம்பனிகளின் முன்னராக செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தைத் திருத்தவதற்கான விதி**

இலக்கம் 1848/25 மற்றும் 06 பெப்பரவரி 2014ம் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் படி, 0வறுபடுத்தல் தேவைக்காக உருவாக்கப்பட்ட கம்பனிகள், காப்புறுதியாளராக பதிவுசெய்வதற்கு ரூபா 100 மில்லியனை பங்கு மூலதனமாக கொடுப்பனவு செய்வதற்கும் அதன் பின்னர் மூலதனத்தை 07 பெப்பரவரி 2015 அன்று அல்லது அதற்கு முன்னர் ரூபா 500 மில்லயின் வரை அதிகரிப்பதற்கும் சபை காப்புறுதிக் கம்பனிகளை அனுமதிக்கும்.

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி

இத் தீர்மானம் புதிதாக நிறுவப்படும் காப்புறுதி வழங்குனர்களுக்கு நிவாரணத்தை வழங்குவதற்காக சபையினால் எடுக்கப்பட்டது.

**தீர்மானங்கள்**

**காப்புறுதிக் கம்பனிகளின் வருடாந்த விபரத்திரட்டு தொடர்பான தீர்மானம்**

**2000ம் ஆண்டு 43ம் இலக்க காப்புறுதி கைத்தொழிற்துறை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் பிரிவு 47(1) மற்றும் 56 – காப்புறுதிக் கம்பனிகளின் வருடாந்த விபரத்திரட்டு – 2012 மார்ச் 30ம் திகதியின் 14ம் தீர்மானம் 27 மார்ச் 2014ம் திகதி திருத்தப்பட்டது.**

30 மார்ச் 2012ம் திகதி விநியோகிக்கப்பட்ட 14ம் தீர்மானத்திற்கு அமைவாக பல்வேறுபட்ட மாதிரிப்படிவங்களில் வருடாந்த விபரத்திரட்டினைச் சமர்ப்பிப்பதற்கு காப்புறுதிக் கம்பனிகள் கோரப்பட்டன. அவற்றில் பொது காப்புறுதிக்கான கடன்தீர்த்தல் மாதிரிப் படிவம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளின் கூற்றுக்கான மாதிரிப் படிவம் என்பன 27 மார்ச் 2014ம் திகதி திருத்தப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளின் கூற்று சர்வதேச நிதியில் அறிக்கையிடலுக்கு அமைவாக மீள்திருத்தப்பட்ட போது பொது காப்புறுதிக்கான கடன்தீர்த்தல் மாதிரிப் படிவம் கே-ஜி1 மற்றும் கே - ஜி1-2 படிவங்களில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக பொது காப்புறுதி கணிப்பீட்டாளரினால் வழங்கப்பட்ட ஒதுக்கு அறிக்கையையும் உள்ளடக்கி திருத்தப்பட்டது.

**2000ம் ஆண்டு 43ம் இலக்க காப்புறுதி கைத்தொழிற்துறை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் பிரிவு 48(1) - காப்புறுதிக் கம்பனிகளின் கணிப்பீட்டு விபரத்திரட்டு - 2012 மார்ச் 30ம் திகதியின் 15ம் தீர்மானம் 27 மார்ச் 2014ம் திகதி திருத்தப்பட்டது.**

சட்டத்தின் 48ம் பிரிவுக்கு அமைவாக 30 மார்ச் 2012ம் திகதி விநியோகிக்கப்பட்ட 15ம் தீர்மானத்திற்கு அமைவாக பல்வேறுபட்ட மாதிரிப்படிவங்களில் கணிப்பீட்டு விபரத்திரட்டினைச் சமர்ப்பிப்பதற்கு காப்புறுதிக் கம்பனிகள் கோரப்பட்டன. அவற்றில் பூட்கை பொறுப்புகளின் மதிப்பீடு தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக கணிப்பீட்டு அறிக்கை மற்றும் சுருக்கம் என்பன 27 மார்ச் 2014ம் திகதி மீளத்திருத்தப்பட்டது.

சட்டத்தின் பிரிவு 47(1) மற்றும் 48 ற்கு அமைவாக, வருடாந்த விபரத்திரட்டுகள் மற்றும் கணிப்பீட்டு விபரத்திரட்டுகளுக்கான மாதிரிப் படிவங்களை விநியோகிப்பதற்கு சபையை அனுமதிக்கின்றது.

**சட்டத்தின் பிரிவு 96 (அ) வின் கீழ் விநியோகிக்கப்பட்ட பணிப்புரைகள்**

**காப்புறுதி வழங்குனர்களின் பொதுவான தலைமை அலுவலர் மற்றும் பொதுவான குறித்துரைக்கப்பட்ட அலுவலர் தொடர்பாக 31 டிசம்பர் 2013ம் திகதி வழங்கப்பட்ட பணிப்புரை 3(iii) மற்றும் 24 செப்டெம்பர் 2014 வழங்கப்பட்ட பணிப்புரை 3(அ) திருத்தப்பட்டது**

31 டிசம்பர் 2013ம் திகதி வழங்கப்பட்ட பணிப்புரை 3(iii), கம்பனிக்கு, இன்னொரு கம்பனியினால் நியமிக்கப்படாத வேறுபட்ட தலைமை அலுவலர் மற்றும் குறித்துறைக்கப்பட்ட அலுவலரை நியமிக்கக் கோரி காப்புறுதியாளர்கள் 30 ஜூன் 2014 திகதி கோரப்பட்டனர்.

எனினும், குறிப்பிட்ட காலப்பகுதியில் சில காப்புறுதி வழங்கனர்கள் பொருத்தமான நபர்களை தேடுவதில் சிரமங்களை அனுபவிப்பதை சபை அவதானித்ததனால், இணங்குவதற்கான திகதியை நீடிப்பதற்கு சபை தீர்மானித்தது. அதற்கமைவாக, 31 டிசம்பர் 2014ம் திகதி வரை இணங்குவதற்கான திகதியை நீடித்து 24 செப்டெம்பர் 2014 திருத்தப்பட்ட பணிப்புரை 3 (அ) விநியோகிக்கப்பட்டது.

**02 ஜனவரி 2014 ம் திகதி வழங்கப்பட்ட பணிப்புரை 04 - பொது உட்கட்டமைப்பை பயன்படுத்தல்**

கலவைக் காப்புறுதிக கம்பனிகளை வேறுபடுத்தவதற்கான பணிப்புரை 04 ஐ சபை 02 ஜனவரி 2014ம் திகதி விநியோகித்தது. இந்த பணிப்புரையின் மூலம் 'பொது உட்கட்டமைப்பை பயன்படுத்தல்' என்பதற்கான வழிகாட்டல் குறித்துரைக்கப்பட்டது.

மற்றைய காப்புறுதி வழங்குனருடன் தற்போதுள்ள பொது உட்கட்டமைப்பினை பயன்படுத்துவதற்கு காப்புறுதி வழங்குனர் இணங்குவதற்கான தேவைகளை மேற்குறிப்பிட்ட பணிப்புரை குறித்துரைக்கின்றது.

**பணிப்புரை 05 - காப்புறுதி முகவாரக சேவையாற்றும் (தனிப்பட்டவர்கள் தவிர்ந்த) அனைத்து காப்புறுதி வழங்குனர்கள் மற்றும் காப்புறுதி தரகர்களுக்கு 18 நவம்பர் 2014ம் திகதி வழங்கப்பட்டது**

சபையினால், இலக்கம் 1861/45 மற்றும் 10 மே 2014ம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக 2014ம் ஆண்டின் விதி 1 கீழ் காப்புறுதி முகவர்களாகத் தொழிற்படும் காப்புறுதி வழங்குனர்கள் மற்றும் காப்புறுதி தரகர்களுக்கு (தனிப்பட்டவர்கள் தவிர்ந்த ஏனையவை) 18 நவம்பர் 2014ம் திகதி பணிப்புரை 05 வழங்கப்பட்டது. இதனூடாக காப்புறுதி

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி

முகவர்களாகத் தொழிற்படும் காப்புறுதி வழங்குனர்கள் மற்றும் காப்புறுதி தரகர்கள் (தனிப்பட்டவர்கள் தவர்ந்த) குறிப்பிட்ட காப்புறுதி முகவரத்துடன் இருதரப்பினரின் வேண்டுகோள் தொடர்பாக தெளிவாக வரையறுத்து எழுத்து மூலமான முகவர் ஒப்பந்தத்திற்கு வரவேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. அத்துடன் இப்பணிப்புரை இந்த எழுத்து மூல முகவர் ஒப்பந்தத்திற்கான பல்வேறுபட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளை குறித்துரைத்துள்ளது.

**சுற்றறிக்கைகள்**

**10 ஜூன் 2014ம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கை 34 – காப்புறுதி முகவரகங்களை பதிவுசெய்தல் ( தனிப்பட்டவர்கள் தவிர்ந்த)**

சட்டத்தின் 78(1)ம் பிரிவுக்கு கீழ் குறிப்பிட்ட தேவைகளைப் பிரதிபலிக்கும் வகையில், சுற்றறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரி படிவத்திற்கு அமைவாக அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதித் தரகர் கம்பனிகள் காப்புறுதி முகவர்களுக்கு தனியான பதிவேட்டினை பேணுமாறு சபை சுற்றுநிருபம் 34ஐ விநியோகித்தது.

**17 ஒக்டோபர் 2014ம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கை 35 - பெறுமதியாளர்களுக்கான தகைமை கட்டளைக்கல் - 14 மார்ச் 2013ம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கை 30 திருத்தப்பட்டது.**

கைத்தொழிற்துறையில் இருந்து கிடைக்கப்பெற்ற கோரிக்கைகள் கருத்தில்கொள்ளப்பட்டு, 14 மார்ச் 2013ம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கை 30 திருத்தப்பட்டு பெறுமதியாளர்களுக்கான தகைமை கட்டளைக்கல்லினுள் பட்டதாரி அங்கத்தவர்கள் உட்படுத்தப்பட்டனர். அதன்படி, குறிப்பிட்ட 30ம் இலக்க சுற்றறிக்கையின் அ பந்தியில் திருத்தம் கொண்டுவரப்பட்டு, பெறுமதியாளர் பயிற்சியில் 15 வருட பதவி தகைமை அனுபவத்தைக் கொண்டுள்ள இலங்கை பெறுமதியாளர் நிறுவனத்தின் பட்டதாரி அங்கத்தவர் என்பதும் பெறுமதியாளர் தகைமைக் கட்டளைக்கல்லில் உட்படுத்தப்பட்டது.

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி

## புலனாய்வு சார்ந்த மீளாய்வு

பூட்கை வைப்பாளர்களின் நன்மைகளை பாதுகாக்கும் நோக்கத்திக் கீழ், காப்புறுதி வழங்குனர்கள் மற்றும் கோரிக்கையாளர்கள் இருவருக்கிடையில் தோன்றும் முரண்பாடுகளை தீர்த்தவைப்பதற்காக கோரிகையாளர்கள் அதனை சபைக்கு சமர்ப்பிப்பார்கள்.

சட்டத்தின் 98ம் பிரிவின் நிபந்தனைகளுக்கு அமைவாக, வழங்கப்பட்ட கோரிகை முரண்பாட்டினைத் தீர்த்து வைப்பதற்காக அனைத்துத் தரப்பினரினதும் பிரச்சனைகளையும் செவிமடுப்பதற்கான சந்தர்ப்பம் சபையினால் வழங்கப்படும். அத்துடன், யாரேனும் காப்புறுதி வழங்குனர், தரகர் அல்லது முகவருக்கு எதிராக யாதேனும் தவறான நடவடிக்கைள் அல்லது ஒழுங்கீனங்கள் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளதா என சபை புலனாய்வு செய்யும்.

சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட விடயம் தொடர்பாக புலன்விசாரணையை ஆரம்பித்ததும், அவர்களின் தீர்மானம் தொடர்பாக அதன்கான காரணத்தை சான்றழிக்கும் தகவல்கள் மற்றும் ஆவணங்களுடன் கட்டியெழுப்புவதற்கு காப்புறுதி வழங்குனர்கள் கோரப்படுவர். தேவைப்படுமாயின் சபை தீர்மானத்திற்கு வருவதற்காக முன்றாம் தரப்பு உறுதிப்படுத்தல் மற்றும் ஏற்றுமதியாளர் கருத்துக் கேட்கப்படும்


### 2014ம் ஆண்டினுள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளும் தீர்க்கப்பட்டவைகளும்

2014ஆம் ஆண்டின்போது, மொத்தமாக 284 புதிய முறைபாடுகள் சபைக்கு கிடைக்கப்பெற்றதுடன், அதில் 230 விடயங்கள் இவ்வருடத்தினுள் தீர்க்கப்பட்டது. தீர்க்கப்பட்ட விடயங்களில் சபையின் தலைடு காரணமாக 38 கோரிக்கைகள் காப்புறுதி வழங்குனர்களினால் வழங்கப்பட்டது. சபையின் தலையீடு காரணமாக 2014ம் ஆண்டினுள் தீர்க்கப்பட்ட கோரிக்கைகளின் ஒன்றுசேர்த்த பெறுமதி ரூபா 33.6 மில்லியன் (28 விடயங்களின் தீர்க்கப்பட்ட தொகை மட்டும் அறிக்கையிடப்பட்டுள்ளது) ஆகும்.

2013 ஆம் ஆண்டின் போது கிடைக்கப் பெற்றதும். தீர்க்கப்பட்டதுமான முறைபாடுகளை வரைபடம் 01 காண்பிக்கின்றது.

**வரைபு 01**

*கடந்த ஐந்து வருடங்களில் சபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள்*





கடந்த ஐந்து வருடங்களில் சபைக்கு மொத்தமாக 1,283 விடயங்களி கிடைக்கப்பெற்றது. வரைபு 1இல் காட்டப்பட்டுள்ளவாறு, 2010ம் ஆண்டில் இருந்து அதிகரித்துவந்த விடயங்களின் எண்ணிக்கையானது 2013ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014ம் ஆண்டு வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி


**வரைபு 2**

***2014 ஆம் ஆண்டின் போது கிடைக்குப் பெற்ற விடயங்களின் பகுப்பாய்வு மாதாந்த ரீதியாக***




**வரைபு 3**

***2014ம் ஆண்டு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் வகைப்படுத்தல்***




2014ம் ஆண்டினுள் சபைக்கு அனுப்பப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கையை மாதாந்த அடிப்படையில் வரைபு 2இல் காட்டப்பட்டுள்ளது. அதிகப்படியான முறைப்பாடுகள் ஜனவரி மாதத்தில் இருந்து மார்ச் மாதம் வரை கிடைக்கப்பெற்றதுடன், டிசம்பர் மாதத்தில் குறைந்தளவு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றமை பதிவுசெய்யப்பட்டுள்ளது. கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை வருடத்தில் இறுதியில் குறைவடைந்து செல்கின்றது.

2014ம் ஆண்டு கிடைக்கப்பெற்ற மொத்த முறைப்பாடுகளின் வகைப்படுத்தல் வரைபு 3இல் காட்டப்பட்டுள்ளது. இந்த மொத்த முறைப்பாடுகளில் முறையே 148 (52%) மற்றும் 113 (40%) முறைப்பாடுகள் பொதுக் காப்புறுதி வியாபாரம் மற்றும் நீண்டகால காப்புறுதி வியாபாரம் தொடர்பாக கிடைக்கப்பெற்றவையாகும்.

இங்கு வழங்கப்பட்டவற்றில் 23(8%) முறைப்பாடுகள் பொது முறைப்பாடுகளாகும், இவற்றை காப்புறுதி வியாபாரத்துடன் வகைப்படுத்துவதற்கு முடியாது. உதாரணம்: காப்புறுதி முகவர்களின் தகைமைகள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடு.

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி

#### நீண்டகால காப்புறுதி வியாபாரம் மீதான விதப்புரைகள்

கீழே அட்டவணை 1இல் கொடுக்கப்பட்ட முறைப்பாடுகளின் பகுப்பாய்வின்படி, காப்புறுதி வழங்குனர்களின் 'பொறுப்புகளுடன் இணங்காமை' தொடர்பாக அதிகமான முறைப்பாடுகள் (நீண்ட கால காப்புறுதி வியாபாரம் தொடர்பாக) கிடைத்துள்ளன. அனேகமாக ஏற்றுக்கொள்ளாமைக்கு அமைவது பூட்கை மூலத்தில் அவசியமான காரணிகளை வெளிப்படுத்தாமையன்றி வேறு காரணங்கள் இல்லை. சபை இவ்விடயங்களை ஆராயும் போது, கோரிக்கையாளர்களுக்கு உதவுவதற்கு முடிவதுடன், வெளிப்படுத்தப்படாமையானது உள்நோக்கத்துடன் மற்றும் மோசடியான பிரதிநிதித்துவம் என்பதன் கீழ் வராது என்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதனால், கோரிக்கைகளை நிராகரிக்கப்படுவததை தடுப்பதற்காக பிரேரரிக்கும் கட்டத்தில் (பிரேரணையை ஏற்றுக்கொள்ளல் மற்றும் தவணைக் கட்டணத்தை அறவிடுதல் தொடர்பாக தீர்மானிப்பதற்கு முன்பாக அதனை காப்புறுதியாளரினால் எவை கோரப்பட்டள்ள) அனைத்து வகையான பருப்பொருள் தகவல்களையும் வெளிப்படுத்துவதன் முக்கியத்துவம் தொடர்பாக பொது மக்களுக்கு விழிப்புணர்வைத் தருவதற்கு முடிவு செய்யப்பட்டது.

**அட்டவணை 1**

*நீண்டகால காப்புறுதி வியாபாரம் தொடர்பான முறைப்பாடுகள்: பிரச்சனைகள் ரீதியாக*

| பிரச்சினை | # | % |
|---|---|---|
| பொறுப்பினை ஏற்றுக்கொள்ளாமை | 29 | 25.66 |
| மீள்கொடுப்பனவு/இரத்துச்செய்தல் அல்லது புதுப்பித்தல் | 24 | 21.24 |
| தவணைக் கொடுப்பனவின் கொடுப்பனவு/தவறான ஒதுக்கு | 24 | 21.24 |
| முதிர்ச்சி/சரணடையும் பெறுமதி | 15 | 13.28 |
| தகவலுக்கான ஏற்பாடு | 12 | 10.62 |
| வழங்கப்பட்ட கோரிக்கை தொடர்பாக திருப்தியின்மை | 8 | 7.08 |
| ஏனையவை | 1 | 0.88 |
| **மொத்தம்** | **113** | **100** |

ஏறத்தாள 21 வீதமான விடயங்கள் (நீண்ட கால காப்புறுதி வியாபாரத்துடன் தொடர்புடையவை) பூட்கைகளை இரத்துசெய்தல் அல்லது புதுப்பித்தலுடன் தொடர்புடையவையாகும். இந்த முறைப்பாடுகளில் பிரதானமானவை காலம் முடிவடையும் தொடர்பான விழிப்புணர்வின்மை (அதாவது எந்தக் காலப்பகுதிக்குள் காப்புறுதிக் பூட்கை இரத்துச்செய்யப்பட முடியும்) , அவசரமான நிதித் தேவைகள், காப்புறுதிக் பூட்கையை இரத்துச்செய்வதற்கான விருப்பம் மற்றும் கொடுப்பனவு செய்யப்பட்ட தவணைக் கட்டணத்தை மீளக் கோருதல் போன்றவையாகும். எனினும், முறைப்பாட்டாளர் மீள்கொடுப்பனவுக்கு தகைமை இல்லாத சந்தர்ப்பங்களில் முறைப்பாட்டாளருக்கு உதவும் வகையில் சபை இல்லை. (உரிய காப்புறுதி பூட்கையில் உள்ள நியதிகள் மற்றும் நியமனங்களுக்கு அமைவாக) இக்குறித்த முறைப்பாடுகள் தொடர்பாக சமர்ப்பித்தல் பெறுமதிக்கு தகைமைபெறுவதற்கு பாதுகாப்புக் காலம் மற்றும் தேவைகள் பற்றிய போதிய அறிவின்மையானது பிரதான காரணமாக அமைந்துள்ளது.


கொடுப்பனவு தவணைக் கட்டணம் தொடர்பான முறைப்பாடுகள் 21% கிடைத்துள்ளது. தவணைக் கட்டணக் கொடுப்பனவு தொடர்பான ஆவணச் சான்றுகளை வழங்கிய முறைப்பாட்டாளர்களுக்கு நட்டவீட்டினை வழங்குவதற்கு சபையினால் விசாரணைகளை மேற்கொள்ள முடிந்தது. எனினும், தவணைக் கட்டணக் கொடுப்பனவிற்கு பற்றுச்சீட்டுகளை வழங்காமை அல்லது தாமதமாக வழங்கியமை (கொடுப்பனவுகள் நேரடியாக காப்புறுதி வழங்குனர்களுக்கு செலுத்தப்படாத சந்தர்ப்பங்களில்) தொடர்பான பிரச்சனைகள் மேற்குறிப்பிட்டவாறு கருத்தில்கொள்ளப்பட்டு தீர்க்கப்பட்டது. 13 வீதமான முறைப்பாடுகள் பூட்கையின் முதிர்ச்சியின் கணிப்பீடு அல்லது சமர்ப்பித்தல் பெறுமதி தொடர்பான தெளிவின்மை மற்றும் விளக்கமின்மையினால் வழங்கப்பட்டவையாகும். தவறான வழிநடத்துகை அல்லது முன்விற்பனை நடைமுறை தொடாபான போதிய தகவலின்மை தொடர்பாக 12 முறைப்பாடுகள் சபைக்கு கிடைக்கப்பெற்றது.

#### பொதுக் காப்புறுதி வியாபாரம் மீதான விதப்புரைகள்

பண்டத்தின் வகையை அடிப்படையாகக் கொண்டு பொதுக் காப்புறுதி வியாபாரம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வு தொடர்பான விபரங்கள் அட்டவணை 4இல் காட்டப்பட்டுள்ளது. பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் வழங்கப்பட்ட முறைப்பாடுகளில், அதாவது 112 (75%) பெரும்பாலானவை வாகனக் காப்புறுதி பூட்கை தொடர்பானவையாகும். இவை இவ்வருடத்தில் சபைக்கு வழங்கப்பட்ட முறைப்பாடுகளில் 40% வீதமானவையாகும். ஏனையவற்றில் 11% வீதமானவை நெருப்பு மற்றும் நானாவித வகையைச் சேர்ந்தவையாகும். பொது காப்புறுதி வியாபாரம் தொடாபாக பிரச்சினைகள் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வு அட்டவணை 2இல் காட்டப்பட்டுள்ளது.

**வரைபு 4:**

*பொதுக் காப்புறுதி வியாபாரம் தொடர்பான முறைப்பாடுகள்: காப்புறுதி வகைகளின் அடிப்படையில*



# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி

**அட்டவணை 2**

*பொதுக் காப்புறுதி வியாபாரம் தொடர்பான முறைப்பாடுகள்: காப்புறுதி வகைகளின் அடிப்படையில்*

| பிரச்சினை | # | % |
|---|---|---|
| பொறுப்பினை ஏற்றுக்கொள்ளாமை | 99 | 66.89 |
| வழங்கப்பட்ட கோரிக்கைக் கொடுப்பனவு தொடர்பாக திருப்தியின்மை | 20 | 13.51 |
| கோரிக்கைக் கொடுப்பனவுகளை வழங்குவதில் தாமதம் | 15 | 10.14 |
| ஏனையவை | 14 | 9.46 |
| **மொத்தம்** | **148** | **100** |

பொதுக் காப்புறுதி தொடர்பாக வழங்கப்பட்ட முறைப்பாடுகளில் பிரதானமானவை (67%) 'பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளாமை' தொடர்பானவையாகும். காப்புறுதி வழங்குனர்களினால் வழங்கப்பட்ட சமர்ப்பித்தல்களில், உட்சேர்க்கப்படாத பாவனை, சாரதியின் பதிலீடு மற்றும் கோரிக்கை நடைமுறைகளுடன் இணங்காமை என்பன அக் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டமைக்கான காரணங்களாக அமைந்துள்ளன. சபைக்கு வழங்கப்பட்ட கோரிக்கைகளை தீர்ப்பதில் தாமதம் (15 கோரிக்கைகள்) போன்றவை சபையின் தலையீட்டினால் தீர்க்கப்பட்டது.

சபைக்கு அனுப்பப்பட்ட முறைப்பாடுகளில், கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டமைக்கான காரணங்கள் மற்றும் காப்புறுதி வழங்குனர்களின் தீர்மானம் தொடர்பாக அவர்கள் திருப்தியடையாவிடில் அதனைக் கோருவதற்கு அவர்களிடமுள்ள தெரிவு தொடர்பாக தெளிவாக குறிப்பிடாமை என்பன உள்ளடங்கியிருந்தன. இது தொடர்பாக நடடிக்கை எடுக்கப்படுமென 'முறைப்பாடுகளை கையாளுதல்' எனும் தலைப்பில் முன்மொழியப்பட்ட வழிகாட்டல்கள் கூட்டிணைக்கப்பட்டு காப்புறுதி வழங்குனர்களுக்கு வழங்கப்பட்டது.

**ஏனைய பங்குபற்றல்கள்**

- *முகவர் பிரச்சனை மீது கூட்டு ஆணைக்குழு*
  காப்புறுதி முகவர்கள் தொடர்பான முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்காக இலங்கை காப்புறுதிச் சபை, இலங்கை காப்புறுதிச் சங்கம், இலங்கை காப்புறுதி முகவர்கள் சங்கம் மற்றும் இலங்கை காப்புறுதி நிறுவனம் என்பவற்றின் அங்கத்தவர்களை உள்ளடக்கி கூட்டு ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. குழுவின் கூட்டங்கள் நடைபெற்றதுடன், இது சபையினால் ஒருங்கிணைக்கப்பட்டது. இவ்வருடம், காப்புறுதி முகவர்களுக்கான 'இடைநிறுத்தல் மற்றும் மனக்குறை என்பவற்றை கையாளும் நடைமுறைகள்' மற்றும் 'ஒழுக்க நெறிகள்' என்பவற்றினை முன்வரைவினை குழுவினால் தயாரிக்க முடிந்தது. அத்துடன், 'முகவர்களின் தரவுத் தளத்தைப் பேணுதல்' மற்றும்' தவணைக் கட்டணங்களின் தவறான ஒதுக்கீடு' போன்ற ஏனைய விடயங்களும் கலந்துரையாடப்பட்டதுடன், சபை அவற்றை தன் கவனத்திலும் கொண்டது.

- *முறைப்பாடுகளை கையாளும் நடைமுறையை அமுல்படுத்தல்*
  சபை முறைப்பாடுகளை கையாளுவதற்கு எழுத்து மூல உள்ளக நடைமுறையொன்றை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கையை ஆரம்பித்தது. இதனை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதன் நோக்கம் முறைப்பாடுகளை கையாளுவதில் நிலைமாறமை மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றை உருவாக்குவதற்காகவாகும்.

- *காப்புறுதியின் பிரதான கோட்பாட்டின் பிரயோகம் (ICP 19: வியாபாரத்தைக் கொண்டு நடாத்துதல்)*
  காப்புறுதி துறையினை ஒழுங்குபடுத்துவதற்கும் மற்றும் மேற்பார்வை செய்வதற்கும் சர்வதேசத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டகத்தினுள் காப்புறுதியின் பிரதான கோட்பாட்டுகளைக் காப்புறுதி கண்காணிப்பாளர்களின் சர்வதேச சங்கம் அபிவிருத்தி செய்துள்ளது. வியாபாரத்தைக் கொண்டு நடாத்துவதற்கான 19வது காப்புறுதியின் பிரதான கோட்பாட்டின் குறித்துரைத்த தேவைகளாக வாடிக்கையாளர்களை நியாயமாக நடத்துதல், முன்விற்பனை செயற்பாடு மற்று் காப்புறுதிக் பூட்கை சேவை வழங்கல் என்பவற்றின் வெளியீடுகள் மற்றும் அணவல்கள் கவனத்தில் கொள்ளப்பட்டள்ளது. இலங்கை காப்புறுதித்துறையில் மேற்குறித்த காப்புறுதியின் பிரதான கோட்பாட்டின் பிரயோகத்தில் காணப்படும் இடைவெளியை அடையாளம் காண்பதற்கு இதன் கீழ் உள்ள நியமங்களை பரீட்சிப்பதற்கான நடவடிக்கைகயை சபை ஆரம்பித்துள்ளது.

- *புலனாய்வாளர்களின் நடைமுறைகள்*
  காப்புறுதி வழங்குனர்கள் சந்தேகத்திற்கிடமான கோரிக்கைகள் தொடர்பாக பொறுப்பினை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக புலனாய்வுகளை உள்ளகரீதியாக சுதந்திரமான புலனாய்வாளர்களின் உதவியுடன் நடத்துகின்றார்கள். எனினும், புலனாய்வுகளை நடத்துவதற்கு புலனாய்வாளர்களினால் பின்பற்றப்படும் சில நடைமுறைகள் ஏற்றுக்கொள்ளக்கூடியனவல்ல என்பதனால் அவை நிராகரிக்கப்படுகின்றது. உதாரணம்: தவறான அடையாளப்படுத்தல் மற்றும் பதிலளிப்பவரை அச்சுறுத்தல் போன்றவை. காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் ஆலோசனையுடன் இந்நடைமுறையினை ஒழுங்குபடுத்தவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி

## சந்தை அபிவிருத்தியும் மற்றும் வெளியக உறவுகளும் மீளாய்வு

மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தல் என்பவற்றுக்கு மேலதிகமாக சபை காப்புறுதிக் கைத்தொழில் அபிவிருத்தியையும் நம்புகின்றது. காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் அபிவிருத்திக்கு காப்புறுதித் தேவை மீதான பொது மக்களின் விழிப்புணர்வு மற்றும் நம்பிக்கை ஊக்குவிக்கபப்படுதல் வேண்டும். நீண்ட கால மற்றும் பொது காப்புறுதி வியாபாரம் என்பவற்றின் குறைந்த மட்ட ஊடுறுவல், காப்புறுதி மற்றும் அதன் பரப்புகள் அல்லது காப்புறுதி அணவர் அவசியமாகும் சந்தர்ப்பங்கள் தொடர்பான முக்கியத்துவம் பற்றி பொது மக்கள் விழிப்பிணர்வின் தேவையைக் காட்டுகின்றது. தற்போதுள்ள மற்றும் எதிர்கால காப்புறுதி பூட்கையாளர்கள் இக்கைத்தொழிற்துறையின் பிரதான நலன்விரும்பிகளாக இருப்பதனால் அவர்களின் விருப்பத்தைப் பாதுகாப்பதற்காகவும் மற்றும் அவர்கள் காப்புறுதி ஒப்பந்தத்திற்கு நுழைவதற்கான தீர்மானத்தை எடுப்பதற்கும் அறிவினை மேம்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

சபை நேரடியான மற்றும் நேரடியல்லாத ஊடகங்களின் ஊடாக பொது மக்கள் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது. இவ்வருடத்தினுள் தொடர்பாடல் ஊடகம் பயன்படுத்தப்பட்ட விபரங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் கீழே மீள்நோக்கு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் கண்டி மாவட்டச் செயலகத்தில் இரு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் திம்பிரிகஸ்யாய, புத்தளம், கம்பஹா, ஹிங்குராக்கொட, ரம்புக்கண, பத்தேகம, இரத்தினபுரி மற்றும் சியம்பலாண்டுவ உட்பட எட்டு பிரதேச செயலகங்களிலும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், இதில் 456 கிராம சேவை பிரிவுகள் உள்ளடக்கப்பட்டன. 2014ம் ஆண்டு நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் 1,100 அலுவலர்கள் பங்குபற்றினர்.

### விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

இந்த நிகழ்ச்சித்திட்டம் கிராம சேவை அலுவலர்கள் மற்றும் கள உத்தியோகத்தர்கள் போன்ற பிரதேச செயலகத்தில் இணைக்கப்பட்டுள்ள அரசாங்க அலுவலர்களின் அறிவை மேம்படுத்தவதன் ஊடாக பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவதற்காக ஒழுங்குசெய்யப்பட்டது (உரிய பிரதேச செயலகத்தின் பங்குபற்றலுடன்). நிகழ்ச்சியின் போது பங்குபற்றுனர்களினால் எழுப்பப்பட்ட காப்புறுதி தொடர்பான பல்வேறுபட்ட பிரச்சனைகளுக்கு தெளிவுபடுத்தல்கள் வழங்கப்பட்டது. மீளாய்வுக் காலப்பகுதியில், வட மேல். சப்ரகமுவ, மத்திய, ஊவா, தென், வட மேற்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேச செயலகங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டது.





### கண்காட்சிகளில் பங்கேற்பு

2014 பெப்பரவரி 8ம் ஆம் திகதியிலிருந்து 01 மார்ச் வரை குளியாப்பிட்டி வயம்ப பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற 8வது "தயட்ட கிருள" கண்காட்சியில் சபை பங்கேற்றது. பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களை அதிகமாகக் கொண்ட ஏறத்தாள 3,000 மேற்பட்ட பொதுமக்களை சபையின் கூடம் கவர்ந்தது

அத்துடன் சபையின் அதிகாரிகளுடன் தொடர்பாடலை ஏற்படுத்திக் கொள்வதற்கும் அதன் மூலம் காப்புறுதி தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும்

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி

தெளிவுபடுத்தல்களை மேற்கொள்வதற்கும் இந்த கண்காட்சி அறைகளுக்கு வருகை தந்தவர்களுக்கு நல்லதொரு வாய்ப்பையும் வழங்கியது. கூடத்திற்கு வருகை தந்த வருகையாளர் அனைவருக்கும் சபையின் கட்டமைப்பு மற்றும் காப்புறுதி கைத்தொழிற்துறையின் சட்ட மற்றும் ஒழுங்கமைப்பு சட்டகம் என்பவற்றின் அதன் வகிபாகம் தொடர்பான விழிப்புணர்வு வழங்கப்பட்டது.




**மின்னிலத்திரனியல் ஊடாகங்கள் ஊடான விழிப்புணர்வு**

இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனத்தினால் 13 ஒகஸ்ட் 2014ம் திகதி ஒளிபரப்பப்பட்ட "வியாபார உலகம்" தொலைக்காட்சி செய்தி நிகழ்ச்சியில் சபை பங்குபற்றியது. நிதி மற்றும் நிர்வாகப் பணிப்பாளர் சபையின் சார்பில் பங்குபற்றியதுடன், இதனூடாக "சபையின் செயற்பாடுகள் மற்றும் காப்புறுதி தொடர்பான முக்கியமான தகவல்கள்" பற்றிய விழிப்புணர்வு மக்களுக்கு வழங்கப்பட்டது.

**அச்சக ஊடாகத்தின் ஊடான விழிப்புணர்வு**

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் சபை கீழ்வரும் கட்டுரைகள், பத்திரிகை அறிவித்தல்கள் மற்றும் பத்திரிகை வெளியீடுகள் என்பற்றை பிரசுரித்தது.

**பத்திரிகை வெளியீடுகள்**

- 2014 ஜூன் மாதத்தில், "2013 ஆம் ஆண்டின் போது காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் செயலாற்றல்கள்" என்ற பத்திரிகை வெளியீடு வெளியிடப்பட்டது.
- 2014 டிசம்பர் மாதத்தில், "2014 ஆம் ஆண்டின் முதல் அரை ஆண்டின் போது காப்புறுதி தொழிலின் செயலாற்றல்" என்ற பத்திரிகை வெளியீடு வெளியிடப்பட்டது.
- "நுண் காப்புறுதி செயலமர்வு" எனும் பத்திரிகை வெளியீடு 2014 மே மாதம் வெளியிடப்பட்டது.

**பத்திரிகை அறிவித்தல்கள்**

- 2014 மார்ச் மாதத்தில் "மன்னிப்புக்குப் பதிலாக சிறந்த பாதுகாப்பு" எனும் தலைப்பில் பதிவுசெய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதித் தரகர் கம்பனிகளின் பட்டியலை உள்ளடக்கிய பத்திரிகை அறிவித்தல் மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்டது

**பத்திரிகை கட்டுரைகள்**

- "இலங்கையில் நுண் காப்புறுதி: அதன் தலைப்பு எங்கே?" எனும் தலைப்பில் கட்டுரையொன்று 2014 ஜுலை மாதத்தில் பிரசுரிக்கப்பட்டது.

**வெளியீடுகள்**

தயட கிருள தேசிய கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களில் கீழ்வரும் வெளியீடுகளை சபை அச்சிட்டு விநியோகித்தது.

**சுவரொட்டிகள்**

காப்புறுதி தொடர்பாக அறிவூட்டும் சுவரொட்டிகள் மூன்று மொழிகளிலும் அச்சிடப்பட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களில் விநியோகிக்கப்பட்டது. பொது மக்களுக்கு பரவலாக தகவல்கள் கிடைப்பதற்காக, கிராம சேவை அலுவலர்களின் அலுவலகத்தில் காட்சிப்படுத்துவதற்கு சுவரொட்டிகள் வழங்கப்பட்டது.

**துண்டு பிரசுரங்கள்**

இக்காலத்தில் பின்வரும் தலைப்புகளில் துண்டுப் பிரசுரங்கள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது.

- "காப்புறுதி – நீங்கள் அறிந்திருக்கின்றீர்களா?''
- "கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்".
- "காப்புறுதி பிரேரணைப் படிவங்கள்".
- "காப்புறுதி வழங்குனர்களின் பட்டியல்"
- "காப்புறுதியின் முக்கியத்துவம்"
- "இலங்கை காப்புறுதிச் சபை"

மேற்குறிப்பிட்ட வெளியீடுகளை எங்கள் www.ibsl.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பார்வையிடவும் பதிவிறக்கம் செய்யவும் கிடைக்கப்பெறும்.

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி

**ஏனைய நடவடிக்கைகள்**

- *உற்பத்தி இடைவெளி பகுப்பாய்வு*
  காப்புறுதி வழங்குனர்களினால் வழங்கப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட உடல்நலக் காப்புறுதி பூட்கைகள் பரீட்சிக்கப்பட்டதுடன், மேம்படுத்துவதற்கு அவசியமான பரப்புகள் அடையாளம் காணப்பட்டது.

- *நுண் காப்புறுதி தொடர்பான செயலமர்வு*
  காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் குறைந்த மட்ட ஊடுறுவல் கருத்தில் கொள்ளப்பட்டு சர்வதேச மட்டத்திலான அபிவிருத்தி மற்றும் காப்புறுதியை அணுகுவதற் வசதிகள கான் ஒப்பீடுசெய்யப்பட்டது. இதற்காக சபை 2014 மே மாதத்தில் “இலங்கையில் நுண் காப்புறுதியை ஊக்குவித்தல்” எனும் தலைப்பில் செயலமர்வு ஒன்றினை ஒழுங்குசெய்தது. .



- *பொதுமக்கள் ஆலோசனை*
  மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில், காப்புறுதியுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் குறித்து விசாரணைகள் செய்யும் பொது மக்கள், காப்புறுதி வைப்பாளர்கள் மற்றும் பங்குரிமையாளர்கள் ஆகியோரின் பலதரப்பட்ட விசாரணைகளையும். முறைப்பாடுகளையும் சபை கவனத்தில் கொண்டது.

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி

## நிர்வாக மீளாய்வு

### பணிக் குழுவினர்

எந்த ஒரு நிறுவனத்தின் வெற்றியும் அதன் நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட மக்களின் திறமையிலேயே பெரும் அளவில் தங்கி இருக்கின்றது. எனவே, சபையின் வெற்றிகரமான உத்திகளுக்கு முதுகெலும்பாக இருப்பது மனித மூலவளம் என நாங்கள் நம்புகின்றோம்.
காப்புறுதி வைப்பாளர்கள் மற்றும் உத்தேச காப்புறுதி வைப்பாளர்கள் அனைவரது ஆர்வங்களையும் பாதுகாக்கும் நோக்கத்துடன். இலங்கையின் காப்புறுதி கைத்தொழில் நேர்மையுடன் நடத்தப்படுவதை உறுதி செய்யும் ஒட்டு மொத்த நோக்கத்தை அடைவதற்கு தனது கடமையை நிறைவேற்ற அவசியமான நடவடிக்கைகளை அடையாளம் காணுகின்றது.
தேவைப்படும் தொழிற் சார்ந்தவர்களை ஏற்ற நேரத்தில் நியமிப்பதன் ஊடாக, மனித வளத்தை வலுப்படுத்தும் நோக்கத்துடன். மீளாய்வின் கீழ் வரும் ஆண்டின் போது அனேக முக்கியமான முன்னெடுப்புகளை சபை எடுத்தது. இத்தகைய முன்னெடுப்புகளை சந்திப்பதற்காக, மீளாய்வின் கீழ் வரும் ஆண்டின் போது நிரந்தர பதவிகளுக்கு ஒரு பணிப்பாளர் மற்றும் இரண்டு நிறைவேற்று அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். 2014 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு, சபையின் மொத்த பணியாட் தொகுதியினரின் வலு 41 ஆகும்.

கீழே உள்ள அட்டவணையில் பணியாட் தொகுதியினரின் கல்வி மற்றும் தொழில் சார்ந்த தகைமைகள் காட்டப்பட்டுள்ளது

| ஊழியர்களின் எண்ணிக்கை | கல்வி சார்ந்த/தொழில் சார்ந்த தகைமைகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பட்டப்பின்படிப்பு பட்டங்களும் முதலாவது பட்டமும், மற்றும் தொழில் சார்ந்த தகைமைகளும் | பட்டப்பின் படிப்பு பட்டங்களும் மற்றும் தொழில் சார்ந்த தகைமைகளும் | பட்டப் பின்படிப்பு மற்றும் முதலாவது பட்டம் | முதலாவது பட்டமும் மற்றும் தொழில் சார்ந்த தகைமைகளும் | முதலாவது பட்டம் | தொழில் சார்ந்த தகைமைகள் |
| 41 | 03 | 02 | 02 | 11 | 08 | 04 |

### பயிற்சி

நிறுவனத்தின் இலக்குகளை அடைவதற்கு ஊழியர்கள் அறிவையும் தொழில்சார்ந்த திறனையும் மேம்படுத்திக் கொள்வதற்கு பயிற்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது சபையின் கொள்கையாகும். இவ்வருடக் காலப்பகுதியில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் பயிற்சி சந்தர்ப்பங்கள் அளிக்கப்படுவதற்காக மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வகைப்படுத்தல் | 2013 (ரூ.) | 2014 (ரூ.) |
|---|---|---|
| உள்நாட்டுப் பயிற்சி | 1,535,494/- | 2,204,709/- |
| வெளிநாட்டுப் பயிற்சி | 6,287,452/- | 7,701,049/- |

### பணியாட் தொகுதியினரின் நலன்கள்

நிறுவனத்தின் பணியாளர்களின் நலன்களில் அக்கறை காட்டுவது, அவர்கள் மத்தியில் ஊக்குவிப்பை உருவாக்குவதிலும் அவர்களின் நேர்மையை அதிகரிப்பதிலும் முக்கிய காரணியாக செயற்படுகின்றது. எனவே, உள்ளேயும், வெளியிலும் கிடைக்கும் மருத்துவத் திட்டங்கள், சுய விபத்து காப்புறுதி பூட்கை, வாகனம் மற்றும் துயரிடர் கடன் திட்டங்கள், பண்டிகை முற்பணக் கொடுப்பனவுகள் உள்ளடங்களாக கவர்ச்சிகரமான நலன்புரி பொதிகள் ஆகியவற்றை சபை வழங்குகின்றது. மேலும் உள்ளக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் வருடாந்த ஒன்று கூடல் போன்றவற்றை ஒழுங்குபடுத்துவதன் மூலம் பணியாட் தொகுதியினருடனும், அவர்களின் குடுப்பத்தினருடனும் நல்லுறவுகளை விருத்தி செய்வதற்கான வாய்ப்புகளையும் சபை வழங்குகின்றது.

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி


## நிதியியல் மீளாய்வு

### காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியம் (PPF)

காப்புறுதி தொழில் சட்டத்தின் பிரகாரம், காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்திற்காக சேகரிக்கப்படுகின்ற, அச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு நோக்கத்திற்கும் உடனடியாகத் தேவைப்படாத எந்தவொரு பணமும் (Cess) விவேகமான முறையில் சிறந்த வருவாயை ஈட்டுவதற்காக சபையினால் முதலீடு செய்யப்பட வேண்டும். அதன் பிரகாரம் இந்த ஆண்டில் அத்தகைய நிதிகளை உரியவாறு சபை முதலீடு செய்ததுடன், பின்வரும் வரைபு 01 செஸ் சேகரிப்பு மற்றும் ஈட்டப்பட்ட வருமானம் ஆகியவற்றை விபரமாக காட்டுகின்றது.

**வரைபடம் 01**

***2010-2014 வரையிலான காலப்பகுதியில் பெற்றப்பட்ட செஸ் வருமானமும் முதலீட்டு வருமானமும்***





| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| செஸ் வருமானம் (ரூ.மி) | 145 | 217 | 237 | 246 | 274 |
| முதலீட்டு வருமானம் (ரூ.மி) | 76 | 80 | 136 | 236 | 158 |

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான செஸ் வருமானம் வளர்ச்சி அடைந்ததையும் வட்டி வீதங்களின் வீழ்ச்சி காரணத்தினால் முதலீட்டு வருமானம் 2013ம் இருந்து 2014 வரை வீழ்ச்சி அடைந்ததை வரைபு 1 காட்டுகின்றது.

கடந்த ஐந்து வருடங்களில் காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் பெறுமதி அதிகரித்திருப்பதை வரைபு 2 காட்டுகின்றது.

**வரைபு 2**

***2010 - 2013 காலப்பகுதிக்கான காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியத்தின் பெறுமதி***





| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்ப நிதியத்தின் மதிப்பு (ரூ.மி) | 1,012 | 1,276 | 1,622 | 1,778 | 2,185 |

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி

2014 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு, காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் சொத்துகளின் தொகுப்பு, கீழே தரப்பட்டுள்ளது.

**வரைபு 3**

***2014 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் சொத்துகளின் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது***




**சபையின் வருமானம்**


சபையின் அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் பின்வரும் வழிவகைகள் மூலம் கிடைக்கப் பெறுகின்றன.

- காப்புறுதி வழங்குனர் மற்றும் காப்புறுதி தரகுக் கம்பனிகளிடம் இருந்து கிடைக்கும் பதிவுக் கட்டணம்.
- காப்புறுதி கம்பனிகளிடம் இருந்து அறவிடப்படும் வருடாந்தக் கட்டணம்.
- காப்புறுதித் தரகுக் கம்பனிகளின் பதிவுகளை புதுப்பிக்கும் வருடாந்த பதிவு கட்டணம்.
- மிகை நிதியங்களை முதலீடு செய்வதன் மூலமான வட்டி வருமானம்.

2010 இலிருந்து 2014 வரையான காலப்பகுதியில் கிடைக்கப் பெற்ற அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் பிரிவுகளை வரைபு 4 காட்டுகின்றது.

**வரைபு 4**

***2010 - 2014 வரையிலான காலப் பகுதிக்கான சபையின் வருமானம்***




| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| ஆண்டிற்கான கட்டணம் (ரூ.மில்) | 29 | 35 | 61 | 70 | 73 |
| பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல் கட்டணம் (ரூ.மில்) | 2 | 3 | 5 | 4 | 4 |
| ஏனைய வருமானம் (ரூ.மில்) | 3 | 1 | 2 | 1 | 2 |
| கொடைகளின் அங்கீகாரம் (ரூ.மில்.) | 8 | 6 | 7 | 5 | 4 |
| மொத்த வருமானம் (ரூ.மில்) | 42 | 44 | 75 | 80 | 83 |

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி


**சபையின் செலவினம்**

2010 இலிருந்து 2014 வரையான காலப்பகுதியில் சபையின் மொத்தச் செலவானது அதிகரித்துள்ளது. வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையிலான பற்றாக் குறைக்கு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தில் இருந்து நிதி அளிக்கப்படுகின்றது.

2010 இலிருந்து 2014 வரையான காலப்பகுதியில் சபையின் மொத்தச் செலவை வரைபு 5 காட்டுகின்றது.

**வரைபு 05**

***2010 - 2014 வரையான காலப்பகுதியில் சபையின் மொத்த செலவினம்***




| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| மொத்த செலவினங்கள் (ரூ.மி) | 71 | 74 | 94 | 105 | 107 |



# நிதியியல் தகவல்கள்


நிதி நிலைமையின் கூற்று 94

முழுமையான வருமானக் கூற்று 95

காசுப்பாய்ச்சல் கூற்று 96

காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு

நிதியத்தின் காசுப்பாய்ச்சல் கூற்று 97

கணக்கீட்டுக் பூட்கைகள் 98

நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் 100

# நிதி நிலமையின் கூற்று

31 டிசம்பர் 2014ம் திகதியில் உள்ளவாறான

| | குறிப்புகள் | 31.12.14 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா | 31.12.13 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா | 31.12.12 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| **நடைமுறையல்லா சொத்துக்கள்** | | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 1 | 13,501,813 | 9,941,815 | 13,165,749 |
| காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியம் - வாடகையும் நடைமுறை வைப்புகளும் | | 14,759,880 | 11,088,660 | 11,088,660 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| பொருட்பட்டியல்கள் | 3 | 274,845 | 413,051 | 391,138 |
| காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியம் - முதலீடுகளும் மற்றும் ஏனையவைகளும் | | 2,170,032,222 | 1,766,611,670 | 1,610,930,804 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 4 | 24,740,264 | 15,135,397 | 13,513,443 |
| காசும் காசுக்கு நிகரானவையும் | 5 | 38,313 | 658,301 | 1,530,608 |
| **மொத்த சொத்துக்கள்** | | 2,223,347,337 | 1,803,848,894 | 1,650,620,402 |
| **ஒதுக்குகளும் பொறுப்புகளும்** | | | | |
| **ஒதுக்குகள்** | | | | |
| காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியம் | 6 | 2,184,792,102 | 1,777,700,330 | 1,622,019,464 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கு | | 7,389,652 | - | - |
| **பொறுப்புகள்** | | | | |
| **நடைமுறையல்லா பொறுப்புகள்** | | | | |
| மாணியம் | 7 | 6,480,560 | 9,941,815 | 13,165,749 |
| ஓய்வூதிய நன்மை கடப்பாடுகள் | 8 | 3,871,767 | 3,345,318 | 1,889,445 |
| | | 10,352,327 | 13,287,133 | 15,055,194 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | | |
| முற்பணப் பெறுகை | | 11,726,535 | 4,862,417 | 4,727,599 |
| ஏனைய நடைமுறைப் பொறுப்புகள் | 9 | 9,086,721 | 7,999,014 | 8,818,145 |
| | | 20,813,256 | 12,861,431 | 13,545,744 |
| **மொத்த ஒதுக்குகளும் பொறுப்புகளும்** | | 2,223,347,337 | 1,803,848,894 | 1,650,620,402 |

இந்த நிதியியல் கூற்றுகளின் தயாரிப்பிற்கும் வெளியிடலுக்கும் இலங்கை காப்புறுதி சபையின் அங்கத்தவர்கள் பொறுப்பேற்கின்றனர்.

மேலேயுள்ள ஐந்தொகை பக்கம் 98 இலிருந்து 107 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டு பூட்கைகள் மற்றும் குறிப்புகளுக்கு இயைந்ததாக வாசிக்கப்பட வேண்டும

இலங்கை காப்புறுதி சபைக்காகவும் அதன் சார்பாகவும்

**இந்ராணி சுகததாச**
தலைவி
கொழும்பு, இலங்கை
08 யூலை 2015

**புஸ்பா வெல்லப்புலி**
அங்கத்தவர்

# முழுமையான வருமானக் கூற்று

31 டிசம்பர் 2014 இல் முடிவடைந்த ஆண்டுக்கான

| | குறிப்புகள் | 31.12.14 முடிவடைந்த ஆண்டிற்கானது ரூபா | 31.12.13 முடிவடைந்த ஆண்டிற்கானது ரூபா |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| வருவாய் | 10 | 77,586,076 | 74,278,594 |
| அங்கீகரிக்கப்பட்ட மாணியங்கள் | 7 | 4,398,353 | 4,526,970 |
| வட்டி வருமானம் | | 1,359,409 | 1,235,056 |
| காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியில் இருந்து மாற்றப்பட்டவை | 6 | 23,900,848 | 25,090,847 |
| ஏனைய வருமானம் | 11 | 151,722 | 167,242 |
| **மொத்த வருமானம்** | | 107,396,408 | 105,298,709 |
| **செலவினம்** | | | |
| பணியாளர் செலவு | 12 | (59,006,400) | (58,804,541) |
| தொழில்சார் கட்டணங்கள் | 13 | (2,181,575) | (2,178,627) |
| தொழிற்பாட்டு செலவினங்கள் | 14 | (45,858,876) | (44,000,612) |
| நிதியும் ஏனையவையும் | 15 | (186,428) | (166,722) |
| **மொத்த செலவினம்** | | (107,233,279) | (105,150,502) |
| வரிக்கு முன்னரான தேறிய மிகை (பற்றாக்குறை) | | 163,129 | 148,207 |
| வரிவிதிப்பு | | (163,129) | (148,207) |
| வரிக்கு பின்னரான தேறிய மிகை (பற்றாக்குறை) | | - | - |
| **ஆண்டுக்கான தேறிய மிகை** | | - | - |

98 இலிருந்து 107 வரையிலான பக்கங்களிலுள்ள கணக்கீட்டு பூட்கைகளும் குறிப்புகளும்நிதியியல் கூற்றுகளின் ஒன்றிணைந்த பகுதியாகவுள்ளன.

# காசுப்பாய்ச்சல் கூற்று

31 டிசம்பர் 2014 இல் முடிவடைந்த ஆண்டுக்கான

| | குறிப்புகள் | 31.12.14 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா | 31.12.13 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா | 31.12.12 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா |
|---|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல** | | | | |
| காலத்திற்கான தேறிய அதிகரிப்பு / (குறைப்பு) | | - | - | - |
| பெறுமான தேய்விற்கான ஏற்பாடு | | 4,696,716 | 4,526,970 | 6,582,865 |
| ஓய்வூதிய நன்மைக்கான ஏற்பாடு | | 679,287 | 1,698,014 | 55,536 |
| நீக்கப்படுவதன் மீதான இலாபம் / நட்டம் | | 73,035 | - | 79,761 |
| ஓய்வூதிய நன்மை கொடுப்பனவு செய்யப்பட்டது | | (152,839) | (242,141) | - |
| மீள்மதிப்பீட்டுக்கான ஆகுசெலவு | | (6,000) | - | - |
| மானியங்களின் அங்கீகரிப்பு | | (4,398,353) | (4,526,970) | (6,662,626) |
| வருமான வரி | | 163,129 | 148,207 | 238,212 |
| வட்டி வருமானம் | | (1,359,409) | (1,235,056) | (1,932,677) |
| செயற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தேறிய அதிகரிப்பு | | (304,433) | 369,024 | (1,638,928) |
| செயற்பாட்டு மூலதனத்தின் மாற்றம் | | | | |
| பொருட் பதிவேடுகளில் (அதிகரிப்பு) / குறைப்பு) | | 138,207 | (21,914) | (208,007) |
| கிடைக்க வேண்டியவற்றின் (அதிகரிப்பு) /குறைப்பு) | | (9,634,790) | (1,643,609) | (2,656,106) |
| முற்பண பெறுகைகளின் (அதிகரிப்பு) / குறைப்பு) | | 6,864,118 | 134,817 | 457,580 |
| அட்டுறுக்கள் மற்றும் கடன்பட்டோரின் அதிகரிப்பு / (குறைப்பு) | | 1,087,707 | (819,130) | 3,655,659 |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட காசுப்பாய்ச்சல் | | (1,544,758) | (2,349,836) | 1,249,126 |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிருந்தான தேறிய காசுப்பாய்சச்ல | | (1,849,192) | (1,980,812) | (389,802) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து / (பயன்படுத்தப்பட்ட) காசுப்பாய்ச்சல்** | | | | |
| வட்டி வருமானம் | | 1,226,203 | 1,108,505 | 1,735,251 |
| ஆதனம் பொறித்தொகுதி மற்றும் கருவிகளின் விற்பனையிலிருந்தான வருமானங்கள் | | 3,000 | - | - |
| ஆதனம் பொறித்தொகுதி மற்றும் கருவிகளின் கொள்வனவு | | (937,098) | (1,303,036) | (7,459,488) |
| முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு | | 292,106 | (194,531) | (5,724,237) |
| **நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | | |
| காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியத்திலிருந்தான மூலதன மாற்றம் | | 937,098 | 1,303,036 | 7,459,488 |
| நிதியியல் நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல்கள் | | 937,098 | 1,303,036 | 7,459,488 |
| காசும் காசுக்கு சமமானவைகளும் தேறிய அதிகரிப்பு / (குறைவு) | | (619,988) | (872,307) | 1,345,449 |
| வருட ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமனானவைகளும் | | 658,301 | 1,530,608 | 185,159 |
| வருட இறுதியில் காசும் சாசுக்கு சமனானவைகளும் | | 38,313 | 658,301 | 1,530,608 |
| வங்கி மற்றும் கையிலுள்ள காசு | 5 | 38,313 | 658,301 | 1,530,608 |

98 இலிருந்து 107 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டு பூட்கைகளும் குறிப்புகளும் நிதியியல் கூற்றுகளின் ஒன்றிணைந்த பகுதியாகவுள்ளன.

# காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் காசுப் பாய்ச்சல் கூற்று

31 டிசம்பர் 2014 இல் முடிவடைந்த ஆண்டுக்கான

| | குறிப்புகள் | 31.12.14 ஆம் திகதியில உள்ளவாறு ரூபா | 31.12.13 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா | 31.12.12 ஆம் திகதியில்உள்ளவாறு ரூபா |
|---|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | | |
| காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் தேறிய அதிகரிப்பு | | 407,091,773 | 155,680,866 | 345,634,597 |
| தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தேறிய அதிகரிப்பு | | 407,091,773 | 155,680,866 | 345,634,597 |
| தொழிற்படு மூலதனத்தின் மாற்றம் | | | | |
| செஸ் பெறுகைகளின் (அதிகரிப்பு) / குறைவு | | (15,500,000) | (1,000,000) | (10,000,000) |
| வாடகை வைப்புகளின் (அதிகரிப்பு) / குறைவு | | (3,671,220) | - | (2,360,070) |
| நிதிய முகாமைத்தவ கணக்கு மீதியின் அதிகரிப்பு / (குறைவு) | | (4,210,677) | (2,476,670) | - |
| காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியத்தில் இலிருந்து மாற்றப்படக்கூடிய தொகையின் அதிகரிப்பு / (குறைவு) | | 9,487,946 | 1,193,883 | 702,733 |
| | | (13,893,951) | (2,282,787) | (11,657,337) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு | | 393,197,821 | 153,398,078 | 333,977,260 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து / (பயன்படுத்தப்பட்ட) காசுப்பாய்ச்சல்** | | | | |
| அரசாங்க பிணையங்களில் முதலீடு | | (288,557,589) | 468,339,300 | 201,062,723 |
| நிலையான வைப்புகளில் முதலீடு | | (104,640,232) | (621,109,278) | (534,696,542) |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு | | (393,197,821) | (152,769,978) | (333,633,818) |
| காசும், காசுக்கு சமனானவையில் இருந்தும் தேறிய அதிகரிப்பு / (குறைவு) | | - | 628,101 | 343,442 |
| வருட ஆரம்பத்தில் காசும், காசுக்கு சமமானவைகளும் | | 1,000,000 | 371,899 | 28,457 |
| வருட இறுதியில் காசும் காசுக்கு சமமானவைகளும் | | 1,000,000 | 1,000,000 | 371,899 |
| வங்கியிலுள்ள காசு | 2 | 1,000,000 | 1,000,000 | 371,899 |

98 இலிருந்து 107 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டு பூட்கைகளும் குறிப்புகளும் நிதியில் கூற்றுகளின் ஒன்றிணைந்த பகுதியாகவுள்ளன.

# கணக்கீட்டு பூட்கைகள்

### 1. முக்கிய கணக்கீட்டு பூட்கைகள்

#### 1.1 தயாரிப்பிற்கான அடிப்படை

சபையின் நிதித்துறை அறிக்கைகள் இலங்கை ரூபாவில் தயாரிக்கப்பட்டு வரலாற்று அடிப்படையில் கிட்டிய ரூபாவிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

கணக்கீட்டு பூட்கைகள் தேவைப்படும் இடங்களில் தொடர்ந்துவரும் குறிப்புகளில் தரப்பட்டுள்ளன.

#### 1.2 இணங்குவிற்பிற்கான அறிக்கை

சபையின் நிதித்துறை கூற்றுகள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் தெரிவிக்கப்பட்ட இலங்கை கணக்கியல் நியமத்திற்கு ஏற்றவிதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளதோடு, அத்தகைய சொல்லப்பட்ட தரப்படுத்தல்களுக்கு இணங்கியும் செயற்படுகின்றன.

#### 1.3 அறிக்கையிடும் காலத்திற்கு பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடும் திகதிக்குப் பின்னரான சகல நிகழ்வுகளும் கருத்திற்கெடுத்துக்கொள்ளப்பட்டு பொருத்தமான சீராக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல் என்பனவற்றின் தேவையின் அடிப்படையில் நிதித்துறை அறிக்கைகளில் அவசியமானவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

#### 1.4 ஒப்பீட்டு இலக்கங்கள்

ஒப்பீட்டு இலக்கங்கள் அனைத்தும் நடப்பு நிதி வருட வெளிப்படுத்தலின் மாற்றங்களுக்கு இணங்கும் வகையில் சீராக்கப்பட்டுள்ளன.

#### 1.5 வரிவிதிப்பு

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய வருமான வரிக்கான ஏற்பாடு தயாரிக்கப்பட்டுள்ளது.

பங்கிலாபம் அல்லது வட்டியிலிருந்து கிடைக்கும் இலாபத்திலிருந்தான வருமானம் தவிர்ந்த ஏனைய வருமானங்களுக்கு வருமான வரியிலிருந்து சபைக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

#### 1.6 வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்றுதல்

வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை நடவடிக்கைகள் ஏதாவது இருந்தால், அவை கொடுக்கல் வாங்கல்கள் செய்யப்பட்ட நேரத்தில் கடைப்பிடிக்கப்பட்ட நாணயப் பரிவர்த்தனை விகிதத்தின் அடிப்படையில் இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்டுள்ளன.

### 2. ஆதனங்கள் மற்றும் மதிப்பிடற்கான அடிப்படை

#### 2.1 ஆதனம், பொறிகள், உபகரணங்கள்

##### உரித்துடைய ஆதனம், பொறிகள் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் திரட்டிய பெறுமதி தேய்வு கழிக்கப்பட்டு கிரயத்தில் காண்பிக்கப்பட்டுள்ளன. ஆதனம், பொறிகள், உபகரணங்களின் கொள்விலை என்பது அவற்றை வாங்குவதற்கான பணத்துடன் திட்டமிடப்பட்ட உபயோகத்தில் கொண்டுவருவதில் உள்ளடக்கியதாகும்.

மோட்டார் வாகனங்கள் தொடர்பாக மீள்மதிப்பீடு தொழில்சார் தகைமை பெற்ற நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டது. மீள் மதிப்பீட்டின் மூலம் அதிகரித்த மோட்டர் வாகனங்களின் பெறுமதி ஒதுக்கில் சேர்க்கப்பட்டது. அடுத்த தொழிற்படும் வருடத்தினுள் அனைத்து நிலையான சொத்துக்களின் மீள்மதிப்பீட்டையும் பூர்த்திசெய்வதற்கு சபை எதிர்பார்க்கின்றது..

##### பெறுமானத் தேய்வு

கீழ்க்காணும் விகிதத்தில் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலத்தின் அடிப்படையில் பெறுமானத் தேய்வு கணிக்கப்படுகிறது.

| | % வருட விகிதம் |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 25 |
| தளபாடங்கள், பொருத்துகைகள் | 12.5 |
| அலுவலக மற்றும் ஈடிபி (EDP) உபகரணங்கள் | 25 |
| பயிற்சி உபகரணங்கள் | 25 |

சொத்து கொள்வனவு செய்யப்பட்ட திகதியில் இருந்து பெறுமானத் தேய்வு கணக்கிடப்படுகிறது. அதேவேளை, அகற்றும் திகதிவரை பெறுமானத் தேய்வு கணக்கிடப்படும்.

கொண்டு செல்லப்படும் தொகையுடன் ஒப்பீடுசெய்யப்பட்டு அகற்றப்படுவதிலிருந்தான வருமானங்கள் மற்றும் நட்டங்கள் தீர்மானிக்கப்படும்.

#### 2.2 நிதியியல் சொத்துக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 39ற்கு அமைவாக நிதியியல் சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டம், கடன் மற்றும் பெறுகைகள், முதிர்ச்சி முதலீடுகள், விற்பனைக்கு கிடைக்கப்பெறும் நிதியியல் சொத்துக்கள் அதன் நியாய பெறுமதியில் வகையிடப்பட்டுள்ளது.

##### 2.2.1 முதிர்ச்சி முதலீடுகளை வைத்திருத்தல்

நிலையான அல்லது தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் நிலையான முதிர்ச்சிகளுடனான வழிவந்ததல்லாததான நிதியில் சொத்துக்கள்

சபை நேர்மறையான நோக்கத்தையும் மற்றும் அவற்றினை முதிர்ச்சி வரை வைத்திருக்க இயலுமானதாகையில் அவை முதிர்ச்சி வைத்திருத்தல் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஆரம்ப மதிப்பீட்டின் பின்னர், முதிர்ச்சி முதலீடுகளை வைத்திருத்தல் செயற்திறன் வட்டி வீத முறையைப் பயன்படுத்தி தவணை முறைக் கடன் கரைப்பு ஆகுசெலவில் அளவீடு செய்யப்பட்டது. செயற்திறன் வட்டி வீத தவணை முறைக் கடன்கரைப்பு ஆகுசெலவு வட்டி வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 2.3 பதிவேட்டுப் பொருட்கள்

பதிவேட்டுப் பொருட்கள் அனைத்தும் குறைந்த மட்டக் கொள்விலை அல்லது பெறக்கூடிய நிகர பெறுமதி என்பதில் காட்டப்பட்டுள்ளன. முதலில் பெறப்பட்டு முதலில் அகற்றப்பட்டவை அடிப்படையில் பதிவேட்டுப் பொருட்களின் கிரயம் கணக்கிடப்படுகிறது.

### 2.4 பெறுகைகள்

பெறுகைகள் அனைத்தும் மதிப்பிடப்பட்ட உத்தேச பெறுமதியில் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 2.5 காசும் காசுக்குச் சமனானவையும்

காசுப்பாய்ச்சல் அறிக்கையின் நோக்கத்திற்கான காசும் காசுக்குச் சமனானவையும் என்பது, வங்கியிலுள்ள பணம் மற்றும் கையிருப்பிலுள்ள பணம் என்பனவற்றை உள்ளடக்கியதாகும்.

## 3. பொறுப்புகளும் ஏற்பாடுகளும்

### 3.1 ஓய்வூதிய நன்மைகள்

#### 3.1.1 அறுதியிட்ட நன்மைத் திட்டங்கள் - பணிக்கொடை

“ஊழியர் நன்மை” 19 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு தரப்படுத்தலுடன் ஒத்ததாக வெளி வீச்சுகூறு கட்டணமுறையை பாவித்து, பணிக்கொடைக்கான கணக்கின் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதலாம் வருட சேவை முடிவடைந்ததும் சபை பணிக்கொடையை ஏற்பாடு செய்கிறது. இருந்த போதிலும், பொறுப்புகளின் அடிப்படையில் இந்த ஏற்பாடு சீராக்கப்படும்.

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு சட்டத்திற்கு அமைய ஊழியர் ஒருவரின் தொடர்ச்சியான ஐந்து வருடகால சேவை பூர்த்தியடைந்ததும், பணிக்கொடைக்கான பொறுப்பு ஆரம்பமாகும்.

#### 3.1.2 அறுதியிடப்பட்ட பங்களிப்பு திட்டங்கள் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம

அறுதியிடப்பட்ட பங்களிப்பு திட்டங்கள் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் சகல நிரந்தர ஊழியர்களும் சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு அமைய ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பை வழங்க உரிமையுடையவர்களாவார். ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பனவற்றுக்கு ஊழியர்களின் மொத்த சம்பளத்தின் முறையே 12% மற்றும் 3% பங்களிப்பை சபை வழங்குகிறது.

### 3.2 பொறுப்புகள்

நிதிநிலமை கூற்றில் நடைமுறைப் பொறுப்புகள் எனக் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புகள், கோரிக்கையின் பேரில் செலுத்தப்பட வேண்டியவையும் அல்லது அறிக்கையிடும் காலத்திலிருந்து இருந்து ஒரு வருட காலத்தினுள் செலுத்தப்பட வேண்டியவையுமாகும். நடைமுறையல்லாத பொறுப்புகளாவன, அறிக்கையிடும் காலத்திலிருந்து ஒரு வருட காலத்தின் பின்னர் கொடுப்பனவுகளுக்குரிய நிலுவைத் தொகைகளாகும்.

நிதியில் அறிக்கையைத் தயாரிப்பதில் சகல தெரிந்த பொறுப்புகளும் கிரயத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளன.

### 3.3 மானியங்கள்

காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்திலிருந்து மாற்றப்பட்ட மூலதனச் செலவினங்களும் சிறு காப்புறுதித் திட்டத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்களும் மானியங்கள் எனக் கருதப்பட்ட சொத்தின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள உபயோக காலத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளன.

## 4. வருமானமும் செலவினமும்

### 4.1 வருமான அங்கீகாரம்

வருமானம் திரண்ட அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளது..

### 4.2 செலவினங்களை இனங்காணல்

செலவினத்திலும் பார்க்கக் கூடிய அளவிலான வருமானத்தைத் தீர்மானித்து சபையை நடத்துவதில் ஏற்பட்ட சகல செலவினங்களும் வருவாய்க்கு விதிக்கப்பட்டு கணக்கிடப்பட்டுள்ளன.

### 4.3 காசுப்பாய்ச்சல் அறிக்கை

காசுப்பாய்ச்சல் அறிக்கை மறைமுக வழிமுறையை உபயோகித்து தயாரிக்கப்பட்டுள்ளது.

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**1 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்**

| | மோட்டார் வாகனங்கள் ரூபா | தளபாடங்கள், இணைப்புகள் மற்றும் பொருத்துக்கள் ரூபா | அலுவலக உபகரணங்கள் (ஈடிபியும் ஏனையவையும்) ரூபா | பயிற்சி உபகரணங்கள் ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|---|
| **ஆகுசெலவு** | | | | | |
| 2014 ஜனவரி 1இல் உள்ளவாறான மீதி | 16,317,321 | 13,003,206 | 20,510,591 | 141,450 | 49,972,568 |
| சேர்ப்புகள் | - | 1,398 | 935,700 | - | 937,098 |
| நீக்கல்கள் | - | (515,418) | (59,500) | - | (574,918) |
| மீள்மதிப்பீட்டின் மீது தாக்கம் | (6,317,321) | - | - | - | (6,317,321) |
| 2014 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 10,000,000 | 12,489,186 | 21,386,791 | 141,450 | 44,017,427 |
| **திரட்டிய தேய்மானம்** | | | | | |
| 2014 ஜனவரி 1இல் உள்ளவாறான மீதி | 12,597,363 | 8,916,748 | 18,375,192 | 141,450 | 40,030,753 |
| ஆண்டுக்கான மாற்றம் | 2,009,383 | 1,513,842 | 1,173,491 | - | 4,696,716 |
| நீக்கல்கள் | - | (439,382) | (59,500) | - | (498,882) |
| மீள்மதிப்பீட்டின் மீது தாக்கம் | (13,712,973) | - | - | - | (13,712,973) |
| 2014 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 893,773 | 9,991,208 | 19,489,183 | 141,450 | 30,515,614 |
| **2014 டிசம்பர் 31 இல் உள்ளவாறு எழுதப்பட்ட பெறுமதி** | 9,106,227 | 2,497,978 | 1,897,609 | - | 13,501,813 |
| 2013 டிசம்பர் 31 இல் உள்ளவாறு எழுதப்பட்ட பெறுமதி | 3,719,958 | 4,086,458 | 2,135,399 | - | 9,941,815 |
| 2012 டிசம்பர் 31 இல் உள்ளவாறு எழுதப்பட்ட பெறுமதி | 5,430,977 | 5,190,060 | 2,544,712 | - | 13,165,749 |

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி

| | | 31.12.2014 ம் திகதியில் உள்ளவாறு ரூபா | 31.12.2013 ம் திகதியில் உள்ளவாறு மீள்குறிப்பிடப்பட்ட ரூபா | 31.12.2012 ம் திகதியில் உள்ளவாறு மீள்குறிப்பிடப்பட்ட ரூபா |
|---|---|---|---|---|
| 2 | **2 காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் முதலீடுகளும் ஏனையவையும்** | | | |
| | **நடைமுறையல்லா சொத்துகள்** | | | |
| | வாடகையும் மின்சார வைப்புகளும் | 14,759,880 | 11,088,660 | 11,088,660 |
| | **நடைமுறைச் சொத்துகள்** | | | |
| | **வைக்கப்பட்ட முதிர்ச்சி முதலீடுகள** | | | |
| | ரிபோ | 584,463,086 | 552,060,730 | 958,381,103 |
| | திறைசேரி முறிகள் | 256,155,233 | - | 62,018,927 |
| | நிலையான வைப்புகள் மீதான முதலீடு | 1,260,446,052 | 1,155,805,820 | 534,696,542 |
| | | 2,101,064,371 | 1,707,866,550 | 1,555,096,572 |
| | **ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| | பெறத்தக்க செஸ் வரி | 76,500,000 | 61,000,000 | 60,000,000 |
| | நிதிய முகாமைத்துவ கணக்கு மீதி | 6,687,347 | 2,476,670 | - |
| | வங்கியிலுள்ள நிலுவை | 1,000,000 | 1,000,000 | 371,899 |
| | | 84,187,347 | 64,476,670 | 60,371,899 |
| | கழி: | | | |
| | காப்புறுதி வைப்பாளர் பாதுகாப்பு நிதியத்திலிருந்து மாற்றப்பட வேண்டிய தொகை | 15,219,496 | 5,731,550 | 4,537,667 |
| | | 2,170,032,222 | 1,766,611,670 | 1,610,930,804 |
| | மொத்த சொத்துக்கள் | 2,184,792,102 | 1,777,700,330 | 1,622,019,464 |
| 3 | **பொருட்பதிவேடுகள்** | | | |
| | அச்சிடுதல், காகிதாதிகள் மற்றும் கணனிப் பாகங்கள் | 261,005 | 367,631 | 303,083 |
| | முத்திரைகள் | 13,840 | 45,420 | 88,055 |
| | | 274,845 | 413,051 | 391,138 |
| 4 | **ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| | வைப்புகள் | 185,481 | 178,594 | 172,122 |
| | ஏனைய பெறத்தக்கவைகள | 274,334 | 167,233 | 114,597 |
| | பிடித்து வைத்த வரி அறவீடுகள் | 1,082,063 | 1,111,985 | 1,049,296 |
| | பெறுமதி கூட்டப்பட்ட வரி கட்டுப்பாடு | 1,239,629 | 668,820 | 502,748 |
| | பணியாளர் கடன்கள் | 4,911,857 | 3,682,040 | 3,923,116 |
| | முற்பணமும் முன் கொடுப்பனவுகளும் * | 1,441,005 | 1,988,800 | 3,038,082 |
| | பொருளாதார சேவைக் கட்டணங்கள் | - | - | 90,815 |
| | நிலையான சொத்துகள் கொள்வனவிற்கான முற்பணமி | - | 445,000 | 85,000 |
| | நிதிய முகாமைத்துவ கணக்கு மீதி | 386,400 | 1,161,375 | - |
| | காப்புறுதி வைப்பாளர் பாதுகாப்பு நிதியத்திலிருந்து மாற்றப்பட வேண்டிய தொகை | 15,219,496 | 5,731,550 | 4,537,667 |
| | | 24,740,264 | 15,135,397 | 13,513,443 |
| | *பணியாளருக்கு வழங்கப்பட்ட கடன்கள் | | | |
| | ஜனவரி 1 ஆம் திகதிஅன்றுள்ளவாறு மீதி | 3,682,040 | 3,923,116 | 3,668,481 |
| | ஆண்டு காலப் பகுதியில் வழங்கப்பட்ட கடன்கள் | 4,151,000 | 2,157,000 | 2,942,391 |
| | | 7,833,040 | 6,080,116 | 6,610,872 |
| | ஆண்டுகாலப்பகுதியில் மீள் கொடுப்பனவு | (2,921,183) | (2,398,076) | (2,687,756) |
| | டிசம்பர் 31 ஆம் திகதியன்றுள்ளவாறு மீதி | 4,911,857 | 3,682,040 | 3,923,116 |

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி

| | | 31.12.2014 ம் திகதியில் உள்ளவாறு ரூபா | 31.12.2013 ம் திகதியில் உள்ளவாறு ரூபா | 31.12.2012 ம் திகதியில் உள்ளவாறு ரூபா |
|---|---|---|---|---|
| **5** | **காசும் காசுக்கு சமனானவைகளும்** | | | |
| | வங்கிகளிலுள்ள காசு | | | |
| | இலங்கை வங்கி | 38,313 | 658,301 | 1,530,608 |
| | | 38,313 | 658,301 | 1,530,608 |
| **6** | **காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியம்** | | | |
| | ஆரம்ப நிலுவை | 1,777,700,330 | 1,622,019,464 | 1,276,384,867 |
| | வருடத்தின் போது கிடைத்த செஸ் | 273,912,607 | 245,743,034 | 236,534,917 |
| | திறைசேரி உண்டியல் முதலீடு மீதான வட்டி | 15,155,232 | 665,374 | 47,865,987 |
| | ரெப்போ மற்றும் அழைப்பு கணக்கு மீதான வட்டி | 38,138,752 | 58,473,214 | 87,316,447 |
| | நிலையான வைப்புகள் மீதான வட்டி | 104,682,472 | 177,119,438 | 696,541 |
| | நிதிய முகாமைத்தவ கணக்கின் மீதான வட்டி | 57,070 | 92,109 | - |
| | | 2,209,646,463 | 2,104,112,633 | 1,648,798,759 |
| | கழிக்க: | | | |
| | செயற்பாட்டு செலவுகளுக்கான மாற்றல்கள் | 23,900,848 | 25,090,847 | 19,295,177 |
| | மூலதன செலவுகளுக்கான மாற்றல்கள் | 937,098 | 1,303,036 | 7,459,488 |
| | மொத்த மாற்றல்கள - காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியம் | 24,837,946 | 26,393,883 | 26,754,665 |
| | திரட்டு நிதியத்திற்கான பங்களிப்புகள் | - | 300,000,000 | - |
| | வங்கி கட்டணங்கள் | 16,415 | 18,420 | 24,630 |
| | | 24,854,361 | 326,412,303 | 26,779,295 |
| | இறுதி மீதி | 2,184,792,102 | 1,777,700,330 | 1,622,019,464 |
| **7** | **மானியங்கள்** | | | |
| | வருட ஆரம்பத்தில் நிலுவை | 9,941,815 | 13,165,749 | 12,368,887 |
| | காப்புறுதி வைப்பாளர் பாதுகாப்பு நிதியத்திலிருந்து மூலதனச் செலவுகள | 937,098 | 1,303,036 | 7,459,488 |
| | கழி: வருடத்தின்போது கணக்கிணக்கம் செய்யப்பட்டவை | (4,398,353) | (4,526,970) | (6,662,626) |
| | வருட இறுதியில் நிலுவை | 6,480,560 | 9,941,815 | 13,165,749 |

**குறிப்பு - மானியங்களை இனங்காணல்**

இ.க.நி. 20 இன் பிரகாரம் மாணியங்கள் கணக்கிடப்பட்டிருக்கின்றன.
பின்வரும் விகிதங்களில் வருமானக் கூற்றில் மாணியங்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது.

| | |
|---|---|
| மோட்டார் வாகனம் | 25% |
| அலுவலக உபகரணம் - ஏனையவையும் ஈடிபியும் | 25% |
| தளபாடம், பொருத்துகள் மற்றும் இணைப்புகள் | 12.5% |
| பயிற்சி உபகரணங்கள் | 25% |

| | | 31.12.2014 ம் திகதியில் உள்ளவாறு ரூபா | 31.12.2013 ம் திகதியில் உள்ளவாறு ரூபா | 31.12.2012 ம் திகதியில் உள்ளவாறு ரூபா |
|---|---|---|---|---|
| **8** | **ஓய்வூதிய நன்மை கடப்பாடுகள்** | | | |
| | வருட ஆரம்பத்தில் நிலுவை | 3,345,318 | 1,889,445 | 1,833,909 |
| | ஆண்டுக்காலப் பகுதியில் செய்யப்பட்ட ஏற்பாடு | 679,287 | 1,698,014 | 55,536 |
| | (-)ஆண்டுக்காலப் பகுதியில் செய்யப்பட்ட கொடுப்பனவு | (152,839) | (242,141) | - |
| | வருட இறுதியில் நிலுவை | 3,871,767 | 3,345,318 | 1,889,445 |
| **9** | **ஏனைய நடப்பு பொறுப்புகள்** | | | |
| | திரட்டிய செலவினங்கள் | 8,224,664 | 6,992,531 | 8,077,508 |
| | கொடுக்கப்பட வேண்டிய ஊ.சே.நி. | 568,981 | 571,676 | 489,052 |
| | கொடுக்கப்பட வேண்டிய ஊ.ந.நி. | 85,348 | 85,752 | 73,359 |
| | கொடுக்க வேண்டிய உ.பொ.செ.வரி மற்றும் நிறுத்திவைத்தல் வரி | 194,954 | 246,239 | 84,130 |
| | ஏனையவை | 12,775 | 102,816 | 94,096 |
| | | 9,086,721 | 7,999,014 | 8,818,145 |

| | | முடிவடைந்த ஆண்டு 31.12.14 ரூபா | முடிவடைந்த ஆண்டு 31.12.13 ரூபா |
|---|---|---|---|
| **10** | **வருமானம்** | | |
| | காப்புறுதிக் கம்பனிகளில் இருந்து வருடாந்த கட்டணம் | 73,440,757 | 70,079,988 |
| | பதிவு செய்தல் மற்றும் பதிவு புதுப்பித்தல் கட்டணங்கள் | 4,145,319 | 4,198,606 |
| | | 77,586,076 | 74,278,593 |
| **11** | **ஏனைய வருமானம்** | | |
| | வாகன கடன் மீதான வட்டி | 28,862 | 29,751 |
| | இடர் கடன் மீதான வட்டி | 103,325 | 94,025 |
| | நானாவித வருமானம | 19,535 | 43,467 |
| | | 151,722 | 167,242 |

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி

| | | முடிவடைந்த ஆண்டு 31.12.14 ரூபா | முடிவடைந்த ஆண்டு 31.12.13 ரூபா |
|---|---|---|---|
| **12** | **ஊழியச் செலவுகள்** | | |
| | ஊழியர் சம்பளங்கள் | 31,045,384 | 31,019,437 |
| | ஊழியர் சேமலாப நிதியம் 12% | 3,833,446 | 3,830,332 |
| | ஊழியர் நம்பிக்கை நிதியம் 3% | 958,362 | 957,584 |
| | தலைவியின் செலவினம் - படிகள் | 900,000 | 900,000 |
| | தலைவியின் செலவினம் - எரிபொருள் | 347,220 | 348,840 |
| | சபை அங்கத்தவர்கள் - அமர்வதற்கான கொடுப்பனவு | 413,500 | 480,000 |
| | வெகுமானம் - ஒப்பந்த ஊழியர் | - | 32,500 |
| | மேலதிக வேலை நேரம் | 123,941 | 127,215 |
| | ஊழியர் மருத்துவ செலவினங்கள் | 1,545,903 | 1,363,224 |
| | ஊழியர் மருத்துவ காப்புறுதி | 655,636 | 560,059 |
| | தீ மற்றும் தனிப்பட்ட காப்புறுதி | 450,411 | 421,334 |
| | ஊழியர் நலன்புரிச் சேவை | 1,345,887 | 1,369,462 |
| | ஊழியர் பயிற்சிகளும் சந்தாவும் | 2,204,709 | 1,535,494 |
| | சபை அங்கத்தவர்கள் மற்றும் ஊழியர் - வெளிநாட்டு பயணங்கள் | 7,701,049 | 6,287,453 |
| | செயற்பாட்டு அடிப்படையிலான ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் | 1,754,948 | 1,951,246 |
| | விளம்பரங்கள் - ஆட்சேர்ப்புகள் | 324,945 | 70,495 |
| | பணிப்பாளர்களின் குடியிருப்பு தொலைபேசிகள் | 166,410 | 164,635 |
| | விடுமுறை காசாக்குதல் | 764,260 | 599,941 |
| | பணிப்பாளரின் வாகன படி | 2,925,000 | 3,876,986 |
| | பணிப்பாளரின் எரிபொருள் படி | 866,101 | 1,210,291 |
| | பணியாட் தொகுதியினரின் பணிக்கொடை கொடுப்பனவு | 679,287 | 1,698,014 |
| | | 59,006,400 | 58,804,541 |
| **13** | **தொழில்சார் விதிப்பனவுகள்** | | |
| | உசாவுகை கட்டணங்கள் | 2,181,575 | 2,178,627 |
| | | 2,181,575 | 2,178,627 |

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி

| | | முடிவடைந்த ஆண்டு 31.12.14 ரூபா | முடிவடைந்த ஆண்டு 31.12.13 ரூபா |
|---|---|---|---|
| **14** | **செயற்பாட்டு செலவினங்கள்** | | |
| | வாடகை | 23,976,701 | 22,167,658 |
| | வாகன தரிப்பிட கட்டணம் | 332,185 | 365,825 |
| | தொலைபேசி செலவினங்களும் இணையதளமும் | 1,633,011 | 1,603,557 |
| | மின்சாரம் | 1,356,878 | 1,226,881 |
| | அலுவலக பராமரிப்பு | 459,213 | 442,421 |
| | அச்சிடலும் காகிதாதிகளும் | 2,871,798 | 2,482,807 |
| | பொதுமக்கள் விழிப்புணர்வு | 1,836,159 | 4,399,327 |
| | பொழுது போக்கு | 248,237 | 213,539 |
| | பயணங்கள் - உள்ளூர் | 81,919 | 56,158 |
| | ஈடிபி மற்றும் ஏனைய அலுவலக உபகரணங்களின் பராமரிப்பு | 1,088,963 | 1,413,830 |
| | ஐஏஐஎஸ் (IAIS) இல் சர்வதேச உறுப்புரிமை | 2,487,748 | 2,091,794 |
| | ஐஐஏபி (IIAP) இல் சர்வதேச உறுப்புரிமை | 33,125 | (30,000) |
| | விளம்பரங்கள் - ஏனையவை | 109,200 | 96,419 |
| | கூட்டங்களுக்கான செலவினங்கள் | 953,295 | 309,846 |
| | பத்திரிகைகள் மற்றும் நூலக புத்தகங்களுக்கான சந்தா கட்டணம் | 139,820 | 214,007 |
| | தபால் மற்றும் தபால் கொண்டு செல்லும் கட்டணங்கள் | 1,039,937 | 226,448 |
| | கணக்காய்வு கட்டணம் - கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 470,000 | 370,055 |
| | பெறுமான தேய்வு | 4,696,716 | 4,526,970 |
| | பொதுவான செலவுகள் | 104,244 | 104,959 |
| | சட்ட செலவுகள் | 166,861 | 280,530 |
| | புலனாய்வு செலவுகள் | 4,572 | 10,560 |
| | மேற்பார்வை செலவுகள் | 383,293 | 129,350 |
| | வாகன பராமரிப்பு | 157,174 | 159,587 |
| | வாகன காப்புறுதி | 309,245 | 261,217 |
| | வாகனம் ஓடும் கட்டணங்கள் | 270,829 | 308,155 |
| | தேச நிர்மாண வரி | 574,717 | 568,712 |
| | அகற்றல் மீதான நட்டம் | 73,035 | - |
| | | 45,858,876 | 44,000,612 |
| **15** | **நிதி மற்றும் ஏனைய செலவினங்கள்** | | |
| | வங்கிக் கட்டணங்கள் | 186,428 | 166,422 |
| | மேலதிக கட்டணங்களும் மற்றும் அபராதமும் | - | 300 |
| | | 186,428 | 166,722 |

## 16. வரி விதிப்புகள்

டிசம்பர் 31 அன்றுள்ளவாறு 2006 இன் 10 ஆம் இல. உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக வருமான வரிக்கான ஏற்பாடுகள் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

### 16.1 இரண்டாந்தர சந்தை கொடுக்கல் வாங்கல் மீதான அரசாங்க பிணையங்கள் மீது பிடித்து வைத்தல் வரிக்கான கருத்தியல் வரவு

2006 இன் 10 ஆம் இல. உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 137வது பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அரசாங்க பிணையங்களின் இரண்டாந்தர சந்தை கொடுக்கல் வாங்களிலிருந்த வட்டி வருமானத்திற்கு அதாவது குறிப்பிட்ட மதிப்பீட்டு ஆண்டில் சபையின் வட்டி வருமானத்தின் ஒரு பகுதியாக அத்தகைய வட்டி வருமானத்தின் ஒரு பகுதியாக அத்தகைய வட்டி வருமானம் இருக்கும் பட்சத்தில் கருத்தியல் வரவொன்றைப் பெறுவதற்கு சபைக்கு உரித்துண்டு.

அதற்கமைவாக, அரசாங்க பிணையங்களின் இரண்டாந்தர சந்தை கொடுக்கல் வாங்கல்களிருந்து சபை பெற்ற தேறிய வருமானம், நிதி கூற்றுகளில் ஒட்டு மொத்தமாகக் கணிக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டிற்கான கருத்தியல் வரவு ரூபா 122,390.17 என 2014 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக் கூற்றுகளில் இனங்காணப்பட்டுள்ளது.

காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியத்தின் அரசாங்க பிணையங்களின் இரண்டாந்தர சந்தை கொடுக்கல் வாங்கல்களில் இருந்து கிடைத்த வட்டி வருமானம் தேறிய பெறுமதியில் கணக்கிடப்பட்டுள்ளது.

## 17. மூலதனக் கடப்பாடுகள்

2014 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு அவசர தேவைக்கான பொறுப்புகள் எவையுமில்லை.

## 18. அவசர தேவைக்கான பொறுப்புகள்

2014 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு அவசர தேவைக்கான பொறுப்புகள் எவையுமில்லை.

## 19. அறிக்கையிடும் காலத்திற்கு பின்னரான நிகழ்வுகள்

நிதிக் கூற்றுகளில் சீராக்கங்கள் செய்வதற்கு அல்லது வெளிப்படுத்துவதற்கு அறிக்கையிடும் காலத்திற்கு பின்னர் எவ்வித சந்தர்ப்பமும் ஏற்படவில்லை.

## 20. தொடர்புடையவர்களின் வெளிப்படுத்தல்கள்

2014 ஆம் ஆண்டு முழுவதும், திருமதி இந்ராணி சுகததாச (தலைவி) திரு. பி. டி. டப்ளியு. எ. சில்வா, திரு. எஸ். ஆர் ஆட்டிகல, திரு. டி. என். ஆர். சிறிவர்தன (வெளியில் இருந்து வருகை தரும் அங்கத்தினர்), திரு. சமந்த குமாரசிங்கவும் மற்றும் திரு. நலின் ஆட்டிகலவும் ஆகியோர் சபையில் பதவி வகித்தனர்.

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி

பின்வரும் அட்டவணை இவ் ஆண்டில் சபையின் அங்கத்தினர்களால் வகிக்கப்பட்ட பதவிகளை விபரிக்கின்றது.

| அங்கத்தவரின் பெயர் | தொடர்புடைய நிறுவனங்களின் பெயர் | பதவி |
|---|---|---|
| திருமதி இந்திராணி சுகததாச | களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலை லிமிடட்<br>தேசிய அபிவிருத்தி வங்கி (பிஎல்சி.) | பணிப்பாளர்<br>பணிப்பாளர் |
| திரு. பி.டி.டப்ளியு.ஏ. சில்வா | இலங்கை வங்கியாளர் நிறுவனம்<br>இலங்கை கடன் தகவல் பணியகம்<br>அபி வெனுவென் அபி முகாமைத்து சபை<br>இலங்கை பிணையங்கள் மற்றும் பரிமாற்று ஆணையகம்<br>பெற்றோலிய கைத்தொழில் அமைச்சு - விசேட நிலையான அமைச்சரவை -தேடி பெற்றுக் கொள்ளல் குழுவில் நியமனம்<br>வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவட்) லிமிடட் | தலைவர்<br>தலைவர்<br>சபை அங்கத்தினர்<br>ஆணைக்குழு அங்கத்தினர்<br>அங்கத்தினர்<br>சபை அங்கத்தினர் |
| திரு. எஸ். ஆர். ஆட்டிகல | உச்ச நீதிமன்ற கட்டிடத் தொகுதி முகாமைத்துவ சபை<br>தேசிய சேமிப்பு வங்கி<br>பல்கலைக்கழகங்கள் மானிய சபை | அங்கத்தவர்<br>பணிப்பாளர்<br>அங்கத்தவர் |
| திரு. டி. என். ஆர். சிறிவர்தன | இலங்கை பிணையங்கள் மற்றும் பரிமாற்று ஆணைக்குழு<br>இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை<br>இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனம் | சபை அங்கத்தவர்<br>வெளியிலிருந்து வரும் அங்கத்தவர்<br>வெளியிலிருந்து வரும் அங்கத்தவர் |
| திரு. நலின் ஆட்டிகல | குறிப்பிட்ட பிரதேசம் மற்றும் தொழில் பயிற்சி கல்வி ஆணையம்<br>இலங்கை கணக்கு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை | குழு அங்கத்தவர்<br>சபை அங்கத்தவர் (2014 ஜுன் வரை) |
| திரு. சமந்த குமாரசிங்க | நேட்சர்ஸ் பியுட்டி கிரியேஷன் லிமிட்டட்<br>மல்டி கெமி இன்டநெஷனல் லிமிட்டட்<br>மல்டி கெமி எக்ஸ்போர்ட் பிரைவட் லிமிட்டட்<br>எக்கோ ப்ரொடெக்ட் என்ஜினியரிங் பிரைவட் லிமிட்டட்<br>லங்கா பயோ பேர்ட்டிலைசர்ஸ் (பிரைவட்) லிமிடட் | தலைவர்/முகாமைத்துவ பணிப்பாளர்<br>தலைவர்/முகாமைத்துவ பணிப்பாளர்<br>தலைவர்/முகாமைத்துவ பணிப்பாளர்<br>தலைவர்/முகாமைத்துவ பணிப்பாளர்<br>தலைவர்/முகாமைத்துவ பணிப்பாளர் |

ஆண்டின் போது சொல்லப்பட்ட நிறுவனங்களுடன், சந்தை வீதங்களிலான சாதாரண வியாபார நடவடிக்கைகளின் கொடுக்கல் வாங்கல்கள் தவிர்ந்த வேறு எந்தவொரு கொடுக்கல்வாங்களும் பதிவு செய்யப்படவில்லை.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No. : எப்ஆர் (2) ஐ/ஐபிஎஸ்எல்/1/14
ඔබේ අංකය / உமது இல / Your No. :
දිනය / திகதி / Date : 2016 செப்டெம்பர் 26

தலைவர்,
இலங்கை காப்புறுதிச் சபை.

**இலங்கை காப்புறுதிச் சபையின் 2014 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுகள் மீது 1971ம் ஆண்டின் 38ம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சி) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

இலங்கை காப்புறுதிச் சபையின் 2014 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, காசுப்பாச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971ம் ஆண்டின் 38ம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 2000 ம் ஆண்டின் 43ம் இலக்க இலங்கை காப்புறுதித் தொழிலை நெறிப்படுத்துதல் அதிகாரச் சட்டத்தின் 8(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று சபையின் தலைவருக்கு 2015 யூன் 30ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுகளுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுகளை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுகளைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்தல் முகாமைத்தவத்தின் பொறுப்பாகும்.

### 1.3.2 கணக்காய்வாளின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்கி எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுகள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுகளிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுகளின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுகளைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளக கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளக கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையையும் முகாமைத்தவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971ம் ஆண்டின் 38ம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்துணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுகள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை காப்புறுதிச் சபையின் 2014 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

சபை வருமானங்களை இனம்காணுதல் அட்டுறு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் இனங்கண்டு பட்டியலிடப்பட்டிருந்த முன்னைய 3 ஆண்டுகளுக்குரிய தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 5,897,549 கூட்டுத்தொகையான வருடாந்தக் கட்டணம் மற்றும் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்கான ரூபா 32,249,024 கூட்டுத்தொகையான செஸ் வரி வருமானம் நிதிக்கூற்றில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. 2014 ஆம் ஆண்டிற்காக நிதியத்திலிருந்து கிடைக்க வேண்டிய வருடாந்தக் கட்டணம் மற்றும் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்காக செஸ் வரி வருமானம் இனங்காணப்படாதிருந்ததுடன், அதற்கான மதிப்பிடப்பட்ட தொகையொன்றேனும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடு

கணக்காய்வு கட்டணங்களுக்கான கொடுப்பனவிற்காக பொறுப்புக்கள் ஏற்படுத்தப்படாதிருக்கையில் 2010 முதல் 2012 ஆம் ஆண்டு வரை செலுத்த வேண்டிய உள்ளகக் கணக்காய்வுக் கட்டணமாக நிதிக்கூற்றுக்களில் தவறுதலாக ரூபா 1,035,000 தொகை காண்பிக்கப்பட்டிருந்தது.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்ச்சி

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வின் போது பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2000 இன் 43ஆம் இலக்க காப்புறுதித் தொழிலை நெறிப்படுத்துதல் அதிகாரச்சட்டம் | |
| (i) 79 மற்றும் 82(1) ஆம் பந்திகள் | தரகராக பதிவு செய்வதற்குரிய சான்றிதழொன்று இல்லாமல் காப்புறுதி தரகராக வியாபாரத்தை நடாத்திச் செல்வது தடைசெய்யப்பட்டிருப்பதுடன், அவ்வாறு விண்ணப்பித்திருக்கையில் அதற்குரிய தேவைப்பாடுகள் தொடர்பாக சபை திருப்திப்படும் சந்தர்ப்பத்தில் சபையினால் விண்ணப்பதாரியை காப்புறுதித் தரகதொருவராக பதிவு செய்யப்பட முடியுமான போதிலும், சபையின் தலைவரால் பொது மக்களுக்கு விடுக்கப்பட்ட அறிவித்தலொன்றின் பிரகாரம் 2012 ஏப்பிரல் 27ம் திகதி முதல் மீள அறிவிக்கும் வரையில் அவ்வாறான பதிவிற்காக விண்ணப்பங்களை பொறுப்பேற்றல் இடைநிறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இது தொடர்பாக சபையின் தலைவரால் அதிகாரச் சட்டத்தின் 5(ஏ) பிரிவின் பிரகாரம் சபையின் நோக்கம் மற்றும் பொறுப்புகள் என்பவற்றை நிறைவேற்றும் போது தேவைப்படும் வேறு ஏதேனும் செயற்பாடொன்றை செய்யக்கூடிய அதிகாரம் சபைக்கு இருப்பதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ii) 6.5.1 ஆம் பந்தி | காப்புறுதி பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியமொன்றை ஸ்தாபித்து அதற்காக அதிகாரச்சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டு அறிவிடப்படுகின்ற செஸ் வரியில் இருந்து அட்டுறுவாகும் பணம் செலவு வைக்கப்பட வேண்டியதுடன், அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் அந்நிதியத்தின் நிதி ஈடுபடுத்தப்பட வேண்டிய சயற்பாடுகளுக்கு முரணாக சபையின் மொத்த செலவீனத்தை தீர்ப்பதற்கு போதியளவு வருமானம் உழைக்காத ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சபையின் பற்றாக்குறையை தீர்ப்பதற்கு அந்நிதியம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக அச்செயற்பாடுகளுக்கு முரணாக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 300,000,000 தொகை இந்நிதியத்திலிருந்து திரட்டு நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. |
| (ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலப்ப பொது முயற்சிகள் சுற்றுநிருபம | |
| (i) 6.5.1 ஆம் பந்தி | மீளாய்வாண்டுக்குரிய சபையின் ஆண்டறிக்கை வரைவொன்று நிதிக்கூற்றுகளுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 8.3.4 ஆம் பந்தி | தொலைபேசிக் கட்டணம் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மிகைத்துள்ளதா என உறுதிப்படுத்தும் போது ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் அலுவலக மற்றும் வீட்டுத் தொலைபேசிக்காக செலுத்தப்படுகின்ற அழைப்புக் கட்டணங்கள் அனைத்தினதும் கூட்டுத்தொகையை பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும், 6 உத்தியோகத்தர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த கடமைத் தொலைபேசிகளைப் பயன்படுத்தி பொதுத் தொலைபேசி ஊடாக அழைப்புகளை பெற்றுக்கொண்ட காரணத்தினால் பொதுத் தொலைபேசி செலவினம் ரூபா 1,633,011 தொகையான கூடிய பெறுமானத்தைக் கொண்டிருந்தது. |
| (iii) 9.14.1 ஆம் பந்தி | நிருவாகக் கைநூலுக்காக பொது முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

### 2.4 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் முறையான அங்கீகாரமொன்றில்லாமல் 82 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 50,000 வீதம் விழா முற்பணமாக வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிள் இறுதி வரையிலும் ரூபா 1,065,000 ஆன மீதியொன்று காணப்பட்ட போதிலும், தாபன விதிக்கோவைக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த திருத்தத்தின் பிரகாரம் விழா முற்பணமாக வழங்கக்கூடிய ரூபா 5,000 இற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தது.

(ஆ) முறையான அங்கீகாரதொன்றில்லாமல் ஆரம்ப சம்பளம் ரூபா 25,000 இற்கு குறைந்த 5 உத்தியோகத்தர்களுக்காக இடர் கடனாக ரூபா 250,000 வீதம் வழங்கப்பட்டிருந்தது.

(இ) 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சரவை, பொது நிர்வாகச் சுற்றறிக்கை அல்லது திறைசேரியினால் தீர்மானிக்கப்பட்ட நலன்கள் தமது நிர்வாக சபைகளின் அங்கீகாரத்துடன், தமது ஊழியர்களுக்கு கொடுப்பனவு செய்ய கூட்டுத்தாபனம் மற்றும் நியதிச்சட்ட சபைகளுக்கு முடியுமாக இருந்த போதிலும், அவ்வாறான அதிகாரமொன்றில்லாமல் மேற்கொள்ளப்பட்ட மேலதிக படிகள், ஊக்குவிப்புக் கொடுப்பனவிற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், திறைசேரி பிரதி செயலாளரின் 2009 திசம்பர் 29 ஆம் திகதிய MF/2/4/2IBSL/GEN இலக்கமுடைய கடிதத்தின் மூலம் குறிப்பிடப்பட்டிருந்ததின் பிரகாரம் சபையினால் முன்மொழிவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் 2009 ஆம் ஆண்டிலிருந்து 2012 வரை மிகையூதியப்படிகளாகவும் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்காக ஊக்குவிப்பு படிகளாக முறையே ரூபா 1,951,246 தொகையும் ரூபா 1,754,948 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

### 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 163,129 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 148,207 ஆனமையினால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 14,922 அல்லது 10 சதவீத அதிகரிப்பொன்றைக் கணக்கூடியதாக இருந்தது. இதற்காக வருமானம் ரூபா 1,082,977 ஆல் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியிலான நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 2,195,085,644 ஆக இருந்ததுடன், அதில் 99 சதவீதம் அல்லது ரூபா 2,170,032,222 தொகை 2000 இன் 43 ஆம் இலக்க இலங்கை காப்புறுதித் தொழிலை நெறிப்படுத்துதல் அதிகாரச்சட்டத்தின் 103 ஆம் பிரிவின் 103 அம் பிரிவின் பிரகாரம் காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தில் முதலீடுகளை பிரதிநிதித்துவப்படுத்தியது. அதன் பிரகாரம் நடைமுறைச் சொத்து விகிதம் 105:1 ஆன கூடிய மட்டத்தில் காணப்பட்டது.

### 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காப்புறுதிச் சான்றிதழ் உரித்துடையவர்களினதும் எதிர்கால காப்புறுதி உரித்துடையவர்களினதும் தொடர்பினை பாதுகாக்கும் நோக்கில் காப்புறுதியாளர்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற காப்புறுதி உரித்துக் கொடுப்பனவொன்று தொடர்பான பிணக்கொன்றின் போது அதனை புலனாய்வு செய்யும் சட்ட ரீதியான அதிகாரம் சபைக்கு இருப்பதுடன், மீளாய்வாண்டினுள் இவ்வாறு சபைக்கு கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 284 ஆகும். அதில் 157 முறைப்பாடுகளும் 2013 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட 11 முறைப்பாடுகள் தொடர்பாக கணக்காய்வுத் திகதியான 2015 ஏப்பிரல் 07ஆந் திகதி வரையிலும் புலனாய்வு நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்படாதிருந்ததுடன், புலனாய்வை பூர்த்தி செய்வதற்கு 03 மாதங்கள் முதல் 10 மாதங்கள் வரை தாமதமான 75 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(ஆ) காப்புறுதி சான்றிதழ் பூட்கையுடையவர்களைப் பாதுகாத்தல் மற்றும் பொது மக்களுக்கு தெரியப்படுத்துதல் மூலம் காப்புறுதி தொடர்பான நம்பிக்கையை அதிகரிக்கும் நோக்கில் சந்தை அபிவிருத்தி மற்றும் வெளியக தொடர்பு பிரிவு தாபிக்கப்பட்டிருந்ததுடன், இந்த அலகின் மூலம் மீளாய்வாண்டில் செயற்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த செயற்பாடுகளுக்காக ரூபா 10,100,000 ஆன நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அச்செயற்பாடுகளின் செயன்முன்னேற்றம் பின்வருமாறு.

(i) அரச முகவர்களின் காப்புறுதி தொடர்பான அறிவினை மேம்படுத்தும் நோக்கில் பிரதேச செயலகங்களில் 10 அறிவூட்டுதல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்த போதிலும், அதில் கொழும்பு மாவட்ட செயலகத்தில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பதின்மூன்று நபர்கள் மாத்திரம் சமூகமளித்திருந்தனர்.

(ii) மீளாய்வாண்டில் தெரிவுசெய்யப்பட்ட பொதுமக்கள் கூடும் இடங்களுக்காக 3 கருத்தரங்குகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அச்செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு சபை தவறியிருந்தது.

(iii) கண்காட்சிக்காக பங்குபற்றுவதற்கும் பிரதான வீதிகளில் மேற்கொள்ளப்படுகின்ற வீதி விளம்பர நடவடிக்கைகளுக்காக சமூகமளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்திற்காக மாத்திரம் சபை பங்குபற்றியிருந்தது.

(iv) இலத்திரனியல் ஊடாக நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 2,500,000 ஆன மதிப்பீட்டின் அடிப்படையில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த ஆவணப்படுத்தப்பட்ட ஊடக வியாபாரம் ஆண்டினுள் செயற்படுத்தியமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(v) காப்புறுதி தொழில் மற்றும் உரித்துடையவர்களின் நன்மை கருதி காப்புறுதி உறுதி அபிவிருத்தி செய்யும் நோக்கில் கம்பனிகளின் காப்புறுதி வெளியீடுகளை மீளாய்வு செய்வதன் கீழ் மீளாய்வாண்டினுள் 06 காப்புறுதி கம்பனிகளால் அறிமுகப்படுத்தப்பட்ட 7 காப்புறுதி உறுதிகள் மீளாய்வுற்கு உட்பட்டிருந்தது. அதற்குரிய காப்புறுதி உறுதிகளில் காணப்படும் நலிவுகள் மற்றும் உத்தேச பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு சபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு 2014 நவம்பர் 19 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக குறித்த காப்புறுதி கம்பனிகளை அறிவூட்டுவதற்கு கணக்காய்வு திகதியான 2015 ஏப்பிரல் 08 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2009 ஆம் ஆண்டின் போது சபையினால் தனியார் கம்பனியொன்றுக்கு தடையுத்தரவொன்றை விதித்திருந்ததுடன் SC(FR)191/09 ஆம் இலக்க அடிப்படை உரிமைகள் வழக்கின் போது உயர்நீதிமன்றம் வழங்கியிருந்த வழங்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் அக்கம்பனிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போலியான காப்புறுதி உரித்துக் கோரலுடன் தீர்ப்பதற்காக அக்கம்பனிகளின் சொத்துக்களை அகற்றுவதற்காக சபை அக்கம்பனியுமன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உரித்து விண்ணப்பதாரருக்கு அவர்களின் உரித்துக்கான விண்ணப்பத்தை சபைக்கு எழுத்து மூலமாக சமர்ப்பிக்குமாறு பத்திரிகை அறிவித்தலொன்றின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அந்த போலியான 142 சொத்து உரித்துக் கோரல்களில் எந்தவொரு விண்ணப்பமொன்றிற்காகவும் கொடுப்பனவு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

4.2 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 43 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான எண்ணிக்கை 41 ஆனமையினால் 03 வெற்றிடங்களும் 01 மிகையும் காணப்பட்டன. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையை மிகைத்து அலுவலக உதவியாளர் பதவியொன்றுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்காகப் பெற்றுக்கொண்ட அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) நிரந்தர பதவியொன்றான பணிப்பாளர் மேற்பார்வை பதவிக்காக 2011 திசெம்பர் 26ஆந் திகதி ஒப்பந்த அடிப்படையில் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன், நிரந்தர உத்தியோகத்தரொருவரை ஆட்சேர்பதற்கு சபை செயற்பட்டிருக்கவில்லை.

(இ) 2007 நவம்பர் 26 ஆந் திகதி முதல் வெற்றிடமாகக் காணப்பட்ட இரண்டு உதவிப் பணிப்பாளர் பதவிகளுக்காக தகைமைகளைக் கொண்ட உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 மே 20 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஒவ்வொரு பதவிக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறைக் கோவையொன்று தயார் செய்யப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்ச்சி

### 4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சபையினால் தமது அலுவலகத்தை குறைந்த கிரயத்தில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் உலக வர்த்தக நிலையத்தின ஒரு சதுர அடி ரூபா 214 வீதம் 8,741 சதுர அடி அளவிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 23,862,930 கூட்டுத்தொகையான பாரியளவிலான கிரயமொன்றும் வாகன நிறுத்துமிடக் கட்டணமாக ரூபா 383,160 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக வருடாந்தம் வருமானத்தை விஞ்சிய செலவினத்தை தீர்ப்பதற்கு காப்புறுதி உரித்துடையவர்களின் பாதுகாப்பு நிதியத்திலிருந்தும் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருந்தது.

### 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் செலவினம், உள்ளபடியான வருமானம் செலவினங்களுக்கிடையே 3 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 5.2 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

2014 ஏப்பிரல் 08 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடாபான கணக்குகள் குழுவினால் வழங்கப்பட்ட கட்டளைகளை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 ஆம் ஆண்டின் போது சபையினால் திறைசேரியின் அங்கீகாரமொன்றில்லாமல் அதன் 17 உத்தியோகத்தர்களுக்கு இரண்டு சம்பள ஏற்றங்கள் வீதம் செலுத்தப்பட்டிருந்தமை மற்றும் 2012 யூலை மாதத்திலிருந்து சபையினால் திறைசேரியின் அங்கீகாரமொன்றில்லாமல் அதன் அனைத்து உத்தியோகத்தர்களினது சம்பளத்தை 25 சதவீதத்தினால் அதிகரித்தமை தொடர்பாக தற்போதைய முகாமைத்துவம் பொதுத் திறைசேரிக்கு எழுத்துமூலம் அறிவித்து அது தொடர்பாக அவர்களிடமிருந்து ஆலோசகை பெற்றுக்கொள்ள வேண்டுமென கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட கடிதமொன்று மாத்திரம் பொதுத் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டதாக கணக்காய்விற்கு அறிகையிடப்பட்டிருந்தது.

(ஆ) திறைசேரியின் அங்கீகாரமொன்றில்லாமல் ரூபா 513,713 தொகை செலவு செய்து சபையின் 33 உத்தியோகத்தர்களுக்காக காப்புறுதி மேவுகையொன்று பெற்றுக்கொண்டமை தொடர்பாக முறைப்படி நடவடிக்கை எடுக்குமாறு சபைக்கு கட்டளையிடபட்டிருந்த போதிலும், இது தொடாபாக திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 6. முறைப்பாடுகளும் கடப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளிலுள்ள குறைபாடுகள்ள அவ்வப்போது சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன.

பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பதவியணியினர் நிர்வாகம்
(இ) பதவியணியினர் கடன் நிர்வாகம்

ஒப்பம்: டபில்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எழுப்பப்பட்ட விடயங்கள் தொடர்பாக சபையின் விளக்கம்

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | இலங்கை காப்புறுதிச் சபையின் விளக்கங்கள் |
|---|---|---|
| 2.2 | நிதிக்கூற்று தொடர்பான கருத்தினை வெளிப்படுத்தல் | |
| 2.2.1 | கணக்கீட்டுக் கொள்கை | |
| | சபை வருமானங்களை இனம்காணுதல் அட்டுறு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் இனங்கண்டு பட்டியலிடப்பட்டிருந்த முன்னைய 3 ஆண்டுகளுக்குரிய தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 5,897,549 கூட்டுத்தொகையான வருடாந்தக் கட்டணம் மற்றும் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்கான ரூபா 32,249,024 கூட்டுத்தொகையான செஸ் வரி வருமானம் நிதிக்கூற்றில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. 2014 ஆம் ஆண்டிற்காக நிதியத்திலிருந்து கிடைக்க வேண்டிய வருடாந்தக் கட்டணம் மற்றும் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்காக செஸ் வரி வருமானம் இனங்காணப்படாதிருந்ததுடன், அதற்கான மதிப்பிடப்பட்ட தொகையொன்றேனும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ,இது தொடாபாக பல்வேறு தடவைகள் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கும் சபைக்கும் இடையில் கடிதப் பரிமாற்றங்களும் கலந்துரையாடல்களும் நடைபெற்ற போதிலும், உரிய நிலுவையினை சபைக்கு கொடுப்பனவு செய்வது தொடர்பாக குறித்துரைக்கப்பட்ட தீர்மானத்தை சபைக்கு கடிதம் மூலம் அறிவிக்காததனால், அந்த தொகை தொடர்பாக நிட்சயமற்ற தன்மை நிலவுகின்றது.<br><br>அவ்வாறான நிலமையின் கீழ் நடைமுறைச் சொத்துக்களுடன் இவ்வாறான பெரியதொரு வருமானத்தை சபையின் கணக்குகளில் அடையாளம் காட்டுதல் அறிவுள்ள எண்ணக்கருவுக்கு இணங்காது என்பது எமது கருத்தாகும். அத்துடன், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் 2012 மற்றும் 2013ம் ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்று சபைக்கு கிடைக்கப்பெற்றது 2015 ஜூலை 02ம் திகதியாவதனால், நிதிக்கூற்றினைத் தயாரிக்கும் பொழுது உரிய பெறுமதியை உறுதிப்படுத்தவதற்கு முடியாத நிலை காணப்பட்டது |
| 2.2.2 | கணக்கீட்டுக் குறைபாடு | |
| | கணக்காய்வுக் கட்டணங்களுக்கான கொடுப்பனவிற்காக பொறுப்புக்கள் ஏற்படுத்தப்படாதிருக்கையில் 2010 முதல் 2012 ஆம் ஆண்டு வரை செலுத்த வேண்டிய உள்ளகக் கணக்காய்வுக் கட்டணமாக நிதிக்கூற்றுக்களில் தவறுதலாக ரூபா 1,035,000 தொகை காண்பிக்கப்பட்டிருந்தது. | உரிய ஒதுக்கீடு நிதிக்கூற்றில் காட்டப்பட்டுள்ளது சபையின் உள்ளக கணக்காய்வுக்கு பொறுப்பாகவுள்ள நிதி அமைச்சின் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்திற்கு கொடுப்பனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட தொகையாவதுடன் அது தவறாக மேற்கொள்ளப்பட்டதல்ல. அத்துடன் 2013, 2014ம் ஆண்டுக்காக எவ்வித ஒதுக்கீடும் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன், முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம் 2011, 2013ம் ஆண்டுகளுக்கு எவ்வித கொடுப்பனவையும் எதிர்பார்க்கவில்லை என எங்களுடைய கடிதத்திற்கு 11.05.2015ம் திகதி கடிதம் மூலம் பதிலளித்துள்ளதனால், இக்குறிப்பிட்ட தொகை பதிவழிப்பு செய்யப்பட்டுள்ளது. |
| 2.3 | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான இணக்கமின்மை | |
| (அ)<br>(i) | 2000 இன் 43ஆம் இலக்க காப்புறுதித் தொழிலை நெறிப்படுத்துதல் அதிகாரச்சட்டம்<br>79 மற்றும் 82(1) ஆம் பந்திகள்<br>தரகராக பதிவு செய்வதற்குரிய சான்றிதழொன்று இல்லாமல் காப்புறுதி தரகராக வியாபாரத்தை நடாத்திச் செல்வது தடைசெய்யப்பட்டிருப்பதுடன், அவ்வாறு விண்ணப்பித்திருக்கையில் அதற்குரிய தேவைப்பாடுகள் தொடர்பாக சபை திருப்திப்படும் சந்தர்ப்பத்தில் சபையினால் விண்ணப்பதாரியை காப்புறுதித் தரகதொருவராக பதிவு செய்யப்பட முடியுமான போதிலும், சபையின் தலைவரால் பொது மக்களுக்கு விடுக்கப்பட்ட அறிவித்தலொன்றின் பிரகாரம் 2012 ஏப்பிரல் 27ம் திகதி முதல் மீள அறிவிக்கும் வரையில் அவ்வாறான பதிவிற்காக விண்ணப்பங்களை பொறுப்பேற்றல் இடைநிறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இது தொடர்பாக சபையின் தலைவரால் அதிகாரச் சட்டத்தின் 5(ஏ) பிரிவின் பிரகாரம் சபையின் நோக்கம் மற்றும் பொறுப்புகள் என்பவற்றை நிறைவேற்றும் போது தேவைப்படும் வேறு ஏதேனும் செயற்பாடொன்றை செய்யக்கூடிய அதிகாரம் சபைக்கு இருப்பதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | காப்புறுதி தரகராக பதிவுசெய்வதற்கு எதிர்பார்க்கும் நிறுவனங்களினால் காப்புறுதிச் சபைக்கு கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கை 2011 – 2012ம் காலத்தினுள் மிக அதிகமாக அதிகரித்தள்ளதுடன், அத்தொகை காப்புறுதி நிறுவனங்களின் எண்ணிக்கையைவிட இரு மடங்கை விட அதிகம் என காப்புறுதிச் சபையினால் அவதானிக்கப்பட்டது. அத்துடன் தரகு நிறுவனங்களைப் பதிவுசெய்து அதனூடாக பல்வேறுபட்ட முறைகேடுகள் நடைபெறுகின்றது என்பதும் காப்புறுதிச் சபையினால் அவதானிக்கப்பட்டது.<br><br>27 மார்ச் 2012ம் திகதி காப்புறுதிக் கைத்தொழிலாளர்களுடன் ( காப்புறுதி தரகு மற்றும் காப்புறுதி நிறுவனங்கள்) நடைபெற்ற கூட்டத்தில் இது பற்றி கலந்துரையாப்பட்டதுடன், அதன் போது நிறுவனங்களினால் புதிய விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் தற்காலிகமாக இடைநிறுத்தப்படல் வேண்டும் எனும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.<br><br>இந்த யோசனை காப்புறுதிச் சபையின் 114வது கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது. அதன்படி, 27 மார்ச் 2012ம் திகதியில் இருந்து தற்காலிக இடைநிறுத்தம் செயற்படுகின்றது என பத்திரிகை மூலம் சபையினால் மக்களுக்கு அறிவூட்டப்பட்டது.<br><br>காப்புறுதிச் சபையின் நோக்கம் மற்றும் பொறுப்பு என்பவற்றை பூர்த்திசெய்யும் பொழுது சபைக்கு அவசியமான வகையில் அதிகாரங்களைப் பிரயோகிப்பதற்கு, பணிகளை நிறைவேற்றுவதற்கு தேவையான எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு சபைக்கு அதிகாரம் உள்ளது என காப்புறுதி கைத்தொழிலை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் 5 (ஏ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. |

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எழுப்பப்பட்ட விடயங்கள் தொடர்பாக சபையின் விளக்கம் தொடர்ச்சி

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | இலங்கை காப்புறுதிச் சபையின் விளக்கங்கள் |
|---|---|---|
| **2.3** | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான இணக்கமின்மை** | |
| (அ)<br>(ii) | 103 (1) ஆம் பந்தி<br><br>காப்புறுதி பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியமொன்றை ஸ்தாபித்து அதற்காக அதிகாரச்சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டு அறிவிடப்படுகின்ற செஸ் வரியில் இருந்து அட்டுறுவாகும் பணம் செலவு வைக்கப்பட வேண்டியதுடன், அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் அந்நிதியத்தின் நிதி ஈடுபடுத்தப்பட வேண்டிய சயற்பாடுகளுக்கு முரணாக சபையின் மொத்த செலவீனத்தை தீர்ப்பதற்கு போதியளவு வருமானம் உழைக்காத ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சபையின் பற்றாக்குறையை தீர்ப்பதற்கு அந்நிதியம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக அச்செயற்பாடுகளுக்கு முரணாக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 300,000,000 தொகை இந்நிதியத்திலிருந்து திரட்டு நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. | எம்மால் சபையின் செலவுகள் ஏற்றுக்கொள்ளப்படுவதனால், திறைசேரியின் ஒதுக்கீடு பெற்றுக்கொள்ளப்படுவதில்லை என்பதுடன், அனைத்து செலவுகளும் காப்புறுதி நிறுவனங்களைப் பதிவுசெய்தல் கட்டணம் மற்றும் வருடாந்த கட்டணங்களில் இருந்து கிடைக்கப்பெறும் வருமானத்தில் இருந்தாகும். எனினும் வருடாந்த பற்றாக்குறையினைத் தீர்ப்பதற்கு போதியளவு நிதி இல்லாமையினால், பற்றாக்குறைத் தொகை மட்டும் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியில் இருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்றது. அதன் விளைவாக சபையின் திரட்டிய நிதியத்தில் மீதி காணப்படுவதில்லை என்பதை கடந்த கால வருடாந் கணக்கு அறிக்கைகளை அவதானிப்பதன் மூலம் தெளிவுபடுத்திக்கொள்ளலாம்.<br><br>காப்புறுதிக் கைத்தொழிலை ஒழுங்குபடுத்தலின் நோக்கத்துடன் காப்புறுதிச் சபை நிறுவப்பட்டுள்ளதுடன், அதன் பணிகளை நிறைவேற்றும் பொழுது அதனால் ஏற்றுக்கொள்ள வேண்டிய செலவினை அதன் வருமானத்தில் இருந்து ஈடுசெய்ய முடியாமல் போகையில் காப்புறுதி பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தில் இருந்து பெற்றுக்கொள்ளுதல் சட்டத்திற்கு எவ்வாறு முரணாகும் என்பது பிரச்சனைக்குரியதாகும்.<br><br>அத்துடன், 2000ம் ஆண்டு 43ம் இலக்க காப்புறுதிக் கைத்தொழிலை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் 103 (2) ம் பிரிவுடன் வாசிக்க வேண்டிய 2005ம் ஆண்டு அரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலான இலக்கம் 1412/30 இன் 10ம் விதி, சபைக்கு அதன் அபிவிருத்திக்கு செலவிடப்படும் தொகையை காப்புறுதி பூட்கை பாதுகாப்பு நிதியத்தில் இருந்து பெற்றுக்கொள்வதற்கான இயலுமையை வழங்குகின்றது.<br><br>2013ம் ஆண்டு ரூபா 300 மில்லியன் திரட்டிய நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டது. இது 1971ம் ஆண்டு 38ம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் கோரப்பட்ட ரூபா 500 மில்லியன் வேண்டுதலுக்கு அமைவாகவாகும். அந்த வேண்டுகோளுக்கு அமைவாக ருபத 300 மில்லியன் விடுவிக்கப்படவில்லை எனில் திறைசேரியினால் விடுவிக்காமைக்கான காரணம் கோரப்படும். இது தொடர்பாக மேலதிக தகவல்களை திறைசேரி செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும். |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலப்ப பொது முயற்சிகள் சுற்றுநிருபம் | |
| (i) | 6.5.1 ஆம் பந்தி<br>மீளாய்வாண்டுக்குரிய சபையின் ஆண்டறிக்கை வரைவொன்று நிதிக்கூற்றுகளுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த அறிக்கையின் வரைவினை நிதிக்கூற்றுடன் சமர்ப்பித்தல் சபையினால் இது வரை மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன், காப்புறுதி நிறுவனங்களுக்கு உரிய தகவல்களை 60 நாட்களினுள் பெற்றுக்கொள்ளல் முடியாத விடயமாவதனால், வருடாந்த அறிக்கையின் வரைவினைச் சமர்ப்பித்தல் நடைமுறைச் சாத்தியமில்லாத விடயமாகும். |
| (ii) | 8.3.4 ஆம் பந்தி<br>தொலைபேசிக் கட்டணம் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மிகைத்துள்ளதா என உறுதிப்படுத்தும் போது ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் அலுவலக மற்றும் வீட்டுத் தொலைபேசிக்காக செலுத்தப்படுகின்ற அழைப்புக் கட்டணங்கள் அனைத்தினதும் கூட்டுத்தொகையை பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும், 6 உத்தியோகத்தர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த கடமைத் தொலைபேசிகளைப் பயன்படுத்தி பொதுத் தொலைபேசி ஊடாக அழைப்புகளை பெற்றுக்கொண்ட காரணத்தினால் பொதுத் தொலைபேசி செலவினம் ரூபா 1,633,011 தொகையான கூடிய பெறுமானத்தைக் கொண்டிருந்தது. | தொலைபேசி அழைப்புகளை மேற்கொள்ளும் பொழுது எவ்வேளையிலும் உத்தியோகபூர்வ நேரடித் தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்தும்படி உரிய பணிப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், உரிய நேரடித் தொலைபேசி வரும் அழைப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கு பயன்படுத்துவதற்கே வழங்கப்பட்டுள்ளது. அழைப்புகளைப் பெற்றுக்கொள்ளும் பொழுது அவர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கைபேசிகளை பயன்படுத்துதலே பொதுவாக மேற்கொள்ளப்படுகின்றது. அதன் பாவனையானது உச்ச வரையறைக்குள் மேற்கொள்ளப்படும். இந்த 6 நேரடித் தொலைபேசிகளுக்கு வருடாந்தம் ரூபா 119,450.16 செலவிடப்பட்டுள்ளது. பொது தொலைபேசி, நேரடி தொலைபேசி மற்றும் பக்ஸ் எனும் அனைத்துக்கும் இவ்வருடம் முழுவதிலும் ரூபா 1,633,011 மட்டுமே செலுத்தப்பட்டுள்ளது. |
| (iii) | 9.14.1 ஆம் பந்தி<br>நிருவாகக் கைநூலுக்காக பொது முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 02.12.2014ம் திகதி பிரதி திறைசேரி செயலாளருடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல் வழங்கப்பட்ட ஆலோசனைக்கு அமைவாக, நிர்வாக கைநூலில் இடையீட்டு நிதிப்பெறுமதி அகற்றப்பட்டு. உரிய கைநூல் மீண்டும் தயாரிக்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. முடிந்தவரையில் விரைவில் இதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எழுப்பப்பட்ட விடயங்கள் தொடர்பாக சபையின் விளக்கம் தொடர்ச்சி

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | இலங்கை காப்புறுதிச் சபையின் விளக்கங்கள் |
|---|---|---|
| **2.4** | **போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்.** | |
| (அ) | சபையினால் முறையான அங்கீகாரமொன்றில்லாமல் 82 உத்தியோகத்தர் களுக்கு ரூபா 50,000 வீதம் விழா முற்பணமாக வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிள் இறுதி வரையிலும் ரூபா 1,065,000 ஆன மீதியொன்று காணப்பட்ட போதிலும், தாபன விதிக்கோவைக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த திருத்தத்தின் பிரகாரம் விழா முற்பணமாக வழங்கக்கூடிய ரூபா 5,000 இற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தது. | ரூபா 50,000 விழாக்கால முற்கொடுப்பனவை வழங்குவதற்கு பணிப்பாளர் சபையின் அனுமதி உள்ளதுடன், அது நிர்வாக கைநூலில் உள்ள ஒரு பிரிவாகும். எனினும், 02.12.2004ம் திகதி திறைசேரி பிரதிச் செயலாளரின் தலைமையில் நிதி அமைச்சில் நிர்வாக கைநூல் மற்றும் விழாக்கால முற்கொடுப்பனவு தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலில் அக்கொடுப்பனவானது 2009ம் ஆண்டில் இருந்து மேற்கொள்ளப்படுவதுடன், இது தொடர்பாக எவ்வித எதிர்ப்பினையும் வெளியிடவில்லை என்பதுடன், நிர்வாகக் கைநூல் திறைசேரி பிரதிச் செயலாளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைவாக திருத்ததம் செய்யப்பட்டு மீள அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி உரிய திருத்தங்கள் நிர்வாக கைநூலில் உள்ளடக்கப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனால் அது நிறைவடைந்ததன் பின்னர் நிதி அமைச்சின் அனுமதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br>அத்துடன், 32 ஊழியர்களுக்கு மட்டும் 2014ம் ஆண்டு விழாக்கால முற்கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதுடன், சபையின் ஊழியர்களின் எண்ணிக்கை 41 ஆக இருக்கையில் 82 நபர்களுக்கு உரிய வசதியளிக்கப்பட்டுள்ளது எனும் கூற்றில் உண்மையில்லை என்பதனை தயவுசெய்து கவனத்தில்கொள்க. |
| (ஆ) | முறையான அங்கீகாரதொன்றில்லாமல் ஆரம்ப சம்பளம் ரூபா 25,000 இற்கு குறைந்த 5 உத்தியோகத்தர்களுக்காக இடர் கடனாக ரூபா 250,000 வீதம் வழங்கப்பட்டிருந்தது. | இலங்கை காப்புறுதி சபையின் இடர் கடன் கொடுப்பனவு தொடர்பாக தீர்மானங்கள் எடுக்கப்படுவது நிர்வாகக் கைநூலில் உள்ளவாறாகும். அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அனைத்து ஊழியர்களுக்கும் ரூபா 250,000 உச்சளவாக இடர் கடன் தொகை வழங்கப்படும். எனினும், இடர் கடன் கொடுப்பனவை விடுவிக்கையில் சம்பளத்தின் மொத்த கழிப்பனவுகள் 60% வீதத்தை விஞ்சாது இருப்பது கவனத்தில் கொள்ளப்படுகின்றது. இந்தக் கொடுப்பனவு காப்புறுதிச் சபை நிறுவப்பட்ட காலத்தில் இருந்து கொடுப்பனவு செய்யப்படுகின்றது. |
| (இ) | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சரவை, பொது நிர்வாகச் சுற்றறிக்கை அல்லது திறைசேரியினால் தீர்மானிக்கப்பட்ட நலன்கள் தமது நிர்வாக சபைகளின் அங்கீகாரத்துடன், தமது ஊழியர்களுக்கு கொடுப்பனவு செய்ய கூட்டுத்தாபனம் மற்றும் நியதிச்சட்ட சபைகளுக்கு முடியுமாக இருந்த போதிலும், அவ்வாறான அதிகாரமொன்றில்லாமல் மேற்கொள்ளப்பட்ட மேலதிக படிகள், ஊக்குவிப்புக் கொடுப்பனவிற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், திறைசேரி பிரதி செயலாளரின் 2009 திசம்பர் 29 ஆம் திகதிய MF/2/4/2IBSL/GEN இலக்கமுடைய கடிதத்தின் மூலம் குறிப்பிடப்பட்டிருந்ததின் பிரகாரம் சபையினால் முன்மொழிவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் 2009 ஆம் ஆண்டிலிருந்து 2012 வரை மிகையூதியப்படிகளாகவும் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்காக ஊக்குவிப்பு படிகளாக முறையே ரூபா 1,951,246 தொகையும் ரூபா 1,754,948 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | சபையினால் தயாரிக்கப்பட்ட செயலாற்றுகையை அடிப்படையாகக் கொண்டு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும் முறை பற்றிய யோசனை 04.11.2014ம் திகதி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. எனினும், உரிய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது பணிப்பாளர் சபையின் அனுமதியின் கீழ் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். |
| **3.** | **நிதி மீளாய்வு** | |
| **3.1** | **நிதி விளைவுகள்** | |
| | சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 163,129 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 148,207 ஆனமையினால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 14,922 அல்லது 10 சதவீத அதிகரிப்பொன்றைக் கணக்கூடியதாக இருந்தது. இதற்காக வருமானம் ரூபா 1,082,977 ஆல் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது | |

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எழுப்பப்பட்ட விடயங்கள் தொடர்பாக சபையின் விளக்கம் தொடர்ச்சி

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | இலங்கை காப்புறுதிச் சபையின் விளக்கங்கள் |
|---|---|---|
| 3.2 | பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு | |
| | நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியிலான நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 2,195,085,644 ஆக இருந்ததுடன், அதில் 99 சதவீதம் அல்லது ரூபா 2,170,032,222 தொகை 2000 இன் 43 ஆம் இலக்க இலங்கை காப்புறுதித் தொழிலை நெறிப்படுத்துதல் அதிகாரச்சட்டத்தின் 103 ஆம் பிரிவின் 103 அம் பிரிவின் பிரகாரம் காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தில் முதலீடுகளை பிரதிநிதித்துவப்படுத்தியது. அதன் பிரகாரம் நடைமுறைச் சொத்து விகிதம் 105:1 ஆன கூடிய மட்டத்தில் காணப்பட்டது. | |
| 4. | தொழிற்பாட்டு மீளாய்வு | |
| 4.1 | செயலாற்றுகை | |
| (அ) | கீழ்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டது<br>காப்புறுதிச் சான்றிதழ் உரித்துடையவர்களினதும் எதிர்கால காப்புறுதி உரித்துடையவர்களினதும் தொடர்பினை பாதுகாக்கும் நோக்கில் காப்புறுதியாளர்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற காப்புறுதி உரித்துக் கொடுப்பனவொன்று தொடர்பான பிணக்கொன்றின் போது அதனை புலனாய்வு செய்யும் சட்ட ரீதியான அதிகாரம் சபைக்கு இருப்பதுடன், மீளாய்வாண்டினுள் இவ்வாறு சபைக்கு கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 284 ஆகும். அதில் 157 முறைப்பாடுகளும் 2013 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட 11 முறைப்பாடுகள் தொடர்பாக கணக்காய்வுத் திகதியான 2015 ஏப்பிரல் 07ஆந் திகதி வரையிலும் புலனாய்வு நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்படாதிருந்ததுடன், புலனாய்வை பூர்த்தி செய்வதற்கு 03 மாதங்கள் முதல் 10 மாதங்கள் வரை தாமதமான 75 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | 2014ம் ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்து ஒகஸ்ட் மாத இறுதி வரை பணிப்பாளர் – விசாணை பதவி வெற்றிடமாக இருந்ததுடன், நெடுங்காலமாக இருந்து வந்த நிறைவேற்றுத்தரப் பதவி வெற்றிடங்கள் 2014 டிசம்பர் மாதத்திலேயே நிரப்பப்பட்டது. அதனால், மனிதவளப் பற்றாக்குறை காரணமாக உரிய காலத்தில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை விசாரனை செய்வதற்கு எடுக்கப்பட்ட தொத்தக் காலத்தில் காலதாமதம் காணப்படுகின்றது.<br>விசாரணை நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்படாது இருந்த 2013ம் ஆண்டுக்கான 11 முறைப்பாடுகள் தொடர்பான தற்போதைய நிலைப்பாடு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.<br>● 4 முறைப்பாடுகள் - காப்புறுதி முகவர்களின் தகைமை தொடர்பாக கிடைக்கப்பெற்றதுடன், உரிய பரீட்சைப் பெறுபேற்றினை பரீட்சைகள் திணைக்களத்தினால் உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் காலதாமதம் காணப்படுகின்றது. எனினும், 27.04.2014ம் திகதி மேற்கொள்ளப்பட்ட தொலைபேசி அழைப்பிற்கு அமைவாக மேலும் ஒரு மாதம் தாமதமடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>● 4 முறைப்பாடுகள் - அனேக வாரங்களாக முறைப்பாட்டுத் தரப்பு மற்றும் காப்புறுதி நிறுவனம் என்பவற்றிடமிருந்து எழுத்து மூலத்திலான மேலதிக தகவல்கள் - தெளிவுபடுத்தல்கள் - தகவல்கள் மற்றும் ஆவணங்கள் பெறப்பட்டது. அதேபோல், பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களை மீளாய்வு செய்தல், அவசியமான ஆலோசனைகளை வழங்குதல் என்பவற்றுக்கு குறிப்பிடத்தக்க காலம் செலவழிந்துள்ளது. எனினும், காலதாமதமின்றி இது தொடர்பான விசாரணை நடவடிக்கைகளை பூர்த்திசெய்வதற்கு முடிந்தவரையில் எல்லாவிமான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br>● 1 முறைப்பாடு – விபத்தை நேரடியாகப் பார்த்த சாட்சியின் எழுத்து மூலமான தெளிவுபடுத்தல்கள் எதிர்பார்க்கப்படுகின்றது. திருகோணமலை கடற்படை முகாமில் சேவையாற்றும் இந்த சாட்சியாளர் விடுமுறைக்கு வீட்டிற்கு வந்ததும் உரிய தகவல்களை எங்களுக்கு வழங்குவதாக அறிவித்துள்ளார்.<br>● 1 முறைப்பாடு – விசாரணை நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன், சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br>● 1 முறைப்பாடு – செம்மண்ணில் நடைபெற்ற நிகழ்வின் காரணமாக உரிய நிறுவனத்திற்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாகவாகும். காப்புறுதிச் சபையின் ஆலோசனையின் படி நட்டத்தினை உறுதிப்படுத்துவதற்கு 2014ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் இயற்கை நட்டம் தொடர்பான மதிப்பீட்டாளர் நியமிக்கப்பட்டுள்ளார். எனினும் உரிய அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு கிட்டத்தட்ட ஒரு வருடமாகியது. 2015 மார்ச் மாதத்தில் நிலமையை மீளாய்வு செய்யப்பட்டதுடன், நீதிபதி திணைக்களத்தின் கருத்தினை கேட்டறிந்ததன் பின்னர் உரிய கொடுப்பனவை கொப்பனவு செய்வதற்கு தீர்மானம் எடுப்பதற்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை சபை உடன்பட்டுள்ளது. |

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எழுப்பப்பட்ட விடயங்கள் தொடர்பாக சபையின் விளக்கம் தொடர்ச்சி

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | இலங்கை காப்புறுதிச் சபையின் விளக்கங்கள் |
|---|---|---|
| | | காப்புறுதி உரித்து மற்றும் பூட்கை தொடர்பாக பல்வேறுபட்ட முறைபாடுகள் காப்புறுதிச் சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. அந்த ஒவ்வொரு முறைப்பாடுகளினதும் தன்மைக்கு அமைவாக அந்த விசாரணைகளை மேற்கொள்வதற்கு எடுக்கும் காலம் வேறுபடும். ஊதாரணமாக உரித்தினை வழங்குவதற்கு எடுக்கும் தாமதம் அல்லது காப்புறுதி பூட்கையின் பிரதி கிடைக்காமை தொடர்பான முறைப்பாடுகளை குறுகிய காலத்தினுள் நிறைவுசெய்யலாம் என்பதுடன், காப்புறுதி உரித்துக்கொடுப்பனவை நிராகரித்தல் அல்லது காப்புறுதி முகவரினால் உண்மையற்ற தகவல்கள் வழங்கப்படுவதன் ஊடாக காப்புறுதி பூட்கையாளரை தவறாக வழிநடத்துதல் போன்ற முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு அவசியமான காலத்தினை குறிப்பாக குறிப்பிட முடியாது. அநேக வேளைகளில் பரீட்சைகள் திணைக்களம், இலங்கை பொலிஸ், விசேட வைத்தியர்கள் எனும் மூன்று தரப்பினரினாலும் தகவல்கள் அல்லது தெளிவுபடுத்தல்கள் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் வழங்குமாறு கோருவதற்கு காப்புறுதி சபைக்கு முடியாமையினால், பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கு தொலைபேசி அல்லது எழுத்து மூலமான நினைவூட்டல்கள் மேற்கொள்ளப்படுகின்றது.<br>விசாரணை செய்யப்படும் அனைத்து முறைப்பாடுகளினதும் நிலமை அவ்வலகில் இரண்டு வாரங்களுக்கொருமுறை நடைபெறும் கூட்டத்தில் மீளாய்வு செய்வதுடன், அதன் மூலம் குறிப்பிட்ட முறைப்பாடுகளின் விசாரணைகள் வேண்டுமென்று அல்லது தவறுதலாக காலதாமதமடையாது பார்த்தக்கொள்ளப்படுகின்றது.<br>அதனால், யாதேனும் முறைப்பாடுகளுக்கு உரிய நிலைமையை விசாரித்து அறிவது அல்லாது முறைப்பாடு கிடைக்கப்பெற்ற தினத்தில் இருந்து கணிப்பீடு செய்வதன் மூலம் விசாரணை தாமதமடைந்துள்ளது எனும் தீர்மானத்திற்கு வருவது நியாயமானது அல்ல என்பது எங்களது கருத்தாகும். |
| **4.** | **தொழிற்பாட்டு மீளாய்வு** | |
| **4.1** | **செயலாற்றல்** | |
| (ஆ) | காப்புறுதிப் பூட்கையாளர்களைப் பாதுகாப்பது மற்றும் மக்களுக்கு அறிவூட்டுவதன் மூலம் காப்புறுதி தொடர்பான நம்பிக்கையை அதிகரிக்கும் நோக்கத்துடன், சந்தை அபிவிருத்தி மற்றும் வெளிவாரி ஒருங்கிணைத்தல் அலகு நிறுவப்பட்டிருந்ததுடன், இந்த அலகில் மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் செயற்படுத்தவதற்கு திட்டமிடப்பட்டிருந்த செயற்பாடுகளுக்கு ரூபா 10,100,000 ஒதுக்கப்பட்டிருந்தது. அதன் முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. | |
| (i) | அரச முகவர்களின் காப்புறுதி தொடர்பான அறிவினை மேம்படுத்தும் நோக்கில் பிரதேச செயலகங்களில் 10 அறிவூட்டுதல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்த போதிலும், அதில் கொழும்பு மாவட்ட செயலகத்தில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பதின்மூன்று நபர்கள் மாத்திரம் சமூகமளித்திருந்தனர். | பிரதேச செயலக மட்டத்தில் நடைபெற்ற இவ்வாறான நிகழ்ச்சித்திட்டத்தை மாவட்ட செயலகங்களுக்கும் கொண்டுவருவதற்கு தீர்மானித்ததற்கு காரணம், மாவட்ட செயலாளர்களின் கூட்டத்தில் பங்குபற்றும் பிரதேச செயலாளர்களை அறிவூட்டுவதற்காகவாகும். அந்தக் கூட்டத்திற்கு வேறு அலுவலர்கள் சமூகமளிப்பதில்லை. எனினும், உரிய தரப்பினருக்கு உரிய வகையில் தொடர்பாடலை வழங்குவதற்கு மாவட்டச் செயலக காரியாலயத்தில் அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டத்தை நடத்ததல் இலகுவானதல்ல எனத்தெரிய வந்ததனால், அதையடுத்து பிரதேச செயலக மட்டத்தில் நடத்துவதற்கு தீமானம் எடுக்கப்பட்டது. |
| (ii) | மீளாய்வாண்டில் தெரிவுசெய்யப்பட்ட பொதுமக்கள் கூடும் இடங்களுக்காக 3 கருத்தரங்குகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அச்செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு சபை தவறியிருந்தது. | வர்த்தக சம்மேளன கிளை காரியாலயங்களில், வியாபார சமூகங்களுக்காக 3 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதற்கு சந்தர்ப்பத்தை வழங்குமாறு 6 கிளைகளுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. எனினும் அதற்கு வர்த்தக சம்மேளனக் கிளைகளில் இருந்து எவ்வித பதிலும் கிடைக்காததனால் திட்டமிடப்பட்டிருந்தவாறு மேற்கொள்வதற்கு முடியாமல் போனது. |
| (iii) | கண்காட்சிக்காக பங்குபற்றுவதற்கும் பிரதான வீதிகளில் மேற்கொள்ளப்படுகின்ற வீதி விளம்பர நடவடிக்கைகளுக்காக சமூகமளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்திற்காக மாத்திரம் சபை பங்குபற்றியிருந்தது. | வீதிக் காட்சிகளை நடாத்தவதற்கு அல்லது கண்காட்சிகளில் பங்குபற்றுவதற்கு அழைப்பு விடுக்கப்படுதல் வேண்டும். எனினும் மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் அவ்விதமான அழைப்புகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. |

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எழுப்பப்பட்ட விடயங்கள் தொடர்பாக சபையின் விளக்கம் தொடர்ச்சி

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | இலங்கை காப்புறுதிச் சபையின் விளக்கங்கள் |
|---|---|---|
| **4.** | **தொழிற்பாட்டு மீளாய்வு** | |
| **4.1** | **செயலாற்றல்** | |
| (iv) | இலத்திரனியல் ஊடாக நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 2,500,000 ஆன மதிப்பீட்டின் அடிப்படையில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த ஆவணப்படுத்தப்பட்ட ஊடக வியாபாரம் ஆண்டினுள் செயற்படுத்தியமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. “ | Documentary Campaign எனும் தலைப்பின் கீழ் தற்போது நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அது யாதேனும் தேர்ந்தெடுக்கப்பட்ட மின்னிலத்திரனியல் ஊடகத்தின் ஊடாக ஒளிபரப்பு செய்வதற்காகவாகும். ஒளி மற்றும் ஒலி ஊடகத்திற்கு அறிக்கை நிகழ்ச்சித்திட்டமொன்றை தயாரிப்பதற்கு அதிக நிதி, நேரம் மற்றும் மனித உழைப்பு அவசியமாகும். அத்துடன், அந்த நிகழ்ச்சித்திட்டம் மீண்டும் மீண்டும் பயன்படுத்தத்தக்க வகையில் தயாரிக்கப்படுதல் வேண்டும்.<br>எனினும், இலங்கை காப்புறுதிச் சபையின் பெயரை இலங்கை காப்புறுதி வழிகாட்டி ஆணைக்குழு என மாற்றம் செய்வதற்கு அவசியமான வரைவு நிதி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதனால் காப்புறுதிச் சபையின் தற்போதைய பெயரைப் பயன்படுத்தி நிகழ்ச்சித்திட்டத்தை தயாரிப்பது உகந்ததல்ல என்பது எங்களின் கருத்தாகும். அதனால், திட்டமிட்டவாறு அந்த நிகழ்ச்சதிட்டம் மீளாய்வு வருடத்தினுள் தயாரிக்கப்படவில்லை. |
| (v) | காப்புறுதி தொழில் மற்றும் உரித்துடையவர்களின் நன்மை கருதி காப்புறுதி உறுதி அபிவிருத்தி செய்யும் நோக்கில் கம்பனிகளின் காப்புறுதி வெளியீடுகளை மீளாய்வு செய்வதன் கீழ் மீளாய்வாண்டினுள் 06 காப்புறுதி கம்பனிகளால் அறிமுகப்படுத்தப்பட்ட 7 காப்புறுதி உறுதிகள் மீளாய்வுக்கு உட்பட்டிருந்தது. அதற்குரிய காப்புறுதி உறுதிகளில் காணப்படும் நலிவுகள் மற்றும் உத்தேச பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு சபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு 2014 நவம்பர் 19 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக குறித்த காப்புறுதி கம்பனிகளை அறிவூட்டுவதற்கு கணக்காய்வு திகதியான 2015 ஏப்பிரல் 08 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சந்தை அபிவிருத்தி மற்றும் வெளிவாரி தொடர்பாடல் பிரிவின் தொழிற்பாட்டுத் திட்டம் - 2014 ற்கு அமைவாக காப்புறுதி பூட்கைளில் காணப்படும் குறைபாடுகள் மற்றும் அதற்கான முன்மொழிவுகள் என்பவற்றை உள்ளடக்கிய அறிக்கையை பணிப்பாளர் சபையின் அனுமதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அந்த அறிக்கை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர், பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர்கள் மற்றும் உதவிப் பணிப்பாளர்களின் யோசனை மற்றும் கருத்துகளை அறிந்துகொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த கருத்துகள் யோசனைகள் என்பவற்றுக்கு அமைவாக உரிய அறிக்கை மேலும் மேம்படுத்தப்படுத்துவதற்கு, அதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக சபை அங்கத்தவர்களின் அனுமதிக்கு சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன், அந்த யோசனை காப்புறுதிக் கைத்தொழிற்துறைக்கு தாக்கத்தினை உருவாக்குவதனால், அந்த யோசனைகளை செயற்படுத்துவதற்கு முன்னர் காப்புறுதிக் கைத்தொழிற்துறையில் இருக்கும் நிறுவனங்களிடம் கருத்துக்கள் கேட்டறியப்படுதல் வேண்டும். |
| **4.1** | **செயலாற்றுகை** | |
| (இ) | 2009 ஆம் ஆண்டின் போது சபையினால் தனியார் கம்பனியொன்றுக்கு தடையுத்தரவொன்றை விதித்திருந்ததுடன் SC(FR)191/09 ஆம் இலக்க அடிப்படை உரிமைகள் வழக்கின் போது உயர்நீதிமன்றம் வழங்கியிருந்த வழங்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் அக்கம்பனிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போலியான காப்புறுதி உரித்துக் கோரலுடன் தீர்ப்பதற்காக அக்கம்பனிகளின் சொத்துக்களை அகற்றுவதற்காக சபை அக்கம்பனியுமன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உரித்து விண்ணப்பதாரருக்கு அவர்களின் உரித்துக்கான விண்ணப்பத்தை சபைக்கு எழுத்து மூலமாக சமர்ப்பிக்குமாறு பத்திரிகை அறிவித்தலொன்றின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அந்த போலியான 142 சொத்து உரித்துக் கோரல்களைில் எந்தவொரு விண்ணப்பமொன்றிற்காகவும் கொடுப்பனவு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.. | உரிய நிறுவனம் இடைநிறுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் அதனால் பேணப்பட்ட 142 கோவைகள் இலங்கை காப்புறுதிச் சபைக்கு பாரமளிக்கப்பட்டது. அதில் 10 கோவைகள் தற்போதுள்ள வழக்குகள் சம்பந்தமானவை என்பதுடன் மிகுதி 132 கோவைகளும் உரித்துக் கோவைகளாகும்.<br><br>SC(FR) 191/09 எனும் வழக்கில் உயர் நீதிமன்றத்தின் கட்டளைப் பிரகாரம் மேற்குறிப்பிட்ட 132 கோவைகளில் மெய்யான உரித்தை அடையாளம் காண்பதற்கு இலங்கை காப்புறுதிச் சபையினால் இதுவரை தீர்க்கப்படாத உரித்துக்களுக்கான கோரிகையை சமர்ப்பிக்குமாறு பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டது. அந்த பத்திரிகை அறிவித்தலுக்கு அமைவாக தங்களுடைய உரித்துக்களை தெரிவித்து 3 பதில்கள் மட்டும் கிடைக்கப்பெற்றது. எனினும் உரிய பத்திரிகை அறிவித்தலை அனைத்து உரிமை கோரிக்கையாளர்களின் கவனத்திற்கு கொண்டுவருவதற்கு மேற்குறிப்பிட்ட 142 கோவைகளுக்கும் கடிதங்களை அனுப்புவதற்கு இலங்கை காப்புறுதிச் சபை தீர்மானித்தள்ளது.<br><br>வழக்கு கோவை<br><br>தற்போதுள்ள 10 வழக்குகளில் 3ற்குரிய நிறுவனத் தரப்பினர் இல்லை. தற்போதுள்ள வழக்கு முடிவடையும் வரையில் அந்த உரித்துக்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு இலங்கை காப்புறுதிச் சபைக்கு இயலாது.<br><br>உரித்துக் கோவைகள்<br><br>உரித்துக் கோவைகள் 132 இனுள் “கொடுப்பனவு செய்யப்பட்டு பற்றுச்சீட்டுகள்” உரிய உரித்துக் கோவையில் கோரிக்கையாளரினால் கையொப்பமிடப்பட்டு கோவைப்படுத்தப்பட்ட 65 கோவைகள் உள்ளதுடன், அதற்கு இலங்கை காப்புறுதி சபையினால் கடிதம் அனுப்பப்படமாட்டாது. |

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எழுப்பப்பட்ட விடயங்கள் தொடர்பாக சபையின் விளக்கம் தொடர்ச்சி

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | இலங்கை காப்புறுதிச் சபையின் விளக்கங்கள் |
|---|---|---|
| (ஆ) | | மிகுதி 67 கோவைகளுக்கும் கடிதம் அனுப்பப்பட்டதுடன், அதன் பதில்களின் வகைக கீழ்வருமாறு அமைந்துள்ளது.<br>● திருப்பி அனுப்பப்பட்ட கடிதங்கள் :06<br>● பதில் இல்லாதது : 55<br>● பதில் கிடைக்கப்பெற்றது: 06<br>அத்துடன், அந்த 6 பதில்களில் ஒன்றுக்கு நடைமுறையில் உரித்து இல்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.<br>அதன்படி உரித்து கோரிக்கைகள் 5 மற்றும் பத்திரிகை அறிவித்தலின் படி கிடைத்த பதில் 3 உட்பட தீர்க்கப்படாம உரித்துக்கள் 8 அடையாளம் காணப்பட்டுள்ளது.<br>மேற்குறிப்பிட்டவாறு அடையாளம் காணப்பட்ட தீர்க்கப்படாத உரித்துக்கள் 8 இல் மெய் உரித்து எவை என்பது தொடர்பாகவும் மற்றும் தீர்க்கப்பட வேண்டிய உரித்துப் பெறுமதி என்ன என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.<br>அதற்கு கோவைகளில் போதியளவு தகவல்கள் இல்லாததனால் அது தொடர்பாக மேலும் தகவல்கள் உரிய கோரிக்கையாளரிடமிருந்து கோரப்பட்டுள்ளது. அத்துடன், நடைமுறையில் உள்ள வழக்கு தீர்க்கப்படும் வரையில் கொடுப்பனவுகளைத் தீர்ப்பதற்கு முடியாது.<br>மேற்குறிப்பிட்ட கோரிக்கையாளர்களிடமிருந்து உரிய தகவல்கள் பெறப்பட்டு மெய்யான உரித்து எவை என உறுதிப்படுத்தும் வரை எந்தவொரு இழப்பீட்டையும் கொடுப்பனவு செய்வதற்கு முடியாது.<br>அத்துடன், உரிய நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் முழுமையான அங்கத்தவர்களின் எண்ணிக்கை 2ஆக இருந்தபோதிலும், இப்போது நிறுவனத்தில் செயற்பாட்டு பணிப்பாளர்கள் இருவர் இல்லாததனால், புதிய பணிப்பாளரை இலங்கை காப்புறுதிச் சபையின் அனுமதியுடன் நியமிக்குமாறு உரிய நிறுவனத்திற்கு அறிவித்திருந்த போதிலும், இதுவரை அவ்வாறு செய்வதற்கு அவர்களினால் இயலாமல் போயுள்ளது. சொத்துக்களை கைப்பற்றுவதற்கு நீதிமன்ற அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் அல்லது வேறு செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளை தீர்க்கப்படல் வேண்டும் என்பதுடன், அதற்கு குறிப்பிட்ட காலம் எடுக்கும். |
| **4.2** | **பணிக்குழு நிர்வாகம் கீழ்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டது.** | |
| (அ) | 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 43 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான எண்ணிக்கை 41 ஆனமையினால் 03 வெற்றிடங்களும் 01 மிகையும் காணப்பட்டன. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையை மிகைத்து அலுவலக உதவியாளர் பதவியொன்றுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்காகப் பெற்றுக்கொண்ட அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | முழு நிறுவனத்திற்கும் தற்போது இருப்பது ஒரேயொரு அலுவலக உதவியாளர் மட்டுமேயாகும். அலுவலக உதவியாளர் பதவியை உருவாக்குவதற்கு, அவசரதேவைகளின் கீழ் சபையில் 3 வருடங்களாக ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய நபரை உரிய சேவைப் பிரமாணத்தைப் பின்பற்றி பணிப்பாளர் சபையின் ஒப்புதல் பெறப்பட்டு நியமனம் செய்யப்பட்டது. இதற்கான அமைச்சின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) | நிரந்தர பதவியொன்றான பணிப்பாளர் மேற்பார்வை பதவிக்காக 2011 திசெம்பர் 26ஆந் திகதி ஒப்பந்த அடிப்படையில் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன், நிரந்தர உத்தியோகத்தரொருவரை ஆட்சேர்பதற்கு சபை செயற்பட்டிருக்கவில்லை. | உரிய பதவிக்கு பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டு, விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகத்தேர்வு நடாத்தப்பட்ட போதிலும், அதியுயர் தகைமை மற்றும் அனுபவம் வாயந்த நபர் அதிகூடிய சம்பளத் தொகையைக் கோரினர். தகைமையுடையவர்களில் எங்களால் முன்மொழியப்பட்ட சம்பளத்திற்கு அந்தப் பதவியை ஏற்றுக்கொள்வதற்கு திரு ராமநாயக்க மட்டுமே சம்மதத்தை தெரிவித்திருந்தார்.<br>அவரை நிரந்தரமாக நியமனம் செய்வதற்கு தேவையிருந்த போதிலும். ஆட்சேர்ப்பு பிரமாணத்தில் குறிப்பிடப்பட்ட உயர் வயதெல்லை 50 என்பதை அவர் கடந்திருந்ததனால், ஆரம்பத்தில் அவர் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டதுடன், அவ்வலகினால் அண்மையில் செயற்படுத்தப்பட்ட RBC மற்றும் RBS நிகழ்ச்சித்திட்டத்தினை நிறைவு செய்யும் வரை அவரை சேவையில் வைத்துக்கொள்ளுதல் அவசியமாகும். |

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எழுப்பப்பட்ட விடயங்கள் தொடர்பாக சபையின் விளக்கம் தொடர்ச்சி

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | இலங்கை காப்புறுதிச் சபையின் விளக்கங்கள் |
|---|---|---|
| **4.2** | **பணிக்குழு நிர்வாகம் கீழ்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டது** | |
| (இ) | 2007 நவம்பர் 26 ஆந் திகதி முதல் வெற்றிடமாகக் காணப்பட்ட இரண்டு உதவிப் பணிப்பாளர் பதவிகளுக்காக தகைமைகளைக் கொண்ட உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 மே 20 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடம் நிலவும் உதவி பணிப்பாளர் பதவிகள் இரண்டில் ஒன்று மேற்பார்வை அலகிற்கு தொழில் உயிர்கணிப்பீட்டாளர் ஆட்சேர்ப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் தற்போது சபையில் இருக்கும் சம்பளத்திற்கு அவ்வாறு தொழிற்துறையாளரை நியமிப்பது கடினமாக அமைந்துள்ளது.<br>மற்றைய உதவிப் பணிப்பாளர் பதவி சந்தை அபிவிருத்தி மற்றும் வெளிவாரி தொடர்பாடல் அலகுக்காக ஒதுக்கப்பட்ட போதிலும் அந்தப் பதவியை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகத்தேர்வு நடத்தப்பட்ட போதிலும் தகைமையுடைய நபரை தேர்ந்தெடுக்க முடியாமல் போனது.<br>சபையில் காணப்படும் வெற்றிடத்திற்கு அவசியமான நோக்கத்திற்கு பொருத்தமில்லாத விண்ணப்பதாரரை தேர்ந்தெடுப்பதன் மூலம் நிறுவனத்திற்கு நன்மையில்லாது போகும் என்பது எங்களது கருத்தாகும். |
| (ஈ) | ஒவ்வொரு பதவிக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறைக் கோவையொன்று தயார் செய்யப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான பிரமாணம் நிர்வாக கைநூலில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், அது உரிய அனுமதிக்காக நிதி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டது உரிய பணிக்குழு எண்ணிக்கைக்கான அனுமதி நிதி அமைச்சினால் வழங்கப்பட்டதன் பின்னராகும். |
| **4.3** | **சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்** | |
| | சபையினால் தமது அலுவலகத்தை குறைந்த கிரயத்தில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் உலக வர்த்தக நிலையத்தின ஒரு சதுர அடி ரூபா 214 வீதம் 8,741 சதுர அடி அளவிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 23,862,930 கூட்டுத்தொகையான பாரியளவிலான கிரயமொன்றும் வாகன நிறுத்துமிடக் கட்டணமாக ரூபா 383,160 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக வருடாந்தம் வருமானத்தை விஞ்சிய செலவினத்தை தீர்ப்பதற்கு காப்புறுதி உரித்துடையவர்களின் பாதுகாப்பு நிதியத்திலிருந்தும் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருந்தது. | இந்த விடயம் சபையின் அவதானத்திற்கு இதற்கு முன்னரும் கொண்டுவரப்பட்டதுடன், இதற்கான பதில் அளிக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தை நிறுவுவதற்கு வேறொரு இடத்தை தேடுவதற்கு கவனம் எடுக்கப்பட்ட போதிலும், ஒழுங்குபடுத்தல் நிறுவனத்தை பேணுவதற்கு பொருத்தமான சூழல் உள்ள இடத்தை தற்போதுள்ள ஆகுசெலவிற்கு குறைவான தொகையில் தேடுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் எல்லாம் வீணாகிப்போயின. அமைச்சின் தலையீட்டின் கீழ் இது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுப்பின் நாம் அதற்கு நன்றியுடையவர்களாக இருப்போம்.<br>உங்களால் இது தொடாபாக 2010 மற்றும் 2011 ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் இது குறிப்பிடப்பட்ட போதும், எங்களுடைய தெளிவுபடுத்தலை ஏற்றுக்கொண்டு 2012 மற்றும் 2013ம் ஆண்டு இறுதி கணக்காய்வு அறிக்கைகளில் இந்த விடயம் அகற்றப்பட்டிருந்தது. அத்துடன், மேற்குறிப்பிட்ட வருடங்களுக்காக நடத்தப்பட்ட பொது தொழில்முயற்சி குழு அறிக்கையின் குறிப்புகளில் அலுவலக வாடகை கொடுப்பனவு தொடர்பாக எவ்வித குறிப்பும் இல்லை என்பதை தெரிவிக்க விரும்புகின்றோம்.<br>வாகனத்தரிப்பிடக் கட்டணம் தொடர்பாக எங்களிடம் பிரயோக ரீதியான வேறு மாற்று இல்லாததனால் அது கட்டாயமாக கொடுப்பனவு செய்ய வேண்டிய செலவு என்பதைக் குறிப்பிட விரும்புகின்றோம்.. |
| **5.** | **கணக்கீட்டு நடவடிக்கைகளின் சுபாவம் மற்றும் சிறந்த நிர்வாகம்** | |
| **5.1** | **வரவுசெலவுத்திட்ட ஆவணத்தின் நிர்வாகம்** | |
| | பாதீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் செலவினம், உள்ளபடியான வருமானம் செலவினங்களுக்கிடையே 3 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் தவறுகளை முடிந்தவரையில் குறைத்து வரவுசெலவுதிட்ட பதிவேட்டினை தயாரிப்பதற்கு எடுக்க வேண்டிய எல்லாவிதமான முயற்சிகளும் எடுக்கப்படும். |
| **5.2** | **தீர்க்கப்படாத கணக்காய்வு பந்தி** | |
| | 08 ஏப்பிரல் 2014ம் திகதி நடைபெற்ற அரச வியாபாரங்கள் தொடாபான செயற் குழுவினால் வழங்கப்பட்ட கட்டளையை செயற்படுத்தவது தொடாபாக கீழ்வரும் விடங்கள் அவதானிக்கப்பட்டது. | |

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எழுப்பப்பட்ட விடயங்கள் தொடர்பாக சபையின் விளக்கம் தொடர்ச்சி

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | இலங்கை காப்புறுதிச் சபையின் விளக்கங்கள் |
|---|---|---|
| (அ) | 2010 ஆம் ஆண்டின் போது சபையினால் திறைசேரியின் அங்கீகாரமொன்றில்லாமல் அதன் 17 உத்தியோகத்தர்களுக்கு இரண்டு சம்பள ஏற்றங்கள் வீதம் செலுத்தப்பட்டிருந்தமை மற்றும் 2012 யூலை மாதத்திலிருந்து சபையினால் திறைசேரியின் அங்கீகாரமொன்றில்லாமல் அதன் அனைத்து உத்தியோகத்தர்களினது சம்பளத்தை 25 சதவீதத்தினால் அதிகரித்தமை தொடர்பாக தற்போதைய முகாமைத்துவம் பொதுத் திறைசேரிக்கு எழுத்துமூலம் அறிவித்து அது தொடர்பாக அவர்களிடமிருந்து ஆலோசகை பெற்றுக்கொள்ள வேண்டுமென கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட கடிதமொன்று மாத்திரம் பொதுத் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டதாக கணக்காய்விற்கு அறிகையிடப்பட்டிருந்தது. | 08.04.2014ம் திகதி நடைபெற்ற அரச தொழில்முயற்சி தொடாபான செயற்குழுக் குழுக் கூட்டத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக தற்போதைய நிலமையை தெளிவுபடுத்தி அமைச்சுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் குறிப்பிட்டவாறு பணிப்பாளர் சபையின் உரிய அனுமதியின் கீழ் உரிய காப்புறுதி காப்பீடு சபையினால் உரிய அலுவலர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கு பெறப்பட்டுள்ளது.<br><br>இது கொடுப்பனவு அல்லது சம்பள திருத்தம் அல்லாததனால் இவ்வாறான விடயம் தொடாபாக தீர்மானங்களை எடுப்பதற்கான அதிகாரம் சபையிடம் உள்ளதென நாம் நம்புகின்றோம். |
| (ஆ) | திறைசேரியின் அங்கீகாரமொன்றில்லாமல் ரூபா 513,713 தொகை செலவு செய்து சபையின் 33 உத்தியோகத்தர்களுக்காக காப்புறுதி மேவுகையொன்று பெற்றுக்கொண்டமை தொடர்பாக முறைப்படி நடவடிக்கை எடுக்குமாறு சபைக்கு கட்டளையிடபட்டிருந்த போதிலும், இது தொடாபாக திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 08.04.2014ம் திகதி நடைபெற்ற அரச தொழில்முயற்சி தொடாபான செயற்குழுக் குழுக் கூட்டத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக தற்போதைய நிலமையை தெளிவுபடுத்தி அமைச்சுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் குறிப்பிட்டவாறு பணிப்பாளர் சபையின் உரிய அனுமதியின் கீழ் உரிய காப்புறுதி காப்பீடு சபையினால் உரிய அலுவலர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கு பெறப்பட்டுள்ளது.<br><br>இது கொடுப்பனவு அல்லது சம்பள திருத்தம் அல்லாததனால் இவ்வாறான விடயம் தொடாபாக தீர்மானங்களை எடுப்பதற்கான அதிகாரம் சபையிடம் உள்ளதென நாம் நம்புகின்றோம். |
| **6.** | **முறைமை மற்றும் நிர்வாகம்** | |
| | கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளிலுள்ள குறைபாடுகள்ள அவ்வப்போது சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டனஇ பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.<br><br>(அ) கணக்கீடு<br><br>(ஆ) பதவியணியினர் நிர்வாகம்<br><br>(இ) பதவியணியினர் கடன் நிர்வாகம் | எங்களால் திருத்தப்படவேண்டிய துறை தொடர்பாக உங்களின் ஆலோசனைகளைக் கருத்திகொண்டு விசேட கவனம் எடுக்கப்படும். |

# பின்னிணைப்பு I

2014 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட காப்புறுதிக் கம்பனிகள்

| இல. | காப்புறுதியாளரின் பெயர் | காப்புறுதியின் வகை |
|---|---|---|
| 1 | ஏஜஏ இன்ஸ்யூரன்ஸ் லங்கா பிஎல்சி | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 2 | ஏஜஜி இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 3 | அலையன்ஸ் இன்ஸ்யூரன்ஸ் லங்கா லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 4 | அலையன்ஸ் லைப் இன்ஸ்யூரன்ஸ் லங்கா லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி |
| 5 | அமானா டக்காபுல் பிஎல்சி | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 6 | ஆர்பிகோ இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி |
| 7 | ஏசியன் அலையன்ஸ் இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சி | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 8 | சிலிங்கோ இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சி | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 9 | கொண்டினென்டல் இன்ஸ்யூரன்ஸ் லங்கா லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 10 | கோர்பரெடிவ் இன்ஸ்யூரன்ஸ் கம்பனி லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 11 | எச்என்பி அஸ்யூரன்ஸ் பீஎல்சீ | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 12 | ஜனசக்தி இன்ஸ்யூரன்ஸ் பீஎல்சீ | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 13 | லைப் இன்ஸ்யூரன்ஸ் கோர்பரேசன் (லங்கா) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி |
| 14 | எல்ஓஎல்சி இன்ஸ்யூரன்ஸ் கம்பனி லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 15 | எம்பிஎஸ்எல் இன்ஸ்யூரன்ஸ் கம்பனி லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 16 | நெசனல் இன்ஸ்யூரன்ஸ் டிரஸ்ட் ப(ஃ)ண்ட் போர்ட் | பொதுக் காப்புறுதி |
| 17 | ஓரியன்ட் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 18 | பீபல்ஸ் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 19 | சீமாசகித சனச ரக்ஷன சமாகம | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 20 | இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 21 | யூனியன்ஸ் இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சி | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |

# பின்னிணைப்பு II

2014 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு, 2000ம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட காப்புறுதித் தரகர் கம்பனிகள்

| இல | காப்புறுதித் தரகரின் பெயர் | காப்புறுதி வியாபாரத்தின் வகை |
|---|---|---|
| 1 | ஏஎம்டபிள்யு. இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட். | பொதுக் காப்புறுதி |
| 2 | ஏடிஇஸட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட். | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 3 | எய்ட்கன் ஸ்பென்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட். | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 4 | அல்பின்கோ இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட். | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 5 | அலையன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 6 | அக்கியுலைன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 7 | அசெட் ஐ இன்சூரன்ஸ் புரோகர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 8 | அசெட்லைன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 9 | பிரிலியன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 10 | சியக்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 11 | சீலான் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் கம்பனி (பிரை) லிமிடட். | பொதுக் காப்புறுதி |
| 12 | சினர்ஜி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட். | பொதுக் காப்புறுதி |
| 13 | சிஎப் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட். | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 14 | கொலம்போரே இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட். | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 15 | கொமர்ஷல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட். | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 16 | தயா சரண இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட். | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 17 | டெல்மேஜ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட். | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 18 | ஈஏபி - ஆர்எம்எஸ் இன்சூரன்ஸ் புரோகர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 19 | ஈகுவிட்டி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 20 | ஈஸாஜி கரிம்ஜி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட். | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 21 | ஃபின்லே இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 22 | போர்சைட் இன்ஸ்யூரன்ஸ் அன்ட் ரி. இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 23 | ஜோர்ஜ் ஸ்டுவர்ட்ஸ் இன்சூரன்ஸ் புரோகர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 24 | க்ளோபல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ அன்ட் சேர்விசஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 25 | கிரான்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 26 | கார்டியன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 27 | இன்டஸ்ட்ரியல் அன்ட் கொமர்ஷல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 28 | ஜே இன்சூரன்ஸ் புரோகர்ஸ் அன்ட் கன்ஸல்டன்ட்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 29 | ஜேஎப் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொதுக் காப்புறுதி |

## பின்னிணைப்பு II தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| 30 | களனி யுனி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 31 | எல்எம் அன்ட் ஏ. இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் அன்ட் கன்ஸல்டன்ட்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 32 | லக் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 33 | லைப் அன்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் சிலோன் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 34 | மக்வூட்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 35 | மக்ஸ்வெல் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 36 | மோர்கன்டைல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 37 | நேஷன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 38 | பிளசிட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 39 | புரொகெயார் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 40 | புரொடெக்ஷன் அன்ட் அசூவரன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 41 | புரொடெக்ஷன் அன்ட் அட்மோஸ்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 42 | ரெட்மோ ஸ்விஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 43 | ரிலையன்ஸ் ஏஜி இன்சூரன்ஸ் புரோகர்ஸ் லங்கா (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 44 | ரிலியன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 45 | ரின்கூன் லங்கா இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 46 | ரோ-பா இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 47 | சம்சன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 48 | சேனாரத்ன இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 49 | செங்கடகல இன்சூரன்ஸ் புரோக்கர் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 50 | சதர்ன் மேர்ச்சன்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 51 | ஸ்ட்ரஜிக் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 52 | டிரஸ்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 53 | யூஎன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 54 | யுனைடட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 55 | வெரசிடி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட். | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 56 | விக்டர் இமானுவெல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 57 | வொலன்கா இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 58 | ஸெனித் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |

# அருஞ்சொல் விளக்கம்

**திரட்டல்**

ஒரே கம்பனியில் காப்புறுதி செய்யப்பட்டிருக்கும் அல்லது மீள் காப்புறுதி செய்யப்பட்டிருக்கும் கணிசமான அளவிலான இடர்கள் ஓர் இழப்பு நிகழ்வினால் ஒரே நேரத்தில் பாதிக்கப்படுதல்.

**கையகப்படுத்தும் செலவுகள்**

புதிய காப்புறுதி ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் தற்போதைய காப்புறுதி ஒப்பந்தங்களைப் புதுப்பித்தல் (உதாரணமாக, தரகுக் கட்டணங்கள்) என்பனவற்றுடன் சம்பந்தப்பட்ட பிரதானமான அனைத்துச் செலவுகளும்.

**கணிப்பீட்டாளர்**

காப்புறுதி, முதலீடுகள், நிதி முகாமைத்துவம் மற்றும் குடிசனவியல் என்பன தொடர்பான நிகழ்தகவு மற்றும் பிரச்சினைகளுக்கான புள்ளிவிபரக் கோட்பாட்டினைப் பிரயோகிக்கும் ஒரு நிபுணர்.

**நிர்வாகச் செலவுகள்**

தவணைக் கட்டணச் சேகரிப்பு, காப்புறுதிப் பத்திர நிர்வாகம், ஆளணிச் செலவுகள், சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பன தொடர்பான தேய்மான ஒதுக்கீடுகள் என்பவற்றில் இருந்து ஏற்படும் செலவுகளையும் உள்ளடக்கிய நிர்வாக இயல்பைக் கொண்ட செலவுகள்.

**அனுமதிக்கத்தக்க ஆதனங்கள்**

காப்புறுதி வழங்குநர் ஒருவரின் நியதி பூர்வமான கடன்தீர் ஆற்றலை நிர்ணயிப்பதில் உள்ளடக்கக் கூடிய ஆதனங்கள். அத்தகைய சொத்துகள், என்பவை 2000 மாவது ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்துறையை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட விதிமுறைகளின் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ளன.

**ஆண்டுத் தொகை**

குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப்பிரிவுக்கு அல்லது காப்புறுதிதாரரின் ஆயுள் காலத்தின்போது, காலத்திற்குக் காலம் வருமான அனுகூலங்களைச் செலுத்தும் ஒரு காப்புறுதித் திட்டம். எதிர்காலத்தில் ஏதாவது ஒரு கட்டத்தில் கொடுப்பனவுகள் ஆரம்பிக்கப்படும்போது அது ஒத்திவைக்கப்பட்ட ஆண்டுத்தொகையாகும். உடனடியாக வருடாந்த கொடுப்பனவு ஒப்பந்தம் செய்யப்பட்ட ஆரம்பத்திலேயே கொடுப்பனவுகள் ஆரம்பிக்கப்படும்போது அது உடனடியான ஆண்டுத்தொகை ஆகும்.

**பயனாளி**

காப்புறுதிப் பத்திரதாரரின் மரணத்தின் போது, காப்புறுதி செய்யப்பட்ட தொகையையும், கிடைக்க வேண்டிய ஏனைய பயன்களையும் பெற்றுக்கொள்ள வேண்டியவர் எனக் காப்புறுதிதாரரினால் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் நபர்.

**ஒப்பளி**

மீள்காப்புறுதிக் கம்பனியின் வாடிக்கையாளர் (ஆரம்ப காப்புறுதிக் கம்பனி)

**கோரிக்கைகள்**

காப்புறுதி செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் காப்புறுதி நிகழ்வு சம்பவிக்குமிடத்து, ஒரு காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய தொகை. அதாவது, சொத்துகள் அழிதல் அல்லது சேதமடைதல் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட மரணம் அல்லது காயங்கள், மருத்துவமனைச் செலவுகள் அல்லது மருந்துச் செலவுகள் ஏற்படுதல், காப்புறுதி செய்யப்பட்ட நபரின் மரணம் அல்லது உடல் ஊனம், ஒரு காப்புறுதிப் பத்திரம் முதிர்ச்சியடைதல், ஓய்வூதிய வயதை அடைதல், போன்றவை காப்புறுதிப் பத்திரத்தைக் கையளிக்கும் போது செலுத்தப்பட வேண்டிய தொகை.

**கோரிக்கைகள் தொடர்பாக ஏற்பட்ட செலவு**

கணக்கீட்டுக் காலத்தின்போது பணம் செலுத்தப்பட்ட அனைத்துக் கோரிக்கைகளினதும் மொத்தத் தொகை, கோரிக்கைகளைக் கையாளும் செலவுகளும் இதில் அடங்கும். பொருத்தமானவிடத்து, கணக்கிட்டுக் காலத்தின் ஆரம்பத்தின் போதும், முடிவின் போதும் நிலுவையிலிருந்து வரும் கோரிக்கைகளுக்கு செய்யப்படும் சீராக்கங்கள்.

**கோரிக்கைகள் தொடர்பாக ஏற்பட்ட அறிவிக்கப்படாத செலவுகள்**

ஏற்பட்டிருக்கும் ஆனால் இதுவரையில் காப்புறுதி வழங்குநருக்கு அறிவிக்கப்பட்டிராத எதிர்பார்க்கப்படும் இழப்புக்களின் செலவை உள்ளடக்கும் பொருட்டு, சொத்து, பொறுப்பு மற்றும் ஏனைய காப்புறுதிகள் என்பன தொடர்பாக கணக்கீட்டுக் காலத்தின் முடிவின்போது வைக்கப்பட்டிருக்கும் ஓர் ஒதுக்கு.

**நிலுவையில் இருக்கும் கோரிக்கைகள் ஒதுக்கு - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

ஐந்தொகைத் திகதிக்குள் இடம் பெற்றிருக்கும் நிகழ்வுகளில் இருந்து தோன்றும் கோரிக்கைகளைத் தீர்த்து வைப்பதற்கான மதிப்பிடப்பட்ட செலவுகளை உள்ளடக்கும் பொருட்டு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை. இது அறிவிக்கப்படாத (IBNR) ஆனால், ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் கோரிக்கைகள் தொடர்பான செலவுகள், கோரிக்கைகளைக் கையாளும் செலவுகள் என்பனவற்றை உள்ளடக்குவதுடன், அக்கோரிக்கைகள் தொடர்பாக ஏற்கனவே செலுத்தப்பட்டிருக்கும் தொகைகள் இதிலிருந்து கழிக்கப்படுகின்றன.

**இணைக் காப்புறுதி**

ஓர் நட்ட இடரை குறித்துரைக்கப்பட்ட தவணைக் கட்டணத்தில் உடன்பட்டிருக்கும் விகிதத்தில் உள்ளடக்கும் பொருட்டு காப்புறுதி செய்பவருடன் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட காப்புறுதி வழங்குநர்கள் தனியொரு ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளும் ஓர் ஏற்பாடு.

**தரகுக் கட்டணம்**

காப்புறுதி வழங்குநர் ஒருவரின் காப்புறுதி திட்டங்களை விற்பனை செய்தமைக்காக மற்றும் சேவைகளை வழங்கியமைக்காக, ஒரு தரகருக்கு அல்லது காப்புறுதி முகவருக்குச் செலுத்தப்படும் கொடுப்பனவு.

**ஒத்திவைக்கப்பட்ட கையகப்படுத்தல் செலவு - பொதுக் காப்புறுதி வர்த்தகம்**

வருடாந்த கணக்கீட்டு அடிப்படையின் கீழ் ஐந்தொகைத் தினத்தில் செல்லுபடியான ஒப்பந்தங்களின் முதிர்ச்சியடையாத நட்வச்சக் காலம் தொடர்பான கையகப்படுத்தல் செலவுகள் இவை ஒரு கணக்கீட்டுக் காலப் பிரிவிலிருந்து, அடுத்துவரும் கணக்கீட்டுக் காலப் பிரிவுகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

# அருஞ்சொல் விளக்கம் தொடர்ச்சி

**தவணைக் கட்டண காப்புறுதி பெறுகை**

கணக்கீட்டுக் காலத்தின் ஆரம்பத்திலும், முடிவிலும் பெறப்படாத தவணைக்கட்டண ஒதுக்குகளின் மூலம் சீராக்கம் செய்யப்பட்ட எழுதப்பட்ட தவணைக் கட்டணங்கள்.

**பொதுக் காப்புறுதி வர்த்தகம்**

தீ, கடல், மோட்டார் வாகன அல்லது நானாவித காப்புறுதி வர்த்தகத்தை தனியாகவோ, ஒன்றுடன் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றுடன் இணைந்து மேற்கொள்ளல்.

கிடைத்த, மொத்த தவணைக் கட்டணங்கள் அல்லது அனைத்து மூலங்களில் இருந்தும் கிடைக்க வேண்டிய தவணைக் கட்டணங்கள். இவை கணக்கீட்டுக் காலப் பிரிவின் போது பொதுக் காப்புறுதி வர்த்தகம் தொடர்பாகக் கருதப்பட்ட மீள் காப்புறுதிக்கான கட்டணங்களையும் உள்ளடக்குகின்றன.

**மொத்த தவணைக் கட்டணம்**

கழிவுகள், மீள் திருப்பப்பட்ட தொகை, மற்றும் தள்ளுபடிகள் ஆகியவை கழிக்கப்பட்டதன் பின்னரான தவணைக் கட்டணமாயினும், இது எந்தவொரு தவணைக் கட்டண செலுத்துதல்கள் அல்லது காப்புறுதி வழங்குனர் ஒருவரின் மீள் காப்புறுதி வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுக் என்பவை கழிக்கப்படுவதற்கு முன்னரானதாக இருக்கும் தொகை ஆகும்.

**காப்புறுதி இடர்**

காப்புறுதி செய்யப்பட்ட நிகழ்வு ஏற்படக்கூடிய வாய்ப்பு, காப்புறுதிக் கோரிக்கையின் அளவு அல்லது கோரிக்கைக் கொடுப்பனவுகளைச் செலுத்த வேண்டிய காலம் என்பன தொடர்பான நிச்சயமற்ற நிலை.

**காப்புறுதி வழங்குனர்**

2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பொதுக் கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டதும் மற்றும் 2000ம் ஆண்டு 43ம் இலக்க காப்புறுதி கைத்தொழிற்துறை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான கம்பனி.

**நீண்டகாலக் காப்புறுதி வர்த்தகம்**

மனித ஆயுள் தொடர்பான பூட்கை ஒப்பந்தங்களில் ஈடுபடுதல் அல்லது பராமரித்தல் தொடர்பான வர்த்தகம். அத்தகைய ஒப்பந்தங்கள் மரணத்தின் போது அல்லது மனித வாழ்க்கையில் ஏதெனும் திடீர் நிகழ்வுகள் இடம்பெறும் போது, பணக் கொடுப்பனவு உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்கும் ஒப்பந்தங்களையும், மனித வாழ்க்கையில் ஏற்படக்கூடிய ஓர் அவசர நிலைக்கென தவணைக் கட்டணங்கள் செலுத்தப்படுவதற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் ஒப்பந்தங்களையும் உள்ளடக்குகின்றன.

**முதிர்ச்சி**

ஒரு நீண்டகால காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்கும் கொடுப்பனவுத் தொகை அதன் காலப் பிரிவின் முடிவின் போது திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய காலம்.

**நிகர கோரிக்கைகள் விகிதம் அல்லது நிகர இழப்பு விகிதம்**

நிகர இழப்புச் செலவுகளை நிகர வருமானத்துடன் தொடர்புபடுத்துவதற்கென காப்புறுதி வழங்குநர்களினால் பயன் படுத்தப்பட்டு வரும் ஒரு வழிமுறை. (அதாவது, சம்பந்தப்பட்ட மீள் காப்புறுதி களைக் கழித்த பின்னர்)

$$\frac{\text{நிகர கோரிக்கை கொடுப்பனவுகள்}}{\text{நிகர தவணைக் கட்டண பெறுகைகள்}} \times 100$$

**நிகர இணைந்த விகிதம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

இது காப்புறுதி வழங்குநரின் தொழிற்பாடுகளின் இலாபத் தன்மையைக் காட்டுகின்றது. தேறிய நட்ட விகிதத்தையும் தேறிய செலவு விகிதத்தையும் இணைத்துக் கணிக்கப்படுகின்றது. இது முதலீட்டு வருமானத்தைக் கவனத்தில் எடுப்பதில்லை.

$$\frac{\text{நிகர கோரிக்கை செலவுகள்} \times 100}{\text{நிகர தவணைக் கட்டண பெறுகைகள்}} + \frac{\text{செலவுகள்} \times 100}{\text{நிகர தவணைக் கட்டண செலவுகள்}}$$

**தேறிய தவணைப் பெறுகைகள் - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

மீள் காப்புறுதி தவணைக் கட்டணம் மற்றும் பெறப்படாத தவணைக் கட்டணங்களுக்கான அதிகரிப்பு மற்றும் குறைவு என்பனவற்றுக்கென சீராக்கம் செய்யப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்.

**தேறிய செலவு விகிதம் - பொது காப்புறுதி வியாபாரம்**

கையகப்படுத்தல் மற்றும் நிர்வாகச் செலவுகளைக் குறிப்பிடுவதற்கென காப்புறுதிக் கம்பனிகளினால் பயன் படுத்தப்பட்டு வரும் ஒரு வழிமுறை. (உதாரணம், தரகுக் கட்டணம், வரிகள், ஆளணி, விற்பனை மற்றும் செயற்பாட்டுச் செலவுகள்).

**பங்கேற்காத காப்புறுதிப்பத்திரம் - நீண்டகால காப்புறுதி வியாபாரம்**

சம்பந்தப்பட்ட ஆயுள் பூட்கை நிதியத்தின் மிகையைப் பகிர்ந்து கொள்வதற்கு பத்திரதாரர்கள் ஒப்பந்த ரீதியான உரித்தினைக் கொண்டிராத ஆயுள் காப்புறுதி வர்த்தகம்.

**காப்புறுதிப் பத்திரம்**

காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றின் விதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பனவற்றை கொண்டுள்ள ஓர் ஆவணம்.

**காப்புறுதி பத்திர வைப்பாளர்**

காப்புறுதி வழங்குநருடனான ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் காப்புறுதிப் பத்திரத்தை அச்சமயத்தில் சட்டபூர்வமாக வைத்திருக்கும் ஒரு நபர்.

**பூட்கை பத்திரக் கடன்**

நீண்டகால காப்புறுதிப் பத்திரத்தின் ஒப்படைப்புப் பெறுமதியைப் பிணையாக கொண்டு காப்புறுதி வழங்குநர் ஒருவர் காப்புறுதி வைப்பாளர் ஒருவருக்கு வழங்கும் கடன். இக்கடன் காப்புறுதிப் பத்திரத்தின் தற்போதைய ஒப்படைப்புப் பெறுமதியின் குறிப்பிட்டதொரு சதவீதத் திற்கு பொதுவாக வரையறுக்கப் பட்டிருப்பதுடன், இத்தகைய கடன்கள் மீது வட்டி அறவிடப்படுகின்றன.

**முதன்மை காப்புறுதி வழங்குநர்**

ஒரு காப்புறுதி தவணைக் கட்டணத்திற்குப் பதிலாக, இடர்களைப் பொறுப் பேற்பதுடன், காப்புறுதிப் பத்திரத்தை வைத்திருப்பவருடன் ஒரு நேரடி ஒப்பந்த ரீதியான தொடர்பினை வைத்திருக்கும் காப்புறுதிக் கம்பனிகள் (தனியார், தனி நபர், நிறுவனம், அல்லது ஸ்தாபனம்)

# அருஞ்சொல் விளக்கம் தொடர்ச்சி

**செயற்பாட்டு இலாபம்**

முதலீட்டு வருமானம், தேறிய மூலதன ஆதாயங்கள் மற்றும் ஏனைய வருமானம் என்பனவற்றைக் கவனத்திற் கொண்ட பின்னர், பொதுக் காப்புறுதித் தொழிலை மேற்கொள்வதன் மூலம் உருவாக்கப்படும் இலாபம்.

**மீள் காப்புறுதி**

ஒரு தரப்பு (மீள் காப்புறுதி வழங்குநர்) ஒரு தவணைக் கட்டணத்தைக் கருத்திற்கொண்டு, மற்றொரு தரப்புக்கு (ஆரம்ப காப்புறுதி வழங்குநருக்கு) மீள் காப்புறுதிப்பத்திரம் அல்லது பத்திரங்களின் கீழ் ஏற்கப்பட்டிருக்கும் பொறுப்பின் ஒரு பாகத்திற்கு எதிராக அல்லது மொத்தப் பொறுப்புக்கும் எதிராக நட்ட உத்தரவாதம் வழங்குவதற்கு உடன்படும் ஓர் ஏற்பாடு.

**மீள் காப்புறுதி தரகுக் கட்டணம்**

மீள் காப்புறுதி வழங்குநர் ஒருவருக்குச் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்பட வேண்டிய தவணைக் கட்டணங்கள் தொடர்பாக கிடைத்த அல்லது கிடைக்க வேண்டிய தரகுக் கட்டணம்.

**உள்நோக்கிய மீள் காப்புறுதி**

மீள் காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் இடர்களை ஏற்றுக்கொள்ளல்.

**வெளிநோக்கிய மீள் காப்புறுதி**

மீள் காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் இடர்களை வைத்தல்.

**மீள் காப்புறுதி தரகு கட்டண இலாபம்**

மீள் காப்புறுதி வழங்குநர்களினால் மீள் காப்புறுதி ஒப்பந்தத்தின் மூலம் பெறப்பட்ட (மீள் காப்புறுதி ஒப்பந்தத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு) தேறிய இலாபத்தின் அடிப்படையில், மீள் காப்புறுதி செய்தவருக்கு (ஆரம்பக் காப்புறுதி வழங்குநருக்கு) கிடைத்த அல்லது கிடைக்க வேண்டிய மீள் காப்புறுதி மற்றும் தரகுக் கட்டணம்.

**பிடித்து வைத்திருத்தல்**

காப்புறுதி வழங்குநர் மீள் காப்புறுதி வழங்குநர் மீள் காப்புறுதி வழங்காது இருக்கும் பொறுப்பேற்றுக் கொண்ட இடரின் ஒரு பகுதி. அதாவது, சொந்தக் கணக்கிற்கென வைத்துக்கொள்ளப்பட்ட தேறிய தொகை.

**கடன் தீர் எல்லை - நீண்டகால காப்புறுதி**

சொத்துக்களின் பெறுமதி மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி என்பனவற்றுக்கு இடையிலான வித்தியாசம். இது 2000ம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்துறையை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் பிரகாரம், (நீண்டகால காப்புறுதி) கடன் தீர் எல்லை தொடர்பாகக் குறிப்பிடப்பட்டிருக்கும். அளவில் கீழ் நீண்டகால காப்புறுதித் தொழிலை மேற்கொண்டு வரும் காப்புறுதி வழங்குநர்களினால் பராமரிக்கப்படுவது.

**கடன் தீர் எல்லை - பொதுக் காப்புறுதி**

சொத்துக்களின் பெறுமதி மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி என்பனவற்றுக்கு இடை யிலான வித்தியாசம். இது, 2000 ம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழில்துறையை ஒழுங்கு முறைப்படுத்தும் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் உருவாக்கப்பட்ட 2004 ஆவது விதிகளின் பிரகாரம் (பொதுக் காப்புறுதி) கடன் தீர் எல்லை தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்கும் அளவின் கீழ் பொதுக் காப்புறுதித் தொழிலை மேற்கொண்டு வரும் காப்புறுதி வழங்குநர்களினால் பராமரிக்கப்படுவது.

**ஒப்படைப்புப் பெறுமதி**

ஒரு காப்புறுதிப் பத்திரம் அதன் கால எல்லை முதிர்ச்சியடைவதற்கு முன்னர் முடிவடையும் போது ஆயுள் காப்புறுதி தொடர்பாக காப்புறுதி வழங்குநர் ஒருவர் காப்புறுதிப் பத்திரதாரருக்குச் செலுத்த வேண்டிய தொகை. ஒப்படைப்புப் பெறுமதி ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு, ஒரு காப்புறுதிப் பத்திரம் குறைந்தது மூன்று வருடகாலப் பகுதிக்கு தொடர்ச்சியாக வலுவில் வந்திருத்தல் வேண்டும்.

**கடற்பொருட் காப்புறுதி இலாபம்**

இது முதலீட்டு வருமானம் மற்றும் ஏனைய வருமானம் என்பனவற்றைக் கவனத்திற் கொள்ளாது பொதுக் காப்புறுதி வர்த்தகத்தை மேற்கொள்வதன் மூலம் உருவாக்கப்படும் தொழில்சார் இலாபமாகும்.

**உழைக்கப்படாத தவணைக் கட்டணம்**

இது, கிடைக்க வேண்டிய தொகைகள் என ஏற்கனவே கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும். ஐந்தொகைத் திகதியை அடுத்து வரும் காலகட்டத்துடன் சம்பந்தப்பட்ட தவணைக் கட்டணங்களின் ஒரு பகுதியைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது.

**வருவாய் ஈட்டாத தவணைகட்டண ஒதுக்கு**

ஈட்டப்படாத தவணைக் கட்டண ஒதுக்கு ஏற்கனவே வலுவில் இருந்து வரும் காப்புறுதிப் பத்திரங்களின் கீழ் எதிர்காலத்தில் தோன்றக்கூடிய கோரிக்கைகளுக்கு ஏற்பாடு செய்யும் பொருட்டு, பொதுக் காப்புறுதி வழங்குநர் ஒருவரினால் பராமரிக்கப்படும் ஒரு நிதியம்.

**காலாவதியாகாத இடர் ஒதுக்கு**

நிதியாண்டின் முடிவின் பின்னர், அத் திகதிக்கு முன்னர் முடிவாக்கப்பட்ட ஒப்பந்தங்களில் இருந்து தோன்றக்கூடிய கோரிக்கைகள் மற்றும் செலவுகள் என்பனவற்றின் மதிப்பிடப்பட்ட பெறுமதியை மதிப்பீடு செய்த தொகைகள். அவற்றின் மதிப்பிடப்பட்ட பெறுமதி பெற்றுக்கொள்ளப்படாத தவணைக் கட்டணங்களுக்கான ஒதுக்கினை மதிப்பிட்டுக் காணப்படும் நிலை (ஒத்திவைக்கப்பட்ட எவையேனும் கையகப்படுத்தப்பட்ட செலவு களைக் கழித்த பின்னர்)

# பொதுத் தகவல்கள்

**அலுவலக முகவரி**
எம் 11, கிழக்கு கோபுரம்
உலக வர்த்தக நிலையம்
கொழும்பு 1
இலங்கை

| | | |
|---|---|---|
| தொலைபேசி | : | +94 11 2396184-9 |
| தொலைநகல் | : | +94 11 2396190 |
| மின்னஞ்சல் | : | info@ibsl.gov.lk |
| இணையத்தளம் | : | www.ibsl.gov.lk |

**சட்டபூர்வ நிலைமை**
2000 ஆம் ஆண்டு 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழில் ஒழுங்கமைப்புச் சட்டத்தின் பிரகாரம் இலங்கையில் நியம சபையாக நிறுவப்பட்டது. 2001 பெப்ரவரி 23 ஆம் திகதிய 1172/27 ஆம் இலக்க அரசாங்க வர்தமானி அறிவித்தலை அடுத்து 2001 மார்ச் 01 ஆம் திகதி நடவடிக்கைகளை மேற்கொண்ட சட்டபூர்வமான அந்தஸ்தைக் கொண்ட நிறுவனம் ஆக்கப்பட்டது.

**சபையின் நோக்கமும் பொறுப்புக்களும்**
காப்புறுதியாளர்களினதும், உத்தேச காப்புறுதியாளர்களினதும் நன்மைகளைப் பாதுகாக்கும் நோக்கத்தில், இலங்கையில் காப்புறுதித் தொழிலை நேர்மையாகவும், தொழில்சார் அடிப்படையிலும், விவேகமாகவும், இலங்கையில் காப்புறுதித் தொழில் நடத்தப்படுவதை உறுதிப்படுத்துவது சபையின் நோக்கமும், பொறுப்புக்களுமாகும்.

**கணக்கீட்டு ஆண்டு**
டிசம்பர் 31

**கணக்காய்வாளர்கள்**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**வங்கியாளர்கள்**
இலங்கை வங்கி

**கணக்காய்வுக் குழு**
திரு. எஸ். ஆர். ஆட்டிகல - தலைவர்
திரு. சமந்த குமாரசிங்க
திரு. நளின் ஆட்டிகல

IBSL
INSURANCE
BOARD OF SRI LANKA

இலங்கை காப்புறுதிச் சபை | வருடாந்த அறிக்கை *2014*


தளம் 11, கிழக்கு கோபுரம், உலக வர்த்தக நிலையம், கொழும்பு 1, இலங்கை
தொலைபேசி : +94 11 2396184-9 தொலைநகல் : +94 11 2396190
**மின்னஞ்சல் : info@ibsl.gov.lk இணையத்தளம் : www.ibsl.gov.lk**